
2022
சைவசித்தாந்த பண்டிதர்
அமரர் சிவஸ்ரீ தியாக.சோமாஸ்கந்தராஜக் குருக்கள்
B.A, Dip.in.Ed., M.A பிரதி அதிபர்
நெல்லண்டைப் பத்திரகாளியம்மன் கோயில்,
வடபத்திரகாளியம்மன், வீரமாகாளியம்மன் கோயில்
பிரதமகுருவும் ஆதீனகர்த்தாவும்

# சோமாஸ்கந்த விஜயம்

# சோமாஸ்கந்த விஜயம்

நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோவில் பிரதமகுரு
வேதாரணியம் குருக்கள் பரம்பரை
நந்திகேஸ்வர கோத்ர வழித்தோன்றல்
சைவசித்தாந்த பண்டிதர்
**அமரர் சிவஸ்ரீ. தியாக. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள்**
அவர்களின்
**நினைவு மலர்**

நெல்லண்டையாள் வெளியீட்டுக்கழகம்
03.05.2022

**சோமாஸ் கந்த விஜயம்**

**தொகுப்பாளர்கள்** :
கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்
புலோலியூர் வேல் நந்தகுமார்

**வெளியீட்டாளர்:**
சிவஸ்ரீ. இராம. சுந்தரலிங்கக் குருக்கள்

**பதிப்புரிமை:**
பிள்ளைகளுக்கு

**முதற் பதிப்பு** :
2022 வைகாசி

**வெளியீடு** :
நெல்லண்டையான் வெளியீட்டக்கழகம்
தும்பளை
நெல்லண்டை
பருத்தித்துறை

**பக்கம் : 150**

# தொகுப்புரை

நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோவில் பிரதமகுரு அமரர் சிவஸ்ரீ.தியாக.சோமாஸ்கந்தராஜாக்குருக்கள் இறைவன் திருவடி சேர்ந்த ஓராண்டு நிறைவிலே அவரது நினைவுப் பதிவாக "சோமாஸ்கந்த விஜயம்" என்னும் தொகுப்புநூல் இன்று இறையருள் துணையால் வெளியிடப்படுகின்றது. இந்த வெளியீடு ஒரு காலத்தின் கடமை மக்களை வழிபாட்டுக்கு நெறிப்படுத்திய அவர் "கண்ணன் ஐயா" என்றே மக்கள் உள்ளத்திலே நிறைந்திருப்பவர். எதிர்காலத் தலைமுறையும் அவரை அறிய வேண்டும். அதற்கு நிகழ்காலத் தலைமுறை வழிகாட்ட வேண்டும். அப்போது தான் எமது வாழ்வியலின் அடித்தளமான "வழிபாடு" என்னும் நடைமுறை தொடர்ச்சியாகப் பேணப்படும்.

இத்தகைய ஓர் இலக்கை முன்வைத்தே இந்த நினைவு மலர் தொகுக்கப்பட்டுள்ளது. கண்ணன் ஐயாவின் நினைவு காலக்கடப்பிலே கலைந்து போகாமல் நிலைத்து நிற்க வேண்டும். எனவே அவருடை நினைவைச் சுமந்து இப்போது வாழ்பவர்களிடம் அந்த நினைவுகளை எழுத்துருவாக்கித் தரும்படி வேண்டுகை விடுத்தோம். அவர்களும் மனமுவந்து தமது நினைவுத்துளிகளை ஒன்று சேர்த்து எழுத்துவாக்கித் தந்தனர். அந்த எழுத்துருக்கள் பல்வேறு வடிவங்களிலே ஆக்கப் பெற்றாலும் தொகுப்புநிலயில் கண்ணன் ஐயாவின் நினைவுக்களஞ்சியமாக உருப்பெற்று "சோமாஸ்கந்த விஜயம்" என்னும் தொகுப்புநூலாக வெளிவந்துள்ளது.

இந்தத் தொகுப்பிலே ஐயாவின் வாழ்வியல் வரலாறு முதற்பதிவாக மலர்ந்துள்ளது. அடுத்து ஆசிகளும் வாழ்த்துகளும் அஞ்சலிகளும் தொடர்ந்து அமைந்துள்ளன. ஐயாவுடன் தொடர்புற்று வாழ்ந்தவர்கள் தங்களின் உணர்வுகளை எழுத்திலே பொறித்துள்ளார்கள். இத்திமரத்தாளுக்கு என்றும் இனிய தொண்டனாக வாழ்ந்து அவள் திருவடி நீழலை அடைந்த சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜாக்குருக்களின் வாழ்வும் நினைவுகளும் அவர்களுடைய உள்ளத்தை இறுகப் பிணித்திருப்பதை எழுத்திலே சிறப்பாகப் பதிவு செய்து தந்துள்ளார்கள். அவற்றைப் படிக்கும் போது இறைபணியாளர்களின் வழிபாட்டுக்கான ஆற்றுப்படுத்தல் என்னும் அருட்பணி இழையோடுவது துல்லியமாகவே வெளிப்பட்டு நிற்கிறது.

அடுத்து உறவும் உணர்வும் என்ற நிலையிலே கண்ணன் ஐயாவுடன் மிக நெருக்கமானவர்களின் நினைவுகள் எழுத்துருவிலே பதியப்பட்டுள்ளன. இல்லறம் என்னும் அறவாழ்க்கையிலே ஒருவருக்கு வாழ்க்கைத்துணையும் பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் மருமக்களும் மிக நெருக்கமாக இறைவனால் இணைக்கப்படுபவர்கள். அந்த நெருக்கமான உறவுகளுக்குக் கண்ணன் ஐயாவின் எதிர்பாராத மறைவு பேரதிர்ச்சியைத் தந்துள்ளது. நீண்ட காலம் எம்மோடு இருப்பார் என்ற நினைப் போடிருந்தவர்கள் உள்ளத்திலே ஆறாத துன்பமாக அவர் மறைவு இடம் பெற்றிருப்பதை எல்லோரும் எழுத்திலே எடுத்துரைத்துள்ளார்கள். இது மனித வாழ்வியலில் ஒரு மாற்றமுடியாத அமைப்பு என்பதையும் அவர்கள் அறிந்திருந்தாலும் பிரிவை

எண்ணிக் கலங்கும் அவர்கள் உள்ளத்தை இத்திமரத்தாள் நலம் பெறச்செய்வாள் என்ற வழிபாட்டு நம்பிக்கையையும் அவர்கள் மறக்கவில்லையென்பதையும் எழுத்துகளிலே பொறித்துள்ளனர்.

அடுத்து நினைவலைகள் என்ற வகுப்பிலே கடல் போல இருந்த கண்ணன் ஐயாவோடு பல்வேறு நிலைகளிலே தொடர்புற்றவர்களின் நினைவலைகள் எழுத்துவடிவாக இணைக்கப்பட்டுள்ளது. அவர்களின் தொடர்புகளைப் பற்றிய செய்திகள் கல்வியால் பெறும் நட்பும் உறவும் எவ்வளவு உறுதியானவை என்பதைத் தெளிவாக விளக்குவதாக அமைந்துள்ளன. கவிதை, கட்டுரை, எடுத்துரைப்பு எனப் பல வடிவங்களாக அவை ஆக்கப்பட்டுள்ளன. பிரதமகுரு என்ற இறைபணிக்கு அப்பால் மாணவனாக, ஆசிரியனாக, பொதுமன்றத்தலைவனாக, நூலாசிரியராக, சோதிடராக எனப் பல்வேறு நிலையிலே கண்ணன் ஐயாவின் வாழ்வுத்தளம் பரந்து பட்டிருந்ததை அதில் பங்கு கொண்டிருந்தவர்கள் அழகாகப் பதிவிட்டுள்ளனர்.

இந்த நினைவுமலரின் வெளீட்டைத் தமது தலையாய கடனாகக் கருதிச் செயற்பட்ட கண்ணன் ஐயாவின் பிள்ளைகள் தந்தையைத் தாம் நினைவு உருவத்துடன் மற்றவர்களையும் பங்களிப்புச் செய்ய வைத்துள்ளனர். கட்டுரைத் தொகுப்பாக அல்லாமல் நினைவுச் சுவடுகளால் இத்தொகுப்பு ஆக்கப்பட்டுள்ளது. மலரை அழகாக அச்சேற்றப் பணிசெய்த க.பரணீதரன் நன்றிக்குரியவர். இந்த மலரைக்கையில் எடுத்துவிரிக்கும் போது ஒரு வழிபாட்டு உணர்வு தோன்றும் மலர் முழுமையாகப்படித்த பிறகு கண்ணன் ஐயாவோடு வாழ்ந்த காலம் மனத்திரையில் விரியும். அங்கு புன்னகைக்கும் அவர் திருமுகம் தெரியும். அது அவர் எம்மோடு தான் வாழ்கிறார் என்ற மனநிறைவைத்தரும்.

தொகுப்பு
முனைவர் ச.மனோன்மணி
திரு.வேல். நந்தகுமார்

# பொருளடக்கம்

# அமரர்.சிவஸ்ரீ.தியாக. சோமாஸ்கந்தராஜாக்குருக்கள் அவர்களின் ஜீவயாத்திரை குறித்த வாழ்க்கை வரலாறு

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப்படும்"

ஈழமணித்திருநாட்டின் வடபால் உள்ள யாழ்மாவட்டத்தில் சீர்மிகு வடமராட்சி பகுதியில் கல்வி நிறை மாக்களும் பண்பாளர்களும், சோதிடர்களும், வைத்தியர்களும், நல்ஆசிரியர்களும் சைவாசாரியர்களும் சமூகப்பற்றாளர்களும், சிந்தனையாளர்களும், சட்டத்தரணிகளும், நீதிபதி களும் கூடிய வாழுகின்ற தலங்களும் விருட்சங்களும் சேர்ந்து எழில்கூட்டத் தெய்வீக மணங்கமழு கின்ற நெய்தலும் மருதமும் மயங்கிக்கிடக்கும் நெல்லண்டைப் பதியில் இனிதுற இல்வாழ்க்கை நடாத்திய சீராளர் தியாகராஜக்குருக்கள் பத்தினியார் இராஜலக்ஷ்மி அம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனாக வேதாரணியம் குருக்கள் பரம்பரையில் சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்த ராஜாக்குருக்கள் அவர்கள் 24.04.1963 இல் நந்திகேஸ்வர கோத்ர வழித்தோன்றலாக இவ்வுலகில் அவதாரம் செய்தார்.

அவர் தம் சகோதர சகோதரியர்களாக விஜயலட்சுமி, வேதையாக்குருக்கள் (அமரர்), வியோமகேசர், அமிர்த கடீசர் (அமரர்), நகுலேஸ்சர் (அமரர்), இராமையர் (அமரர்), வரலட்சுமி, நவலட்சுமி (அமரர்) ஆகியோர் அவதாரம் செய்தனர்.

சிறுபராயத்திலிருந்தே கல்வி கேள்விகளில் வல்லவராக இருந்த இவர் "கண்ணன் ஐயா" என்ற பெயரால் அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்டு பிரதேசத்தவரால் நன்கு அறியப்பட்ட ஒருவராக விளங்கினார்.

சிறுபராயத்தில் தாய் தந்தையரின் அணைப்போடும், சகோதர சகோதரியர்களின் பாசப் பிணைப்போடும் மகிழ்வுற்றிருந்த கண்ணன் ஐயா அவர்கள் இளமைப் பராயத்தில் இருக்கும் போது தாயாரின் மறைவாலும் பின்பு நிகழ்ந்த தந்தையாரின் மறைவாலும் குடும்பத்தைச் சுமக்கும் பொறுப்பைத் தனதாக்கிக் கொண்டார். தனக்குப் பின் பிறந்தவருக்குத் தாய்க்குத் தாயாக தந்தைக்குத் தந்தையாக பொறுப்புடன் செயற்பட்ட இவர் உடன் பிறந்தவரின் உயர்வுக்காகவும் மறுபுறம் தனது கல்விக்காகவும் ஆலய குருப்பணிக்காகவும் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டார்.

## 1. குருப்பணி

அம்பாளின் அருட்கடாட்சம் முழுமையாக அமையப்பெற்ற இவர் 1972ல் தந்தையாரின் பரம்பரை வழியில் உதவி அர்ச்சகராகப் கடமையாற்றத் தொடங்கிய இவர் 1983.09.04ல் தந்தையார் பூஜை பொறுப்புக்களை கையளித்ததிலிருந்து தனது இறுதிக் காலம் வரை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் ஆலயத்தின் பிரதம குருவாகவும் இருந்து அரும்பணியாற்றினார். வேத மந்திரங்களை இனிமையாக உச்சரித்து இன்னிசைப் பாடல்களால் அம்பாளுக்கு இவர் பூஜை செய்கின்ற அழகோ தனித்துவானது. இவர் சிவஸ்ரீஸ்கந்த சிவபாத சுந்தர குருக்கள் அவரால் குருப்பட்டத்தை பெற்றுக் கொண்டார். இவர் தம் குருப் பட்டாபிசேக 25வது வருட நிறைவை ஒட்டிய

வெள்ளிவிழா 2008.09.04ல் தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெற்றது.

50ற்கு மேற்றபட்ட ஆலயங்களில் புனராவர்த்தன பிரதிஷ்டா கும்பாபிஷேக நிகழ்வில் பிரதமகுருவாக நின்று நிகழ்த்திய பெருமை இவருக்கு உண்டு.

சமஸ்கிருத மொழியியல் வல்லுனராகத் திகழ்ந்த இவர் தும்பளை இலட்சுமணன் தோட்டம் ஸ்ரீவீரகாளி அம்மன், வடபத்திரகாளி அம்மன ஆலயத்தை நிறுவி ஆலய ஆதீனகர்த்தாகவும் பிரதம குருவாகவும் திகழ்ந்த பெருமைக்கு உரியவர்.

ஆலய பிரதம குருவாக திகழ்ந்தது மாத்திரமாக அல்லாது வடக்கு மாகாணத்தில் பெரும்பாலான ஆலயங்களில் சமயப் பிரசங்கங்களை நிகழ்த்திய பெருமைக்குரியவராவார். தமிழ் இலக்கியங்களும், தத்துவ இலக்கியங்களிலும், வேத உபநிடதபுராண இதிகாசங்களும் பெரும் ஆளுமை கொண்ட இவர் சமயம் சார்ந்த விழுமியங்களையும் சமய தத்துவங்களையும் ஆன்மீக சிந்தனைகளையும் இலக்கிய சுவையையும் பக்தி சுவையையும் சமூக சீர்திருத்த சிந்தனையையும் ஒன்றுசேர குழைத்துத் தெவிட்டாத தெள்ளமுதாகப் பிரசங்களை நிகழ்த்திய பெருமைக்குரியவர். இவர் தம் பிரசங்கத்தைக் கேட்பதற்கு என்றே பெரும் இரசிகர் கூட்டம் உள்ளது எனக் கூறின் அதுமிகையாகாது. "அகில இலங்கை திருவள்ளுவர் கோட்டத்தை 1993ல் தொடங்கிய இவர் அதற்கூடாகப் பட்டிமன்றங்கள், வழக்காடு மன்றங்கள், கவியரங்கங்கள், சமயச் சொற்பொழிவுகள் என பலவற்றை நிகழ்த்தியதோடு அதற்கெனக் கலைஞர் வட்டத்தையும் உருவாக்கியவர். இன்றும் வடமராட்சிப் பகுதியில் சிறந்த பேச்சாளர்களாகத் திகழும் பலரும் இவர் உளியால் செதுக்கப்பட்டவர்களே.

**2. கல்வி**

தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் தனது கா.பொ.த உயர்தரம் வரையான கல்வியைப் பயின்றார். திருமதி சேதுநாயகம் ஆசிரியை அவர்கள் அவர்தம் ஆரம்ப கல்வியின் மனசீக குருவாவர். இவர் கா.பொ.த உயர்தரத்தை வந்தடைந்த போது ஸ்ரீஅருள்நங்கை சண்முகநாதன் அவர்களிடம் கல்வி கற்க சென்றமை அவரது கல்வி வாழ்வைப் புதிய திசைக்கு இட்டுச் செலுத்தியது. அருள்நங்கை ஆசிரியை தனது வித்தியா குருவாகக் கொண்டு தமது உயர்தரக் கல்வியைத் தொடங்கிய இவர் அவர் தம் வழிகாட்டலில் பேராதனைப் பல்கலைக்கழக கலைமானிப்பட்டத்தை பெற்றுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து யாழ்.பல்கலைக்கழக கல்வி டிப்ளோமாவையும் 2004ல் மதுரை காமராஜர் பல்கலைக்கழக முதுகலைமாணிப் பட்டத்தையும் 2008ல் யாழ்பல்கலைக்கழக முதுகலைமாணிப்பட்டத்தை பிரதேச திட்டமிடல் துறையிலும் 2000 ஆண்டில் சைவசித்தாந்த பண்டிதர் பட்டத்தையும் பெற்றுக் கொண்ட இவர் கல்வியால் பெருமை பெற்றுக் கொண்டவராவார்.

வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ், முனைவர் மனோன்மணி சண்கதாஸ், கலாநிதி த.கலாமணி, பேராசிரியர்.எஸ்.சிவலிங்கராஜா, பேராசிரியர் சபா.ஜெயராசா, ஆசிரியர் குழந்தை ஆகிய வித்தியா குருமாரின் அன்பும் வழிகாட்டலுமே அன்னாரின் கல்விசார் வளர்ச்சிக்கு பெரும் தூண்டுதலாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

**3. ஆசிரியராக**

நல்லாசானாக வழிகாட்டியாக ஏராளமான மாணவச் செல்வங்களை உருவாக்கிய பெருமைக்குரியவர் இவர். 1993.09.31 இல் தனது ஆசிரியப் பணியை யா/குடத்தனை அ.த.க பாடசாலையில் தொடங்கிய இவர் 03வருடங்கள் தொடர்ச்சியாக அப்பாடசாலையில் கடமையாற்றினார். அதனைத் தொடர்ந்து யா/அம்பன் அ.த.க பாடசாலை, யா/ஹாட்லி கல்லூரி, யா/குடத்தனை அ.மி.த.க பாடசாலை (அதிபர்), யா/அம்பன் அ.மி.த.க பாடசாலை (உபஅதிபர்), யா/கற்கோவளம் மெ.மி.த.க பாடசாலை ஆகியவற்றில் ஆசிரியப் பணி புரிந்து தனது உடல் நிலையைக் கருத்திற் கொண்டு 2020இல் ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெற்றுக் கொண்டார்.

நல்லதொரு மாணவ பரம்பரையை உருவாக்கிய பெருமை இவருக்கு உண்டு.

தமிழ்மொழி இலக்கண இலக்கியங்களில் பெரும் பாண்டித்தியம் மிக்க இவர் தமிழ் பாடத்தை மாணவருக்குச் சுவைபடக் கற்பித்ததோடு மாணவர்கள் நற்பிரசையாக வாழ்வதற்குரிய வழிகாட்டல்கள் பலவற்றையும் செய்துள்ளார். இவரால் உருவாக்கப்பட்ட பல மாணவர்கள் இன்று நல்லாசிரியர்களாக, சட்டத்தரணிகளாக, நிர்வாகிகளாக பல்வேறு துறைகளிலும் உயர் பதவிகளை வகித்து வருகின்றனர்.

**4. நூல் சேகரிப்பாளராக..**

தன் வாழ்நாளில் சம்பாதித்த பெரும் பொக்கிசமாக தனது புத்தகங்களையே நேசித்து இருந்தமை குறிப்பிடத்தக்கது. தனது ஊதியத்தின் பெரும் பகுதியை நூல் கொள்வனவு செய்வதற்காகவே பயன்படுத்தியுள்ளார். சமயம், தமிழ், ஆன்மீகம், தத்துவம், அறிவியல், சோதிடம், வைத்தியம் எனப் பலதுறைகளைச் சார்ந்த ஏராளமான புத்தகங்கள் சேரித்து வைத்துள்ளார். யாழ் மாவட்டத்தில் ஒரு தனி ஆளாக ஏராளமான புத்தகங்களை சேகரித்தவர்கள் எவரும் இல்லை என கூறும் அளவிற்கு பெரு நூலகமாக புத்தகங்களைச் சேகரித்து வைத்துள்ளார்.

அவ்வாறு சேகரித்து வைத்துள்ள புத்தகங்களை தான் படிப்பது மட்டுமில்லாது தன்னுடைய மாணவர்களுக்குப் படிக்கக் கொடுப்பதோடு ஏராளமான புத்தகங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

**5. நூலாசிரியராக...**

அறிவுப் பொக்கிசமாக திகழ்ந்த இவர் சமயம், தமிழ், தத்துவம், கிரியை முதலான பல்வேறு துறையைச் சார்ந்து 34 நூல்களை எழுதி வெளியிட்ட பெருமைக்கு உரியவர் ஆவார். அந் நூல்களாக "வேதங்கள், ஆலய வழிபாடும் தத்துவமும், அறநெறி, விக்கிரகவியல், கிரியைகள், சைவகுலதீபம், யோகசித்து, அமிர்தகடீசம், கேதாரகௌரி விரத மகிமை, திருவிளக்குப் பூசை மகிமை, அன்னை தயை, இருபெருநெறிகள் (காணபத்தியம், கௌமாரம்), அறுவகை சமயநெறி, சோமாஸ்கந்தராஜ தரிசனம், சோமாஸ்கந்த ராஜ புவனம், கந்தபுராண தட்ச கண்ட மகிமை, தசிசீ உத்தரப் படனம் வசனம், கும்பாபிசேகம் மலர் கொடிகாமம் காளி உடன் உறை பெரிய தம்பிரான் தேவஸ்தானம், ஊஞ்சல்பா வீரமாகாளியம்மன், இலட்சுமணன் தோட்டம், ஊஞ்சற்பா திருவப்பதிகம் நெல்லண்டை பத்திரகாளியம்மன் கோவில், பத்திரகாளி பிரதிஷ்டா விதி சமஸ்கிருதம் - (கோப்பாய் - சிவம்) வீரபத்திரர் நாமார்ச்சனம் (சமஸ்கிருதம், தமிழ்) கோப்பாய் சிவம் ஊஞ்சற்பா கற்கோவளம் கும்பி முருகன் தேவஸ்தானம், ஊஞ்சற்பா கற்கோவளம் முத்தூரியம்மன் தேவஸ்தானம், கொடிக்கவி உரை புதிய விளக்கம் சாமணந்தறை வெளியீடு, சைவசமய சாதனைகள் (ஐந்து) விளக்கம், சோமஸ்கந்த ராஜதரிசனம் - 01, அருள்நங்கை 01, அக்கினி காரியம் (சஸ்கிருதம், தமிழ்) இரத்தினாசன வெளியீடு, பவளமணி பேராசிரியரின் பவளவிழா ஆய்வு நூல், தமிழ் பாரம்பரியத்தில் பெண், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்களின் இல்லற பொன்விழா ஆய்வுநூல், ஓங்கார நாமாவளி, சோமஸ்கந்த தண்டபாணிக தேசிக குருதரிசனம் ஆகியன அமைகின்றன. நெல்லண்டையான் வெளியீட்டுக் கழகத்தை நிறுவிய இவர் அதற்கு ஊடாகவே தனது நூல்களை வெளியீட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவரது நூல்களில் பலதும் மாணவர்களுக்கு பயன்தரக் கூடியதாகவும், ஆலய கிரியை மரபிற்கு உகந்ததாகவும், சமூகப் பற்றுறுதி உடையதாகவும் திகழ்ந்து பலரது பாராட்டையும் பெற்றன.

**6.சோதிடராக...**

சோதிடத் துறையில் விற்பன்னராக திகழ்ந்த இவர் சாதகம் எழுதுதல், பலாபலன் கணித்தல், திருமண நாள் எடுத்தல், மனை சாஸ்திரம் அனைத்திலும் துறை போன ஒருவராக திகழ்ந்தார், இதற்கு என்றே குறிப்பிட்ட அடியார் கூட்டம் இவரை நாடி வருவது வழமை.

**7. பட்டங்கள்...**

இவர் குருத்துவம், ஆசிரியப்பணி, நூலாசிரியப்பணி, சோதிடப்பணி, சமய பிரசாரகராக, சொற்பொழிவாளராகப் பட்டிமன்ற நடுவராக, கவியரங்க நடுவராக, பேச்சாளராக ஆற்றியிருந்த பணிகள் ஏராளமான பட்டங்களையும், கௌரவிப்புக்களையும், வாழ்த்துப்பாக்களையும் பெற்றுக் கொடுத்தது. இவர் பெற்றுக் கொண்ட பட்டங்களில் "அன்னை அருளாளர், சிவகாம உபதேச வாசஸ்பதி, அருட் பிரபாகர சீலர், அருளுரை வேந்தன், சைவசித்தாந்த சாகரம், அன்னை அருட் செல்வர், திருவருட் செல்வர், சிவாகம வித்தியா பூஷணம், இலக்கிய மகுடம், சக்தி உபாஷகதீரர், ஆசிரியபணி சொற்பொழிவு நாயகன், அம்பிகை வாசன், சித்தாந்த சாகரி, சைவசித்தாந்த பண்டிதர், சித்தாந்த சேகரம், பெரிய புராண சொல்வாரிதி, ஓங்கார தரிசன ரூபன் கிரியாக்கிரம ஜோதி, கும்பாபிஷேக துரந்தரர், செந்நெறி புரவலர், சைவசாதன செந்நெறியாளன், குருமணி, சிவாச்சாரிய திலகம், அருட்பிரபாகர சாகரர்" போன்றவை முக்கியமானவை யாகும்.

**8. சமூகப் பற்றாளராக...**

சமூகத்தவரோடு நெருக்கமாக பழகிய இவர் முற்போக்கு சிந்தனையாளராவார். மக்களுக்கு இடையில் பேதம் பாராட்டாது அனைவரையும் சமமாக மதிக்கும் பண்பு எந்நேரத்திலும் எவருக்கும் உதவும் பண்பு உரிய ஆலோசனை, வழிகாட்டல்களை வழங்கும் தன்மை, மாணவர்கள் உயர்வில் அகமகிழும் பண்பு, கேட்காமலே தேவையறிந்து நடக்கும் பண்பு, குருமாரைத் தெய்வாக போற்றும் பண்பு, பிறர் நன்மைக்காக அனுதினமும் பிரார்த்திக்கும் பண்பு கண்ணன் ஐயாவிற்குரிய அடையாளங்களே

DAN TV, ஓம் ரிவி தொலைக்காட்சிகளில் நல்ல ஆன்மீக சிந்தனைகளை விதைத்த இவர் பிரதேசத்தில் நடைபெறும் ஆன்மீக விழாக்களாயினும் சரி, கலை விழாக்களாயினும் சரி, அரச விழாக்களாயினும் சரி, பாடசாலை நிகழ்வுகளாயினும் சரி அனைத்திலும் ஐயாவின் ஆசிரியுரை நிச்சயம் இருக்கும்.

இந்துமாமன்றம், தென்றல் உதவுகரம், மாணவத் பொதுப்பணி மன்றம், அகில இலங்கை திருவுள்ளுவர் கோட்டம் (தலைவர்), அகில இலங்கை சைவசித்தாந்த பண்டிதர் சங்கம் (பொருளாளர்), சைவவிருத்தியா அபிவிருத்திசமய திட்டபணிப்பாளர், செல்லண்டையான் வெளியீட்டுக்கழகம் (ஸ்தாபகர்) அகில இலங்கை சைவக் குருமார் அர்ச்சகர் சங்கம், இந்து குருமார் ஒன்றியம் போன்ற பல நிறுவனங்களில் அங்கம் வகித்து சமூகத்திற்குத் தன்னாலியன்ற பணிகளை ஆற்றியுள்ளார்.

சத்தியம், நேர்மை என்ற இரண்டையும் தாரக மந்திரமாகக் கொண்டு வாழ்ந்த இவருக்கு உண்டான சோதனைகள் ஏராளமாயினும் அனைத்தையும் சாதனையாக மாற்றிய பெருமை இவருக்குண்டு.

**9. குடும்பத் தலைவராக**

அன்னார் மணப்பருவத்தை அடைந்த போது கோவிலாக்கண்டியில் சிறப்புற இல்லறம் நடாத்திய சிவசிதம்பரதேசிகர் இராசலட்சுமி அம்மா தம்பதியரின் மகளாகிய புவனேஸ்வரி என்னும் நல்லாளரைத் திருமணம் செய்து இனிதுற இல்லறம் நடாத்தி அவ் இல்லறத்தின் சிறந்த பேறாக பிரபாலினி, ஜீவிதினி, தனஞ்சயக்குருக்கள், சங்கீத்தனி, சித்பவன் (அமரர்) என்னும் நன்மக்களைப் பெற்றனர்.

பொதுப்பணி, ஆலயப்பணி, ஆன்மீகப்பணி, ஆசிரியப்பணி, சோதிடப்பணி, தந்தையார் வழிநின்று வைத்தியப் பணி என இவை அனைத்தோடும் தன் குடும்பத்தவரையும் அணைத்து அன்பு செலுத்தி தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்து சிறந்த குடும்பத்தலைவனாகவும் விளங்கியவர். அன்னாரின் பணிகள் அனைத்திலும் புவனேஸ்வரி அம்மையார் உறுதுணையாக நின்றமை குறிப்பிடத் தக்கது.

சிரேஸ்ட புதல்வியான பிரபாலினி அவர்கள் மணப்பருவத்தை அடைந்ததும் சுந்தரலிங்கக்

குருக்கள் என்னும் நல்லானைத் திருமணம் செய்து வைத்தார். அவர்கள் விபூசன், ஷரணி, திரிஷ்யந்த் என்னும் நன்மக்களைப் பெற்று மகிழ்வுடன் இல்வாழ்க்கை வாழ்கின்றனர். ஜீவிதனி அவர்கள் திருஞானசம்பந்தக் குருக்கள் என்பவரை மணம் முடித்து அவர்தம் இல்லறப் பயனாக சம்ஷிஹன், ஸம்கவி, தபோஷிகன், பிரக்ரிதி என்னும் நான்மக்களைப் பெற்று இனிதுற இல்வாழ்க்கை வாழ்கின்றனர். தனஞ்சயக் குருக்கள் கீர்த்தனா என்பவரைத் திருமணம் முடித்து இல்வாழ்க்கை வாழ்வதோடு தந்தையாரின் அன்மீக, சமயப் பணிகளை அவர்வழிநின்று தொடர்ச்சியாக ஆற்றிவருகின்றார். கனிஸ்ர புத்திரியான சங்கீர்த்தனி என்பவர் பிரசன்னக் குருக்களை மணம்முடித்து ஹர்ஷபிரதன், ஐய்வர்தன் என்னும் நன்மக்களைப் பெற்று இனிதுற இல்லறம் நடாத்தி வருகின்றர். இளைய புத்திரனான சித்பவன் அவர்கள் சிறுபராயத்தில் அகாலமரணமடைந்தமை அன்னாருக்குப் பெருந்துயரத்தை ஏற்றபடுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. அவர்தம் நினைவாக "யோகசித்து" என்னும் நூலை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

இவ்வாறு குடும்பத்தின் சுக துக்கங்களில் கலந்தும் பன்முகப்பட்ட பணிகளை ஆற்றியும் சமூகத்தில் மிகப் பெறுமதி வாய்ந்த ஒருவராக விளங்கிய சிவஸ்ரீதியாக சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் அவர் நீண்ட காலமாக நீரிழிவு நோயால் பாதிப்புற்ற நிலையிலும் தனது உடல் நிலையைப் பாராது பணிகளை ஆற்றிவந்த ஒருவராக உள்ளார். இவ்வாறிருக்க மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவுகள், மாணவர்கள், கல்விச் சமூகம், ஆலய சமூகத்தினர் என அனைவரும் கலங்கும் படியாக 14.05.2021 அன்று நெல்லண்டை அம்பாளின் வெளிமடை தினத்தில் இவ்வுலக வாழ்வைத் துறந்து அம்பிகையின் அடிகளையே தஞ்சமென்று சென்று அமரத்துவமடைந்தார்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!






சிறிதரன்.
(ஜேர்மன்)
03/06/2001.

# ஆசியும் வாழ்த்தும் அஞ்சலியும் பிரார்த்தனையும்

## திருக்கோணேஸ்வர ஆலய பிரதமகுரு
## சிவஸ்ரீ மு.சண்முகரத்தினக் குருக்கள் அவர்களின் அஞ்சலியுரை

மனிதனாகப் பிறந்தவன் அடைய வேண்டிய பயன் நான்கு அவை. அறம், பொருள், இன்பம், வீடு என்பவையாகும். இந்த நாற்பயன்களின் வழியில் நின்று இவ்வுலக வாழ்க்கையை வாழ்ந்து வீடுபேறு அடைந்தவர் அமரர் சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜாக் குருக்கள். இவர் நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோவிலின் பிரதமகுருவாகவும், வேதாரணியம் குருக்கள் பரம்பரையில் தோன்றிய நந்திகேஸ்வர கோத்ர வழித்தோன்றல், சைவ சித்தாந்த பண்டிதர் அமரர் சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் சிறந்த பக்திமான் ஆவார். ஆலய விழாக்களிலும், பூசை கிரியைகளிலும் அவரின் வழிநடத்தல் அற்புதமானது. சிறந்த குருத்துவம் உடையவர். அது மட்டுமல்லாமல் ஓர் சிறந்த ஆசிரியராகவும் ஆன்மீக சிந்தனையுடைய சொற்பொழிவாளராகவும் விளங்கினார். தம் வாழ்க்கையில் ஆலயத் தொண்டுடன் சமூகத் தொண்டையும் இணைத்து செயற்பட்டவர் சிவஸ்ரீ சோமாஸ்கந்தராஜாக்குருக்கள். இவர் இந்து சமயத்தவர்களுக்கெல்லாம் சிறந்த வழிகாட்டியாக விளங்கியவர். இந்து சமயத்தின் பெருமைகளையும், சிறப்புக்களையும் உலகத்தார்க்கு எடுத்துக் காட்டும் முகமாக பல சமய நூல்களை வெளியிட்டுள்ளார். படைப்பு எல்லையில்லாதது அதில் பூலோகம் சிறப்பானது ஏனென்றால் இங்கு தான் சுகம், துக்கம், தட்பம், வெப்பம், நன்மை, தீமை ஆகிய இருமைகள் உள்ளன. இந்த பூமியிலே வேதநெறியை அடிப்படையாகக் கொண்ட தலை சிறந்த கல்விமானாகவும் விளங்கி பெயருடனும் புகழுடனும் வாழ்ந்த அன்னாரின் மறைவு இந்து சமயத்தவருக்கும், எனது சம்மந்தி என்ற வகையில் எமது குடும்பத்தாருக்கும் ஓர் ஈடு செய்ய முடியாத இழப்பாகும். சிவபதம் அடைந்த அமரர் சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் அவர்களின் ஆத்ம சாந்தி வேண்டி எல்லாம் வல்ல கோணநாதப் பெருமானின் அருள் பாலிக்க வேண்டுதல் செய்து என் அஞ்சலியுரையை முடித்துக் கொள்கின்றேன்.

# ஆசியுரை

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்”

என்பது வள்ளுவன் வாக்கு. அதாவது உலகத்தில் வாழ வேண்டிய அறநெறியில் நின்று வாழ்கின்றவன் வானுலகத்தில் உள்ள தெய்வ முறையில் வைத்து மதிக்கப்படுவான். அந்த வகையினில் அறத்தின் இயல்போடு தன் இல் வாழ்க்கையை வாழ்ந்து ஆன்மீக நெறியிலும் அறம் தவறாது இறை தொண்டாற்றி ஆசிரியப் பணியிலும் குறையில்லாத குருவாக திகழ்ந்து இன்று இத்தி மரத்தாள் திருப்பாதத்தில் நித்திய இளைப்பாறுகின்ற கண்ணன் ஐயா என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்படும் தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் மற்றும் இலட்சுணன் தோட்டம் வீரமாகாளி அம்மன் வட பத்திரகாளி அம்மன் இலட்சுமணன் தோட்டம் வீரமாகாளி அம்மன் வட பத்திரகாளி அம்மன் தேவஸ்தானத்தின் முன்னாள் பிரத குருவுமாகிய சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜாகுருக்கள் அவர்களினுடைய ஓராண்டு நிறைவு நினைவு மலரான “சோமஸ்கந்த விஜயம்” எனும் இம் மலருக்கு எனது ஆசியினை வழங்குவதோடு அமரரின் ஆத்மா அன்னையின் அடியில் ஆறுதலடைய பிராத்திக்கிறேன்.

ஆன்மீக பணியில் ஆசாரசீலராக இத்தி மரத்தாளுக்கு இறை தொண்டாற்றியதோடு சிறந்த ஆசிரியராக நல்ல மாணவர் சமுதாயத்தினையும் உருவாக்கி நல்லதோர் குடும்ப தலைவனாகவும் தன் குழந்தைகளுக்கொரு பொறுப்பான தந்தையாகவும் சமுதாயத்தில் நல்ல மனிதராகவும் விளங்கிய அன்னாரது இழப்பின் இடைவெளி என்றும் நிரப்ப முடியாததாகும்.

அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினர் துயரில் பங்கு கொள்வதோடு அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிராத்திக்கிறேன்.

நன்றி

சிவஸ்ரீ.வே.தியானந்தராஜாக்குருக்கள்
பிரதமகுரு
தும்பளை தம்புருவளை சித்தி விநாயகர் ஆலயம்
தும்பளை முருகன் கோவில்
தும்பளை வரத விநாயகர் தேவஸ்தானம்

# ஆசியுரை

சைவசித்தாந்த பண்டிதர், சக்திபூஜாதுரந்தரர், இன்னும் பல சிறப்புக்களையும் பெற்ற தியாக சோமாஸ்கந்தராஜக்குருக்கள் (B.A, M.A) ஓய்வு நிலை அதிபர் ஐயா அவர்கள் தன்னுடைய இளமைப்பருவத்திலே சோதிடம், சமஸ்கிருதம் முதலிய துறைகளிலும் கற்றுத் தேர்ச்சி பெற்றவர். அத்துடன் நல்ல குருவிடம் குருப்பட்டத்தையும் பெற்று குருத்தொழிலை பக்தியோடும், அன்போடும் செய்து வந்தவர்.

பல ஆலயங்களில் சிறப்புற கும்பாபிஷேகங்கள் செய்து ஆலயங்களையும், மக்களையும் வளர்த்தெடுத்தவர். "வையத்துள் வாழ்வாங்க வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்ற இனிய குறளுக்கு ஏற்ப வாழ்ந்து மறைந்த இந்தப் பெருமகனுக்கு, இறைவன் துணை மேலுகில் கிடைக்க வேண்டும் என்பது எனது பேரவா.

அத்துடன் விட்டுச்சென்ற பணிகள் இப்பூவுலகில் தொடர வேண்டும் என்றும், அன்னரின் மறைவையொட்டி, இத்தினத்திலே ஞாபகார்த்தமாக வெளிவரும் இனிய கருத்துக்களையும், சிறப்பு அம்சங்களையும் கொண்ட நூல் இந்த நூல் மிக, மிக யாவருக்கும் பிரயோசனமாக அமைய வேண்டும் என்று ஆசையுடன் எதிர்பார்க்கிறேன்.

அத்துடன் இந்த இனிய நூலை வெளியிடும் ஐயா அவர்களின், சிறப்புகளையும், சேவைகளையும் பாராட்டி வெளியிடும் அவரது பிள்ளைகள், மருமக்கள் அனைவரையும் பாராட்டி எனது ஆசியுரையை வழங்குகிறேன்.

இப்படிக்கு<br>
அன்புள்ள சிவத்திரு வே.யோகராசாகுருக்கள்<br>
முருகன் கோவிலடி<br>
மருதோடை<br>
ஓமந்தை

# மறைந்தும் மறையாத என்மதில் கண்ணன் ஐயா

சைவசிந்தாந்தபண்டிதர், சக்திபூஜை துரந்தரர் இன்னும் பல சிறப்பு பட்டங்களைப் பெற்ற திரு-தியாக-சோமாஸ்கந்தராஜா குருக்கள் (B.A, M.A) பட்டதாரியும், ஓய்வுநிலை அதிபர், ஐயா அவர்கள் இளம் வயதிலே நல்ல சுறுசுறுப்பும், தெய்வீகசக்தியும் இருந்தது. அதன் பயனாக பாடசாலைக் கல்வி தொடக்கம் உயர்பட்டதாரிவரையும் சிறப்புறக் கல்வியை கற்றுக் கொண்டார். அத்துடன் சோதிடம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளையும் சிறப்பாகக் கற்றுக் கொண்டவர் என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது எனலாம். நல்ல அறிவுக்கு விருந்தான பலபுத்தகங்களை வெளியிட்டு மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

தனது இளமைக்காலத்திலே ஆசிரியத் தொழிலைத் திறம்பட நடாத்தி பல மாணவச் செல்வங்களை உருவாக்கியுள்ளார். அம்மாணவர்களை இன்றும் பலதுறைகளிலே அரச ஊழியர் களாகவே காணக்கூடியதாக இருக்கின்றது. தன்னுடைய முயற்சியால் முன்னேறி தனக்கு நல்ல வாழ்க்கைத்துணைவியையும் பெரியோரின் ஆசியுடன் கைப்பிடித்து, நன்மக்களையும் பெற்று மகிழ்ந்தார். நல்ல குணாதிசயங்கள் கொண்ட குருவான மருமகன்மாரையும் தன் குடும்பத்தில் அணைத்து மகிழ்ந்தார். தன்னுடைய அன்பு மகனுக்கும் தனது கடைசி நேரத்தில் பண்பு, அன்பு, பொறுமையுடைய மருமகளையும் இணைத்து மகிழ்திருந்தார்.

அவர் தன்னுடைய சொந்த முயற்சியாலும், ஊரவர்களின் முயற்சியாலும் நெல்லண்டை வீரமாகாளி ஆலயத்தை உருவாக்கி நித்திய, நைமித்திய பூஜைகளையும் ஆரம்பித்து வைத்துள்ளார். தம்பி கண்ணன் ஐயாவுடன் நான் பத்துக்கும் மேற்பட்ட பல கும்பாபிஷேகங்கள் செய்து இருக்கிறேன். அவர் என்னை அன்புரிமையுடன் "யோகச்சித்தப்பா" என்று வாய் மலரக் கூப்பிடுவார். அவரின் வீட்டுக்குச் சென்றால் அன்போடு அவரும், அவர் மனைவியும் உணவளித்து என்னை அனுப்புவார்கள். நல்ல மாதிரியாக வையத்துள் வாழ்ந்து, மறைந்த கண்ணன் ஐயா அவர்கள் இறைவன் திருவருளால் நல்ல முத்தியும் இறைவன்துணை கிடைக்க வேண்டியும், அன்னாரின் குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவிக்கிறேன்.

இப்படிக்கு
சிவத்திரு.வே.யோகராசாகுருக்கள்
முருகன் கோவிலடி
மருதோடை
ஓமந்தை

# ஆளுமையும் மிக்க சைவப்பெரியார் சிவஸ்ரீ.தியாக சோமாஸ்கந்த ராஜாக்குருக்கள்

நமது மனித வாழ்வியலில் இறைவன் நமக்குத் தந்த அற்புத வரம் மனிதப் பிறப்பு, இதை சரியான முறையிலே நாம் பயன்படுத்தத் தவறிவிட்டு பின்னர் நம்மை நாமே நொந்து கொள்வதில் எந்தப் பயனும் இல்லை. உலகிலே படைத்த அத்தனை மனிதர்களுக்கும் இறைவன் ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுப்பான் அதைச் சரியான முறையிலே பயன்படுத்திக் கொள்பவர்கள் வெற்றிப்படி ஏறி சிகரத்தை தொட்ட மாண்புமிகு, நல்லாசானாகவும் நமக்கு குருவாகவும், அன்பும், பண்பும், ஆற்றலும், ஆளுமையும் மிக்க சைவப்பெரியார் சிவஸ்ரீ.தியாக சோமாஸ்கந்த ராஜாக்குருக்கள். அவர்களை சைவ உலகம் மறக்க முடியாது. இப்பெருமகனின் பிரிவு மிகுந்த வேதனை தருகின்றது. அவருடன் கும்பாபிஷேக கிரியைகளிலும், வீட்டு கிரியைகளிலும் அவர் அமைதியாக இருந்து நற்சிந்தனைகள் நடாத்திய காட்சி மனதை விட்டு மறைய முன் அண்ணா மறைந்து விட்டார் என்ற செய்தி எம்மை திடுக்கிட வைத்தது. இறப்பு எல்லோருக்கும் நிச்சயம் என்றாலும் அண்ணாவின் இறப்பு ஏற்க முடியவில்லை.

குனித்த புருவமும் கொவ்வை செவ்வாயிற் குமிண் சிரிப்பும் பரமேஸ்வரனான சிவனின் அருளாற்றலைக் காட்டி நிற்பது கருணையே வடிவான கடவுளின் அருள் வெளிப்பாடாக குமிண் சிரிப்பே அருளாளர்களால் எடுத்துக் கூறப்படுவது இறையருளை மக்கள் பெற்று வாழ்வில் வளம் பெற வேண்டும் என்று இறைவனுக்கு பணியாற்றும் தொண்டை தன் வாழ்வாகக் கொண்ட அன்பொழுக இனிய முகத்தில் குமிண் சிரிப்புடன் பூசனை ஆற்றியது நமக்கெல்லாம் எப்போதும் மகிழத்தக்க விடயமாகும் பலவிதமான மொழிகளையும், பட்டங்களையும், தற்கரீதியான விஞ்ஞான அறிவும், இறைவழிபாட்டின் மூலமான ஆன்மீக ஞானமும் உடையவர் மனதிருப்தி உள்ள மனிதனாக விளங்கினார். அவர்களின் மறைவு சுற்றத்தினருக்கும் ஏனையோருக்கும் பேரிழப்பாக அமையும் என்பதில் ஐயமில்லை.

மாயமாய் வந்த பிறவியது மாயுமென்
தூய சோமாஸ்கந்தராஜாக்குருக்கள் - நெல்லண்டைப் பதியென
மேயினரே நமரங்கான் மேவுதுயிர் அகன்று
ஆயசிவ கருமங்செய்கடைவீர் சிவகதி

ஸ்ரீ ரங்கநாதக்குருக்கள்
(வழக்கம்ரை முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்)

# ஆத்மார்த்த பிரார்த்தனை

நெல்லண்டையான் என சிறப்புப் பெயர் பெற்ற சைவ சித்தாந்த பண்டிதர் சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜக் குருக்கள் அவர்களை இனிமேல் காணமாட்டோம் எனும் பொழுது எம் மனம் ஆறாத்துயரில் ஆழ்ந்தி ஆழ்ந்தி மீள முடியாமல் தவிக்கின்றது. ஆற்றுவார், தேற்றுவார் எவருமின்றி மனம் பதகளிக்கின்றது. பிரிவின் துயர் எம்மை வாட்டுகின்றது.

ஸ்ரீமான் சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜக் குருக்கள் அவர்கள் நெல்லண்டை தியாகராஜக்குருக்கள் இராஜலட்சுமி தம்பதிகளின் மூத்த புதல்வராய் 1963.04.24ல் அவதரித்தவர். இவர் புவனேஸ்வரி அம்மாவைக் கரம் பற்றி சிவஸ்ரீ தனஞ்செயக்குருக்கள் அவர்களை புத்திரராய் பெற்றர். வாழ்வின் உயர் பண்பாளர், கலைப்பட்டதாரி, தமிழ் சிறப்பு முதுமானிப்பட்டம் பெற்று இலங்கை கல்வித் திணைக்களத்தின் அதிபர் சேவையில் அதிபர் பதவிவரை பதவி வகித்தவர். மனம் நிறைந்த சக்தி உபாசகர் ஆசிரியத்துவ வாண்மை மிக்கவர். தந்தை வழிச்சீர்மியம், வைத்தியம், நிமிர்த்திகம், அருட்கலை, ஜோதிடம், சைவசித்தாந்தம், வாஸ்து, கணிதம் போன்றவற்றைச் சீர்மியமாகக் கொண்டவர். ஒரு சிறந்த பேச்சாளர். தகமையில் சான்றோறான சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜக் குருக்கள் பலவிதமான நூற்தொகுதிகளை நெல்லண்டையான் வெளியீடு வாயிலாக தொகுத்து வெளியிட்டவர். 03.11.2019 வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் திருமண மண்டபத்தில் நடைபெற்ற எனது பவள விழாவின் போது "சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் குரு தரிசனம்" என்ற பெயரில் கட்டுரைத் தொகுப்பு நூல் ஒன்றை வெளியிட்டு என்னைப் பெருமைப்படுத்திய பெருந்தகையினர்.

லட்சுமணன் தோட்டம், வீரமாகாளி அம்மன், வட பத்திரகாளி அம்மன் தேவஸ்தானத்தின் ஆதீனகர்த்தர். உலகப் புகழ் பெற்ற நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோவில் ஆதீனகர்த்தர் அருட்பிரபாசுரசீலர், சிவாகம உபதேச வாசஸ்பதி, சிவாகம வித்யா பூஷணம் எனப் பல பட்டங்களைப் பெற்று பெருமை பெற்றவர். ஜோதிடக் கலையில் பால ஜோதிட சிந்தாமணி என்ற பட்டம் பெற்றவர் வாண்மை மிக்க வாழ்வு வாழ்ந்த வாணாட்சிறப்புப் பெற்றவர்.

இப் பெருந்தகையாளர் சிவப்பேறு குறித்து 03.05.2022 சோமாஸ்கந்த விஜயம் என்ற பெயரில் வெளியிடப்படவிருக்கும் நூல் சிறப்புற வெளிவர நான் ஆதீனகர்த்தராயிருக்கும் தென்புலோலியூர் பற்றனைச் சித்தி விநாயகர் பேரருளையும், பிரதம குருவாக இருக்கும் வல்லை ஸ்ரீ முத்துமாரி அம்பிகையின் பாத விந்தாரங்களையும் பணிந்து நெஞ்சார வாழ்த்தி விடை பெறுகின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் J.P
பிரதமகுரு வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்.
ஆதீனகர்த்தர் தென்புலோலியூர் புற்றளைச் சித்தி விநாயகர் தேவஸ்தானம்.

# “நெஞ்சை நெகிழ வைத்த பிரிவு”

அண்ணா என்று அன்புடன் கூப்பிட்ட அமரர் தியாக சோமாஸ்கந்தராஜாக்குருக்கள் (கண்ணன் அண்ணா) இலங்கையில் வடமாகாணம் பருத்தித்துறை தும்பளையில் ஞானமும் கல்வியும் நயந்த கலையும் தானமும் தவமும் தான் செய்தல் அரிது தானமும் தவமும் தான் செய்வராயினும் வானவர் நாடு வழி திறந்திடுமே என்னும் கூத்தின் படி வாழ்ந்து காட்டி பல ஆலயங்களில் தன் ஆத்ம பலத்தாலும் ஆகமக் கிரியைகளாலும் பல கும்பாபிஷேகம் மகோற்சவம் என்பன சிறப்பாக நடாத்தியது மட்டுமல்லாமல் பல சைவ சமய நற்சிந்தனை, சைவசித்தாந்தம் போன்ற நிகழ்வுகள் நடாத்தி பெரியார் இவரின் பல ஆளுமைகள் இவ்வுலகின் பரிமாணங்கள், இந்த வகையில் பல மாணவர்கள் அறிவாற்றலில் திகழ்கிறார்கள். அந்த வகையில் அவரின் இழப்புக்கள் அவரின் ஆளுமையைக் குறிக்கின்றது. அந்த சிறுமன நிறைவோடு அண்ணாவின் ஆத்மா தில்லைக் கூத்தனின் பாதாரவிந்தங்களில் அடையப் பிராத்திக்கின்றேன்.

பாலமனோகரக் குருக்கள்

# பலகிளைகள் பதித்த ஆலமரம் அழ சாய்ந்ததோ

இறைவனடி சேர்ந்த வணக்கத்திற்குரிய குருக்கள் ஐயா அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பரம்பொருளை உள்ளன்போடு பிராத்திக்கின்றேன்.

மறைந்த கண்ணன் ஐயா அவர்கள் சிறந்த குருவாகவும் பண்பாளராகவும், நல்ல ஆசிரியராகவும், சிந்தாந்தம், சோதிடம், சமஸ்கிருதம், அதிபராகவும், ஆன்மிக சமயச் சொற்பொழிவாளராகவும், பல நூல்களின் நூலாசிரியராகவும், பல மாணவர்களை கல்விமான் களாகவும் உருவாக்கிய பெருந்தகையாவார். குருக்கள் ஐயா அவர்கள் தனது வித்தியாகுரு மார்களை கண்கண்டதெய்வமாக மனதிலே நிலைத்துப் பிரார்த்தனை செய்து தான் எக்காரியத்தையும் செய்வார். இறைவன் மீது மிகவும் பக்தி கொண்டவர் ஆவர் ஐயா அவர்கள் பூசை செய்கின்றபோது அடியவர்களும் தங்களையே மறந்து இறைவன் ஈர்ந்துவிட்டத்தக்க வகையில் ஆலய வழிபாட்டிலும் சரி, மாணவர்களுக்கு கல்வி புகட்டுவதிலுடம் சரி பெரியோர் களைக் மதிப்பதிலும் சரி குருக்களை விடயாரும் இல்லை. குருக்கள் ஐயா அவர்களுடன் அடியேனும் அவரது ஆலய கும்பாபிஷேகங்கள் பலகிரியைகள் பங்கு கொண்ட போது ஒவ்வொரு கிரியைகளுக்கும் விளக்கங்கள் கொடுத்து பலகுருமார்களை உருவாக்கிய பெருமைக்குரியவர். குருக்கள் ஐயா அவர்கள் பல விருதுகளைப் பெற்று பெருமைக்குரியவராகத் திகழ்ந்தவர். குருமார் களுக்கும், கல்வியாளர்களுக்கும் ஏற்படும் சந்தேகங்களைத் துல்லியமாக ஆதாரங்களோடு விளக்கங் கொடுப்பார்.

ஐயா சுயநலம் இல்லாது எப்போதும் பொதுநலம் பொதுநோக்கம் கொண்டவர் ஐயா அவர்களுக்கு அன்பான மனைவி, பாசமான பிள்ளைகள் விசுவாசான மருமக்கள், பேரன்பிற்குரிய பேரப்பிள்ளைகளோடு சீரும் சிறப்புமாக வாழ்ந்து விருகின்ற நேரத்தில் சிறிது கால நோய்வாய்பட்ட ஐயா அவர்கள் சிறப்பாக வாழ்ந்து எமது குருமார்களை எல்லாம் நல்வழிப்படுத்தியவர். இப்படியாக பலகிளைகளைப் எம்மண்ணில் பதித்த அறிவு சார் பெருஆலமரம் கிளைகள் துளிர்ந்து அனைவருக்கும் பெருபேரிழப்பாகும். இதை ஈடு செய்ய யாராலும் முடியாது குருக்கள் ஐயா அவர்களது ஆத்மா சாந்தியடைய சிவகாமசுந்தரிசமே தில்லைக் கூத்தன் திருவடியடைந்து பேரானந்த நிலையடையப் பராத்திப்போமாக

சுபம்

சிவஸ்ரீ இ. பாலகிருஷ்ணக்குருக்கள்
பிரதமகுரு ஸ்ரீமனோன்மணி அம்பாள்
திருக்கோவில் உ.வ. கொம்பாந்தறை

# பிராத்தனை உரை

தும்பளை பதிவாழ் மக்களால் கண்ணன்ஐயா எனச் செல்லமாக அழைக்கப்படுபவர் தான் எனது சம்பந்தியார் சிவஸ்ரீ.தியாக. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் அருள் நிறைந்த நெல்லண்டையாள் திருப்பணியில் ஐயம் திரிவற தாம் கற்ற ஆகமத்தை தம் வாழ்வியல் ஆன்மீக அனுபவங்களோடு இணைந்து தம் மக்களுக்கு அரும் பெரும் சேவையாற்றிய ஆசானாம் இவர் 14.05.2021 அன்று அம்பாளின் குளிர்த்தி விஷேட தினத்தில் அவள் திருப்பாதங்களை அடைந்த செய்தி கேட்டு மிகவும் கலங்கி நிற்கின்றோம். இவரின் இழப்பு ஒரு பேரிழப்பாகும்.

சம்பந்தி அவர்களின் ஓராண்டு நிறைவாக “சோமாஸ்கந்த விஜயம்“ என்று நூல் வெளியிடப்படுவதையிட்டு பெருமை அடைகின்றோம்.

“அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்குள்
செந்தண்மை பூண்டொழுக லான்”

என்பதற்கிணங்க வாழ்ந்து மறைந்த சம்பந்தியாரின் ஆத்மா சாந்தி பெற சங்கரத்தைப் பத்திரகாளி அம்மனை பிராத்திக்கின்றோம்.

என்றும்
அன்பு மாறாச் சம்பந்தி
சிவஸ்ரீ.வே. இராமலிங்கக்குருக்கள்
சங்கரத்தை

# உறவும் உணர்வும்

# என்றும் என்னுயிர் அப்பா

அன்பு நிறை அப்பாவே! அன்பு செலுத்துவதில் தாயாக, புத்தி புகட்டுவதில் தந்தையாக, பாசமிகு அண்ணனாக தளர்ந்தபோது தாங்கும் தோழனாக, மெய்ப்பொருளை உணர்த்தும் குருவாக தேவைப்படும் போதெல்லாம் பொருத்தமான உருவெடுத்து என்னை வழிநடத்தியவர் நீங்களே! என் நல்வாழ்விற்காக நீங்கள் சுமந்த வலிகளும், வேதனைகளும், வடுக்களும் சொல்லில் அடங்காது. இன்று நான் சுற்றம் சூழ இனிது வாழும் வாழ்க்கை நீங்கள் எனக்காகப் பட்ட பிரயத்தனத்தின் அறுவடைகளே!

சிறுபராயந் தொடங்கி அப்பா அப்பாவென்று ஒட்டுண்ணியாக உங்களோடு திரிந்த நினைவுகள் நெஞ்சை விட்டு நீங்கிடுமோ? மனதில் எதை நினைத்தாலும், கண் எதைப் பார்த்து ஆசைப்பட்டாலும், வாய் திறந்து எதையும் கேட்கும் முதல் கணத்திலே அதை நிறைவேற்றி என் முகமலர்வை 2ம் அகமகிழ்வாய் பார்த்த கணப் பொழுதுகளும் என் கண்ணை விட்டு அகன்றிடுமோ? பெண்ணாய் பிறந்தமையோ எதுவோ புரியவில்லை. திருமணத்திற்கு முன்பும், பின்பும் என்றும் தாயின் மடிதேடும் குழந்தையாய் என் மனமும் உங்களின் அன்பிற்காய் அலைபாய்ந்து திரிந்ததன்றோ!

பெய்யெனப் பெய்யும் மழையாகிக் கேட்டவை எதையும் உங்களது நெருக்கடியையும் பாராது முகமலர்வுடனே நிறைவேற்றி வைத்த நினைவுகள் என் வாழ்வில் பலவுண்டு. அன்றொரு நாள் என் பாடசாலை நூலகத்தில் “பொன்னியின் செல்வன்” என்ற புத்தகத்தின் ஐந்தாம் பாகத்தை வாசித்தேன். அதுவும் முடிவில்லை. முழுமையாகப் படிக்க வேண்டுமென்ற ஆர்வம் என்னுள் கிளர்ந்தது. வீட்டுக்கு வந்தவுடன் “அப்பா இன்று நூலகத்தில் பொன்னியின் செல்வன் புத்தகம் பார்த்தேன். அதை முழுமையாகப் படிக்க வேண்டும் போல் இருக்கிறது. வாங்கித் தர வேண்டும்” என்று கேட்டேன். மறுப்பில்லை, மனமகிழ்வுடன் என்னையும் யாழ்ப்பாணத்திற்கு கூடவே அழைத்துச் சென்று இலங்கையின் புத்தகசாலையில் ஐந்து பாகங்களையும் வாங்கித் தந்தீர்கள். அன்று உங்களுக்கு சம்பள நாள் அதுவும் பத்தாயிரம் ரூபா தான். அதில் பெரும் பகுதியை புத்தகத்திற்காகக் கொடுத்தீர்கள். என் மகிழ்வை மட்டுமே மனதிற் கொண்டீர்கள். இதுபோன்ற நிகழ்வுகள் எத்தனை! எத்தனை!

அன்பு நிறை அப்பாவே “ஆச்சார்யதேவோபவ” என்று வேதங்கள் சொல்வதற்கமைவாக உங்களுக்கு கல்வி கற்பித்த குருமாரைத் தெய்வமாகப் போற்றினீர்கள். நான் சிறு பராயத்தில் உலகறிந்த பருவம் முதலே ஆசிரியர் தினம் வந்து விட்டால் என்னையும் கூடவே அழைத்துக் கொண்டு தன் குருமார் இல்லஞ் சென்று தானும் ஆசி பெற்று, என்னையும் ஆசி பெறச் செய்தீர்கள்; எனக்கும் குரு மகத்துவத்தை உணர்த்தி நின்றீர்கள். இன்று வரை நான் எனக்கு கல்வி கற்பித்த குருமாரைத் தெய்வமாக வணங்குகின்ற வழக்கத்தை எனக்கு விதைத்தவர் அப்பாவே! இன்றும் என் வாழ்வின் நன்மை தரு பக்கங்கள் அனைத்திலும் நிறைந்து நின்றவர் அப்பாவே!

நீங்கள் என்னை விட்டு எங்கும் செல்லவில்லை. எனக்குள்ளே உயிரின் அணுவறைகள்

தோறும் அணுவாகக் கலந்து என்னோடு சேர்ந்து பயணித்துக் கொண்டு தான் இருக்கிறீர்கள். யாருக்கும் கிடைக்காத பாசத்தை உங்கள் மூலம் நிறையவே பெற்றிருக்கிறேன். எனக்கு அகவை முப்பது நான்காகும் போதும் "நீ என்றும் எனக்கு மூன்றரை வயதுக் குழந்தையே" என்று நெகிழ்ந்து உரைப்பீர்கள்.

எல்லோரையும் அன்புடன் வளர்த்து இன்று என்னையும், என் கணவரையும் நல்ல வித்துக்களாக நற்பிரஜைகளாக வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிசமைத்தீர்கள். எம்மையும் அவையத்து முந்தியிருக்க உருவாக்கிய உங்களது பணிகளைத் தொடர்ந்தும் நாம் செய்வதே எமக்கு ஆத்மார்த்தமான நிறைவைத் தரும். அதற்குரிய மனத்திடத்தை அருவாகி நின்று அருள வேண்டும் ஐயனே! உங்கள் நெல்லண்டையாளுக்கு நீங்கள் செய்த தொண்டினைத் தொடர்ந்து நாமும் சீரும் சிறப்புமாகத் தடங்கல் இன்றி ஆற்ற வேண்டிய பெரும் பொறுப்பையும் விட்டுச் சென்றுள்ளீர்கள். அதனைக் குறைவின்றி நிறைவேற்றுவது திண்ணம்.

குருவருளும், திருவருளும் பக்தியின் படிநிலைகள் அதற்கான தேடலே இறைவன் மீது நாம்வைக்கின்ற வைராக்கியமான அன்பு என்பதை உங்கள் வாழ்க்கையின் மூலம் எமக்கு அவளின் தினத்திலே அவளடி சேர்ந்து உணர்த்திச் சென்றுள்ளீர்கள்.

நீங்கள் உங்களது பாதகமலத்தினூடாக எமக்கு இட்டுச் சென்ற ஆன்மீகப் பணிகளையும், சமூகப் பணிகளையும் இணைந்தாற்றுவதற்கு இனிதான இல்லறத் துணையைத் தேடித்தந்துள்ளீர்கள். இணையிலா நற்பணிகளை புவிதனில் ஆற்ற எனதருமை அத்தான் சுந்தரலிங்கக் குருக்களுக்கும் அப்பாவின் ஆசிகள் என்றும் நிலைத்திருக்க அருள் பாலிக்கும் வண்ணம் இத்திமரத்தாள் பாதார விந்தங்களைப் பணிந்து நிற்கின்றோம்.

என்றென்றும் உங்கள்<br>
மூன்றரை வயதுச் சேயும்,<br>
பெரிய மருமகனும்



# மருமகனின் நீங்கா நினைவுகள்

அன்புத் தெய்வமாய் நல்வாழ்வின் வழிகாட்டியாய் வாழ்ந்த நெல்லண்டை பத்திரகாளி அம்மன் பிரதம குருவும், எனது மாமனாரும் ஆகிய சைவசித்தாந்த பண்டிதர் அமரர் சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜாகுருக்கள் அவர்கள் 14.05.2021 அன்று பத்திரகாளி சமேத சிரயத்திர திருப்பாதங்களில் இறைபதம் அடைந்தார்.

மாமா அவர்கள் ஆலயத்தின் பிரதமகுருவாக மட்டுமல்லாமல் சிறந்த சொற்பொழிவாளராகவும் விளங்கி இந்து சமயத்திற்கு பெரும் சேவை ஆற்றியுள்ளார். அவருடைய சேவை ஆலயத்தில் மட்டும் நின்றுவிடாது நல் ஆசிரியராகவும் அதிபராகவும் விளங்கி மாணவர்களுக்கு கல்வியோடு நல் ஒழுக்கத்தையும் புகட்டினார். மாமா அவர்கள் நல்குருவாகவும், அதிபராக விளங்கியது மட்டுமல்லாமல் எமது குடும்பத்திற்கு நல்வழிகாட்டியாகவும் விளங்கி எம்மை வழி நடத்திச் சென்றார்.

மாமா அவர்கள் இவ்வுலக வாழ்வை நீத்தநாள் அக்ஷய திருதியை நாளாகும். அக்ஷய திருதியை என்பதன் பொருள் எடுக்க எடுக்க செல்வம் குறையாது என்பதாகும். அதேபோல் இவ்வுலகை விட்டு மாமா மறைந்தாலும் அவருடைய பெயரும், புகழும், சேவையும் என்றென்றும் நிலைத்திருக்கும். மாமா அவர்கள் குறுகிய காலத்தில் நம்மை விட்டு சென்றாலும் அவருடன் பழகிய நாட்கள் என்றும் எனக்கு நீங்கா நினைவுகளே அவ்வகையில் அவரின் ஓராண்டு நினைவுகளாக சோமாஸ்கந்த விஜயம் நூல் என்ற வெளிவருவதை எண்ணி மகிழ்வடைகின்றேன். மாமா எம்மை விட்டு பிரிந்தாலும் அவரின் நினைவுகள் எம்முடன் இருப்பது போல் அவருடைய ஆசிர்வாதமும் எம்முடன் இருக்கும்.

இப்படிக்கும் என்றும் நீங்கா நினைவுகளுடன்
அன்பு மருமகன் ச.பிரசன்னக்குருக்கள்

# என் அப்பா

கடவுள் கொடுத்த வரமே அப்பா என்று
சொல்வேன் முன்பு
கடவுளே உருமாறி எம்மோடு
இருந்தார் என்று உணர்கிறேன் இன்று
தடையில்லாப் பாசத்திற்கும் விடைஇலாக் கோபத்திற்கும்
எல்லைகள் எதுவும் இல்லை
உடையில் நேர்த்தியும் உள்ளத்தில் நேர்மையும்
உணர்நிலை அன்பும் உங்களின் அடையாளங்கள்

அப்பா உங்களுக்கு சிவாஜி கணேசன் என்றால்
அபரீத பிடிமானம்
எப்போதும் அவர் படங்களை நீர்
தவற விடுவதில்லையே!
தப்பாது அவர் போல் பாவனை செய்து
தவறாது உணர்த்தி நின்றீர்
இப்பொழுதும் திரையில் சிவாஜி வந்தார்
அப்பாவாகவே பார்க்கிறது என் இருவிழிகள்

தந்தையே! நீர் அரியதோர் பொக்கிஷம்
நான் முழுமையாகப் படிப்பதற்கு
அரியவகைப் புத்தகம். படிக்கும் அவாவுடன்
அணுகும் வேளையில் நீர் எம் கைவசம் இல்லையே!
நெஞ்சம் முழுவதும் பாசத்தை நிறைத்து
கோபம் கொண்டவராய் உமைக் காட்டிக் கொள்வீர்
என்னையும் “என்தாய்” என்று
சொல்லி அகம் மகிழ்வீரே!

இன்று உண்மையாக உங்களை என்கருவில்
தாயாக சுமக்க ஏங்குகிறது என் உள்ளம்
இறைவா நீ எனக்கு ஒரு வரம் மட்டும் தந்து விடு
தந்தையே என் மகனாக அவனியில் வந்துதிக்க
தாயன்பை உம் மீது நான் பொழிய
தனயாக நீர் எமக்கு வேண்டுமப்பா
நான் இவ்வுலகில் திரும்ப பெற நினைப்பது
தந்தையே! உம்மை மட்டும் தானே

என்றும் உங்கள்,
உத்தரட்டாதி அம்மா, சங்கீர்த்தனி.

# அம்மையா

எனது அம்மையாவை எனக்கு ரொம்ப ரொம்பப் பிடிக்கும். என்னை அன்போடு எனது சின்னச் செல்லா என்றும், வாலாட்டிக்குருவி என்றும் சொல்லி அழைப்பார். பதிலுக்கு நானும் அவரை தடியாட்டிக்குருவி என அழைப்பேன். சிரித்தபடி என்னுடன் என்னை ஓடித்திரித்திப் பிடித்து சிறுகுழந்தையாகவே மாறிவிளையாடுவார்.

அம்மையாவீட்டிற்கு செல்லும் போது அங்கு சாப்பிடச் சொல்லி சாப்பிட வைப்பார். மாதாளம்பழம் உடைத்த முத்துக்களாக உருத்தி தந்தும், மாம்பழ தோலைச் சீவி அதனை துண்டுகளாக வெட்டித்தந்து என்னை உண்ணவைத்து மகிழ்வார். இப்போது மாம்பழம் சாப்பிடும் போதும் மாதாளம் பழத்தை பார்க்கும் போதும் அவர் ஞாபகம் தான் அதிகம் வருகின்றது.

நான் இயலாது வைத்தியசாலையில் இருந்த போது அவர் நெல்லண்டை அம்பாளிடம் வேண்டி என்னை நலம் பெறச் செய்தார். வைத்தியசாலையிலிருந்து வந்ததும் என்னைத் தூக்கியபடி அம்பாளின் சந்நிதானத்தை சுற்றி வந்து தனது நேர்த்தியை நிறைவேற்றினார். அவரின் அன்பு சொல்லியடங்காது.

சில பொழுது அவர் தனது கால்வலியில் துடிக்கும் போது கால் பிடித்து விடச் சொல்லுவார். நானும் அமர்ந்து கால் அமர்த்தி விடுவேன். சிறிது நேரத்தில் போதும் என்று சொல்லி அருகமர்த்தி தலையை சீவி விட்டு அன்போடு சொல்லுவார். வைத்தியர் ஆக வேண்டும் என்று. இப்போது அவர் இல்லாதது நிறைய கவலையாக இருக்கின்றது. அவர் கவலையாக இருக்கும் போது நிறைய அவரை கிண்டல் செய்வேன். அதைக்கேட்டு சிரிப்பார். இப்பொழுது அவரைச் சிரிக்க வைக்க முடியாது. ஆனால் அவர் சந்தோஷமடையும் வண்ணம் அவர் ஆசைப்பட்டபடி நன்றாக படித்து அதேபோல் வைத்தியராக வந்து உங்களை எப்படி மதித்தார்களோ எல்லோரும் மதிக்கும்படி எப்படி நானும் வாழ்வேன். அம்மையா என்றும் அவரது

செல்லப் பேர்த்தி<br>
வாலாட்டிக்குருவி<br>
ஷரணி

# இன்னுமொரு முறை பிறந்து வாழோமோ

கருத்தறிய முடியாத உருத்தெளிவே- உன்
கடலளவு அன்புக்கு எங்கே போவேன்
உருத்தெரியா இறையவனாய் ஆனபோதும்
உன் மனம் நிறைந்த அன்புக்கு எங்கே போவேன்

விருப்பமுற உங்களோடு வாழ்ந் நாளை
நினைக் கையிலே கண்ணீரில் குளிக்கின்றேனே
திருப்பமுற இன்னுமொரு மறை பிறந்து
வாழோமோ என்றவொரு ஆசைதோன்றும்

உம்மிடத்தில் குறைப்படாத எதுவுமில்லை நீர்
என்னிடத்தில் சொல்லாத எதுவுமில்லை
இன்பமுடன் நாம் கடந்த நாட்கள் எல்லாம்
இனி வருமா என் றேக்கம் மனதில் தோன்றும்

தூயவனே உம் அன்பில் வறுமை இல்லை
துயரில்லை இன்பதுன்ப வரட்சி இல்லை
ஆய பெரும் கருணையுடன் அன்பு செய்தீர்
அருளோடு தோள் கொடுத்தீர் என்றும் என்றும்

இறைவனின் இணைபாதம் சேர்ந்துவாழி
இன்பமுடன் அடைந்திடுக சாந்தி சாந்தி
கறையில்லா மாணிக்க மலையே வாழி
கறைமிடற்றண்ணலின் பதமே சேர்ந்து

அன்பு மகன்
சிவஸ்ரீ.சோம. தனஞ்சயக்குரு

# அண்ணா கண்ணன் அண்ணா!

கூடிப்பிறந்த
அறுவருக்கு நீ
அண்ணன்
தள்ளி ஒன்றைவிட்டு
பிறந்த எம் நால்வருக்கும்
நீ மட்டுமே அண்ணன்

அண்ணனாய்
அன்புத் தோழனாய் - நல்
ஆசானாய் எல்லோ
எங்களுக்குள் நீ வாழ்ந்தாய்...

புத்தகம்
தந்த அறிவை விட
உன் உபதேசம்
தந்த அறிவே அதிகம்

உன்னைப் பார்த்து வளர்ந்தோம்
அண்ணன் நீ எமக்கென்று
அகமெல்லாம் மகிழ்ந்தோம்

கவிதையையும்
கதைகளையும் - இலக்கியங்களையும்
இலக்கணங்களையும்
தமிழில்
கலக்கி சுவைத்து
உனக்கென்று ஒரு
தனி இலக்கணம்
எழுதிய
“எழுத்தாளன்” அண்ணா நீ
கலங்கரை
விளக்காய் இருந்து
வழிகாட்டியவனே நீ

அறிவுப் பசிக்கு
அற்புத தீனி கொடுத்தவனே
அண்ணனாய் நீ
வந்து பிறந்தது சிறப்பிலும் சிறப்பே

நொந்து மனம்
வெந்து போய்
வரும் போதெல்லாம்
நோவாமல் - வார்த்தையால்
மருந்து தடவி வழியனுப்பி வைப்பாயே

நோய் வந்து
உன்னை தின்ற போதும்
வென்று வந்து
வெற்றிவாகை சூடிக்கொள்வாயே

அம்மன்
வேள்வியில் உன் வார்த்தையை
ஆகுதியாக்கினியோ அண்ணா?
வெந்து மனம்
நொந்ததால்
வாழ மறுத்து விண்ணுலகம் சென்றாயோ?

அங்கும் எமக்கு நீ
அண்ணன் அதனால்
முந்தினாயோ
உன் பயணத்தில்....

அழுது புலம்பி
தொழுகின்றோம்
ஆத்மா சாந்தி கொள்கவே!

அன்புத் தங்கைகள்
பாமதி, கிருஷா, உஷா, உமா, காந்தி

# அன்பு நிறைந்த அப்பாவே

கல்வி எனும் கடலில் நீந்தச் செய்த என் அப்பாவே, தன் கலையை எனக்கு அறியத்தந்த என் அப்பாவே சிறு வயதில் நான் செய்த குறும்புகள் எல்லாவற்றையும் பொறுத்து என்னை குளிப்பாட்டி பாடசாலைக்கு அழைத்து கொண்டு சென்ற நினைவுகளை மறக்க முடியுமா? பாடசாலை விட்டு வந்தவுடன் உங்கள் மூவரின் தலைகளை பார்த்த நினைவுகளை மறக்க முடியாது உயிர் எழுத்து, மெய்எழுத்து, வல்லின, மெல்லின, இடையின எழுத்துக்கள் என்றும் என் நினைவில் மறக்காத படி மனதில் பதியவைத்து அன்பு அப்பா ஆசானே ஒவ்வொரு நாளும் அரை மணித்தியாலம் குறை நிறை கதைப்பதற்கு நேரம் ஒதுக்கி எங்களுடன் மகிழ்ச்சியாக இருந்த காலங்கள் இனி எங்கே? ஆசிரியர்களை மதிக்க வேண்டும், பெரியவர்களை மதிக்க வேண்டும், என்ற கடைபாட்டை எனக்கு உணரவைத்த என் அப்பா என்னை நல்வழிப்படுத்தி எனக்கு ஒரு இல்வாழ்க்கை ஒன்றை அமைத்து தந்து உங்கள் இன்ப துன்பங்களில் முன்னின்று கலந்துகொண்ட என் அப்பாவே எனக்கு இளநீர் வெட்டி தந்து மாம்பழம் உரித்து தந்து நான் சாப்பிடுவதைப் பார்த்து மகிழ்ந்த என் அப்பா இன்று இதைச் செய்ய யார் வருவார் வாரத்தில் ஒரு நாளாவது வீட்டுக்கு வந்து எல்லாம் பார்த்து வந்த தாங்கள் ரூமை விட்டு வந்து தொலை தூரம் சென்றிருப்பேன். உடல்நிலை சரியில்லை என்றாலும் கால்களில் வீக்கம் இருக்க உடல்களைத்த படி தேடி வந்து எங்களுடன் சிறிது நேரம் சந்தோஷமாக இருந்து கதைத்து சென்ற நினைவுகள் என் மனதில் நீங்கா வண்ணம் நினைவோடு சென்று கொண்டிருக்கின்றது நான் ஓய்வு பெற்றவுடன் பிள்ளைகளின் வீட்டிற்கு ஒரு கிழமை இருந்து விட்டு வர வேண்டும் என்ற ஆசை இருந்தது என்று நீங்கள் வந்து தங்குவதற்கு வசதியாக வீடு கட்டி இருக்கின்றோம் தங்கள் வருகையை காண முடியவில்லை. திருவாசகம் புத்தகம் கேட்டதற்கு நமது கோவிலுக்கு ஐந்து புத்தகங்கள் அன்பளிப்பாக வழங்கி என்னும் திருவாசகத்தை வாசித்துக்கொண்டே பயன்படுத்துகிறோம். அதனால் தான் அருள்நங்கை சண்முகநாதன் அவர்களையும் என் மதிப்பிற்குரிய பேராசிரியர் சண்முகதாஸ் அவர்கள் அவர்களின் பாரியார் மனோன்மணி சண்முகதாஸ் அவர்களையும் பற்றி அடிக்கடி கதைத்துக் கொண்டு அவர்களை மாதிரி வாழவேண்டும் என்று கூறிக் கொண்டிருப்பார் அப்பா நீங்கள் இருக்கும்போது எமை பேசுவதை பொறுத்துக் கொள்ளாத நான் இன்று எமை பேசுவதற்கு நல் வழிப்படுத்துவதற்கு நீங்கள் இல்லை என்று கவலைப்பட வேண்டி உள்ளது என சின்ன சந்தேகம் வந்தாலும் தொலைபேசியில் தங்களிடம் தான் கேட்போம் இனிமை வழிப்படுத்த யார் வர போகின்றார்கள்? இறுதியில் தொலைபேசியில் என் உறவுகளை விட்டு செல்ல போகிறாயோ எனக்கேட்டு என்னை விட்டு தொலைதூரம் சென்று விட்டு இறைபதம் அடைந்தாரோ

தீ.ஜீவிதா
குமுளமுனை
முல்லைத்தீவு

# அன்பு நிறை மாமனார்
# சிவஸ்ரீ தியாக.சோமாஸ்கந்தராஜாக் குருக்கள்

தக்கார் தகவிலார் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்

என்ற வள்ளுவரின் வாக்குக்கிணங்க நல்லுள்ளம் கொண்ட ஒரு உத்தமராக, சமூக நலன் விரும்பியாக நல்லதொரு ஆன்மீக வாதியாக சிறந்த அன்பாளராக எம் கண் முன் வாழ்ந்து இன்று இறையடி சேர்ந்து எம் மனதிற்குள் தெய்வமாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற அன்பு நிறை மாமனார் சிவஸ்ரீ தியாக.சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் அவர்களுடைய மறைவு எம் நெஞ்சைவிட்டு என்றும் அகலாது.

தினம் காலையும், மாலையும் முப்பொழுது எமது வீட்டுக்கு வந்து நன்மை, தீமைகள் பற்றி உரையாடி எம் இல்வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் எமக்கு என்றும் உறுதுணையாக நின்று வழிகாட்டியவரே. குருஸ்தானத்தில் இருந்து நெல்லண்டையாளுக்கு ஆற்ற வேண்டிய பணிகளை எம்மிடம் ஒப்படைத்து நாம் பூஜை செய்வதை கண்குளிர பார்த்து எமது முன்னேற்றத்தில் உயர்ச்சியில் மனம் நெகிழ்ந்தவரே. பார்வையால் அன்பையும், அரவணைப்பையும் உணர்த்தியவர்.

என் மனைவியை மட்டுமல்ல பிள்ளைகளை மட்டுமல்ல என்னையும் உங்கள் பிரிவு வெகுவாகப் பாதித்திருக்கின்றது. நாம் எதிர்பார்க்காத தாங்க முடியாத ஏற்க முடியாத ஒன்றாக உள்ளது. மாமா உங்களுடைய ஆசை கனவுகள், இலட்ச்சியங்கள் அனைத்தையும் நிறைவேற்றி வைப்பதற்கான முயற்சிகளை தொடர்ச்சியாகச் செய்வேன். என்னைப் பொறுத்த வரையிலும் மாமாவின் பிரிவு நிரப்பமுடியாத வெற்றிடமாகவே இருக்கின்றது. மாமா எப்பொழுதும் என்னை முதல் மருமகனாக மட்டுமல்லாது தன் மகனாகவே பார்த்திருக்கின்றார். அந்த அடிப்படையில் எனக்கு பெரிய பொறுப்புக்களை தந்திருக்கின்றார். அதனை முழுமனதுடன் பார்த்துக் கொள்ளுவேன். அவரின் ஆத்மா சாந்தியடைய இத்திரமரத்தாளை தினம் தினம் வேண்டிக் கொள்கின்றேன்.

பிரியமுடன்
முதல் மருமகன்
சிவஸ்ரீ.இராம.சுந்தரலிங்கக் குருக்கள்

# அப்பா

“தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை”

எனும் முதுமொழிக் கொப்ப அல்லும் பகலும் எனக்கு அமுத மொழிகளை அள்ளி அள்ளித் தந்த என் தந்தையே தெய்வமே எனக்கு குருப்பட்டம் அளிக்கும் சடங்கை வழி நடத்திய எங்கள் குல விளக்கே எந்த ஆலயத்திலும் கிரியை ஆரம்பிக்கும் போது தங்களுக்கு குருவணக்கம் செய்தே ஆரம்பிப்பேன். எந்தவொரு விடயம் செய்தாலும் அதில் ஒரு நேர்த்தி உங்களிடம் உண்டு. அதனை என்னிடமும் எதிர் பார்ப்பீர்கள். எதையும் ஆத்மார்த்தமாக செய்ய வேண்டும் என்று சொல்வீர்கள். மூன்று வயது முதல் என்னை சைக்கிளில் ஏற்றிச் செல்கையில் எல்லா தெய்வங்களுக்குமுரிய மூல மந்திரங்களை எல்லாம் சொல்லித்தந்து அந்த வயதிலேயே பதிய வைத்தவர்.

“ஒழுக்கம் தான் உன் முகவரி”

என்பதை என் நெஞ்சில் எழுதிய ஆசான் நீங்கள். அப்பா... அப்பா... அப்பா... என்று உங்களை வியந்து கேட்க பல கேள்விகள் ஆனால் பதில் தர இன்று நீங்கள் இல்லையே. எனது வாழ்வின் ஒவ்வொரு படி நிலையிலும் ஏணியாக நின்று ஏற்றி விட்டீர்கள். அடுத்து வருகின்ற முக்கிய தருணங்களில் எல்லாம் உங்கள் வழிகாட்டலும், அறிவுரையும் கிடைக்குமென்று மலைபோல நம்பியிருந்தேன். என்மனம் நெருக்கடிகளை சந்திக்கும் பொழுதிலெல்லாம் உங்கள் அரவணைப்புக்காய் ஏங்கித் தவிக்கின்றது.

அன்பு மகன்
திவியன்

# அன்பு மாமாவே

அன்பு மாமாவே
விழிகளும் உம்மைத்தேடி
விளிம்பினில் நினைவின் சோகம்
வழிகளும் ஏதும் உண்டோ
வையகம் மீண்டும் காண?

சிரிப்பிலும் அறம் சொன்ன ஆசானே
உம் சிரிப்பால் அனைவரையும்
மகிழ வைத்தீர்...
இன்று ஏனோ அனைவரையும்
உம் பிரிவால் கலங்க வைத்தீர்...

அன்புடன்
மருமகள்
கீர்த்தனா

# என் இனிய அம்மையா

அம்மையா நீங்கள் கவிதையல்ல
உரை நடை!
வர்ணிப்புக்கானவர் அல்ல
வாழ்க்கையின் யதார்த்தம்

அச்சாணியை யாரும்
அள்ளி முத்தமிடுவதில்லை
நீங்கள் அச்சாணி!!
உங்கள் உருவம்
கூர்மையான ஆயதம்..
ஆனாலும், நீங்களே
அந்த ஓட்டத்தின் ஆதாரம்
உங்கள் ஞாபகம் என்
நெஞ்சை நனைக்கிறது

பேரன்
விபூசன்

# அன்பின் உருவமாய்

அன்பின் உருவமாய்
அகத்திடை உறைபவரே!
அனுதினம் இனிதான புன்னகை தவழ
அரவணைத்த புண்ணியரே!

எத்தனை தவங்கள்
முற்பிறப்பில் புரிந்தேனோ
உங்களை நான் என்
மணாளனாய் அடைவதற்கே

கிடைத்தற்கரிய பொக்கிசமாய் - என்
வாழ்வில் கிடைத்தவரே!
நற்பண்புகளால் எல்லோர் மனதிலும்
இடம் பிடித்த உத்தமரே!

என் மனமறிந்து, உம் மனம் விரும்பி
அனைத்தையும் எமக்காய்ச் செய்தீர்
மனையாள் என் மகிழ்வினிலும்
மகவுகளின் புன்னகையிலும்
மனம் நெகிழ்ந்து நின்றீர்

உங்களுக்குப் பணிவிடை புரிவதை என்
பேறாகக் கருதினேன்
உங்களது சுக துக்கங்களில் பங்கெடுப்பதை
என் வரமாகக் கொண்டேன்

புவனேஸ்... புவனேஸ்...
இந்த வார்த்தை உங்கள் நா
அனுதினம் மந்திராய் உச்சரிக்கும்
இப்போதும் உங்கள் வார்த்தை என்
காதில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது
உருவத்தைக் காணவில்லை அருவமாய்
ஒலிக்கிறது

நெருக்கடிகள் வரும்போது
பிள்ளைகளின் அணைப்பையும்
என்னுடைய அன்பினையும்
அதிகமாக எதிர்பார்ப்பீர்கள்
இன்று நீங்கள் இல்லாது
உங்களின் அணைப்பிற்காய்
நாம் எல்லோரும் தவித்து நிற்கின்றோம்.

என் உறவுகளையும் - உம்
உறவுகளாய் நினைத்தீர்
நன்மையெது செய்தாலும்
மனங்கோணாது செய்வீர்
நன்றிக் கடனை நான்
எப்பிறப்பில் தீர்ப்பேனோ?

உங்களது மனறிந்து
உங்களது விருப்பறிந்து
உணவு சமைப்பது
எனக்கு மிகவும் பிடித்தகலை
உணவருந்தும் போது
உங்கள் முகமலர்ச்சி
எந்தன் பசி தீர்க்குமன்றோ?
இன்று
உண்ணவும் மனம் வருகுதில்லை
சமைக்கவும் கை ஏவுதில்லை...

நேர்த்தியான உடையலங்காரம்
இனிமையான கணீர்குரல்
கூடவே கமழும் தெய்வீக வாசனை
நன்மையை எண்ணும் மனம்

நல்லதையே செய்யும் செயல்

பேதம் காட்டா மனப்பாங்கு
பாசம் தோய்ந்த உளப்பாங்கு
உதவி செய்வதில் நாட்டம்
இவை எல்லாம் உங்கள் அடையாளங்கள்

கரையிலாக் கல்வி ஞானம்
முடிவிலாத் தேவி அருட்கடாட்சம்
பெற்ற பட்டங்கள் ஏராளம்
பாராட்டும் புகழும் தாராளம்
எத்தனை உயர்வு வந்திடினும்
என்னையும் சமாசனம் வைத்து
என்னை நெகிழ்த்திய தருணங்கள்
மறந்திடுமோ?

குருபக்தி இதனை
உங்களால் நான் உணர்ந்தேன்
நற் சிந்தனைகளைப் பிள்ளைகள்
மனத்தினில் விதைத்தீர்
வான் பார்த்த நிலமாய்
உயர்வுக்கு ஏங்கி நின்றீர்

உங்கள் வாழ்வின் அத்தனை பக்கங்களிலும்
எனக்காக ஓரிடத்தை ஒதுக்கினீர்
உங்கள் வாழ்க்கைப் பயணத்தில்
கூட வந்து துணை செய்யும்
பாக்கியம் பெற்றவள் நான்
நன்மை தீமையென எது வந்திடினும்
உமக்குத் துணையாகத்
தோள் கொடுத்ததே பெரும்பேறு
சிறுபராயம் முதலலே குடும்பத்தின்
அனைத்துச் சுமைகளையும் நீர்சுமந்தீர்
உங்கள் சுமையைக் குறைக்க
சிறு துணையாவது புரிந்தேன் என்ற
மன நிறைவு எனக்குண்டு!

புத்தகங்கள் உங்கள் செல்வம்
மாணவர்கள் உங்கள் சொத்து
உங்கள் பொது வாழ்க்கைப் பயணத்தில்
அறிவுத் தேடல் முயற்சியில்
ஆன்மீகப் பயணத்தில்
கூடவே கரந்தந்தேன்

இன்று நீங்கள் சென்ற
மோட்சப் பயணத்தில்
என்னை அழைத்துச் செல்லாததேனோ?

கொள்கைப் பற்று பலமாக இருந்திடினும்
அன்பிற்கு முன்னால்
பூரண சரணாகதி ஆகிடுவீர்
எம் பிள்ளைகள் மண்ணில்
நல்ல வண்ணம் வாழ
நல்வழியனைத்தும் சமைத்தீர்

பிள்ளைகள் அரவணைக்க
பேரப்பிள்ளைகள் சூழ்ந்து நிற்க
ஆல விருட்சமாய் வாழ்ந்த வாழ்க்கை
நிலைக்குமென்று நினைத்திருந்தேனே....
பேரிடியாய் உங்கள் பிரிவு
என்னை மட்டுமல்ல
எம் குடும்பத்தின் ஆணி வேரையும்
நிலைகுலையச் செய்ததன்றோ!

அன்பு மனைவி புவனேஸ்வரி

# காலத்தின் பதிவுகள்

“வையத்துள்ள வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்”

என்ற வள்ளுவன் வாக்கின் படி மானுடப்பிறவி எடுத்த எனது மைத்துணர் அமரராகி ஓராண்டு காலம் சென்றாலும் அவர் வாழ்ந்த காலத்தில் தன்னை அர்ப்பணித்து இந்த உலகிற்கு அவர் விட்டுச் சென்ற சேவைகள் யாராலும் மறக்கவும் மறுக்கவும் முடியாது. எனது ஆருயிர் மைத்துணர் தியாக சோமாஸ்கந்தராஜா குருக்கள் (கண்ணன்) அவர்கள் வானுறையும் தெய்வமாகி விட்டாலும் அவர்களின் ஆத்ம சாந்திக்காக வெளியிடப்படும் ஓராண்டு மலரில் நிதர்சனம் பற்றி எனது உண்மை நிலையினை வெளிக் கொணர்ந்து அவர்களின் ஆத்மசாந்திக்காக மேலும் பிராத்தனை செய்கின்றேன்.

நான் எனது குடும்பத்தில் ஐந்தாவது வாரிசாக பிந்துள்ளேன். எனக்கு பிறகு ஒரு தம்பி, அடுத்த படியாக புவனேஸ்வரி அம்மா என்ற பெண் சகோதரி, அதன் பின்பு ஒரு சகோதரியும் இரண்டு ஆண் சகோதரர்களும் மொத்தம் ஒன்பது சகோதர்கள். புவனேஸ்வரி அம்மா 1965ல் பிறந்துள்ளார். அவர் பிறந்து முப்பத்து ஓராம் நாள் மாமா மாமி மற்றும் கண்ணன் இவர்கள் மூவரும் எமது வீட்டிற்கு வந்திருந்தார்கள். அன்றைய நாளிலே தியாகராசா மாமா புவனேஸ்வரியை கையில் எடுத்து மாமியாரின் மடியிலிருந்த கண்ணன் என்ற குழந்தையிடம் இவள் தான் உனக்குவரும் கால மனைவியாக வரப்போகிறாள் என்று செல்லமாக கதைத்துவிட்டு மடியில் இருந்த கைப்பையினுள் இரண்டு ரூபா தாள் ஒன்றினை புவனேஸ்வரி அம்மாவின் உள்ளம் கையில் மடித்து வைத்தார். அவர்களின் ஆசீர்வாதம் பெற்ற மணமக்கள் தான் சோமாஸ் கந்தகுருக்கள் புவனேஸ்வரி அம்மா தியாகராசா மாமா மாமி ஆகியோர் தமது அன்றாட வாழ்வை வாழ்வதற்கு சோதிடம், மற்றும் மருத்துவம் கற்றும் பத்திரகாளி அம்மன் ஆலய அர்ச்சகராகவும் பணி செய்து குடும்பத்தினை செம்மையாக நடாத்திவந்தனர். அக்கால கட்டத்தில் தியாகராசா அவர்களின் மனைவி (மாமி) மரணம் எய்தினார். கண்ணனின் தாயார் தவறியமை அக்குடும்பத்திற்கு பேரிடியாகிவிட்ட நிலையிலும் வளர்த்து வந்தார். பிள்ளைகளை தாய் இல்லையென்ற குறை தெரியாது மாமா தமது பிள்ளைகளை நன்கு கவனித்து வந்தார். விதி மாமாவையும் விட்டு வைக்கவில்லை. இனந்தெரியாதவர்கள் இவரின் துப்பாக்கி சூட்டிற்கு இலக்காகி அகால மரணமெய்தினார். அக்கால கட்டத்தில் சிறிய தந்தையார் பக்கபலமாக இருந்து வந்தார். கண்ணன் அவர்கள் குடும்பத்தின் மூத்தவாரிசாக இருந்த படியினால் அவர் குடும்பப்பொறுப்பை ஏற்று நெல்லண்டை பத்திரகாளி அர்ச்சகராகவும் கடமை செய்து தனது படிப்பினையும் தொடர்ந்து சகோதர சகோதரிகளை நன்கு கவனித்து வந்தார். அதுமட்டுமல்லாது உயர் கல்வியை கற்பதற்கு நல்ல பெறுபேறுகளையும் பெற்றிருந்தார். அத்துடன் மூத்த சகோதரியின் விருப்பத்திற்கேற்ப அவரையும் திருமணம் செய்வித்து வெளிநாடு அனுப்பி வைத்தார். கால கட்டத்தின் நியதியால் கண்ணன் அவர்கள் திருமணபந்தத்தில் இணைய வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படவே தந்தை சொல்மிக்க மந்திரமில்லை தாயிற் சிறந்ததொரு

கோயிலும் இல்லை என்ற அமைப்பின் கீழ் புவனேஸ்வரி அம்மாவை திருமணம் செய்தார். இல்லற வாழ்வில் இணைந்த கண்ணன் அவர்கள் படிப்பினையும் தொடர்ந்து பட்டதாரி பட்டம் பெற்று ஆசிரியர் பணியும் கிடைக்கப்பெற்றார். இவர் நெல்லண்டை பத்திரகாளி அருட்கடாச்சத்தால் பல சேவைகள் மேற்கொண்டு ஊர் மக்களின் நன்மதிப்பினை பெற்றார். இக்காலகட்டத்தில் இளைய சகோதரி இராசாத்தியை திருமணம் முடித்து வைத்தார். சகோதரர்களை குரு றங்கன் இவர்களையும் வெளிநாட்டிற்கு அனுப்பி வைத்தார். கண்ணன் அவர்களின் இல்லற வாழ்வின் பயனாக இரண்டு ஆண் வாரிசுகளும் மூன்று பெண்வாரிசுகளும் மழலைச் செல்வங்களாக பெற்றெடுத்தார். காலகர்பகாரணத்தால் மகன் ஒருவர் அகால மரணம் அடைந்துவிட்டார். தனது நான்கு பிள்ளைகளுடன் இல்லறம் நடாத்திவரும் காலபகுதியில் புவனேஸ்வரி அம்மாவின் தாயார் இனக்கலவரத்தின் போது காணாமல் போய்விட்டார். அவர் காணாமல் போனது எல்லோரையும் ஆழ்ந்த துயர் ஏற்பட்டது. குறிப்பாக புவனேஸ்வரி அம்மாவால் துயரம் தாங்க முடியாத நிலையில் காணப்பட்டார். ஒருவாறாக மூத்தமகள் செல்லாவிற்கு திருணம் நிச்சயிக்கப்பட்டது. செல்லாவின் திருமணம் பெற்றோருக்கு பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. இக்காலகட்ட பிற்பகுதியில் பதினைந்து வருடகாலமாக பிரிந்து சென்ற புவனேஸ்வரியின் தாயாரின் தொடர்பு ஏற்படவே கண்ணன் அவர்கள் இந்தியாவிற்கு சென்று அம்மாவை மீட்டுவந்துள்ளார். இது எமது குடும்பத்திற்கு ஏற்பட்ட மிகச்சிறந்ததொரு வரப்பிரசாதமாக அமையப் பெற்றுள்ளது. இக் காரியத்தை செய்த கண்ணன் அவர்களுக்கு நாம் ஏழ்பிறப்பும் கடமைபட்டவர்களாக உள்ளோம். இதுவெறும் கற்பனை அல்ல ஒரு கண்ணீர் காவியமாகும்.

அடுத்த கட்டமாக எனது இரண்டாவது சகோதரியின் மகள் சிவமதி என்பவருக்கு திருமணம் முடித்து வைத்த பெருமை கண்ணன் அவர்களையே சாரும். மேலும் தென்மராட்சி கோவிலாக்கண்டிக் கிராமத்தில் அருள் பாலித்துக் கொண்டிருக்கும் திருமூலநாயகி திருமூலேஸ்வர் ஆலயம் பாலஸ்தானம் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடை பெற்றுள்ளது என்றால் கண்ணன் அவர்களின் பெரும்பங்களிப்பாகும். கண்ணன் அவர்கள் எமக்கு இருகண்களைப்போன்று வழிகாட்டியாக இருந்தமை மட்டுல்ல வெறுமனே பெண் எடுத்து சீரும் சிறப்புமாக மற்றவர்களுக்கு வழிகாட்டியாகவும் இருந்தார். அவருக்குயாரும் ஒப்பானவர்கள் எவரும் கிடையாது என்பதையும் இவ் விடத்தில் கட்டாயமாக குறிப்பிட விரும்புகிறேன். இதுமட்டுமல்ல எமது தந்தையார் அவர்களையும் ஒரு குருவாக மேற்கொண்டு அவரின் இறுதிக் கிரியை வரை பங்கேற்றவர் என்றால் மிகையல்ல, இப்படியாக எமது குடும்ப உறவில் ஏற்படுத்திய பயன்தரு விடயங்களை மட்டும் இவ்விடத்தில் சுட்டிக்காட்டியுள்ளேன். ஆனால் அவர் வாழ்ந்த காலப்பகுதியில் ஆசிரியர் அதிபர் என்ற வகையில் கல்விக்காக தன்னை அர்ப்பணித்தமை கலை கலாச்சாரம் ஆன்மீகஅறிவு போன்றவற்றை நாடுமுழுவதும் விட்டுச் சென்றுள்ளார். மாந்திரிகம், வைத்தியம், ஆலய வழிபாடு இவை பற்றி என்னாம் இவ்விடத்தில் நான் குறிப்பிடவில்லை அவரின் சேவை நலம்பற்றி அவ்வூர் மக்கள் அல்ல வெளி மாவட்டத்திலிருந்தும் அறிய முடியும் என்பதினை அறியத் தந்து அன்னார் சாந்தி அடைய பிராத்தித்து விடை பெறுகின்றேன்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

பிராத்தனையுடன்
சிவ.சச்சிதானந்த ஐயர்
சச்சியா இரும்பகம்
அராலி வட்டுக்கோட்டை

# நினைவலைகள்

# தெய்வமும் தீர்க்கதரிசனமும்

அமரர் சிவஸ்ரீ தியாக சோமாஸ்க்கந்தராஜா குருக்கள் ஐயா அவர்கள் அவதார புருஷர் என்றும் தீர்க்கதரிசி என்றும் கூறுவதில் எவ்வித தவறும் இருக்காது. அவதாரம் என்பது தெய்வப் பிறப்பாகும். பூலோகத்தில் நீதியை நிலை நிறுத்தவும் அநீதியை அழித்தொழிக்கவும் கண்ணபிரான் அவதாரம் எடுத்தார். இது பாரதக்கதையின் மூலம் நன்கு தெளிவானது. இதே போன்று கண்ணபிரானின் இன்னொரு அவதாரமாக இராபிரான் அவதரித்தார். அவரும் நீதியை நிலைபெறச் செய்து அநீதியை இல்லாதொழித்தார். இது இராமாணயத்தின் மூலம் அறியக் கூடியதாய் உள்ளது. இதனை “வானின்றிழிந்து வரம்பிகந்து மாபூதத்தின் வைப்பெங்கும் ஊனும் உயிரும் உணர்வும் போல் உள்ளும் புறத்தும் உளனெனப் கூறும் சிறிய கோத்தாயும் கொடுமை இழைப்பக் கோல்துறந்து கானுங்கடலுங்கடந்து இமையோர் இடுக்கண் காத்த கழல் வேந்தே”

என்று கவிச்சக்கரவர்த்தி கம்பன் எடுத்துக் காட்டியுள்ளார். இராமபிரான் எவ்வாறு தசரதச் சக்கரவர்த்திக்கும் கோசலைக்கும் மகனாக அவதரித்தாரோ அதேபோன்று அமரர் சிவஸ்ரீ தியாக சோமாஸ்க்கந்தக் குருக்களும் சிவஸ்ரீ தியாகராஜா குருக்களுக்கும் இராசலட்சுமி அம்மாவிற்கும் மகனான அவதரித்தார். இறையருளால் நீதியை நிலை நாட்டவும் அநீதியை அழிக்கவும் அவதரித்தார் என்பதால் சிறுபராயமாய் இருக்கும் போதே எல்லோரும் கண்ணன் ஐயா, கண்ணன் ஐயா என்றே அழைக்கலாயினர். அதுமட்டுமன்றி இவரைக் கற்பித்த பேராசிரியர்களும், பெருங்கல்விமான்களும், ஆண் பெண் அனைவரும் இவர்பாதம் பணிந்து வணங்குவர்.

விஸ்வாமித்திரமுனிவரின் யாகவேள்வியைக் காக்கச் சென்ற இராமபிரான் மிதிலையில் எவ்வாறு சீதாபிராட்டியைக் கண்டு தனக்குத் துணைவியாகத் தேர்ந்து கொண்டாரோ அதே போன்று மறவன்புலவிற்குச் சென்ற இவரும் புவனேஸ்வரி அம்மாவைக் கண்டு தனது துணைவியாகத் தேர்ந்து கொண்டார். குருப்பட்டம் தரித்த பின் இளம் வயதிலேயே பத்திரகாளி அம்மனுக்கு அர்ச்சகராகப் பணி செய்யும் பேறு பெற்றார். அர்ச்சகர்பணியோடு ஆசிரியப் பணியையும் இருகண்களாகவே போற்றிச் செயற்பட்டார்.

அவதாரபுருஷர்கள் எவரும் சாதிமத பேதம் பார்த்த வரலாறு இல்லை. இராமபிரான் முதன் முதலாக அனுமனைச் சந்தித்த போது “இன்று உன்னுடன் ஐவரானோம்” என்று கூறி அனுமனைத் தன்படைத்துணைவனாக ஆக்கிக் கொண்டார். “ஒன்றே குலம் ஒருவனே தேவன்” “பிறப்பொக்கும் எல்லாம் உயிரும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை யான்”

என்னும் திருக்குறளின் சீர்மியத்தையும் நன்குணர்ந்த இவரும் சமூக வேற்றுமையை வெறுத்தார். இதற்கு முன்மாதிரியாக நடக்க வேண்டும் என்னும் எண்ணத்தால் தாழ்த்தப்பட்டவர் களின் ஆலயங்களிலும் அர்ச்சகர் பணியை ஏற்றுச் செயற்பட்டார். இதனால் அம்மக்கள் வழிபாட்டு முறைகளைத் தெரிந்து கொள்ளவும், விரத அநுட்டான முறைகளை மேற்கொள்ளவும், சமய தீட்ஷையை அளித்துச் சைவ ஆசாரத்துடன் வாழவும் செய்தார். அவர்களின் ஆலயத் திருவிழாக்காலத்தில் தொடர் பிரசங்கம் செய்வார். பிரசங்கம் கேட்பதற்காகவே பலரும் வருகை தருவதுண்டு. இக்காலப் பகுதியில் மூச்சம்புலவு சிவன் கோயிலின் சிவராத்திரி தினத்திற்கு

கோயிலைச் சார்ந்த இளைஞர்கள் கண்ணன் ஐயாவையே பிரசங்கதத்திற்கு ஒழுங்கு செய்திருந்தார்கள். இதை அறிந்து கோயிலுக்குச் சேர்ந்த ஒரு பெரியவர் தாழ்த்தப்பட்டவர்களின் கோயில்களிற் பிரசங்கம் செய்பவர். இங்கு வரக்கட்டாதென்று மறுதலித்தார். ஒழுங்கு செய்தவர்கள் அந்தச் செய்தியையும் ஐயாவிடம் கூறி அவரையே அழைத்துச் சென்று சிவராத்திரியின் மகிமைபற்றியப் பேசவைத்தார்கள். பெருந்தொகையானவர்கள் அவரின் பிரசங்கத்தைக் கேட்டமையால் சிவனின் அநுக்கிரகத்தையும் பெற்றிருப்பார்கள். இங்கு இவருக்குப் பிரசங்க வாரிதி என்னும் பட்டம் அளித்துக் கௌரவித்தார்கள் பிரசங்கம் செய்வதற்குரிய பேறுதவத்திரு கிருபானந்த வாரியார் அவர்களால் அருளப்பட்டது. பருத்தித்துறை கொட்டடிப் பிள்ளையார் ஆலயத்தில் திருவிழாக்காலம் பத்து நாட்களும் வாரியார் அவர்களின் தொடர் பிரசங்கம் நடைபெற்றது. அக்காலம் கண்ணன் ஐயாவிற்குப் பதினான்கு வயதாக இருந்தது. தவறாது தினமும் பிரசங்கம் கேட்பதற்கா மேடையின் முன்னால் அமர்ந்து கொள்வார். எந்தநாளும் குறித்த இடத்திலேயே இருந்து அவதானிக்கும் ஐயாவை வாரியார் அடையாளப்படுத்திக்க கொண்டார். இறுதிநாள் பிரசங்கம் முடிந்தவுடன் மிகுந்த பரிவுடன் வாரியார் கண்ணன் ஐயாவை தன்முன் அழைத்து அவரின் நெற்றியில் விபூதியைப்பூசி நீயும் பிரசங்கம் செய்வாய் என அருள் பாலித்தார். அந்த அருள் வாக்கு இவரை அந்த நிலைக்கு உயர்த்திவிட்டது. சைவ ஆலயங்கள் பலவற்றில் வேள்வியின் போது ஆடு கோழி கட்டும் வழக்கம் உண்டு. பத்திரகாளி கோயிலில் பெருந்தொகையான ஆடுகளும் கோழிகளும் கட்டப்படும். ஐயாவிற்கு முன்பிருந்த அர்ச்சகர்கள் ஒரு ஆட்டின் செவியையும் ஒரு சேவலின் பூவையும் வெட்டி இரத்தப்பலி கொடுப்பார்கள் இவர் இரத்தப்பலிகொடுக்கும் வழக்கத்தை மாற்றி ஆடு கோழிகளுக்குப் பூவும் தண்ணீரும் தெளித்து விடுவார்.

1994 ஆம் ஆண்டு திருவள்ளுவர் கோட்ட அங்குரார்ப்பணக் கூட்டம் இலட்சுமணன் தோட்டம் பிள்ளையார் ஆலயமுன்றலில் ஓய்வு நிலை அதிபர் சந்திரசேகரம் ஐயா அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பலரும் திருவள்ளுவர் கோட்டத்தின் தேவையைப் பற்றி எடுத்துக் கூறினார்கள். புதிய நிருவாகிகள் தெரிவின் போது கண்ணன் ஐயா அவர்களை தலைவராகவும் வடிவேலுவைச் செயலாளராகவும், பரஞ்சோதியைப் பொருளாளராகவும் தெரிவு செய்தார்கள். முதன் முதலாகப் பத்திரகாளி கோயிலில் திருக்குறள் முற்று மோதல் நிகழ்வு கண்ணன் ஐயாவில் வழிநடத்தலில் நடைபெற்றது. மூதறிஞர் சொக்கன் அவர்கள் பிரதம அதிபதியாகக் கலந்து சிறப்பித்தார். அதனைத் தொடர்ந்து பல ஆலயங்களில் திருக்குறள் முற்று மோதல் நடைபெற்றது பாடசாலைகள் தோறும் மாணவர்களிடையே திருக்குறள் மனனப் போட்டி வைத்து திருக்குறள் புத்தகங்கள் பரிசாக வழங்கப்பட்டது. பருத்தித்துறை பஸ்ரான்டில் முன்பிருந்த காந்தி நிலை கௌரவிப்பின் போது ஐயா தனது மூத்தமகளுடன் வருகைதந்து சிலைக்கு மாலை அணிவித்து வருகைதந்த பலர் மத்தியில் திருக்குறள் பற்றி உரையாற்றினார்.

இத்தனை காரியங்களையும் செயற்படுத்திய ஐயா அவர்கள் தான் ஒரு தெய்வப்பிறவிதான் என்பதை ஊரம் உலகும் அறிய நிலைநிறுத்தினார். 2021 ஆம் ஆண்டு சித்திரை மாதம் வெள்ளிக்கிழமை பத்திரகாளி அம்மன் ஆலய பூசை புரிவதற்காகச் சென்றார். அங்கு நின்ற சிலர் ஐயாவுடன் குதர்க்கம் புரிந்தார்கள். ஐயாவும் அவர்களுடன் வாதாடிவிட்டு நீங்களும் போங்கள் நானும் போகிறேன் என்று கூறிவிட்டு வீடு வந்தவர் அன்று இரவே பத்திரகாளி அம்மனின் பாதாரவிந்தங்களைச் சார்ந்துவிட்டார். இது தெய்வத்தன்மை உரியவர்களால் மட்டும் செயற்படுத்த முடியும். தெய்வந்தான் என்பதை நிரூபிக்க இன்னுமொரு சம்பவம் இடம் பெற்று விட்டது. அனேகமான நாட்காட்டிக் கலண்டர் அட்டைப்படமாகக் கடவுள்களின் படங்களையே பிரசுரிப்பார்கள். 2022 ஆம் ஆண்டு தொட்டக்கம் கண்ணன் ஐயாவின் படமும் இடம் பெற்றுவிட்டது. இது இவர் கடவுள் தன்மை பெற்றுவிட்டார் என்பதை உறுதிப்படுத்தி விட்டது. எனவே கண்ணன் ஐயாவையும் தெய்வமாக நினைத்து தினமும் வழிபடுவார்கள். அவரின் அருளாசியைப் பெறுவார்கள் என்பது பேருண்மையாகும்.

கண்ணன் ஐயா தெய்வத்தன்மை பொருந்தியவராக மட்டும் இருக்கவில்லை. சிறந்த ஒரு தீர்க்கதரிசியாகவும் விளங்கினார். தீர்க்க தரிசனம் என்பது எதிர்கால நிகழ்வுகளை முன்னரே அறிந்து கூறுவதாகும். வைத்திய கலாநிதிகளும் திணைக்களம் சார்ந்த அதிகாரிகளும், உத்தியோகத்தரும் வர்த்தகர்களும், பல்வேறு தொழில் முயற்சிகளில் ஈடுபட்டவர்களும், தொழில் இழந்தவர்களும், தொழில் தேடுபவர்களும், வெளிநாடுகளிலிருந்து வந்தவர்களும், வெளிநாடு செல்ல நினைப்பவர்களும், திருமணத்தை எதிர்பார்க்கும் இளைஞர்களும், யுவதிகளும் குடும்பப்பிணக்குள்ள ஆண்களும், பெண்களும், பொருளைத்தவறவிட்டவர்களும் களவு கொடுத்தவர்களும், காணமாற்போனவர்களின் உறவுகளும், வெளிநாடுகளில் இருப்பவர்களும், நீதிமன்ற வழக்குடன் தொடர்புடையவர்களும், கொடுக்கல் வாங்கல் பிணக்குள்ளவர்களும், பரீட்சைக்குத் தோற்றும் மாணவ மாணவிகளும் சாதகங்கள் பார்ப்பவர்களும் என அதிகமானவர்கள் தினமும் ஐயாவை நாடிவருவார்கள். இத்தனைக்கும் வந்தவரின் பெயரோடு தாயின் பெயரையும் சொல்லித் தன் இரு கைகளாலும் பிடித்த வெற்றிலை கவிழ்தோ நிமிர்ந்தோ விழுவதையும், நுனிவெற்றிலை விழும் திசையையும் அவதானித்து அதற்குரிய பலனைக் கூறுவார். ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகக் கூறும் விடயங்கள் அவர்கள் பூரணமாகவே நம்பிக் கொள்வார்கள். அவர் கூறியவண்ணமே எல்லோர்க்கும் எல்லாம் நடைபெறும். தீர்க்க தரிசனத்தின் இன்னொரு உச்சமான செயல் தனக்குப்பின் தன்னுடைய பல பணிகளைத் தொடருவதற்கு மூத்த மகளுக்கு சிவஸ்ரீ சுந்தரலிங்கம் குருக்கள் அவர்களைத் தேர்ந்தெடுத்துத் திருமணம் செய்து வைத்தமையேயாகும். குருக்கள் அவர்களும் ஐயாவிடத்தில் மிகுந்த மரியாதையும் பாசமும் உரியவராக விளங்கினார். ஐயாவிற்காகப் பத்திரகாளி அம்மன், வீரகாளி அம்மன் ஆலயப் பணிகளை முற்று முழுதாக ஏற்றுக் கொண்டார். ஐயாவினுடைய எல்லாப் பிள்ளைகளின் திருமணங்களையும் பொறுப்பேற்று நடத்தி வைத்தார். இலட்சுமணண் தோட்ட வீரமாகாளி அம்மன். ஆலயத்தில் கோடிக்கணக்கான நிதியைக் கொடுத்துத் திருப்பணி வேலையைச் செய்விக்கின்றார். இத்தனை செயல்களும் கண்ணன் ஐயா அவர்களின் தீர்க்க தரிசனமே எனலாம்.

"பத்திர காளியின் பாதம் பணிந்து வீரமா காளியை வேண்டி நிதம் பத்தி செய்த உத்தரே உண்மையாய் ஊரறிய மேலான வித்தகராய் வந்துதிக்க வேண்டும்"

சுபமங்களம்

தினமும் மனதில் நினைந்து வழிபடும் பரமபக்தன்
திருக்குறள் கலாநிதி
ஆ.வடிவேலு
தும்பளை
பருத்தித்துறை
09.01.2022

# நினைவில் நிறுத்தப்பட வேண்டியவர்....

வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை நெல்லண்டை இலட்சுமணன் தோட்ட வளாகத்தில் பிறந்து வளர்ந்தவர் அமரர் சிவஸ்ரீ தியாகராஜா குருக்கள் சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் அவரது இளமைக்காலம் தொட்டு எனக்கு அறிமுகமானவர் என்னுடன் பழகியவர். கல்வியில் மிகுந்த ஈடுபாடு இருந்த இவர் குருத்துவ பணியிலும் இணைந்து கொண்டார்: 1983 ஆம் ஆண்டு குருப்பட்ட அபிஷேகம் இவருக்கு நடைபெற்றது. கல்வியில் ஈடுபாடு கொண்டிருந்த இவர் தன்னை ஆசிரியர் பணியிலும் இணைத்துக் கொண்டார். யா/அம்பன் அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை, யா/பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, யா/தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம், யா/குடத்தனை கரையூர் தமிழ்கலவன் பாடசாலை, யா/கற்கோவளம் மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை ஆகியவற்றில் ஆசிரியராக பணியாற்றி தனது 56 ஆவது வயதில் அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றவர்.

06.09.2006ல் எனது இளைய மகளின் திருமணம் அருள் மிகு தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோவிலில் நிச்சயிக்கப்பட்ட பொழுது அவர் குருவாக இருந்த திருமணச்சடங்குகளை அதி சிறப்பாக நடாத்தியமை மகிழ்ச்சிக்குரியது.

இந்து சமய அமைச்சின் சிபார்சில் நீதி அமைச்சினால் எனக்கு 23/01/2004ல் அகில இலங்கை சமாதான நீதவான் நியமனம் கிடைத்த வேளையில் அதனைப் பாராட்டி சில இந்து சமய நிகழ்வுகளின் போது என்னை அழைத்து கௌரவித்தமை இவரது மனம் மகிழந்த செயற்பாடாகும். குருத்துவ, ஆசிரிய பணிகளோடு நின்றுவிடாமல், இந்து சமய சொற்பொழிவுகளிலும் தன்னை ஈடுபத்திக் கொண்டவர் அமரர்:

எவரும் எதிர்பாராத வகையில் 14/5/2021 அன்று இறைபதம் அடைத்தமை இவரது குடும்பத்தினருக்கு ஈடு செய்ய முடியாத இழப்பாக அமைந்தது. அமரருடைய மறைவினால் மாறாத துயரத்தோடு வாழ்ந்து வரும் அவரது குடும்பத்தினருக்கு, பிரிவினை தாங்கிக் கொள்ளுகின்ற மனோநிலையை ஆண்டவன் அவர்களுக்கு வழங்க வேண்டுமென்று இதய சுத்தியோடு பிராத்தனை செய்கிறேன்.

இராஜரட்ணம் சிவபுண்ணியம்
(முன்னாள் உதவி அரசாங்க அதிபரும், அகில இலங்கை சமாதான நீதவானும்)
“தமிழகம்”
தும்பளை
25.02.2022

# நீங்காத நினைவில்...

வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை, நெல்லண்டையம்பதியில் அமரர் தியாகராஜா குருக்கள், சோமாஸ்கந்தராஜா குருக்கள் பிறந்து வளர்ந்தவர். தனது இளமைக்காலத்தில் இருந்து எமது குடும்பத்தாருடன் மிகவும் அன்னியோன்னியமாக பழகியவர். இவர் இந்து சமய செயற்பாடுகளில் ஆழ்ந்த அறிவும் மிகுந்த புலமையும் கொண்டவர்: அருள்மிகு தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் தேவஸ்தானத்திலும், அருள் மிகு இலட்சுமணன் தோட்ட வீரமாகாளி அம்மன் கோவிலிலும் நீண்டகாலம் அர்ச்சகராக செயற்பட்டவர் இவர்.

குருத்துவ பணியோடு நின்றுவிடாமல் தனது இளமைக் காலத்திலேயே ஆசிரிய சேவையிலும் இணைந்து, தமிழ் மொழி, இந்து சமயம் ஆகிய பாடங்களை மாணவ மாணக்களுக்கும் பதிரிஜயமற கற்பித்த பெருமைக்குரியர் இவர். யா/கற்கோவளம் மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் நான் அங்கு ஆசிரியராக பணிபுரிந்த வேளையில் ஏறத்தாழ நான்கு ஆண்டுகள் அப்பாடசாலையில் என்றுடன் சேர்ந்து பணியாற்றியவர் மேற் குறித்த பாடசாலையின் வளர்ச்சியிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். பாடசாலை இந்து சமய விழாக்களை முன்னின்று நெறிப்படுத்தியவர் அமரர்.

எவரும் எதிர்பார்த்து இருந்திராத நிலையில், துர்அதிஷ்டமாக அமரர்: 14.05.2021 வெள்ளிக்கிழமை இவ்வுலகை விட்டு பிரிந்து இறைவன் அடி சேர்ந்த செய்தி எம் எல்லோரையும் கதிகலங்க வைத்தது. இவருடைய மறைவு இவருடைய குடும்பத்தினருக்கு பேரிழப்பாக அமைந்துள்ளது. “பிறப்புண்டேல் இறப்பு உண்டு” என்ற வகையில் ஆறுதல் பெற்று அன்னாருடைய ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிராத்தனை செய்கிறேன்.

திருமதி.தனலட்சுமி கணபதிப்பிள்ளை<br>
(ஓய்வு நிலை ஆசிரியை)<br>
“சாந்தி”<br>
நெல்லண்டை<br>
பருத்தித்துறை<br>
26.02.2022

# அன்பான ஐயாவின் நினைவலைகள்

திரு.தி.சோமாஸ்கந்தராஜா (B.A, Dip in Ed, MA) ஆசிரியராக, மக்கள் தொண்டனாக, வீரமாகாளியின் மைந்தனாக, என் இனிய நண்பனாக, இடர் நீக்கும் ரட்சகராக சேவையாற்றி ஓய்ந்து விட்டார். இவரை சிறுவயதிலிருந்தே நன்கு அறிமுகம். இவர் தனது தந்தையாருடன் துவிச்சக்கர வண்டியில் போகும் போது நானும் இவரது தந்தையும் சமயம் பற்றி கதைத்துக் கொண்டே போவோம். இவரது தந்தையாருடன் எனக்கு நெருங்கிய தொடர்பு உண்டு. எனது தகப்பனாருக்கு கண் சிகிச்சையளித்து இவரது தகப்பனார் எங்கள் நலனுக்காக நெல்லண்டை பத்திரகாளி கோவிலில் பூசை செய்து மனச்சாந்தியை ஏற்படுத்தியது இவரது தந்தையார். எனவே எனக்கும் இவரது தந்தையாருக்கும் நெருங்கிய உறவு இருந்தது. அதன் மூலம் சிறுபையனாக சோமாஸ்கந்தராஜா இருந்தது தொடக்கம் எனக்கு நன்கு அறிமுகமானவரானார். இவர் கோவிலில் பூசை செய்யும் போது அமைதியாக, ஆறுதலாக அம்பிகைக்கு தீபாராதனை செய்வார். அதைப் பார்த்தாலே எங்கள் மனக்குறைகள் அகன்று விடும். சமூகத் தொண்டில் இவர் அதிக ஈடுபாடு காட்டினாரர். இவர் தன்னைத் தேடிவரும் மக்களுக்கு இயன்ற உதவிகள் செய்து அவர்கள் குறைகளைத் தீர்த்து வைப்பார். இவரை எல்லோரும் “கண்ணன் ஐயா” என்று தான் அழைப்பார்கள். கிருஷ்ண அவதாரமாக இருக்குமோ என்று நான் எண்ணியதுண்டு. வடமராட்சி மட்டுமல்ல வடமாகாணத்திலிருந்தே மக்கள் இவரைத் தேடி இவர் இல்லத்துக்கு வருவதைக் காணலாம்.

இவர் ஆசிரியராக ஹாட்லிக் கல்லூரிக்கு வரும் போது நான் அங்கே ஆசிரியராக இருந்தேன். இவரது கற்பித்தல் தனித்துவானது. தமிழ்மொழி, இந்து சமயம் போன்ற பாடங்களை 6 தொடக்கம் 13ம் வகுப்புவரை கற்பித்தார். இவர் கற்பிக்கும் போது மாணவர்கள் ஊக்கமாக கவனிப்பதை அவதானித்தேன். இவரது கற்பித்தல் போதிய விளக்கத்துடன் அமைவதையும் அவதானித்தேன்.

இவர் கல்லலூரியில் முக்கிய பொறுப்புக்களை வகித்திருந்தார். இந்துமாமன்றம், சமூக விஞ்ஞான மன்றம் என்பவற்றிற்குப் பொறுப்பாக இருந்து மாணவர்களை வழிகாட்டி அதனூடாக கல்லூரிக்குச் சிறந்த சேவையை ஆற்றினார். நான் கல்லூரியின் பிரதி அதிபர், பதில் அதிபராகக் கடமையாற்றிய போது கல்லூரியின் நிகழ்ச்சிகள் நடைபெறும் போது ஆரம்ப விழாவை மிகச் சிறப்பாக நடத்தியிருந்தார். இவ்வாறாக இவரது ஆசிரிய சேவை மாணவ நலனுக்கு என்றும் உதவியாக இருந்தது.

என்னை எப்பொழுதும் “சேர்” என்று தான் சொல்லுவார். நான் இவரது வீட்டிற்குச் சென்றால் இவரது மனைவி நன்கு உபசரிப்பார். பிள்ளைகள் இன்முகத்துடன் வரவேற்பார்கள். நான் இவர் வீட்டிற்குச் செல்லும் போது அம்மனுக்கும், இவருக்கும் ஏதாவது கொண்டு செல்வேன். இதனால் வீரமாகாளியம்மன், இவர் குடும்பம் இரண்டும் என்னுடன் ஒன்றாகக் கலந்து விட்டன. எத்தனை நெருக்கடி வந்தாலும் நான் இவர் இல்லத்துக்குச் சென்று பின் வீரமாகாளி அம்மனையும் வணங்கினால் எல்லாம் நீங்கிவிடும். எங்களுக்கு இவரிலும், அம்மனிலும் அசையாத

நம்பிக்கையுண்டு வீட்டுப்பற்று, நாட்டுப்பற்று, மொழிப்பற்று என்று அதிக பற்றுடையவராக இருந்தார். தன் கஷ்டத்தையும் பாராமல் பிறருக்கு உதவி செய்யும் மனப்பான்மை இவரிடம் உண்டு. இந்துசமய உபதேசங்கள் தொலைக்காட்சி வழியாக எல்லோருக்கும் பரப்பிய பெருமையும் இவருக்கு உண்டு. தொலைக் காட்சியில் அமைதியாக ஆறுதலாக இவர் ஆற்றும் உரை கேட்பவர்களுக்கு அவர்களின் மனம் அதிலேயே ஒன்றிவிடும். இவ்வாறானவர்கள் எம்மிடையே இருந்ததை நாம் பெருமையுடன் நினைவு கூடுகின்றோம். இவரின் சிந்தனைகள் கருத்துக்கள் யாவும் எதிர்காலச் சந்ததியினர்களை சிறந்த குடிமக்களாக மாற்றும்.

கண்ணன் ஐயாவின் உடல்நிலை சரியில்லாமலே இருந்தது. வைத்தியசாலைக்கெல்லாம் சென்று வந்தார். ஆயினும் அவர் தன் உடல் நிலையையும் பாராமல் ஆலயத்திற்கும் அனைவருக்கும் சிறந்த சேவையை ஆற்றினார். இறுதி நேரத்திலும் அவருக்கு எல்லாம் தெரிந்து விட்டது. நெல்லண்டை பத்திரகாளி கோவிலில் இறுதியாக பூசை செய்யும் போது தான் இனிமேல் பூசை செய்ய வரமுடியாது என்ற நினைவில் அன்று பூசை செய்து அம்மனிடமிருந்து விடை பெற்றார். அதன் பின் வீட்டிற்கு வந்து தன்நிலை மறந்து எல்லோரையும் தவிக்கவிட்டுச் சென்று விட்டார். அவரது பிரிவு எங்களுக்கு மட்டுல்ல பலருக்கும் ஒரு பாரிய இழப்பாகும். பாதுகாப்புக்காக பிள்ளைகள் தாயைத் தேடி போவது போல நாங்களும் அவரைத் சென்று வந்தோம். இன்று எங்களைத் தவிக்கவிட்டு சென்றுவிட்டார். அவருடைய இடத்தை இனி எவராலும் நிரப்பமுடியாது.

அவர் இறக்கவில்லை, எம்மிடையே வாழ்கிறார். எங்களை இப்பவும் மானசீகமாக வழிகாட்டுகின்றார் என்றே நாம் எண்ணுகின்றோம். அடிக்கடி அவர் முகம் எம் மனக்கண் முன் தோன்றி மறையும். எனவே அவர் எம்மிடையே தான் இருக்கிறார். நாங்கள் அவரை நினைத்து கவலையடைய தேவையில்லை. அவர் காட்டிய நல்வழியே சென்று எங்கள் நோக்கங்களை நிறைவேற்றுவோம். எங்களிடையே வாழும் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ந.குணசீலன்
ஓய்வுநிலை பிரதி அதிபர் (ஹாட்லிக்கல்லூரி)

# அமரர் சோமாஸ்கந்தராஜாக்குருக்கள் நினைவலைகள்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த மாமனிதர் என்றும் மறக்கப்பட மாட்டார்கள். அதிலும் குறிப்பிட்ட உறவுகளால் அவர்கள் செயற்பாடுகள் விமர்சிக்கப்படுவதும், சிறப்பிக்கப்படுவதும் தவிர்க்க முடியாத ஒன்றாகும். அவர்களுடன் பழகி உறவாடிய நினைவுகள் எண்ணங்கள் அவர்களைச் சந்திக்க முடியாதபோது, அவர்கள் இவ் உலகு விட்டு இறையடி சேர்ந்த போது நெஞ்சில் என்றும் முட்டி மோதும். இவ்வகையில் அமரர் தியாகராஜாக்குருக்களுக்கு மகனாகப் பிறந்த அமரர் சோமாஸ்கந்தராஜக்குருக்கள் என்னும் நாமத்தை கொண்ட கண்ணன் ஐயா என அன்பாக அழைக்கப்பட்ட அவர் நினைவுகள் செயல்கள் என்றும் என் உள்ளத்தில் பசுமரத்து ஆணிபோலப் பதிந்து நிழலாடுகிறது.

அமரர் கண்ணன் ஐயாவை முதல் முதலில் எனது வீட்டில் தமிழ்ப்பாடம் கற்க அப்பாவிடம் வந்தபோது கண்டேன். மலர்ந்த முகம் பணிவான குரல், பக்தி கொண்ட தோற்றம் இன்றும் என் கண்ணில் நிழலாடுகின்றது. அவரை என் அப்பா எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். அப்போது நான் பட்டதாரி ஆசிரியராக கொழும்பில் சேவை செய்த காலம் அதே முகம் தோற்றம்யாவும் இறுதிவரை அவரிடம் இருந்தது.

அமரர் ஐயா அவர்கள் யா/தும்பளைச் சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் ஆவார். அதுமட்டும் அல்ல பாடசாலையில் கல்விப் பொதுத்தராதர உயர்தர கலை வகுப்பு ஆரம்பித்த போது கற்று சித்தி பெற்று பல்கலைக்கழகம் சென்ற மாணவரும் ஆவார். இவருக்குத் தன் கல்வியை வளர்த்து கொண்ட பாடசாலையில் அதிக பற்றுண்டு. எந்த மாணவரிடமும் இல்லாத பற்று பாடசாலையில் வைத்திருந்தமையை அவர் செயற்பாடுகள் எடுத்துக்காட்டும். பாடசாலையைக் கடந்து எந்த வாகனத்தில் சென்றாலும் சில நிமிட நேரம் நிறுத்தி வணங்கிவிட்டே செல்வதைப் பலமுறை நான் கண்குளிரக் கண்டு மகிழ்தேன். இத்தகைய மனம் கொண்டவர் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் உறுப்பினராக உபதலைவராக இருந்து சங்கம் இயங்கப் பல பாதைகள் காட்டுவதுடன், நிதி உதவிகளும் செய்து வந்தார். அதுமட்டும் அல்ல பல சிரமங்களுக்கு மத்தியிலும் பாடசாலை நிகழ்வுகள் அனைத்திலும் அழைப்பை ஏற்று மிகவும் பக்திச் சிரத்தையுடன் ஆசி உரைகள் யாவும் வழங்குவார். இவரது ஆசி உரையாவும் பாடசாலை வளர்ச்சிக்கு வழிகாட்டியது எனின் மிகையாகாது. அது மட்டுமல்ல ஒவ்வொரு வருடமும் விஜயதசமி தினத்தன்று கலைமகளுக்கு காலை வேளையில் மாலை சாத்திச் செல்வதில் தவறுவதில்லை. தனது சேவைக்காலத்தில் பாடசாலைக்கு ஆசிரியராக வந்து உயர் வகுப்பிற்கு தமிழ்ப் பாடமும் சிறப்பாக கற்பித்தார்.

அறிமுகமாகிய காலம் தொடக்கம் அவர் என்னைக் காணும் வேளை எல்லாம் பாடசாலை வளர்ச்சி பற்றியே கூறுவார் அதோடு எனது தந்தையார் பற்றியும் தனக்கு பட்டப்படிப்பின் போது பாடம் கற்பித்த பேராசிரியர் அருள்நங்கை பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் பற்றியும் எடுத்துரைப்பார். இவையாவும் அவரின் குருபக்தியை எடுத்துக் காட்டுகின்றன. என்னைக் கமலினி ரீச்சர் என்றே அழைப்பார் நான் எதைக் கேட்டாலும் மனம் கோணாது மகிழ்வாகச் செய்து தருவார்.

அவரிடம் என் பிள்ளைகள் குறிப்புப் பார்த்த போது நடப்பதை முற்கூட்டியே சொல்லியயாவும் எனக்கு நடந்தேறின. எனவே அவரின் வாக்கில் நம்பிக்கை இருந்தது. அதுமட்டுமல்ல எனது வீடு திருத்திக் கட்டிய போதும் அளவெடுத்து தந்து அமைப்பு கூறி கட்டிடத்துக்கு அத்திவாரம் இட்டதோடு கட்டியபின் வீடு புதுமனை புகவிழாவில் சாந்தி செய்து படம் வைத்துத்தந்தவரும் அவரே. அதுமட்டுமா தமிழ் சமய பாடங்களில் எனக்கு ஏற்படும் சந்தேகங்களை தொலைபேசியில் கேட்டாலும் மனங் கோணாது விளக்கமளித்து விடை அளிப்பார். பல நூல்களை எழுதி வெளியிட்டும் உள்ளார. அவரின் தமிழ், சமஸ்கிருத, சமய சித்தாந்த அறிவு யாவும் அவர் நூல்களில் காணக்கூடியதாய் உள்ளது. அந் நூல்களை வெளியீடு செய்யும் விழாவில் நானும் கலந்து கொள்வதுண்டு. அவர் நூல்களைக் கற்பதில் எனக்கு அதிக ஆர்வம் உண்டு.

அமரர் கண்ணன் ஐயா குடும்பத்தில் மகள் ஜீவிதா, சங்கீர்த்தனி மகன் திவ்வியகுமார் ஆகியோர் எனது மாணவர் ஆவார். அவர்களும் ஐயாவின் வழிகாட்டலில் அன்பு கனிந்த வார்த்தை, பண்பு நிறைந்த பழக்க வழக்கங்கள், மலர்ந்த முகம் உடையவர்கள் அத்துடன் துடிப்பான சுபாபம் குருவினை மதிக்கும் பண்புகள் இவையாவும் அமரர் ஐயாவின் வழிகாட்டலில் அவர் இரத்தத்தில் ஊறிய பழக்கங்கள் ஆகும். மூத்த மகளும் என்னிடம் கற்காவிடினும் பண்பான குடும்பத்தில் ஊறிய அன்பு கொண்ட பிள்ளையாகவே விளங்கினார். இவ்வாறு குடும்பத்திடம் அன்பு, பணிவு வரவேற்கும் திறன் யாவும் அமரர் ஐயா ஊட்டி வளர்த்த உறங்காத உணர்வுகள் எனலாம்.

அமரர் கண்ணன் ஐயாவிடம் உள்ளத்தில் குடியிருந்தவை. நேர்மை, தற்துணிவு, பொறுமை, விடாமுயற்சி, அன்பு, அர்ப்பணிப்பு, இன்சொல், வரவேற்பு, விருந்தோம்பல் என்பன இவை அவரின் பிறப்பின் போதே அவருக்கு கிடைத்த கொடைகள் எனலாம். இக் கொடைகள்யாவும் அவர் குடும்பத்தில் ஊறிய ஊற்றுக்களாக மிளிர வைத்தவர் அவர் எனக் கூறின் மிகையாகாது.

ஒருவருக்கு பிறப்பின் போது தாய் தந்தையர் அரவணைப்பு, வளர்ப்பு அடுத்து அயலவர் உறவினர் உறவு மற்றது பாடசாலைக்கல்வி நண்பர்களின் சேர்க்கை என்பன தான் இளமையிலும் முதுமையிலும் சீர்பெற வாழ வைக்கின்றது. இவையாவும் அமரர் கண்ணன் ஐயாவுக்கு கிடைத்த அரும் பெரும் கொடைகள் எனலாம்.

அமரர் ஐயா அவர்கள் கூறும் எந்த விடமும் நியமாக நடப்பதை எனது அனுபவத்தில் உணர்ந்தேன். நடக்கும் எனது கூறுவதில் தீர்க்கதரிசியாகவே விளங்கினார். எதையும் குறிப்புப் பார்த்து நடக்கும், நடக்காது என உறுதியாகக் கூறுவதில் வல்லவர். இவரிடம் சிறந்த சாஸ்திர ஞானமும் தெய்வீக உணர்வும் குடி கொண்டு இருந்தது. நான் முதல் நாளும் அவருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு உரையாடிய போது நெல்லண்டை அம்மன் வேள்வி முடிய நாளைக்கு வாங்கோ பார்ப்போம் என்று வெள்ளிக்கிழமை கூறியவர் சனிக்கிழமை வேள்வி தினத்தன்றே மீளாத்துயில் கொண்டு இறையடி சேர்ந்த செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தேன். இவர் தனது இறுதி மூச்சு வரை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் ஆலயப் பூசைகளைப் பல சிரமங்களின் மத்தியிலும் ஆற்றிய பெருமைக்கு உரியவர். இவர் இளமை தொட்டு ஆலயப்பணிகளை சிறப்பாக ஆற்றி வந்தார். அதுமட்டுமல்ல ஆசிரியராக அரச பணியை ஏற்ற வேளையிலும், ஓய்வு பெற்ற பின்னரும் சமூக ஆன்மீகத் தொண்டில் தன்னை அற்பணித்து இறுதி மூச்சுவரை வாழ்ந்தார்.

இவர் சில வருடகாலம் நோய் வாய்ப்பட்டு இருந்தாலும் அதைப் பெரிதாப் பொருட் படுத்துவது கிடையாது. தனது இல்லற வாழ்வுடன் இறைபணி, கல்விப்பணி, சமூகப்பணிகளை இணைத்து வாழ்ந்தார் என்பது யாவரும் உணர்ந்த உண்மையாகும்.

பிறப்பு என்பது ஒரு நிகழ்வு, இறப்பு என்பது ஒரு சரித்திரம். “பிறப்பு உண்டேல் இறப்பும் உண்டு” என்பது நியதியாகும். “அன்று அறிவாம் எண்ணாது அறம் செய்க மற்றது பொன்னும் கால் போன்றாத்துணை” நாம் வாழ்நாள் முழுவதும் அறம் செய்வோம் என்று கூறாது நாள் தோறும் செய்தல் வேண்டும். அது உயிருக்கு அழிவில்லாத துணையாம் என வான் புகழ் வள்ளுவர் பெருந்தகையின் வாக்காகும். அமரர் கண்ணன் ஐயா அவர்களும் வாழ்ந்தகாலம் ஒரு சரித்திரம்.

இச்சரித்திரத்தை விமர்சிப்பது என்றால் விமச்சித்தே கொண்டு போகலாம். தனது உடல் வருத்தம் பாராது சமயப் பணிக்காகவும் கல்விப் பணி சமூகப்பணிக்காவும் நாள்தோறும் தன்னை அர்ப்பணித்து புகழ், சுயநலம் எதையும் கருதாது அறப்பணியை செய்த பெருந்தகையாவார். “கடமையைச் செய் பலனை எதிர்பாராதே” என்ற கீதை வாக்குக்கிணங்க வாழ்வினைக் குறிக்கோளாகக் கொண்டு வாழ்வாங்கு வாழ்ந்த அமரர் கண்ணன் ஐயா அவர்களின் ஓராண்டு மலரில் அவர் இழப்பு குடும்பத்துக்கு மட்டும் அல்ல சமூகத்துக்கே ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும் என்று உறுதியாகக் கூறி அவர் ஆன்மாவின் இறுதி இலட்சியத்தை நாடி இறையடியில் தன் ஆத்மாவை இணைத்துக் கொண்டார் என்றும் மனம் தேறி அவர் ஆத்மா சாந்தி பெறப் பிராத்தித்து நிறைவு செய்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

திருமதி கமலினி பாலசிங்கம்
ஓய்வு நிலை பிரதி அதிபர்
யா/தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலம்

# எனக்கினிய ஆசானாய்...

எனது மனம் மறுக்கிறது. ஏனோ வலி தெரியாது இதயம் துடிக்கிறது வேகமாக நினை வஞ்சலி மடலா யாருக்கு? ஓராண்டு உங்களை பிரிந்து கடந்து விட்டதா என்பதை
நம்புவதா இல்லை
எனக்கினிய ஆசானாய்
என்னை வழிகாட்டிய தகப்பனாய்
என் நம்பிக்கை மிகு நண்பனாய்
எல்லாவற்றிலும் எதிலும் நீங்கள் தான் முன்னுரிமை நூறுமடங்கு அன்னை கொடுத்தால் ஆயிரம் மடங்கு அன்னை பெறுவீர்கள் என்பதற்கு நீங்கள் தான் சாட்சி அன்பிற்காய் எதையும் இழக்க எந்தவொரு எல்லைக்கும் போய் விடுவீர்கள். உதவி ஐயா என்று கேட்டு வந்த எவரையும் அவர் கேட்டு வந்த உதவியை விட பல மடங்கு நிறைவாய் செய்திடுவீர்கள். உங்களது அறிவுரையில் சொன்னவைகள் என் மனதில் கோபுரமாய்... உன் எதிரியை நண்பனாய் எண்ணிடு அவனே ஒரு நாள் உன்னை நண்பனாக்கி கொள்ள துடிப்பான். உன்னை நீ நம்பி நட யாரும் நம்பவில்லை என்று கவலை கொள்ளாதே என்று எத்தனையை சொல்வது எனது வாழ்வில் எவரும் பெற்றிராத பேற்றை பெற்றவன் என்பதில் பெருமை அடைவேன். ஒருவர் தனது வாழ்வில் அந்த அளவிற்கு மற்றவரை நேசிக்க முடியும், உதவி செய்ய முடியும் என்பதற்கு உதாரணமாய் வாழ்ந்திட்டவர் நீங்கள். உங்கள் நினைவாற்றலும் கற்பித்தல் திறனும் எல்லைகள் கடந்தவை. மேசையில் அமர்ந்த படி நூலகத்தில் உள்ள புத்தகத்தின் பெயரையும் அது வைக்கப்பட்டிருக்கும் இடத்தையும் உள்ளடக்கத்தையும் எந்த பகுதியில் வேண்டிய விடயம் இருக்கிறது என்பதையும் வியக்கும் அளவிற்கு சொல்வீர்கள் கற்றுக் கொள்வதற்கு எல்லைகள் இல்லை என்பதை நினைவுபடுத்தி கொண்டே இருப்பீர்கள். ஓய்வாய் இருக்கிறேன் என்று சொல்லாமல் எதையோ தேடிப்படித்துக் கொண்டிருக்கிறேன் என்று சொல்லும் வாசிக்கும் பழக்கத்தை வளர்த்து கொள் அதுவே உன்னை முழுமையான மனிதனாக மாற்றிவிடும் என்றிடுவீர். தேடித்தேடி புத்தகங்கள் வாங்குவதில் பிரியமாய் இருப்பீர்கள். துன்பத்தில் நொந்தவர்கள் ஒருதடவை உங்கள் முகம் பார்த்து விட்டால் தெய்வத்தை பார்த்ததாய் உணர்வார்கள் அத்தகைய கனிவுடன் நடந்திடுவீர் எத்தனை பேர் வாழ்வில் ஐயா வந்தால் தான் எந்தவொரு நற்காரியமும் செய்ய காத்திருப்பார்கள்.

அம்பாளுக்கு ஓடியோடு பூஜை செய்த கால்கள் ஓய்வாய் அருகில் இருந்து பூஜை செய்ய அம்பாளே எங்கள் ஐயாவை ஆடம் கொண்டாரோ? இப்போது உங்களுடன் கதைத்தவற்றை நினைத்தால் கண்கள் கண்ணீரால் நனைகிறது ஆண்டு கடந்து விட்டதாய தெரியவில்லை. எப்போது மனம் சோர்வடைந்து இருந்தாலும் கனவுகளில் உம்மை பார்த்திடுவேன். இந்நாளில் ஒரு கவலை தான். இறுதி கணத்தில் உங்களருகில் இருந்து பணிவிடைகள் செய்யவில்லை என்பதை யும் ஒரு ஒரு தடவை உங்கள் பாதம் தொட்டு விட முடியவில்லை என்பதுவே. நீங்கள் எங்கும் போக வில்லை எமக்குள்ளே தான் எல்லாவற்றிலும் அன்பின் ஐயாவாய் உள்ளீர்கள். அமைதியாய் உறங் குங்கள் அம்பாளின் பாதத்தில் சாந்தியடையட்டும். உங்கள் புகழ் எங்கள் எல்லோரிடத்திலும்

உங்கள் அன்பின் R.தினேஸ் (அவுஸ்ரேலியா)

# கண்ணன் ஐயா என் நினைவுகளில்...

காலம் சென்ற சிவஸ்ரீ.தியாகசோமாஸ்கந்தராஜா குருக்கள் அவர்களை எல்லோரும் “கண்ணன் ஐயா“ என்று தான் அழைத்தார்கள். நானும் அவ்வாறே அழைத்தேன் நாம் இருவரும் ஒரே ஊர். தும்பளைக்கிராமத்தைச் சேர்ந்தவர்கள். கண்ணன் ஐயாவின் அறிமுகம் நீண்ட காலமாக இருந்தாலும் அவர் ஹாட்லிக் கல்லூரியில் 1998 2008 காலப்பகுதியில் தமிழ் ஆசிரிய ராகக் கற்பித்த போது தான் நண்பர்கள் ஆனோம். எனது நூல் வெளியீடுகளுக்கெல்லாம் ஆசியுரை வழங்கக் கண்ணன் ஐயா அவர்களையே அழைப்பதை வழமையாகக் கொண்டிருந்தேன். இருவருக்கும் இடையிலான நட்புக்கு பொதுவாக இருந்த விடயம் “வாசிப்பு“ என்பது தான்.

கண்ணன் ஐயா ஹாட்லிக்கல்லூரி நூலகத்துக்கு பல விலை உயர்ந்த நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளார். நூல்களை இரவல் எடுத்துச் சென்று வாசிக்கும் வழமையைக் கொண்டிருந்தார். இவர் தனது வீட்டிலும் பெரிய நூலகமொன்றை வைத்திருந்தார். அந்த நூலகம் இவரின் பிள்ளைகளால் காப்பாற்றப்படும் என உறுதியாக நம்புகிறேன். கண்ணன் ஐயா ஹாட்லிக் கல்லூரியில் தமிழாசிரியராக சேவையாற்றிய காலத்தில் அவரது அன்பும், ஆதரவும், அறிவுரைகளுடன் கூடிய கற்பிக்கும் திறனால் மாணவர்கள் இவர்பால் கவரப்பட்டார்கள். கண்ணன் ஐயாவின் வீட்டுக்கு உயர்தர மாணவர்கள் சென்று நட்புடன் பலவிடயங்களுடன் மேலதிகமாக அறிந்து கொள்ளுவதும் வழமையாக இருந்தது. இவர் ஹாட்லியில் கற்பித்த காலத்தில் வெள்ளிக்கிழமைப் பிராத்தனைகள், சிவராத்திரி பூசைகள், அடிக்கல் நாட்டும் பூசைகள் என்பன மிகச் சிறப்பாக நடைபெற்றன. புதிய நூலகத்துக்கு பூசையுடன் சாந்தி செய்து திறக்கவும் பேருதவி செய்திருந்தார். கண்ணன் ஐயர் தும்பளைக் கிராமத்தின் இலட்சுமணன் தோட்டம் பகுதியைச் சேர்ந்த சைவக்குருக்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவரது தகப்பனாக சிவஸ்ரீ.க.தியாகராஜாக்குருக்கள் தாயார் திருமதி.தி. இராஜலக்ஷ்மி அம்மா ஆவார்.

தகப்பனார் கரவெட்டி தல்லையப்புலம் பகுதியைச் சேர்ந்த பரம்பரைச் சைவக்குருக்களும், பூசகரும் ஆவார். இவர் தும்பளை இலட்சுமணன் தோட்டத்தைச் சேர்ந்த சபாரத்தினம் ஐயர்கள் இலட்சுமி அம்மாளைத் திருமணம் செய்து தும்பளையில் குடியேறினார்.

தகப்பனார் இளவயதிலேயே இந்தியா, வேதாரணியத்துக்குச் சென்று சமஸ்கிருதம், சுதேச வைத்தியம், மாந்திரீகம் போன்றவற்றை நன்கு கற்றுத் தேறினார். கண்ணன் ஐயாவும் தந்தையாரிடமிருந்து மேற்படி விடயங்களைக் கற்றிருந்தார். அத்துடன் சாஸ்திரக் கலையையும் கற்றிருந்து திறம்படச் செய்து வந்தார். பாவபரிகாரங்களையும் செய்வித்தார். பார்வை பார்த்தலிலும் வல்லவராக இருந்தார். தனது வீட்டில் பத்திரகாளி படத்தின் முன்னால் வெற்றிலை எறிந்து பலன் சொல்லியும் வந்தார். பல நூற்றுக்கணக்கில் திருமணக்கிரியைகள், ருது சாந்திகள், புதுமனைப் புகுவிழாக்கள், வீடு, வணிக நிலைய சாந்திகள் மகாகும்பாபிஷேகங்கள் என்பனவற்றை நியமம் தவறாது செய்துள்ளார். இதன் காரணமாகக் கண்ணன் ஐயா தனித்துவம் மிக்க மனிதராகத் திகழ்ந்தார்.

கண்ணன் ஐயாவின் தகப்பனார் தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோயிலில் 1963 ஆம் ஆண்டிலிருந்து பூசகராக இருந்துள்ளார். இவரின் இறப்புக்குப்பிறகு ஏறத்தாள 1985 ஆம் ஆண்டிலிருந்து சுமார் 36 வருடங்கள் கண்ணன் ஐயா இக் கோயிலில் பூசகராக இருந்துள்ளார்.

கண்ணன் ஐயா காலமாகியதன் பின்னர் தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோயில், வீரமாகாளி அம்மன் கோயில் என்பவற்றில் கண்ணன் ஐயாவின் மருமகன் (மூத்த மகளின் கணவர்) சிவஸ்ரீ.இரா.சுந்தரலிங்கக்குருக்கள் அவர்கள் பூசகராக இருந்து வருகிறார். ஏனைய கோயில்களில்கள் சிவஸ்ரீ.சோ.தனஞ்சயக்குருக்கள் பூசகராக இருந்து வருகிறார்.

கண்ணன் ஐயா தனது ஆரம்பக்கல்வி முதல் உயர்தரம் வரை தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்திலேயே கற்றார். இப் பாடசாலையில் தனக்குக்கிடைத்த கல்வி மிகவும் தரமானதாக இருந்தமையினால் வேறு பாடசாலைகளை நாட வேண்டிய தேவை தனக்கிருக்கவில்லை என்று கூறினார்.

இவர் பேராதனைப் பல்கலைக்கழ வெளிவாரி மாணவராகக் கல்வி கற்று 1990 இல் B.A பட்டத்தைப்பெற்றார். மேலும் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில் 2000 - 2002 காலப்பகுதியில் தனது கல்வியியல் டிப்ளோமாவைப் பயின்று பூர்த்தி செய்தார். 2002 - 2004 காலப்பகுதியில் மதுரை காமராசா பல்கலைக்கழகத்தில் தபால் மூலம் தமிழில் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்.

கண்ணன் ஐயா 1993 இல் பட்டதாரி ஆசிரியராக நியமனம் பெற்றார். இவர் கற்பித்த பாடசாலைகள் பின்வருமாறு

1. யா/குடத்தனை அ.த.க பாடசாலை (1993 1996)
2. யா/அம்பன் அ.த.க பாடசாலை (1996 1997)
3. யா/ஹாட்லிக் கல்லூரி (1998 2008)
4. யா/குடத்தனை அ.த.க பாடசாலை அதிபர் - (2008 2010)
5. யா/அம்பன் அ.த.க பாடசாலை உப அதிபர் (2010 2011)
6. யா/கற்கோவளம் மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை (2011 2021)

கண்ணன் ஐயா 1986.01.31 இல் சாவச்சேரி, கோயிலாக் கண்டியைச் சேர்ந்த புவனேஸ்வரி அம்மாவைத் திருமணம் செய்து கொண்டார். திருமணத்தின் பின் துணைவியார் தும்பளை இலட்சுமணன் தோட்டத்தில் கண்ணன் ஐயாவின் வீட்டிலேயே கணவருக்கு உறுதுணையாக வசித்துவந்தார். இவரது துணைவியாகும் அன்பும், அறமும் நிரம்பப் பெற்றவராவார்.

கண்ணன் ஐயாவுக்கு ஐந்து பிள்ளைகள் பிறந்தனர்.

1. பிரபாலினி
2. ஜீவிதா
3. தனஞ்செயன்
4. சங்கீர்த்தனி
5. சித்பவன்

இவர்களில் கடைசிப்பிள்ளையான சித்பவன் சிறுவயதில் காலாகி விட்டார்.

கண்ணன் ஐயா சமயப் பிரசங்கங்கள் செய்து வந்தார். பாமரமக்களுக்கு எளிதாகப் புரியும்படி சிறிய சிறிய கதைகளினூடாக இவரின் பிரசங்கம் அமையும் கண்ணன் ஐயா “நெல்லண்டையான்“ என்ற பெயரில் ஒரு நூல் வெளியீட்டுக் கழகத்தை உருவாக்கி அதனூடாகத் தான் எழுதும் நூல்களை வெளியிட்டு வந்தார். பத்துக்கும் மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

1. சைவகுலதீபம்
2. அமிர்தகடீஷம்
3. யோகசித்து
4. வேதங்கள்
5. ஆலயவழிபாடும் தத்துவமும்

6. கேதாரகௌரி மகிமை
7. அறநெறி
8. விக்கிரகவியல்
9. கிரியைகள்
10. அன்னைதயை
11. அறிவுச்சுடர்
12. அறுவகைச்சமயநெறி
13. இருபெருநெறிகள்

இந்த வகைகளில் இந்துசமயத்தின் வளர்ச்சிக்காக தனது பெரும் பங்களிப்பினை நல்கியுள்ளார்.

சமூகத்தின் பல்பயன்களுக்காக இடையறாது உழைத்துவந்த கண்ணன் ஐயா 2021ஆம் ஆண்டு தனது 58வது வயதில் காலம் சென்றமை மிகவும் வருத்தமான நிகழ்வாகும். தனித்துவம் மிக்க பலரை இறைவன் விரைவில் தன்னிடம் அழைத்து விடுவது வழமையாகி விட்டது. கண்ணன் ஐயாவின் சேவைகள் அவரின் வாரிசுகளால் முன்னெடுக்கப்படும் என நம்புகிறேன். கண்ணன் ஐயாவின் ஆன்மா சாந்தியடைவதாக கண்ணன் ஐயாவின் நாமம் காலம் கடந்தும் வாழும்

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

பா.இரகுவரன்
(ஓய்வுநிலைஆசிரியர்)
தும்பளை மேற்கு

# நெல்லண்டை மண்ணின் குருமகன்

இன்று நீ எங்கே? இதயம் அழுகிறதே
தென்றல் உலாவுகின்ற நெல்லண்டை மண்ணில்
குன்றாய் உயர்ந்திருந்த குருமகன் நீர் போய்விட்டீர்
நின்றீர் இருந்தீர் நிழலாய்த் தொடர்ந்திருந்தேன்
இன்று நீர் எங்கே இதயம் அழுகிறதே

பெற்றவனை இழந்தது போல் பேதலிக்க வைத்துவிட்டு
கற்றவனே போய்விட்டீர் கடலளவு துயர்தந்து
சுற்றமாய் உம்மைச் சூழ்ந்திருந்த நாட்களை
நற்றவமாய் எண்ணி நயக்கின்றேன் நான் இன்று

உற்றார் உறவினர்கள் உமக்காகக் கதறியழ
கற்ற உம் மாணவர்கள் கன்றெனவே கதறியழ
சிற்றூரின் கண்ணே சிறந்த நிழல் தந்தவனே
நற்றவமாய் வாய்த்திருந்த நல்லவனே போய்விட்டீர்

சுற்றம் புடைசூழ வீற்றிருந்த வாழும் மனை
பெற்ற உமைத்தேடி பேதலித்து நிற்கிறது
சிற்றெறும்பாய் சுறுசுறென நீர் நடந்த தடம் தேடி
முற்றமெல்லாம் இன்று மகம் வாடிநிற்கிறது.

நற்றாயாய் சோதரனர் நல்லாசிரியனுமாய்
உற்றதோர் உறவாய் வாய்த்திருந்த
அற்புதனே என்னோடு நீரிருந்த நாட்களெல்லாம்
கற்பனையாய் நற்கனவாம் கலைந்து தான் போனதுவோ

நற்பாதம் நீரடைந்து மகிமை பெற்று
சொற்திறம்பா சீர்மையனே சாந்தி பெற்று
அற்புதமாய் வாழ்ந்திடுக இறைவன் பாதம்
சொற்கொண்டு வேண்டுகிறேன் அடைய சாந்தி

சோதிடர் K.S. சிவகுமார்
கல்லூரி வீதி, பருத்தித்துறை

# இறைமகனே! தேடுகின்றோம் ஐயா!

கோபுரம் சாய்ந்ததே குலவிளக்கு அணைந்ததே
பண்பாட்டின் காவலனாய் குருத்துவத்தின் ஒளிவிளக்காய்
ஆசிரியத்தின் பீடமாய் பண்பின் உறைவிடமாய்
பிரசங்கத்தின் இலக்கணமாய் பேச்சாளுமையின் வல்லவராய்
காந்தமாய் எமையீர்த்த கண்ணன் ஐயா  உமை
காலனவன் கவர்ந்து சென்றதேனோ?
கலங்கி நிற்கின்றோம் கற்கைவாழ் மக்கள் நாம்
ஸ்ரீ கும்பிமுருகன் தேவஸ்தானத்தின் எம்பெருமானும்
ஏங்கியே நிற்கின்றார் நின் ஆச்சார்ய சேவைக்காய்
வானுலகம் சென்றீரோ வாடியே நிற்கின்றோம்...
பிலவ வருடத்தின் பேறு பெற்றேர் நின்வரவால்
“அம்பிகையின் அருட்குமாரர்” என நின்வாய் பகரும்
பிரசங்கத்தை எங்கு கேட்போம் இவ்வுலகில்
தடுமாறியே நிற்கின்றார் நின் தலைமகனும் ஐயா!
இத்தி மரத்தாளின் இனிய நன்நாளில்
இன்னுயிரை நீத்த இறைமகனே - இனிதே
உறங்கிடுவீர் இறைவியவள் திருக்கமலத்தில்
ஓம் சாந்தி...சாந்தி...சாந்தி

ஸ்ரீகும்பிமுருகன் தேவஸ்தானம்

# குருக்களின் பிரிவு நிலை குடாநீரூரான் உள்ளத்தை உருக்கியிடு துன்பாக்கி உதிர்த்த துதி மாலை இது

காப்பு வெண்பா

அன்பிற்கு இலக்கணமாய் அமைந்து அகன்ற ஐயாவின் மண்பற்று மாண்பு மனத்தெழுந்து துன்பு நிறை விஞ்சுமன விம்மல் விளம்ப விளைந்தேன், வினையகற்றும் கஞ்சுகமே கணபதியே காப்பு

1. எந்தன் பெயரொடு இணைத்து அப்பா எனப் போற்றி
பந்தம் சிறந்து சின்ற பண்டிதனே பலகலைகள்
சிந்தும் முகத்தோனே சேர்ந்து அணைத்த செய்கை
வந்தென் மனம் தீண்டி வருத்தமுற்று வதைக்கிறதே

2. எந்த நிகழ்வு எங்கு நான் செய்தாலும்
வந்து எனைவாழ்த்தி வகை புரிந்த என்ன குருவே
சொந்தம், துணை வாழ்வு தொடர்மனம் விட்டு உம்மை
உந்தும் தனி கோயில் ஓடி மறைந்தனேயே

3. நல்ல துணை நீ நல் நண்பன் நற்குருவாய்
வல்லவன் நீ என்று வாழ்த்தி மன் களிக்க
அல்லும் பகலும் அணையாத திழ் ஒளி நீ
செல்லும்படி செய்த நீமை எது கூறாயோ

4. பழமை நிறைந்த முறை பாவகர்கள் பலர் மாய
இளமை நிறைந்த குரு எமக்கிருக்கார் என்றிருக்க
புலமை நிறைந்தத புகழ் போதுமென மனத்துன்னி
கிழமை நிறையு முன்னே கிளர்ந்து மறைந்தோடியதேன்

5. ஐயா எது சொன்னாலும் அம்மாளின் வாக்கு என
மெய்யாக நம்பி வேண்டி நிற்கும் வினையாரை
மையான மனம் பதற வழி நடுவில் விட்டு வைத்து
பொய்யான உடல் என்ற புகழ்காட்டி மறைந்தனையே

6. நல்ல புதுமை பல நாட்டியே புகழ் பூத்த
வல்லவனாய் மதி சிறந்த வானவனே வகை உறவாய்
சொல்லறியா துணை எனவே துதித்திட்ட எமை நீங்கி
செல்லமனம் உன்னியதேன் செப்பாய் எம் சீர்குருவே

7. அன்னையின் ஆசி அருளடைந்த பூசகனாய்
முன்னை வினை நீக்கும் முறையான சோதிடனாய்
பின்னைப் பிறப்ப கற்றும் பெருஞான பண்டிதனாய்
என்னுள் புகந்த குரு இடையிலே சென்றது மேன்

8. அன்பின் இலக்கணம் நீ ஆசைத்திரு உரு நீ
இன்பிற் பொலிந்த இசைவேத வித்தகன் நீ
துன்பிற் கலந்து துயர் போக்கும் தூயவன் நீ
பண்பில் சிறந்தவன் நீ பாதியிலே பறந்தனையே

9. எண்ண இதயம் இரும்பாய் கனக்கிறது
மன்னன் என நின்ற மங்காப் புகழ் கீர்த்தி
வண்ணம், மனதில் வரிசை வகை ஆட
கண்ணன் திரு உருவம் கனலில் கரைந்ததுவோ

10. பொன்னைப் பெறலாம் புவி மங்கை புத்திரரோடு
பின்னைவரும் பேறு எல்லாமே பெற்றிடலாம்
என்னுள் சிறந்து இதயம் கவர்ந்த குரு
வண்ணத் திரு வடிவை வணங்க வகை வந்திடுமோ

11. பண்பிற் கிலக்கணமாய் பாசத் திருவுருவாய்
நண்பிற் பொலிந்த நல்லவனாய் நற்குருவாய்
இன்பிற் சிறந்து இளைத்தவர்கள் சோதரனாய்
துன்பிற் கலந்து துனை நிற்கும் தூயவன் நீ

12. சிந்தும் முக அழகு சீராடை தனி அழகு
பந்தம் பணி அழகு பாராட்டும் திறன் அழகு
நந்தும் குல அழகு நலிந்தார் துணை அழகு
கந்தம் மலராக கலந்து நின்ற கனவான் நீ

13. அந்தம் ஒன்றில்லா ஆதிசத்தி ஆட்கொண்ட
முந்து முறைப் பூசகனாய் முழுமை பெற்ற வித்தகன் நீ
வந்த துயர் தீர்த்து வரும் துயர் இன்பம் கணித்து
சிந்து வைத்தியனாய் திகழ்ந்து நின்ற சீர் மகன் நீ

14. எந்த எதிர்பார்ப்பும் இல்லாது இணைந்தவர்கள்
சொந்தமெனக் கருதும் தூய ஒளிக் கதிரவன் நீ
பந்தமுறை மந்திரங்கள் பார்போற்றும் காவலனே
இந்தப்புவி வாழ்வின் இறை மகனாய் வாழ்ந்தவன் நீ

15. புவி வாழ்வு போனாலும் பொன்றாது உன்தன் புகழ்
கவி வாழ்வு புராண முறை காவிய நாடகத்து இசை
தவி வாழ்வு கண்டவர்கள் தாங்கும் உயர்வு நிலை
குவி வாழ்வு மாயமென கூறி அகன்றேகினையே

16. என் புத்ததகத்தின் வெளியீட்டை ஏத்து தாயின் வாசலிலே
நின் தலைமை மீதினிலே நிறைந்த சொல்லாளர் முன்னே
இன்பமதாய் செய்வமென எண்ணிய உம் எண்ணமெலாம்
துன்பமதாய் இடியாக துயர்படையவைத்தேகனேயே

17. பாவில் புராணங்கள் படித்தோதும் பண்டிதனாய்
நாவில் சுவைக்க நயந்து பாடும் நாவலனாய்
கோவில் பணிசிறந்து கும்ப தம்ப விம்ப முறைக்
காவல் கலந்து கனிந்த செயல்காரனனே

18. கண்ணன் ஐயா இல்லை கனிந்த உபசாரம் இல்லை
வண்ணமுக குரு இல்லை வாடினோக்கி அபயமில்லை
எண்ணம் சிறக்க இறந்தார் வருவதில்லையென
மண்ணில் தமிழ் சைவமறை போற்ற வாழ்வோமே

ஆக்கம் செய்து துன்பில் கலந்து<br>
துதி செய்வோன்<br>
கலாபூஷன கீதம்பரப்பிள்ளை பசுபதி<br>
(குடா நீரூரான்)<br>
குடாரப்பு<br>
நாகர்கோவில்

# கண்ணன் ஐயா

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தேன்றலின் தோன்றாமை நன்று"

என்ற வள்ளுவன் வாக்கிற்கு வளம் சேர்த்தவர்

….. கண்ணன் ஐயா அவர்கள் மனிதருள் மாணிக்கமாய் திகழந்து இந்த மாநிலத்துள் வாழ்ந்து மறைந்தும் புகழால் என்றும் நிலைத்து நிற்பவர்.

ஐயா அவர்களுக்கும் எனக்கும் இடையிலான தொடர்பு மிக மிக நீண்ட காலத்திற்குரியது. காரணங்கள் பலவாகினும் முதன்மையானது இருவரும் ஒரே ஆண்டில் பிறந்த ஒத்த வயதுடையவர்கள். இதனால் தொடர்புகள் தொடர்வதற்கு சந்தர்ப்பங்கள் பல என்பது சொல்லிப்புரிய வேண்டியதில்லை.

எமது பாடசாலையில் பணிபுரியும் வாய்ப்பு ஐயா அவர்களுக்கும் கிடைத்தது உண்மையில் எமது கல்லூரிக்கு கிடைத்த அரிய பொக்கிஷமாகவே உணர வைக்கும் அளவிற்கு அவரது பணிகள் சிறப்பாக அமைந்திருந்தன.

செல்வத்துட் செல்வம் சீராய்ச் சேர்த்து; சிறந்த நற்பண்பாய் பணிவும் சேர்த்து; கல்வியுடன் கற்பித்தலில் தகைமை சேர்த்து; கடமையாய் மாணவர் பாரமரிப்பு சேர்த்து பணிபுரிந்தவர். தமிழும், சமயமும் இவரது இரண்டு கண்கள். உயர்தரப்பிரிவு மாணவர்களுக்கு தமிழ்ப்பாடத்தைத் திறம்படக் கற்பித்தவர். இராமனுக்கு வில், இல் (இல்லறம்) சொல் அமைந்ததோ அது போலவே ஐயாவுக்கும் தமிழும், சமயமும், சமஸ்கிருதமும் சிறப்பாக அமைந்திருந்தது.

கோவிலிலும் சரி, பாடசாலையிலும் சரி எந்த இடமானாலும் நேரத்தியாக கிரியைகள் மேற்கொள்வதும் நேர்த்தியாக சமஸ்கிருதம் உச்சரிப்பதும் இவருக்கே உரிய தனித்திறமைதான் என்று கூறவேண்டும்.

பெரும் சீற்றம் அவரிடத்தில் தோற்றுவிடும் காரணம் அரவணைப்பும் ஆதரவும் அதனை வென்றுவிடும். செருக்கின்றி செயல்புரியும் பொறுப்பிருக்கும்; குறிப்பறிந்து செயற்படும் பண்பிருக்கும். நெநற்றியில் திருநீற்றுப்பட்டையும் கழுத்தில் உருத்திராட்ச மாலையும் தனித்துவமான அழகு.

"கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பர். ஊருக்கு ஒரு கோவிலேனும் இருக்க வேண்டும் என்பததற்காய் தானே தனித்து நின்று தன் செலவில் கோவில் கட்டி குடமுழுக்குச் செய்து அனைவரையும் வாழ வைத்த உத்தமர்.

ஐயா அவர்கள் தன்னோடு பணிபுரியும் சகபாடிகளோடு அன்பாகப்பழகுவார்; தேவையெதுவெனினும் உகந்து சேவைசெய்வார். குற்றம் காணார்; நற்குணம் நாடுவார். ஆகையினால் எல்லோருக்கும் இவரைப்பிடிக்கும். காற்றின் தழுவலை விரும்பாதவர் யார்? இவரைப் பிடிக்ககாதவர் இருவர். ஒருவர் பிறக்காதவர். மற்றவர் இறந்தவர். அப்படித்தான் சொல்லத் தோன்றும்.

ஐயா அவர்கள் அறத்தின் வடிவமாக விளங்கும் இறைவனின் திருவடிகளில் பொருந்தி இருக்க வேண்டும் என்று நினைக்கின்றவர். அவ்வாறன்றி பிறர் பொருளுக்கும், புகழுக்கும் ஆசைப்பட்டவரல்லர்.

உங்கள் சேவைகள் மண்ணுலகில் காத்திருக்க காலனுக்கோ உங்கள் சேவைகள் விண்ணுலகிற்கு தேவையென்றோ அழைத்து நின்றான். நீங்கள் மறைந்து ஓராண்டு ஓடினாலும் மக்கள் மனங்களில் நிறைந்து பல்லாண்டு வாழ்வீர்கள். உங்கள் புகழ் என்றும் நிலைத்து நிற்கும்.
“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்”

நன்றி

திரு.த.கலைச்செல்வன்
அதிபர்
யா/ஹாட்லிக்கல்லூரி

# கலைக்கு பெருமை சேர்த்த கண்ணன்ஐயா

வாழ்க்கை என்பது ஓர் பயணம்
யார் கூட வருவார்கள்?
யார் விலகிப் போவார்கள்?
தெரியாது.

இந்தப் பயணத்தில்....
எந்தக் குறையும் வைக்காமல்
எல்லோரையும் காந்தக்குரலால் கவர்ந்து,
எளிமையாக வாழ்ந்து காட்டியவர்
எமது குழந்தையாக வளர்ந்த கண்ணன் ஐயா!

எல்லோரும் வியக்கும் வண்ணம்
எளிதாகப் பல பட்டங்கள் பெற்று
எம்மைப் பரவசத்தின் உச்சிக்கே கொண்டு சென்றவர்.

எத்தனை பட்டங்கள்......
B.A, M.A.தமிழ், M.phill, M.A. முதுநிலைக்கல்விமானி என்று தொடர்ந்தன....
வாழ்க்கையில் நாம் காணத்தவறி விடுகின்ற விஷயங்களை இலக்கியங்கள் உணர்த்துகின்றன. வாழ்க்கையை ஆழமாகப் புரிய வைப்பதும் இலக்கியமே. இராமாயணம் ஒரு நீதி போதனைக்கதை. இதில் கூறப்பட்டுள்ள நீதி போதனைக்கதைகளை சுவைபட வகுப்பறைகளிலும், ஆலயங்களிலும் கூறி எம்மைச் சிந்திக்க வைத்துள்ளார்.
அவரது பேச்சு மற்றவர்களைக் கவர்ந்திழுத்தது.
அவருக்கு நல்ல நண்பர்களைக் உருவாக்கிக் கொடுத்தது.
அவர் கூறிய ஒவ்வொரு வாக்கியங்களும் நம்முடைய உணர்வுகளில் இரண்டறக்கலந்து. இன்றளவும் எம்முடன் பயணம் செய்கின்றன.
ஒரு புத்தகத்தைப் படிக்கும் பொழுது அது நம் மனங்களோடு ஒட்டி உறவாடுமானால், நம்மைப் பொறுத்த வரையில் அது ஒரு இலக்கியமாகி விடுகின்றது. கண்ணன் எழுத்துக்களில் ஐயா அவர்களால் வெளியிடப்பட்ட அவரது எழுத்தக்களில் உருவான புத்தகங்கள் எமக்குள் அவ்வகையான உணர்வலைகளை எழுப்பியதும் நிஜமே!
கடவுளுக்கும், ஆன்மாவுக்கும் இடையே உள்ள இடைவெளியை நிரப்பி இசைவிப்பது இசையே! இசை இறைவனை நினைந்துருகுவதற்கு எளிய சாதனமாகும். இராவணன் இசைத்த சாமகானம் இறைவனை மகிழ்வித்த கதை நாம் யாவரும் அறிந்ததே! அதே போல் எமது கண்ணன் ஐயா நெல்லண்டையம்மனைத் தனது இசை நயம் பொருந்திய பாடல்களால் மகிழ்வித்து, பல

சித்திகளையும் பெற்றுள்ளார்.
“அறிவு என்பது சாகும் கல்வி
ஞானம் என்பது சாகாக்கல்வி”

இறைவனை நோக்கிய பயணம் எதுவோ அதுவே அறிவு அறிவின் இலட்சியம் உலகை வெல்வது அல்ல. அறிவைக் கொண்டு ஆண்டவனைப் பணியும் போது தான் அது நிறைவைப் பெறுகிறது. கண்ணன் ஐயா தனது திறமையான அறிவால் பல பட்டங்களைப் பெற்று இறைவனைப் பணிந்து வாழ்வில் நிறைவைப் பெற்றிருக்கின்றார்.

கண்ணன் ஐயா ஆலயத்தில் நிகழ்த்தும் பூசையைப்பார்க்கும் பொழுது, ஒரு சிறந்த கலை நிகழ்வைப் பார்ப்பது போன்ற உணர்வு ஏற்படும். எனக்கு மட்டுமல்ல... எல்லோருக்கும் தான். மிகவும் நேரத்தியான அலங்காரத்துடன் பூசை செய்ய அழகுற வருவார். கண்ணன் ஐயா வாலிபமாக இருந்த காலத்தில் தும்பளை முருகன் ஆலயத்தில் அதிகாலையில் திருப்பள்ளியெழுச்சியை பண்ணுடன் பாடிய பின்னரே, பூசை செய்ய ஆரம்பிப்பார். அவரின் திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களின் இனிமையான ஒலி என்னை பிரம்மமுகூர்த்தத்தில் துயிலெழுப்பும். அவரது பாடல்களின் இனிமை என்னை மனனம் செய்யவும் வைத்தது. பண்ணைக் கிரகித்துப் பாடவும் வைத்தது.

கலைஞன் இன்றிக் கலை இல்லை என்பதும், கலை மனிதர்களால் மட்டுமே சுவைக்கக்கூடியதும், உறுதியானதுமாகும். மனிதப் பண்பாட்டில் பிரதான கூறுகளாக விளங்கும் கலையையும், அதன் ரசனையையும் ஆய்வு செய்தவர் கண்ணன் ஐயா! கூத்து நாடகங்கள், பட்டிமன்றப் பேச்சுக்கள், நாவலரைப் போன்று சைவசமயத்தின் பெருமையை உணர்த்த ஆலயங்களில் பிரசங்கம் செய்தல் போன்ற கலைகளில் சிறப்புற்று விளங்கியவர் எங்கள் அன்புக்குரிய கண்ணன் ஐயா. வருங்காலம், கடந்த காலம் உணர்த்தும் சோதிடக் கலையையும் கற்றுத் தேர்ந்தவர் எங்கள் கண்ணன் ஐயா!
தன்னிகரற்ற ஆசிரியப்பணியில்
தமிழ் மொழியாம்....
தாய் மொழியில் கற்பிப்பவனுக்கு
தரணியில் அசலான சிந்தனைகள் அதிகம் இருக்கும் என்பதை நிரூபித்துக் காட்டினார்.

ஆசிரியப்பணி...
பணிகளில் உயர்ந்த பணி அது
படைப்புக்கு இணையான பணி அது
என்பதை ஆசிரியராகவும், அதிபராகவும் இருந்து தனது செயல் முறைகளால் உலகுக்கு எடுத்துக்காட்டியவர்.
மதமானது, மனிதனைத் தெய்வமாக்கி, மனிதனைத் தெய்வத்திடம் கொண்டு சேர்க்கிறது. தெய்வத்தின் திருவடிகளில் வாழும் எமது கண்ணன் குழந்தை எங்கள் உணர்வுகளில் என்றும் திருநடனம் புரிந்து கொண்டிருப்பார்.
நம்முடனே மரணம் பயணிக்கிறது
நம்முடன் இருக்கிறது.
நாம் எவ்வளவு தூரம் போனாலும்,
நாம் மரணத்தை விட்டு விலக முடியாது..

பாலசிங்கம் சுப்பிரமணியம்.
ஓய்வு நிலை மாவட்ட நீதிபதி,
தும்பளை பருத்தித்துறை.

# சமர்ப்பணம்!

தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோயிலின் பிரதம குருவும் ஆதீனகர்த்தாவும் தும்பளை இலட்சுமணன் தோட்டம் வீரமாகாளி அம்மள் வடபத்திரகாளியம்மன் தேவஸ்தானத்தின் ஆதீன முதல்வரும் வேதாரணியக்குருக்கள் பரம்பரை நந்திகேஸ்வர கோத்திரவழித் தோன்றலுமான சைவசித்தாந்த பண்டிதர் அமரர் சிவசிஹ்ரீ தியாகராஜக்குருக்கள் மோமஸ்கந்தராஜக்குருக்கள் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவாக வெளியிடப்படுகின்ற சோமஸ்கந்த விஜயம் என்ற நினைவு மலருக்கு எனது ஆசியை சமர்ப்பணமாக சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். சைவ சித்தாந்த பண்டிதராகவும் வேதாகம விற்பன்னராகவும் எனது அன்புக்கும் மரியாதைக்கும் உரியவராகவும் வாழ்ந்து மறைந்த அமரர் சோமஸ்கந்தராஜக் குருக்களோடு எனக்கிருந்த பாசம் நிறைந்த வாழ்வியலை நினைவுகூர்ந்து இதயம் நெகிழ்ந்த கண்ணீர் காணிக்கையை சமர்ப்பணமாக சமர்ப்பிக்கின்றேன்.

பண்பாளனாக, பாசம்நிறைந்தவராக, அறிவாற்றல் உள்ளவராக, சாஸ்திரம் சோதிடம் அறிந்த விற்பன்னராகவும், இந்துநாகரிக பாடத்தில் தேர்ச்சி மிகுந்த ஆசிரியராக, மாணவர்கள் ஆசிரியர்கள் பெற்றோர்களால் என்றும் நேசிக்கப்பட்ட மரியாதைக்குரியவராக வாழ்ந்து நெல்லண்டை பத்திரகாளி அம்மன் பாதம் கலந்த ஆசானுக்கு எனது நெகிழ்வான காணிக்கையை சமர்ப்பணமாக சமர்ப்பிக்கின்றேன்.

வடமராட்சி வலயக்கல்விப்பணிப்பாளராக நான் கடமையாற்றிய காலத்தில் கல்வித் திணைக்களத்தின் அனைத்து நிகழ்வுகளிலும் ஆசியுரை வழங்கும் பெருமதிப்பிற்குரியவராக திகழ்ந்து நிகழ்வுகளை மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைத்த நாட்களை நினைவுகளாக நினைவு கூர்ந்து காணிக்கையாக சமர்ப்பிக்கின்றேன்.

பருத்தித்துறை கோட்டப் பாடசாலைகளின் அனைத்து நிகழ்வுகளையும் தனது இனிமையான குரலால் இறை ஆசிகூறி விழாக்களை ஆரம்பித்து வைத்த நினைவுகளை பருத்தித்துறை கோட்டப் பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் சார்பில் நினைவு கூர்ந்து சமர்ப்பிக்கின்றேன்.

பருத்தித்துறை நகரின் தும்பளைக் கிராமத்தின் பரம்பரை வழித்தோன்றலாக நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோவிலில் ஆதீனகர்த்தாவாக நிகழ்ந்து பல சவால்களை நெஞ்சுறுதியுடன் எதிர் கொண்டு தும்பளை மக்களின் அன்புக்குரியவராக மக்களால் அரவணைக்கப்பட்டவராக வாழ்ந்து நெல்லண்டை அம்பாளின் அருளால் அருள் வாக்கினால் அடியவர்களின் பக்தர்களின் நோய்கள், வேண்டுதல்கள், பிணிகள், துன்பங்கள், கவலைகள் எல்லாவற்றையும் தீர்த்து வைத்த பெருமைக்குரியவராக வாழ்ந்து மறைந்த என்றும் எங்களால் கண்ணன் ஐயா என அழைக்கப்பட்ட குருக்களுக்கு எங்கள் கண்ணீர் காணிக்கையை சமர்ப்பணமாக சமர்ப்பிக்கின்றேன்.

ஹாட்லிக்கல்லூரி, தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாசாலை என்பவற்றில் ஆசிரியராகவும் அம்பன் அமெரிக்கன் மிஷன் பாடசாலை, குடத்தனை அமெரிக்கன் மிஷன்

பாடசாலை, கற்கோவளம் மெதடிஸ்த மிஷன் பாடசாலைகளின் பிரதி அதிபராகவும் நிறைவான சேவையாற்றிய பெருமையோடு ஓய்வு பெறும் காலத்திற்கு முன்பே தனது உடல் நிலை காரணமாக ஓய்வு பெற்ற நல்லாசனுக்கு எனது இதய அஞ்சலியை சமர்ப்பிக்கின்றேன்.

நெல்லண்டை பத்திரகாளி அம்மன் ஆலயத்தின் 2021ம் ஆண்டின் வெளிமடை வாரத்தில் அம்பாளின் பாதம் சேர்ந்த குருக்கள் ஐயாவுக்கு இதயம் கனத்த கண்ணீரை காணிக்கையாக சமர்ப்பிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திப்பதுடன் அன்னாரின் குடும்பத்தாருக்கும் எனது இதயக்காணிக்கையை சமர்ப்பணமாக சமர்ப்பிக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

திரு. சிவபாதம் நந்தகுமார் (SLEAS1)
ஓய்வு பெற்ற வலயக்கல்விப்பணிப்பாளர்
தும்பளை வீதி, புலோலி வடக்கு
பருத்தித்துறை.

# ஞாயிற்றை சங்கிலியால் அளக்கலாமோ என் ஞான குரு பெருமை வகுக்கலாமோ

“இதம் இயல் இயற்றிய குரவர் யாரினும்
மதம் இயல் களிற்றினாய் மறுவில் விஞ்ஞைகள்
பதவிய இருமையும் பயக்கப் பண்பினால்
உதவிய ஒருவனே உயரும் என்பரால்”

வசிட்டாமுனிவர் தன் மாணவனாகிய இராமனுக்குச் சொல்கிறார். இம்மை மறுமை என்கின்ற இரு உலக வாழ்விற்கும் பயன்கிட்டுமாறு குற்றமில்லாத கல்வியைப் போதித்த ஆசிரியன் ஒருவனே ஐங்குரவருள்ளும் உயர்ந்தவன். இவ்வாறு ஆசிரியன் பெருமையை வசிட்டன் இராமனுக்குச் சொல்கிறான். நானும் என் வாழ்விலே “மறுவில் விஞ்ஞைகள் பதவிய இருமையும் பயக்கப் பண்பினால் உதவிய ஒருவரை“ பெற்ற வரலாற்றை முதலில் சொல்கிறேன்.

1993 ஆம் ஆண்டு மூச்சம்புலம் சிவனாலய மகாசிவராத்திரி விழாவில் தெய்வீக பேருரையாற்றுவதற்கு சிவஸ்ரீ தியாக சோமஸ்கந்தராஜாக் குருக்கள் வந்திருக்கின்றார்கள். இவரின் தெய்வீக பேருரை தொடங்குகின்றது. அமைதியாக இருந்து கேட்கிறேன். இயல்பாகப் பேச்சுத்துறையில் ஈடுபாடு கொண்டிருந்த நான் இவரின் பேச்சைக் கேட்டு, என் மனதைப் பறிகொடுக்கிறேன். அன்றிலிருந்து எங்கள் கிராமத்தில் எங்கெங்கெல்லாம் குருக்களின் தெய்வீகப்பேருரை இடம்பெறுமோ அங்கங்கெல்லாம் சென்றுற இவர் கருத்துக்களைக் கேட்கலானேன். சொல்லும் முறையாலும், சொல்லப்படுகின்ற பொருளாலும் பல புரட்சிகளை இவர் செய்தார். இவரின் மாணவராக இருக்கின்ற வாய்ப்புக் கிட்டாதா? என்ற அங்கலாய்ப்பு என்னுள் வளரத் தொடங்கியது. இவர் நடுவராக அரியணையில் அமர்ந்திருக்க அடியேன் பட்டி மண்டபத்தில் பேசுவதற்கு தவமாய்த் தவிருந்தேன்.

“புலன்களோடு கரணமும் ஆவியும்
போந்து நின்று விருப்புடன் மானிடன்
நலங்களேதும் விரும்புவன் ஆங்கு அவை
நண்ணுறப் பெறல் திண்மைதாமென
இலங்கு நூல் உணர் ஞானியர் கூறுவர்
யானும் மற்றது மெய்யெனத் தேர்ந்துளேன்”

என்ற பாரதியின் வரிகள் எனது வாழ்விலும் மெய்யாகின 1996 ஆ் ஆண்டு தும்பளை வாணி கல்வி நிலையத்தில் குருக்களின் நடு நிலைமையின் கீழ் பட்டிமண்டபம் பேசுகின்ற வாய்ப்புக் கிட்டியது. அன்றிலிருந்து என்னைச் சீடனாக ஏற்றுக் கொண்டார்.

“தந்தது உன் தன்னை கொண்டது என் தன்னை
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்றது ஒன்று என்பால்”

என்று மாணிக்கவாசகர் கூறுவதைப் போன்று தான் என்னாலும் கூற முடிகின்றது.

“சொல்லுதல் எல்லோர்க்கும் சுலபமாகும்
சொன்னபடி வாழ்பவர்கள் மிகவும் சொற்பம்”

என்று பாடினார் நாமக்கல் கவிஞர்

சாதிகள் இல்லையடி பாப்பா என்று பாடிய பாரதி சொந்த வாழ்க்கையிலும் இதைச் சாதித்துக் காட்டினான். பாரதியைப் பற்றிப் பிடித்தோம்; பெரியோர் உரைக்க கேட்டோம். சொன்னபடி வாழ்ந்த இன்னொரு பாரதியை நாம் நேரில் கண்டோம். உறவு கொண்டாடுவதற்கு பல வரம்புகளைக் கொண்டிருந்தோர் மத்தியிலே இவ் வரரம்புகளை எல்லாம் உடைத்தெறிந்து அன்பு ஒன்றுதான் உறவிற்கான தகுதி என்று உலகிற்கு காட்டியவர் நான் கண்ட பாரதி. சாதிகள் இல்லையடி பாப்பா என்ற பாரதியின் வார்த்தையை தன் வாழ்வாக்கி நமக்கு வாழ்ந்து காட்டியவர் நான் கண்ட பாரதி.

நான் கண்ட பாரதி வேறு யாருமில்ல சிவஸ்ரீதியாக சோமஸ்கந்தராஜா குருக்கள் தான். சொன்னபடி வாழ்ந்து தொல்லுலகை அன்பால் ஆண்ட ஏந்தல் இவர்.

“இந்துக்கள் தங்கள் இறைவனைக் காசியில் தேடுகின்றார்கள். இஸ்லாமியர் தங்கள் இறைவனை மக்காவில் தேடுகின்றார்கள். நான் என்னுடைய இறைவனை ஏழைகளின் உள்ளத்தில் காண்கிறேன் என்றார் கபூர்தாஸர்” இது நான் பள்ளிக்காலத்தில்ல படித்த பாடம். இதை தன் வாழ்வின் பாடமாக்கி எனக்கு பாடமாய்ப புகட்டியவர் என் குருநாதர்.

“ஈதல் இசை பாட வாழ்தல் அது அல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு”

என்றான் வள்ளுவன் உழைப்பிற்கு ஊதியம் தேடுவோர் மத்தியில், உயிர்க்கு ஊதியம் தேடியவர் நம் குருநாதர். அறிவையும், செல்வங்களையும், அருளையும் பிறர்க்கு இல்லையெனனாது கொடுத்து உயிர்க்கு ஊதியம் தேடிய அருள் வள்ளல் இவர்.

ஈழத்திலே அகில இலங்கை வள்ளுவன் கோட்டத்தை அமைத்து அதனூடாக வள்ளுவன் பெருமையை உலகறியச் செய்தவர். நெல்லண்டை பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் திருக்குறள் முற்று ஓதல், திருக்குறள் ஆய்வரங்கு என்பவற்றை நடத்தி தமிழர் தம் சட்டப்புத்தகமாம் திருக்குறளின் தர்மங்களை இளையோர்க்கு எடுத்துக் சாற்றிய அறிவுப் புரவலன் இவர்.

அகில இலங்கை இளங்கோ கழகத்தில் தன்னை இணைத்து இருபத்தைந்து ஆண்டுகளாக அதன் ஆலோசகராக அமைந்து எமையல்லாம் வழிப்படுத்தியவர். எமது கழகத்தின் விழாக்களிலே அரங்கிலும், அவையிலும் அமரர்ந்து நமக்கு முகவரி தேடித் தந்த தமிழ்த்தாயின் தவப்புதல்வன் இவர்.

வடமொழி, தமிழ்மொழி ஆகிய இரு மொழிகளிலும் புலமைமிக்க என்குரு, வேதங்களிலும், ஆகமங்களிலும் மிகுந்த ஆற்றல் உள்ளவராக் விளங்கினார். இதிகாசங்கள், புராணங்கள், காப்பியங்கள், இலக்கணம், வேதாந்தம், சித்தாந்தம், தர்க்கம் என யாவற்றிலும் மிகுந்த புலமை இவருக்கு இருந்தது. சமயக்கிரியைகளை தெளிந்த அறிவோடும், பூரண விளக்கங்களோடும், இதய சுத்தியோடு மேற்கொள்பவர்களில் முதன்மையானவராக இவர் விளங்கினார். பேச்சு, விவாதம், நடிப்பு, புராணபடனம், இசை ஆகிய துறைகளில் மிகுந்த ஆற்றல் உடையவராக இருந்தார். இவற்றைவிட கவிபுனையும் திறனும் இவருக்கு கிட்டியிருந்தது. நாம் மேலே குறிப்பிட்ட பல்வேறு விடயங்களும் ஒருங்கே கைவரப் பெற்றமையால் “கண்ணன் ஐயா” எங்கள் மண்ணில் தனித்துவானவராக மிளிர்ந்தார். இவர் தலைமாணாக்கர்களில் நாமும் ஒருவர் என்பதனால் எமக்கும் பெருமை கிட்டியது.

அன்னைக்கும், அடியவர்களுக்கும் இடையில் பாலாக அமைந்து அன்னை அருளை அடியவர்களுக்குப் பெற்றுக் கொடுத்த தேவி பக்தன் இவர். அன்னை பராசக்தியோடு பேசுகின்ற ஆற்றல் கைவரப்பெற்ற ஆத்மீக முதிர்ச்சியைக் கொண்டிருந்தவர். மக்கள் துயர்களையும் உள நல வைத்தியராக நம் மண்ணில் வலம் வந்தவர். பிறர் துயர் களைந்து, ஆறதல் அளிக்கும் ஏழைப் பங்காளனாய் விளங்கியவர். இவற்றை எல்லாம் எண்ணிப் பார்க்கும் போது

"ஞாயிற்றை சங்கிலியால் அளக்கலாமோ என்
ஞான குரு பெருமை வகுக்கலாமோ"

என பாரதியின் வரிகளை நினைக்க மட்டும் தான் என்னால் முடிகின்றது.

என் தந்தையாருக்கு (கலாபூஷண் க.ப.பரராஜசிங்கம்) கலை அருள் வேந்தன் என்ற விருதை வழங்கியவர் என் குருநாதர். இதுமட்டுமன்றி 2019 ஆம் ஆண்டு நெல்லண்டை பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் கலாநிதி த.கலாமணி தலைமையில் நடைபெற்ற மாபெரும் நாடக விழாவில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த, பல துறைகளிலும் ஈடுபாடு கொண்ட நூற்றுக்கு மேற்பட்ட கலைஞர்களைகுருக்கள் கௌரவித்தார்கள். இந்த விடயத்தை ஈழத்துக் கலை வரலாற்றினுடைய இன்றியமையாத அத்தியாயமாக பதிவு செய்து கொள்ள விரும்புகின்றேன். இந்தக் கௌரவிப்பில் என்னையும், என் தந்தையாரையும், எனது சகோதரனையும் (பா.ரமேஸ்) எனது மாணவர்களாகிய வேல் நந்தகுமார், கோ.கோகிலரதன் ஆகியோரைக் கௌரவித்ததை நன்றி உணர்வோடு நான் நினைத்துப் பாரக்கின்றேன். அன்றைய தினம் மேடையேற்றப்பட்ட சத்தியவான் சாவத்திரி இசை நாடகதக்தில் என் குருநாதர் நாரதராக நடித்திருந்ததார். குருநாதருடைய நடிப்பாற்றலைக் கண்ணுற்ற, ஏறத்தாழ அறுபது ஆண்டுகள் இசை நாடக அனுபவம் கொண்ட என் தந்தையார் "கண்ணன் ஐயாவோடு நெருங்கிப் பழகியும் அவரை நாம் இசை நாடகத் துறையில் பயன்படுத்த தவறிவிட்டோம்" என்று கண்ணீர் மல்க உரைத்ததை நானும் உங்களுக்கு உரைக்க விரும்புகின்றேன்.

2019 ஆம் ஆண்டு நாம் அன்னையை இழந்தோம். அன்னையின் உடலமும் எம்மை விட்டுப் பிரியும் நேரம் நெருங்கிவிட்டது. நாங்கள் யாருமே எதிர்பார்க்கவில்லை. மூச்சம்புலம் சிவனே எழுந்தருளியதைப் போல எம் குருநாதர் எம் மனைக்கு வந்திருந்தார். எம்மை ஆறுதல் படுத்தினார். அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றினார். எம்மை ஆறுதல் படுத்திய அந்த தெய்வம் இன்று எம்மோடு இல்லையே என்பதை நினைக்கும் போது

"நந்தா விளக்கு அனைய நாயகனே நானிலத்தோர்
தந்தாய் தனி அறத்தின் தாயே தயாநிலையே
எந்தாய் இகழ்வேந்தர் ஏறே இறந்தனையோ"

என்று இராமன் அழுவதைப் போல அழத்தான் எம்மால் முடிகின்றது.

எம் மண்ணில் தமிழுக்கு ஒரு பாதை வகுத்தவன் நீ
அந்தப் பாதையிலே நான் பயணிக்கின்றேன்
நம் தமிழர் கலைகள் மண்ணில் ஏற்றமுற வேண்டுமென உழைத்தவன் நீ
நானும் அதற்காக உழைக்கின்றேன்
விலைபேசாது, விலை போகாது பேச்சால் அரங்கை ஆண்டவன் நீ
நானும் உன் வழியில் ஆள முயற்சிக்கின்றேன்
இயற்கையையும், ஆத்மீகத்தையும் நேசித்தால் நாம் இந்த
மண்ணில் துயரின்றி வாழலாம் என நம்பியவன் நீ
இந்த நம்பிக்கையோடு நானும் இவ்வுலகில் வாழ்கின்றேன்
உனக்காக இதுவரை நான் எதையும் செய்ததில்லை
நீ இருக்கின்றாய் என்ற நம்பிக்கை
இனி இவற்றை நான் செய்கின்றேன்
நீ என்னுள் இருக்கின்றாய் என்ற நம்பிக்கை

அன்பு மாணவன்
பரா.ரதீஸ்

# வந்திராயன் தெற்கு வாரியாவயல் பிள்ளையார் ஆலய பரிபாலன பிரார்த்தனை

“நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்து இவ்வுலகு“ என்றார் திருவள்ளுவர். நேற்று இருக்கின்ற ஒருரவர் இன்று இல்லாமல் இருப்பது இவ்வுலகத்திற்கு பெருமை என்கிறார். இத்தகு நிலையிலே ஒரு சிலரது இழப்பு எங்கள் உள்ளங்களையெல்லாம் வாட்டி வதைப்பதனை உணர முடியும்.

அந்த வகையிலே சைவசித்தாந்த பண்டிதர் அருடபிரபாகரசீலர் சிவகாம உபதேச வாசஸ்பதி ஓய்வுநிலைய அதிபர், முதுகலைமாணி, சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜ குருக்கள் அவர்களின் இழப்பு சைவத்தமிழ் உலகிலே ஈடு செய்யமுடியாத பேரிழப்பாகும். சைவ, தமிழ் இலக்கியங்களை ஐயம் திரிபறக்கற்று பிறரிற்கு நாநலத்தோடு சொல்லும் பேராற்றல் மிக்கவராக அன்னார் திகழ்ந்தார். அத்தோடு தனது ஆழ்ந்தகன்ற புலமையினை உணர்த்தும் வகையில் பல்வேறு நூல்களை யாத்தவர். அருட்கவிகளால் பலரது மனங்களையும் வென்றவர். பண்ணோடு பாடிப்பரவும் பக்தி மார்க்கத்தோடு குருமார்களிலே தனித்துவம் மிக்க கல்வியியலாளராகவும் மிளிர்ந்தமை அன்னாரின் தனித்துவ சிறப்பாகும்.

இப்பேர்ப்பட்ட சிறப்புகள் பல மிக்க கண்ணன் ஐயா அவர்கள் தந்தையார் தியாகராஜா அவர்களின் வழியில் வாரியாவயல் பிள்ளையார் தேவஸ்தானத்திலே குருவாக கிடைக்கப்பெற்றிருந்தமை எமக்கெல்லாம் மன நிறைவைத் தரும் விடயமாகும்.

நாட்டு நிலைமை காரணமாக அழிவடைந்திருந்த ஆலயத்தை புனருர்த்தாரணம் செய்தபோது மகா கும்பாபிசேகத்தை மிகவும் நேர்த்தியாக நிறைவேற்றி பெருமாளின் அருளை அடியவர்கள் பெறுவதற்கு காரணமாக அமைந்தவர்.

இன்று அன்னாரின் புதல்வர் தனஞ்சய குருக்கள் அவர்கள் தந்தையின் வழியிலே பயணித்து எமது ஆலயத்தின் சங்காபிசேகத்தை நடாத்துவது மனநிறைவைத்தருவதாகும். அத்தோடு எனது தந்தையார் அமரர் வேலுப்பிள்ளை வினாசித்தம்பி அவர்கள் செம்பியன்பற்று தூவில் கண்கை அம்மன் ஆலயத்திற்கு பூஜை செய்த காலத்தில் நடைபெற்ற கும்பாவிசேகத்தின் போது கும்பாபிசேக குருமானியாக கலந்து சிறப்பித்து எங்களுக்கு தீட்சை வைத்தமை என்றும் மறக்க முடியாது. இவரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரிற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். குருக்களின் நினையாக ஓராண்டு நினைவு மலரினை வெளியிடுவது காலத்தின் தேவையாகும்.

குருக்கள் ஐயாவின் ஆத்மா இறை பரம்பொருளின் தாளில் நீடித்து நிலைத்திருக்க இறைவனை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

வத்திராயன் தெற்கு வாரியாவயல் பிள்ளையார் ஆலயம் சார்பாக
பொருளாளர்வி.விக்னேஸ்வரன்
(வருமானப்பரிசோதகர், பருத்தித்துறை நகரசபை)

# அமரர் தியாக சோமஸ்கந்தக்குருக்கள் அவர் பற்றிய அழியா நினைவுகள்

என்றும் எம்முடன் அன்பாகப் பழகிய சோமாஸ்கந்தக்குருக்களின் நினைவேட்டிற்கு அஞ்சலிஉரை எழுதுவதா, மனம் சஞ்சலப்படுகிறது. எதை எழுதுவது, கண்ணன் ஐயாவைக்குழந்தையாகக் கண்டதும், அவர்பட்டப்படிப்பிற்காக வீட்டில் வந்து என்னிடம் பாடம் கேட்டது. பிரதமகுருக்களாகி எம்மை ஆசீர்வதித்தது, கண்டவுடன் புன்னகைபூத்த முகத்துடன் "சேர்" என்று அழைப்பது கண்ணன் ஐயாவின் குடும்பத்தினருடன் அன்பாகப் பழகிய பழைய நினைவுகளை மீட்டதும் மனம் சஞ்சலப்படுகிறது.

தியாக சோமஸ்கந்தக் குருக்களை நாங்கள் கண்ணன் ஐயா என்றுதான் அழைப்போம். கண்ணன் ஐயா கற்றும் கேட்டும் பிரதகுருக்களாக வருவதற்கு முன்னரே அவரைக் குழந்தையாகப் பார்த்துள்ளேன். அவரின் படிப்படியான வளர்ச்சி, பட்டங்கள் பெற்றமுதிர்ச்சி, கல்வி, பக்தி, பதவி இவைகளிலே இவர் பெற்ற உயர்ச்சி இவையெல்லாவற்றையும் கண்டு இறும்பூதெய்தியுள்ளேன்.
இவரது பக்திபூர்வமான பூசை முறைமை, ஆசீர்வதிக்கும் பக்குவம், அடியவர்களுக்காக வழிபாடியற்றும் பாங்கு, அடியார்கள்; ஆலயத்தினர், ஆசிரியர்கள், உதவியவர்கள், மூத்தவர்கள் முதலானவர்களைப் போற்றி மதித்துப் பணிந்து நடக்கும் பாங்கு கண்ணன் ஐயாவுக்கு வாய்த்தது போல வேறு எவருக்கும் வாய்த்ததை நான் இதுவரை கண்டதில்லை.

இத்தகைய நற்குணங்கள் கண்ணன் ஐயாவுக்கு எங்கிருந்து வந்தன. இவற்றின் ஊற்றுக்கள் எங்கிருந்து உற்பத்தியாகிப் பிரவாகித்தன. அவரது தந்தை, பேரன், பேத்தி, சிறியதகப்பன், மாமிமார், மாமன், மருமகள், உறவினர் யாவரையும் எனக்கு நன்றாகத் தெரியும்.

கண்ணன் ஐயாவின் தகப்பன் தியாகராஜாக்குருக்கள் இவரை ஊரவர் தியாகையா என்று தான் அழைப்பார்கள், தியாகையாவின் தந்தை கந்தையா ஐயா, கந்தையா ஐயாவின் தந்தை வேதையா வேதையாவின் மனைவி கந்தையா ஐயாவின் தாய் பொன்னாச்சி (பொன்னாச்சி அம்மா, பொன்னாச்சி ஆச்சி) என்று தான் ஊரவர் அழைப்பர். பொன்னாச்சி அம்மா வெள்ளைச் சேலை, சேலையைவிட இன்னும் வெண்மையான தலை, வெண்மையான தலையையும் விட வெண்மையான விபூதிப்பூச்சு "சாட்சாத்" அம்மன் கோலம் தான் அந்தச் சூழலிலே அவரோடு பழகியிருக்கிறேன். அவர் உணவுதந்து நான் உண்டிருக்கிறேன்.

கந்தையா ஐயாவின் வீட்டு முற்றத்தில் பெரியதொரு வேப்பமரம். அந்த வேப்பர நிழல் தான் எங்கள் விளையாட்டிடம். கந்தையா ஐயா இளமையிலேயே மனைவியை இழந்தவர். இவரின் மூத்த மகனே தியாகராஜாக்குருக்கள், 1938களில் பிறந்திருப்பார் என்று எண்ணுகிறேன். இரண்டாவது மகன் சோமசுந்தர ஐயர் அதிபராக இருந்து ஓய்வு பெற்று இப்போது கனடாவில் வாழ்கிறார். பள்ளியில் தரும் வீட்டுக்கணக்கைச் சோமையாவைக் கேட்டுத்தான் செய்வேன். தியாகையாவுக்கு இரண்டு சகோதரிகள். மூத்தவர் நாகேஸ்வரி, இளையவரின் பெயர் நினைவில்லை. இளைய சகோதரியின் கணவன் எங்கள் பேரனாரிடம் வந்து புராணபடனம் பழகியவர். இளைய சகோதரியின்மகன் பெயர் சிவராசா ஐயர் என்று நினைக்கிறேன்.

இந்தக் குடும்பத்திலே நான்கண்ட பக்திவழிபாட்டு மரபு ஆலயக்கடமைகளை

அர்ப்பணிப்போடு செய்யும் வழக்கம், யாருடைய மனமும் நோகாதபடி அன்பாகப் பேசும் பண்பு, போட்டி, பொறாமை இல்லாத வாழ்வியல், மனித நேயம் முதலானவை கண்ணன் ஐயாவின் குடும்பச் சொத்து. ஆணவம் என்பதன் அரிச்சுவடியே அறியாதவர்கள் துன்பப்படுபவர்களுக்காக வழிபாடியற்றித்துன்பம் தீர்ப்பவர்கள். இந்தக் குணங்கள் மிக்கிருந்தமையாலே தான் தியாகராஜகுருக்கள், பத்திரகாளியின் உபாசகர் அநியாயமாகக் கொல்லப்பட்டார். அந்தச் சோகம் கண்ணன் ஐயாவிடம் இருந்ததை அவர் என்னோடு உரையாடும் பொழுதுகளிலே கண்டிருக்கிறேன்.

கோயில் வேலைதவிர்ந்த நேரங்களிலே கந்தையா ஐயா நல்ல விவசாயியாகவும் விளங்கினார். வயல், தோட்டம், பசுவளர்ப்பு முதலானவற்றிலும் கந்தையாஐயா ஈடுபட்டிருந்தார். அவர்களோடு நாம் சேர்ந்து தோட்டம் செய்தமை பசுமை நினைவுகள்.

பத்திரகாளி அம்மன், கனகராவளவுப்பிள்ளையார் இவர்களின் பூரண கிருபாகடாட்சம் கந்தையா ஐயாவழி தியாகராஜாக்குருக்கள் ஊடாகக் கண்ணன் ஐயாவுக்குக்கிடைத்தது. கண்ணன் ஐயாவின் குணவியல்பு அவரது பிறவிக்கொடை அவரின் ஆத்மசாந்திக்காககப் பிரார்த்திப்போம்.

“ நிலத்தின் தன்மை பயிர்க்குளதாகுதல்”

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா

# நெஞ்சை நிறைக்கும் சுகந்தம்

சிவஸ்ரீ சோமாஸ்கந்தராஜக்குருக்கள் மறைந்து ஓராண்டாகியும் அவர் நினைவு சுகந்தமாக நெஞ்சில் நிறைகிறது. சைவக்குருமாருள் பெரும்பான்மையினர் வேதாகமங்களில் போதிய பயிற்சியில்லாதவர்களாய், தம் பெரும்பொழுதைக் கிரியைகளிற் கழித்துக் கொண்டிருப்பது காலங்காலமாக விமர்சிக்கப்பட்டு வந்துள்ளது.

சைவசமய நூல்களிற் பயிற்சியும் தேர்ச்சியும் உடையராய் சமயப்பிரசாரகர்களாய் விளங்குவோர் மிகச் சிலரே. அவர்களிற்குறிப்பிடத்தக்கவர் அமரர் சோமாஸ்கந்தராஜக்குருக்கள். அவரிடம் நான் கண்ட தலைசிறந்த பண்பு குருபக்தி புதிய உயர்கல்லூரியில் அவருக்கு இந்து நாகரீகம் கற்பித்தவர் சகோதரி அருள்நங்கை சண்முகநாதன். குருக்களுடைய ஆளுமை உருவாக்கத்தில் அம்மையாரின் வகிபாகம் மிக முக்கியமானது. குருக்கள் அவருடைய குடும்பத்தில் ஒருவராகப் பழகி வந்தார்; நன்றி பாராட்டியவர்.

அம்பிகையை முப்போதும் பூசித்துலந்த தலைமுறையில் வந்தவர். “புலன் அழுக்கற்ற அந்தணாவுராக“ எம்மிடை உலாவியவர். அவர் விரைந்து வான் சென்றது எம் தவக்குறை. இறைவன்தமக்கு வேண்டியவர்களை சற்று முன்னதாகவே அழைத்துக் கொள்கிறான்.


கவிஞர் சோ.பத்மநாதன்<br>
“ஏரகம்“<br>
பொற்பதி வீதி<br>
கொக்குவில்

# மக்களோடு வாழ்ந்த சேவையாளன்

சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்த ராஜாக்குருக்களின் பிரகாசமான வதனம் எமது மனங்களில் பதிந்து பல்பரிமாணங்களின் வெளிப்பாட்டினைச் சுட்டி நிற்கின்றது.

எதனை எப்போது எவ்வாறு செயற்படுத்தி முடிவுறுத்துகின்றார் என்பது தான் அவரது ஆளுமை பலத்த வேலைப்பழுக்களின் மத்தியிலும் நினைத்ததை நினைத்த நேரத்தில் செயற்படுத்துவதுமட்டுமல்ல எந்தப் பராதியுமின்றிச் சாதாரண புன்முறுவலோடு காணப்படுவார். ஐயா அவர்களது வளர்ச்சியினை முயற்சியினை அவரது அன்பர்கள் உறவினர்கள் பலர் அறிவர். சமய, சமூக, கல்விச்சேவைகளில் தனித்தடம்பதித்தவர்.

சமயச் சொற்பொழிவுகள், தொலைக்காட்சி நிகழ்வுகள், பட்டிமன்றங்களில் இனிமையான குரலோடு மடைதிறந்த வெள்ளமாய் சொற்கள் வருகின்ற பாங்கு சொல்லில் அடங்காது. ஐயாவிற்கெனப் பல ரசிகர்கள் உள்ளனர்.

ஈழத்திருநாட்டில் பெரும்பாலான ஆலயங்களின் கும்பா அபிசேகம், ஐயாவின் காலத்தால் அழியாத சுபீட்சமாகப் பார்க்கலாம். கிமராங்களில் ஆலய வளர்சிக்கான ஆலோசனைகள் வழிகாட்டல்கள் இன்னும் அந்தமக்களால் பறைசாற்றப்படுகின்ற விடயமாக உள்ளது.

நெல்லண்டைப்பத்திரகாளி அம்மன் ஆலயத்தின் பிரதமகுருவாக இருந்து பக்தர்களின் மனங்களில் தெய்வீக குருவாக ஏற்றுக் கொள்ளப்பட்டவர். ஆலயத்தில் பூஜைக்காக அவர் தோன்றுகின்ற போதுள்ள பிரகாசம் அவருக்கேயுரிய இறைசக்தியென்றால் அது மிகையாகாது.

வடமராட்சியில் கல்விசார்ந்த பெரிய நிகழ்வுகளின் ஆசியுரைக்காக ஒழுங்கமைப்பாளர் களால் பெரிதும் விரும்பப்படுபவர் கண்ணன் ஐயா என்று எங்களால் அன்பாய் அழைக்கப்படும் குருக்கள் ஐயா அவர்களே தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்திற்கும் ஐயா அவர்களிற்கும் மிக நெருக்கமான பிணைப்பு உள்ளது. இவர் க.பொ.த உயர்தரம் வரைகற்ற பாடசாலை மட்டுமல்ல பிள்ளைகளையும் இதே பாடசாலையில் கற்பித்தார். பழைய மாணவர்சங்கத்தின் நடவடிக்கைகளிற்கு ஊன்று கோலாக இருந்து உதவியமை பாடசாலை மைதானக் கொள்வனவின் போது எம்மால் காண முடிந்தது. மைதானக்கொள்வனவிற்கு 5மில்லியன் நிதி சமூகத்திடம் சேர்ப்பதற்குத்திட்டமிட்டபோது ரூபா ஐம்பதாயிரம் முதலாவதாக வழங்கியவர் கண்ணன் ஐயா அவர்களே அவருடைய ஆரம்பம், திட்டமிட்டகாரியம் தும்பளை மக்களால் நிறைவேற்றப்பட்டது.

கண்ணன் ஐயாவின் கரங்களினால் விபூதிபெற்றுக் கொண்டால் துன்ப துயரங்கள் நோய்கள் தீரும் என்ற நம்பிக்கையுள்ள மக்கள் பலர் ஆலயத்திலும் வீட்டிலும் சென்று தம்மை நம்பிக்கையின்பால் இட்டுச் செல்லும் ஆசியைப் பெறும் காட்சிகளை நாம் நேரிலே பார்த்திருக்கின்றோம். இதில் எமது குடும்பத்தாரும் அடங்குவர். 1988 ஆம் ஆண்டு எமது திருமணத்தினை குருக்களாக அமர்ந்து உடுப்பிட்டியில் நடாத்தி ஆசிர்வசித்த பெருத்தகை.

பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரயில் சிறந்த ஆசானாக மிளிர்ந்து தமிழ், சமயப்பற்றுள்ள மாணவர் சமுதாயத்தை உருவாக்கியவர். அம்பன் அமெரிக்கமகிஷன் வித்தியாலயத்தில் பிரதி அதிபராக நிர்வாகத்திற்கு அணிசேர்த்தது மட்டுமல்லாது க.பொ.த (உ/த) மாணவர்களிற்கு தமிழ்,

இந்து நாகரிகம் ஆகிய பாடங்களில் வழிகாட்டியாகவும் மிளிர்ந்தவர். தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் தற்காலிக இணைப்பில் கடமையாற்றி மாணவர்களை வழிப்படுத்தியவர்.

முப்பதிற்கு மேற்பட்ட நூல்களை எழுதி அச்சிட்டு மக்களின் பயன்பாட்டிற்காக ஒப்படைத்தவர். வேதங்கள், ஆலயவழிபாடும் தத்துவமும் யோகசித்து அமிர்தகபூசம் சோமஸ்கந்தரிசனம் ஆகமங்கள் சைவகுலதீபம் ஆகிய நூல்கள் மனதில் பதிந்துள்ளன.

எங்கெல்லாம் வியாபித்த சிந்தனை செல்கின்றதோ அங்கெல்லாம் சென்று தனது சிந்தனை மற்றும் சமய சொற்பொழிவுகளால் மக்களைக் கவர்ந்தவர்.

ஐயா அவர்களிற்கு இவ்வளவு விரைவாக நினைவை எழுத வேண்டிவந்தமையே இன்று எமக்குள்ள வேதனையாகும்.

என்றும் மக்களோடு வாழ்கின்ற சேவையாளனை நினைவு கூர்ந்து இவரது பெருமைகளை மனதில் நிறுத்துவதற்கு எண்ணிய பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் உறவுகளிற்கு இதன்பால் பாராட்டினையும் தெரிவித்து நிறைவுறுத்துகின்றேன்.

வைத்தியர் K.K. யோகநாதன்
(ஓய்வு நிலைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர்)
உபயகதிர்காமம்
புலோலி

# எனது பார்வையில் ஆத்மீகத்துணையாளர் அமரர் சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜக் குருக்கள்

வேதாரணியம் குருக்கள் பரம்பரையின் வழி வந்த நந்திகேஸ்வர கோத்ர வழித்தோன்றல் அமரர் சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜக் குருக்கள் அவர்கள் எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்து ஓராண்டுஒடிறைந்து விட்டது என்பதை நம்ப என் உள்ளம் மறுக்கிறது நேற்று நடந்த சம்பவம் போல் இன்னும் அமரரின் மறைவு மற்றும் இறுதி நிகழ்வுகள் என் மனக்கண் முன் நிழலாடுகின்றது.

உண்மையில் அமரர் சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜக் குருக்கள் ஐயா அவர்களை ஆரம்பத்தில் நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோவில் பிரதகுரு என்ற அடிப்படையில் நான் அறிந்திருந்தேன். நான் வளர்ந்து சமூகத்துடன் ஊடாக ஆரம்பித்த நிலையில் குருக்கள் ஐயா அவர்கள் தர்லையம்புலம் பத்திரகாளி அம்மன் ஆலய இறைபணிகளிலும் பூஜை பணிகளிலும் ஈடுபட்ட பரம்பரை வழி வந்தவர் என்பதை அறிய முடிந்தது எனது பிறப்பிடம் தர்லைப்புலம் பத்திரகாளி அம்மன் ஆலய அருகில் உள்ள கரவெட்டி கிழக்கு யாரக்கரு என்ற வகையில் சோமாஸ்கந்தராஜக் குருக்கள் ஐயா அவர்கள் தர்லையப்புலம் பத்திரகாளி அம்மன் ஆலய விசேட பூஜைநிகழ்வுகளிலும் கும்பாபிஷேக நிகழ்வுகளிலும் கலந்து மிகச்சிறப்பான வகையில் சைவப்பணி ஆற்றியதை நேரடியாகவே கண்ணுற்றிருக்கின்றேன்.

எல்லோராலும் அன்பாக “கண்ணன் ஐயா” என்று அழைக்கப்படும் அமரர் சோமாஸ்கந்தராஜக் குருக்கள் ஐயா அவர்களின் பூஜை நிகழ்வுகள் மிகச் சிறப்பாக அமைந்ததை சைவ உலகத்தவர் அனைவரும் நன்கறிவர். வகுத்து ஒதுக்கப்பட்ட சைவவிதி முறைகள், பூஜை முறைமைகளுக்கு அமைவாக மிக உயர்வான தரத்தில் திருவழிபாடுகளைை இயற்றியிருந்தார். மிக உயர்ந்த தரத்தில் ஆன அவரது சங்கீதஞானத்தின் காரணமாக மந்திர, ஸ்தோத்திரங்களை இனிமையான குரலில் வெளிப்படுத்துவதை நான் நேரடியாகக் கண்டு களித்திருக்கின்றேன்.

சைவம் தழைத்தோங்க வேண்டும் என்ற உயரிய சிந்தனை எப்பொழுதும் அவர் மனதில் குடிகொண்டிருக்கும். அந்த வகையில் மயப்பணியுடன் இணைந்த சமுதாயப்பணி ஆற்றுவதற்கான அடிப்படையாகவே ஆசிரியப் பணியை ஏற்றிருந்தார் என நம்புகின்றேன். தனது நிறைவான ஆசிரியப் பணி மூலம் அவர் உருவாக்கிய சிறந்த நல் மாணாக்கர்கள் பலர் இன்று சிறந்த சைவசமயிகளாகவும் நற்பிரஜைகளாகவும், உயர்வான பணிகளை அலங்கரிப்பவர்களாக வும் உள்ளனர். அமரர் கண்ணன் ஐயாவின் இறுதி நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தி, நெறிப்படுத்தி, வழிப்படுத்திய கண்ணன் ஐயாவின் பல மாணவர்கள் என் கண்முன்னே நிழலாடுகின்றனர். கண்ணன் ஐயாவின் 58 வது பிறந்தநாள் நிகழ்வுகளினை கொவிட் - 19 பெருந்தொற்று காலப் பகுதயில் மட்டுப்படுத்தப்பட்ட வகையில் அவரது மாணவர்கள் கண்ணன் ஐயாவின் வீட்டில் கொண்டாடியதையும் நான் நேரில் கண்டு வியந்திருக்கின்றேன். இந்நிகழ்வினை கண்ணுற்றதி லிருந்து அவரது மாணவர்கள் அந்தளவிற்கு அவரை விசுவாசித்ததிருந்தனர் என்பதை என்னால் ஊகிக்க முடிந்தது. கண்ணன் ஐயா அவர்கள் அச்சந்தர்ப்பத்ததில் அவர்களுடன் ஊடாடிய விதம் ஒரு ஆசிரியன் எவ்வாறு ஒரு மாணவனை வழிப்படுத்தி, நெறிப்படுத்தி, சமூகத்திற்காக தயார்ப்படுத்தலை மேற்கொள்ள வேண்டும் என்பதை வெளிப்படுத்தி நின்றதை நான் புரிவதற்கான

ஒரு அடிப்படையாக அமைந்தது.

யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரியில் பிரதிஅதிபராக இருந்த நான் யா/கற்கோவளம் மெ.மி.த.க பாடசாலையின் அதிபராக நியமனம் கிடைத்து முதன் முதலாக பதவி ஏற்பதற்காக பாடசாலையை தரிசித்த போது என்னை வரவேற்று உபசரித்து ஏனைய கல்விசார் பணியாளர்களுக்கு அறிமுகப்படுத்தி மகிழ்ந்ததை நான் நன்றியுணர்வுடன் நினைவு கூருகின்றேன். எனது நினைவுகளின் படி உண்மையில் அவருக்கு என்னை அவ்வேளையில் பெரிதாக அறிமுகம் இல்லாமல் தான் இருந்திருக்க வேண்டும். ஆனால் எனது மைத்துனர் திரு.த.கலைச்செல்வன் ஆசிரியர் மூலம் என்னை அறிந்தவர் என்ற வகையில் என்னுடன் உரிமையுடன் நெருங்கி பழக ஆரம்பித்தார். எனக்கு அவருக்கும் இடையிலான சிறந்த புரிதல் காரணமாக மிகக் குறுகிய காலத்திலேயே என் மனதை வென்ற ஒரு சிறந்த ஆன்மாவாக வலம் வந்தார்.

தொற்றா நோய்களின் ஆக்கிரமிப்புகளுக்கு மத்தியிலும் கற்பித்தல் பணியிலும் இறைபணிகளிலும் சமாந்தரமாக மிகுந்த ஆரோக்கியமாக அவரது பணிகள் மிளிர்ந்தன. பாடசாலையின் ஒவ்வொரு தேவைகளையும் நன்குணர்ந்து தானாகவே முன்வந்து பல உதவிகளை எனக்கு ஆற்றியிருந்தார். நான் எதுவும் கேட்காது விடினும் தானாகவே தேவைகளை அறிந்து “சேர், என்ன தேவை? என்ன செய்ய வேண்டும்? ஏதாவது செய்ய வேணும் என்றால் சொல்லுங்கோ” என்ற முன்வைப்புடன் அத்தேவைகளைத் தனது சொந்த செலவில் செய்திருக் கின்றார். பாடசாலையின் கோப்புக்களை வேணுவதற்கான அலுமாரியை தானே தனது சொந்த செலவில் செய்து அலுவலக அறையின் சுவரில் பொருத்தியிருந்தார். விளையாட்டுப்போட்டி, பரிசளிப்பு நிகழ்வு எதுவாக அமையினும் தனது பங்களிப்பை உறுதிப்படுத்துவது அவரது வழக்கம்.

உண்மையில் மேலே கூறப்பட்ட பங்களிப்புகளை விட மிக உயர்வான பங்களிப்பாக நான் கருதக்கூடியது யாதெனில், அவர் எனக்கு ஓர் ஆத்மீக துணையாளர் ஆக அமைந்திருந்தார் என்பதே ஒரு சந்தர்ப்பதிலாவது சிறிது தளர்வடைந்தாலோ அல்லது சேரந்து போனாலோ தனது இறைவசனங்கள் மூலம் என்னை உரமூட்டி, “நான் இருக்கிறன் சேர், ஒன்றுக்கும் யோசியாதை யுங்கோ” எனக் கூறி என்னை உஷார் படுத்துவார். அந்த வகையில் கண்ணன் ஐயாவின் ஸ்தானம் என்பது மிகப் பெரிய ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தியது என்பது யதார்த்தமானதே.

கண்ணன் ஐயரிடம் நான் பார்த்து வியந்த இன்னொரு விடயம் யாதெனின் தமிழ் இலக்கியம், இலக்கண தளங்களில் அவரது ஆழ்ந்த, பரந்து விரிந்த அறிவு ஆகும். அவரைத் தரிசிப்பதற்காக அவரது வசிப்பிடம் சென்ற போதெல்லாம் நான் வியந்து பார்பது அவரிடம் உள்ள பல பெறுமதிமிக்க நூல்களை எல்லாம் கற்றுத் தேரந்திருந்தார். சாஸ்திரம் தொடர்பில் ஆழ்ந்த அறிவுடன் பல மக்களை துன்பங்களிலிருந்து விடுவிப்பதற்கான பரிகாரங்களை இயற்றி அதிலிருந்து விடுவிக்கும் உயரிய பணியில் கண்ணன் ஐயா ஈடுபட்டதை இந்த சைவ உலகம் நன்கு அறியும். இதற்காக கண்ணன் ஐயாவைத் தேடி நாட்டின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் நாடி வந்ததை நான் சொல்லித் தெரிய வேண்டிய அவசியம் இல்லை. ஆரோக்கியமற்ற உடல் நிலையிலும் உயர்ந்த மனஉறுதியுடன் கண்விழித்து அயராது பல சமயம்சார் பூஜை நிகழ்வுகளையும், விசேட பூஜை வழிபாடுகளையும் தனது உடல்நிலையைக் கருதாது ஆற்றினார். எமது பாடசாலையில் இடம்பெறும் சைவசமயம்சார் பூஜை நிகழ்வுகளை அவர் ஆற்றும் விதம் தனிச்சிறப்பு வாய்ந்தது. கொவிட் 19 காலப்பகுதயில் இடம் பெற்ற நவராத்திரி தின நிகழ்வுகளில் ஓரிருவர் பங்குபற்றிய நிலையிலும் அதே உயர்வான தரத்தில் மிகச் சிறப்பாக பூஜை நிகழ்வுகளை ஆற்றியிருந்தார். ஒவ்வொரு ராத்திரிகளுக்குமான பாடல்களை மிகவும் இராகத்துடன் ரம்மியமாக பாடுவார். குறிப்பாக “முருக்கம் பூ சிவப்பு நிறத்தாளே…” என அவர் பாடும்போது நாம் மெய்சிலிர்த்து நின்றதையும் அவரது உயர்ந்த சங்கீத ஞானத்தையும் வியந்து பார்த்ததையும் இவ்வேளையில் வெளிப்படுத்த விரும்புகின்றேன்.

சைவசித்தாந்த பண்டிதர் என்ற வகையில் உயர்ந்த ஞானத்தால் பல பணிகளை சைவத்திற்காக ஆற்றி மகிழந்திருந்தார். சைவத்தின் அடிப்படைகளாக அமையும் எல்லா குணாம்சங்களையும் தன்னகத்தே கொண்டிருந்த பெருந்தகையாக கண்ணன் ஐயாவை நான்

வியந்து நோக்குகின்றேன்.

தனது உடல் நிலை காரணமாக சில வேளைகளில் பாடசாலை நேரங்களில் வெளியில் செல்ல என்னிடம் அனுமதிக்காக வரும்போதெல்லாம் மிகுந்த தயக்கத்துடன் "என்னாலை உங்களுக்கு கஷ்டம் சேர், நான் விரைவில் ஓய்வு பெற யோசிக்கிறன்" என அடிக்கடி கூறுவார். நான் அவரை தேற்றி, "சிகிச்சைக்காகத் தானே செல்கிறீர்கள்" என்ற நியாயப்படுத்தலுடன் பதிலிறுத்திருக்கின்றேன். இருந்தும் எங்களின் மறுப்பையும் தாண்டி தனது 57வது வயதிலேயே கொவிட் 19 பெருந்தொற்று ஊரடங்கு அமுல்படுத்தப்படும் காலப்பகுதியில் தனது ஓய்வை அறிவித்து பாடசாலையிலிருந்து அலுவலக நோக்கில் மட்டும் விலகியிருந்தார். ஆனால் அதன் பின்னரும் மிக நெருக்கமகான உறவை பாடசாலையுடன் பேணியதுடன் தொடர்ந்தும் உதவிகளை செய்து கொண்டேயிருந்தார்.

தனது சைவப்பணியின் ஓர் அம்சமாக 100ற்கு மேற்பட்ட கலைஞர்களை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோவில் முன்றலில் கௌரவிப்படுத்து முகமாக தனிப்பட்ட செலவில் ஒரு விழாவை ஏற்பாடு செய்து என்னையும், யா/புனிதநகர் தமிழ் வித்தியாலய அதிபரும், தும்பளை மண்ணின் மைந்தனுமாகிய திரு.இரத்தினசபாபதி குகன் அவர்களையும் அழைத்து எங்களது கைகளாலேயே கலைஞர்கள் கௌரவிக்கப்பட வேண்டும் என அன்பான வேண்டுகோளை விடுத்து அவ்வளவு கலைஞர்களையும் கௌரவப்படுத்தி மகிழ்ந்ததை மிகுந்த நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

கண்ணன் ஐயாவின் குடும்பத்தினரும் கண்ணன் ஐயாவின் வழி சைவப்பணியிலும் சமூகப்பணியிலும் ஈடுபட்டு வருவது யாவரும் அறிந்ததே கண்ணன் ஐயாவின் மனைவியை நாம் உரிமையுடன் "அம்மா" என அழைப்போம். நாம் கண்ணன் ஐயாவை நாடி அவரது வாசஸ்தலம் சென்ற போதெல்லாம் அன்பாக உபசரித்து வழி அனுப்புவார். என்ன அவசரமாக சென்றாலும் ஒரு பால்தேநீராவது எங்களுக்கு தந்து அன்போடு வழி அனுப்பிவைப்பார். கண்ணன் ஐயாவிற்கு துணையாக எப்போதும் அன்போடு பணியாற்றினார். கண்ணன் ஐயாவின் ஏகபுத்திரன் சிவஸ்ரீ தனஞ்சயக் குருக்கள் அவர்களும் தந்தை வழியில் சிறந்த கல்வியைப் பெற்று பல கோவில்களில் பிரதமகுருவாக இருந்து சிறந்த முறையில் பூஜை வழிபாடுகளை இயற்றி வருவது கண்கூடு. தனஞ்சயக்குருக்களின் திருமண நிகழ்வுகளிற்கு பல பல்கலைக்கழக பேராசிரியர்கள் உள்ளிட்ட பெருந்தகைகளை அழைத்து அவர்களின் மேலான ஆசீர்வாதத்துடன் திருமணத்தை சிறப்பான முறையில் நிறைவேற்றி அக மகிழ்ந்தார் கண்ணன் ஐயா அவர்கள். குறிப்பாக தமிழ்த்துறை இந்துசாகரிகத்துறை சாரந்த பேராசிரியர்களுக்கு கண்ணன் ஐயாவுடன் நெருங்கிய தொடர்வு என்றும் இருந்து வந்திருக்கிறது. ஆழ்ந்த தமிழ் சைவப்புலமை காரணமாகவே இது சாத்தியமாயிற்று.

பாடசாலைக்கு அருகிலேயே வசிக்கும் கண்ணன் ஐயாவின் மகள் பிரபாலினியும் அவரது துணைவரும் தற்போதைய நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோவில் ஆதினகர்த்தாவும் பிரதமகுருவும் ஆகிய சிவஸ்ரீ இராம சுந்தரலிங்கக் குருக்கள் அவர்களும் எமது பாடசாலைக்கு கண்ணன் ஐயா வழியில் வேண்டிய உதவிகளை வழங்கி வருகின்றனர். தமது மகனின் பிறந்த தினத்தன்று அவருடைய வகுப்பு மாணவரிற்கு கற்றல் உபகரணம் போன்ற ஏதோ ஒரு உதவிப்பொருளை அவர்கள் வழங்கத் தவறுவதில்லை. இது கண்ணன் ஐயா உயிருடன் இருந்த காலப்பகுதியில் இருந்து தொடர்ந்து இடம் பெற்று வருகிறது. அண்மையில் கூட விளையாட்டு நிகழ்வுகளிற்காக தமது குடும்பஞ்சார்ந்த பங்களிப்பை வழங்கியிருந்ததை நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

கண்ணன் ஐயாவின் மருமகனாகிய இரா.சுந்தரலிங்கக் குருக்களை அண்மையில் தரிசிப்பதற்கான ஒரு சந்தர்ப்பம் கிடைத்த போது "சேர் என்ன உதவி வேண்டுமானாலும் என்னுடன் தொடர்பு கொள்ளுங்கள்" என்று உரிமையுடன் வேண்டியிருந்தார் மேலும் கண்ணன் ஐயாவின் வழி அவரது மருமகனும் பல்வேறு சமய மற்றும் மக்களை துன்ப துயரங்களிலிருந்து விடுவிக்குமான போற்றுதற்குரிய பணியில் ஈடுபட்டு வருவதை பல பாகங்களிலிருந்தும் வந்து அவரது வீட்டின் முன்

காணப்படும் வாகனங்களை கொண்டு நாம் உய்த்து உணர்ந்து கொள்ள முடியும் உண்மையில் தெய்வ அனுக்கிரகம் கிடைக்கப் பெற்ற ஒருவராலேயே இந்தப் பணிகளை சிறப்பாக மேற்கொள்ள முடியும் அந்த வகையில் கண்ணன் ஐயாவின் குடும்பம் ஆற்றும் பல்வேறு சமய, சமூகப்பணிகள் போற்றுதற்குரியவை ஆகும்.

மேலே விளக்கப்பட்ட வகையில் பல்வேறு சிறப்புக்களை தன்னகத்தே கொண்ட கண்ணன் ஐயா அவர்கள் வடமராட்சி வலயக்கல்வி அலுவலகம் சார் நிகழ்ச்சிகள் அனைத்திலுமே ஆசியுரை வழங்கும் அந்த சந்தர்ப்பங்கள் மிகச் சிறப்பானவை. வங்கிகள், மற்றும் ஏனைய திணைக்கள மற்றும் அலுவலகங்களில் இடம்பெறும் சமய நிகழ்வுகளிற்கான ஆஸ்தான குருவாக திகழ்ந்து வந்தார்.

கண்ணன் ஐயாவிற்காக நாம் ஆற்ற வேண்டிய ஒரு உயரிய பணி நிறைவடைவதற்கு முன்னரே அவர் எம்மையெல்லாம் விட்டு பிரிந்த செய்தி கசப்பானது. 57 வயதில் அவர் ஓய்வை அறிவித்தபோது பிரியாவிடை நிகழ்வு ஒன்றை ஏற்பாடு செய்ய முடியவில்லை. கொடிய நோய் பரவல் காரணமாக நாடு தழுவிய முடக்கம் அமுல்படுத்தப்பட்டமையினாலும் கண்ணன் ஐயாவின் அன்பான வேண்டுகோளிற்கு அமைவாகவும் பிறிதொரு சந்தர்ப்பத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட வேளையில், தனது 58 வயதில் நாம் பிரியாவிடை கொடுக்காமலே எம்மை விட்டு பிரிந்து சென்றது என்பது இன்றும் எம்மை உறுத்திக் கொண்டிருக்கும் ஒரு நிகழ்வாக அமைந்து விட்டது துரதிஷ்டமானதே.

உண்மையில், நல்லவர்கள், வல்லவர்களை இறைவன் நிஜவாழ்வில் நீண்ட காலம் வாழ்ந்து துன்பங்களை அனுபவிக்க விடுவதில்லை என்னும் உரிய நம்பிக்கைக்கு அமைய கண்ணன் ஐயாவின் மறைவை நாம் ஏற்று, அவர் வழியில் சைவத்தையும், சமூகநீதியையும் தொடர்ந்து நிலை பெறச் செய்வது தான் நாம் அவருக்கு செய்யும் பிரதி உபகாரமாக அமையும் என்ற நம்பிக்கையுடன் விடைபெறும் நான்,

திரு செ.ஜெயமோகன்
அதிபர் - யா/கற்கோவளம் மெ.மி.த.க பாடசாலை
கற்கோவளம்
பருத்தித்துறை

# எங்கள் சமய அடையாளம்

"கண்ணன் ஐயா" கல்விசார் பெருமக்கள், சைவசமயம் சார்ந்தோர் பிறசமய முதல்வர்கள், பொதுமக்கள், பெரியோர், சிறியோர் என எந்தப் பாகுபாடும் இல்லாமல் அனைவராலும் அறியப்பட்ட, நேசிக்கப்பட்ட ஒரு பெருமகன் அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவு நாளில் அவரின் சிறப்புக்கள் குறித்து சில வார்த்தைகளைப் பகிர்ந்து கொள்ள வாய்ப்பு கிடைத்தமைக்கு இறைவனுக்கும், அன்னாரின் குடும்பத்துக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜா குருக்கள் அவர்களுக்கும் எமது பாடசாலைக்கும் இடையிலான உறவும் பணியும் தாய் சேய் உறவுக்கொப்பானது. எமது பாடசாலையின் 75 ஆம் ஆண்டு பவளவிழாவுக்கு ஐயா அவர்கள் வழங்கிய ஆசிச்செய்தி இதனை வலுவாக உறுதி செய்கின்றது.

"இப்பாடசாலையின் தான் எனது அன்னையும் நானும் எனது சகோதரர்கள் எல்லோரும் படித்தோம். எங்களது காலத்திலேயே பாடசாலை மகாவித்தியாலயமானது. எங்களது காலத்திலேயே முதற் பெறுபேறு அரங்கம் கண்டு க.பொ.த உயர்தரம் 18 பேருடன் உருவாகியது. 14 வருடங்கள் பாடசாலையில் சைவ விழுமிய அனைத்துக் கல்வியையும் அடியேன் பெற்றுக் கொண்டேன். இத்துடன் எனது குருத்துவ சேவையின் முதற்படியும் பாடசாலை வெள்ளிக்கிழமை பூசைதான். அப்போதைய மரியாதைப் பான்மையே இன்று என்னை இவ்வளவு தூரம் உயர்த்தியது என்பேன்"

பொது நிகழ்வுகளில் ஐயாவின் பிரசன்னம் சைவசமயத்தை தாங்கிப் பிடித்தது என்று கூறினால் மிகையாகாது. தோற்றப் பொலிவும், எடுப்பும் கனிவான பார்வையும், இதமான வார்த்தைப் பிரயோகமும் அறிவுசார் சிந்தனை வெளிப்பாடுகளும், எமது சமய கருத்துக்களை பகிரங்கமாக பலர் முன்னிலையில் பண்போடு எடுத்துரைக்கும் பாங்கும் ஐயாவுக்கு அவர் பூசித்த அம்மன் வழங்கிய கொடைகள். இப்பண்புகள் அவரை எமது சமயத்தின் குருவாக, ஏனைய மதகுருக்களும் மதிப்பளிக்கும் பணியாளனாக அவரை உயர்தத்தி நின்றன. பொதுவான பல நிகழ்வுகளில் ஐயாவின் ஆசிச் செய்தி இடம்பெறுவது வழமை. அவ்விடங்களில் சைவசமயத்தின் பிரதிநிதியாக, சைவசமயத்துக்கு பெருமை சேர்ப்பவராக விளங்கினார். அவரின் அறிவுசார் தேடலும், சமயம்சார் விளக்கமும் சமூகம்சார் அக்கறையும் அதற்குக் காரணமாகின.

சுருக்கமாகச் சொல்வதாயின் பொது நிகழ்வுகளில் சைவசமயத்தின் பிரதிநிதியாக எமது சமயத்தின் கௌரவத்தையும், சிறப்பையும் பெருமையையும் எடுத்துக்கூறுபவராக திகழ்ந்தார்.

கொரோனா தொற்று ஒழிந்து இயல்பு நிலை திரும்பும் போது ஐயாவின் இடம் வெற்றிடமாக உணரும் சந்தர்ப்பம் இருக்கும் என்றே நம்புகின்றேன்.

**ஐயாவும் பாடசாலையும்**

தானும் தன் குடும்பத்தாரும் கற்று நன்னிலை வரக் காரணாயிருந்த பாடசாலையை இறுதி

மூச்சுவரை நேசித்தவர் என்பதை என்னால் திடமாக கூற முடியும். வழமையான பாடசாலை நிகழ்வுகளுக்கு பங்களிப்பு வழங்குவதை விட இப்பாடசாலை எவ்வாறு எதிர்காலத்தில் மிளிர வேண்டும் என பல சந்தர்ப்பங்களில் கலந்துரையாடியுள்ளார். விசேடமாக சைவசமய விழுமியங்களை பேணும் பாடசாலையாக வளர வேண்டும் என்பதில் மிகுந்த கரிசனை கொண்டிருந்தார். தற்போதுள்ள அலுவலக அறையில் சுவாமிப்படங்களை வைத்து முறைப்படியான வழிபாட்டை ஐயாவே 2019 இல் ஆரம்பித்து வைத்தார். அதுமாத்திரமல்ல பாடசாலை தொடர்ந்து நன்றாக இயக்க வேண்டும் என்ற தன் பெருவிருப்புக்கேற்ப தன் குடும்பத்தினரையும் இணைத்துக் கொண்டுள்ளார். பாடசாலைக்குரிய வளங்களைத் தேடுவதிலும், விழாாக்களை நடாத்துவதற்கும் ஐயாவின் பெயரால் தொடர்ந்து உதவிகள் கிடைத்துக் கொண்டேயிருக்கின்றன.

இறுதியாக, எமது பாடசாலையின் முதன்மை மாணவனாகவும் எமது சமயத்தின் சமூக அடையாளமாகவும் விளங்கிய ஐயாவின் பங்களிப்பை நீண்டகாலத்துக்கு நமது சமூகம் நினைவில் கொள்ளும் என்பதுடன் அவரின் “இடம்” நிரப்பப்படுவதற்கான வாய்ப்பும் அரிதாக உள்ளதாகவே நான் உணர்கின்றேன்.

நல் மகனாக, சிறந்த மாணவனாக, போற்றுதற்குரிய மதகுருவாக அன்புசார் குடும்பத்ததவராக, அம்மனின் தொண்டனாக தன்பணியைச் செவ்வனே செய்து தன் கடன் பணி செய்து கிடப்பதே” என்பதற்கிணங்க வாழ்ந்து வானகம் சென்ற ஐயாவுக்கு அஞ்சலிகள் செய்வதுடன், ஐயாவின் இழப்பைத் தாங்கி மேலெழும் சக்தியை அவரின் குடும்பத்தவர்களுக்கு இறைவன் வழங்குவான் என்ற நம்பிக்கையுடனும் நிறைவு செய்கின்றேன்.

திரு.கனகராஜா சிவதாஸ்<br>
அதிபர்<br>
யா/தும்பளை சிவப்பிரகாச ம.வி<br>
பருத்தித்துறை<br>
பழைய மாணவர்கள்<br>
சமய முதல்வர்<br>
பிள்ளைகள் குடும்பம்

# குரு மகத்துவம்

பிறப்புக்களில் அரிதாகிய மானிடப் பிறவி எடுத்த ஆன்மாவானது வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு மாதா, பிதா, குரு, தெய்வம் எனும் நாற்குரவர்களதும் அருளும், அன்பும் மிக முக்கியமானதாகக் காணப்படுகின்றது. குழந்தையாகப் பிறந்ததும் அன்புக்கு ஆதாரமாக தாயும், தந்தையும் அறிவுக்கு ஆதாரமாக குருவும் விளங்குகின்றனர்.

சைவ சமயக்கருத்தின்படி குரு என்பவர் அறியாமையைப் போக்கி அறிவை வழங்குபவர் என்று பொருள் படுவார். அத்தோடு குரு என்பவர் தீட்சாகுரு, வித்யாகுரு என பல்வகையாக நோக்கப்படுவார். இங்கே தீட்சா குரு என்பவர் ஒருவனை சைவ சமயத்திற்குள் பிரவேசிக்க வைக்கும் சமயதீட்சையை வழங்குவதுடன் சயக் கிரியை வழிபாடுகளை மேற் கொள்பவரும் ஆவார்.

வித்தியாகுரு என்பவர் ஒரு மானிடனது வாழ்வியலுக்கு வேையான ஆயக்கலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர்விப்பவர் ஆவார். குருவை நிந்தனை செய்யாது மிகுந்த குரு பக்தியோடு எவனொருவன் கல்வி கற்கின்றானோ அவன் வாழ்வில் மேன்நிலை அடைவது என்பது திண்ணம் ஆனதே. ஏகலைவன் வில்வித்தை பயின்று ஒரு பக்தியோடு தனது வலது கை பெருவிரலை குருவுக்கு தானமாக கொடுத்து வாழ்வில் முன்னேற்றம் பெற்றான் என்பது குறிப்பிடத்தக்கது.

சமயக்குருவர் நால்வரையும் சந்தான குரவர்களையும், 63 நாயன்மார்களையும் நினைவு கூறும் முகமாக அவர்களது குருபூசை தினங்கள் கொண்டாடப்படுகின்றன. அதே போன்று கும்பாபிஷேகம், மகோற்சவம் முதலான சமயக் கிரியைகளை நன்றாற்றுகின்ற ஆசி வேண்டி ஆச்சார்ய உற்சவம் நடைபெறுவதும் உள்ளது. இதே போன்று குவலயம் தன்னில் இருத்தி புத்தி இனதெனக் கருளிய குருவாகிய தியாக சோமாஸ்கந்த ராஜாக்குருக்கள் சிறந்த கல்விமானாக வும், சிறந்த சமயக்குருவாகவும், சோதிடராகவும் சித்த வைத்தியராகவும், நூலாசிரியராகவும் திகழ்ந்து சைவத் தமிழ் உலகிற்கு அரும், பெரும் சேவையை ஆற்றி உள்ளார். வித்தியா குரு எனும் ஆசிரியப் பணியில் இருந்தும் உப அதிபராக இருந்தும் பல்லாயிரக் கணக்கான மாணவர்களை கல்வியில் உயர்ச்சி அடையச் செய்தமை போற்றுதற்குரியதே. கண்ணன் ஐயா அவர்கள் சிறந்த ஒரு நூலகத்தை தனது இல்லத்திலே பராமரித்தமை கல்வியில் தேடல் மிகுந்தவராக விளங்கியதோடு, மாணவர்களது தேடல்களுக்கும் ஆதாரமாக இருந்தும் சேவை ஆற்றியமை குறிப்பிடத்தக்கது.

சமய குரு என்ற வகைஙயயில் வடமராட்சி மண்ணில் கும்பாபிஷேகங்கள், மகோற்சவங்கள், அலங்கார உற்சவங்கள், புதுமனைப் புகுவிழா சாந்திகள் முதலான சமயக் கிரியைகளை தன்னுடைய குரல் வளத்தினாலும், கிரியாபாவனைகளினாலும் தனது பக்தி பரவசத்துடன் கிரியைகளை நன்றாற்றி அடியவர்களை இறைவழிபாட்டில் லயிக்கச் செய்த சிறந்த சமயக் குருவாகவும் பணி ஆற்றி இருந்தார்.

இவ்வாறே சோதிடர் என்ற வகையில் பல ஆலயங்களின் கும்பாபிஷேகம் முதலான பல

முகூர்த்தங்களை கணித்து கொடுத்ததோடு மட்டுமல்லாது ஓம் தொலைக்காட்சியில் சோதிட கருத்துக்களையும், சமய பிரசங்கங்களையும் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு சித்த வைத்தியராகவும் இருந்து தன்னை நாடி வருபவர்களுக்கு சேவை செய்தமை குறிப்பிடத்தக்கது.

நூலாசிரியர் என்ற வகையில் நெல்லண்டையான் வெளியீட்டுக் கழகத்தினூடாக அமிர்த கடீசம், யோக சித்து, சோமாஸ் கந்தராஜ தரிசனம் முதலான பல நூல்களை ஆக்கி சிறந்த நூலாசிரியராக திகழ்ந்துள்ளார். அத்தோடு பல ஆலயங்களின் திருஊஞ்சற் பதிகங்களை இயற்றியமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு வித்யாக குருவாக, சயக்குருவாக என ஒரு குரு கொண்டிருக்க வேண்டிய அனைத்து விதமான கலைகளையும் தன்னகத்தே கொண்டு சைவத் தமிழ் உலகத்திற்கு சேவை ஆற்றியதோடு தான் விட்டுச் சென்ற பணிகளை தொட்டுச் செல்வதற்காக சிவஸ்ரீ தனஞ்சயக் குருக்கள் அவர்களையும் தந்து தனது குல தெய்வமான நெல்லண்டை பத்திரகாளி அம்மானினுடைய திருக்குளிர்த்தி காலத்திலேயே அம்பாளினுடைய பாதக் கமலங்களைப் பற்றிக் கொண்டார்.

"குருவை நினைப்போம்
குருவருள் பெறுவோம்"

குருக்களின் அன்பு மாணவன் ச.யோகசம்பந்தக் குருக்கள்
ஆசிரியர் வெற்றிலைக்கேணி

## நீங்காத நினைவுகளில்...
## சிவஸ்ரீ தியாக.சோமாஸ்கந்த ராஜாக் குருக்கள் (கண்ணன் ஐயா)

அன்றிரவு(14.05.2021) 9.30 மணிக்கு எமது ஆலய மஹோற்சவ காலக் குருக்கள் சிவஸ்ரீ பால மனோகரக் குருக்கள் தொலை பேசியில் அந்தத் துயரச் செய்தியைச் சொன்னார். "உங்களுடைய மாணவன் தியாக.சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் காலமாகி விட்டார், சேர். இப்போது தான் ஆஸ்பத்திரியி லிருந்து செய்தி வந்தது..." நம்ப முடியவில்லை; ஒரு மாதத்திற்கு முன்பு அவருடைய வீட்டில் உரை யாடியிருந்தேன். அதன்பின் அவர் சுகவீனமாக ஆஸ்பத்திரியிலிருந்த தாகவும் அறிந்திருந்தேன். அவருடைய நோய் எனக்குத் தெரிந்ததுதான். நீரிழிவு நோயாளி. இரத்தத்தில் சர்க்கரையின்(Sugar) அளவு அதிகமாகும் போது அவரை வைத்தியசாலையில் வைத்தே வைத்தியம் செய்வார்கள்.

சிவஸ்ரீ சோமாஸ் கந்த ராஜாக் குருக்கள் எமது அல்வாய் சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் கோயிலுடன் இரண்டறக் கலந்தவர். 1996 ஆம் ஆண்டில் எமது ஆலயத் தின் பிரதம குருவாகப் பொறுப் பேற்றுக் கொண்டவர் எமது ஆலயத்தின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டவராக ஆலய பரிபாலன சபையை வழிநடத்திச் சென்றார். எமது ஊர் மக்களின் ஆன்மிக வளர்ச்சிக்காக சிறப்பு விழாக்களின் போதெல்லாம் ஆன் மிக உரையாற்றி, எமது பால கணபதியின் பெருமைகளை எல்லாம் எடுத்துரைத்தார். அது வரை காலமும் எமது ஆலயத்தில் அலங்கார உற்சவமே இடம் பெற்றுக் கொண்டிருந்தது. அதனை மஹோற்சவமாக மாற்றவதற்குரிய கட்டுமானங்களின் அவசியத்தை எடுத்துரைத்து பரிபாலனசபையை வழிப்படுத்தினார்.

சோமாஸ்கந்தராஜாக்குருக்கள் எமது ஆலயப் பிரதம குருவாக வருமுன்னரே எனக்கு அறிமுகமாகியிருந்தார். 1990 ஆம் ஆண்டு ஒருநாள் இரவு தும்பளை சக்திகோயிற் சூழலில் இடம்பெற்ற பட்டிமன்றம் ஒன்றுக்கு நான் தலைமை தாங்கச் சென்றவேளையில் சக்தி கோயிலில் என்னைத் தேடி வந்து தம்மை அறிமுகம் செய்து கொண்டார். தம்மை "கண்ணன் ஐயா" என்றே பலரும் அழைப்பதாகவும் சொல்லி வைத்தார். அன்று முதல் கண்ணன் ஐயா என்றே நானும் அழைத்து வந்தேன். பின்பு எமது ஆலயத்திற்குப் பிரதம குருவாக அவர் வந்தபோது எம்மிடையேயான உறவு வளர்ந்தது. தமது தந்தையாருக்கும் எனது தந்தையாருக்கும் அந்நாளிலேயே நெல்லண்டைப் பத்திரகாளி கோயிலில் ஏற்பட்டிருந்த தொடர்பு பற்றிக் குறிப்பிட்ட அவர், அந்த உறவு இன்று எம்மிடையே வளர்வது குறித்து வியந்தார்.

பேராசிரியர் சண்முகதாஸ் - மனோன்மணி தம்பதிகள் எழுதிய இத்திமரத்தாள் என்ற நூலில் அநுபந்தமாக எனது ஐயா எஸ் தம்பிஐயா அவர்கள் எழுதியிருந்த கட்டுரை பற்றி அவருக்கு நினைவுபடுத்தினேன். நெல்லண்டை பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் அந்நாளில் பல தடவைகள் அண்ணாவியார் எஸ்.தம்பிஐயா குழுவினர் இசைநாடகங்களை மேடை யேற்றியிருப்பதை தாம் ஏற்கெனவே அறிந்திருந்ததாக அவர் சொன்னார்.

சோமாஸ்கந்தராஜாக் குருக்களுக்கு அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் ஆலயத்தின் வளர்ச்சியில் அளவில்லா அக்கறை ஏற்படக் காரணம் மூலவரான பால கணபதி

மூர்த்தமாகும். அருள்மிகு, தவத்திரு சிவயோகர் சுவாமிகள் நிட்டையிலிருந்து பாலகணபதியை தரிசித்தவர் என்ற செய்தியை அறிந்த போது, இச்செய்தியைப் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் அவர் பதிவு செய்து வந்தார். மற்றுமொரு காரணமும் இருந்தது. அதனை எமது ஆலயத்திற்குப் பிரதம குருவாக வந்திருந்த காலத்திலேயே எனக்குச் சொல்லியிருக்கிறார். எமது ஆலயத்திற்கு வருவதற்கு சில வருடங்களின் முன்னர் ஒரு நாள் தாம் ஒரு கனவு கண்டதாகவும். அக்கனவில் இரண்டு மணிக்கோபுரங்கள் அமைந்த ஒரு பிள்ளையார் கோயிலில் தமது மகன் தனஞ்சயன் மணி அடிப்பதாகவும் தாம் பூஜை செய்வதாகவும் காட்சிகள் தெரிந்தன எனவும் அக்கனவின் பிரகாரம் கனவில் தெரிந்த பிள்ளையார் கோயில் அல்வாய் சாமணந்தறைப் பிள்ளையார் கோயிலே என்பது அவரது எண்ண முடிபாகும் எனவும் கூறினார்.

எமது ஆலயத்தில் 1987 ஆம் ஆண்டிலிருந்து கட்டுத்தேர் இழுப்பதே வழக்கமாக இருந்து வந்தது. 2000 ஆம் ஆண்டில் ஒன்பதாம் திருவிழா உபயகாரர் திரு க.கிருஷ்ணபிள்ளை அவர் களினால் பஞ்ச முக கணபதி எழுந்தருளி உபகரிக்கப்பட்ட வேளை பல குருமாரின் எதிர்ப்புகளின் மத்தியிலும் தேர்த்திருவிழாவின் போது பஞ்சமுக கணபதியை கட்டுத்தேரில் எழுந்தருளச் செய்தார். இதே பஞ்சமுக கணபதியை நான் அவுஸ்திரேலியாவில் இருந்த காலத்தில் கனவிற் கண்டதை எனது டயறியில் எழுதி வைத்திருந்ததை அவுஸ்திரேலியாவிலிருந்து திரும்பியபோது கிருஷ்ணபிள்ளை மாமா அவர்களுக்குக் காட்டினேன். எனது கனவும் பஞ்சமுக கணபதி தேரேறி வந்தமையும் ஏக காலத்தில் நிகழ்ந்ததை நினைத்து நாம் இருவரும் வியந்தோம். பஞ்சமுக கணபதியை கனவில் கண்டநாளுக்கு மறுநாள் அந்நினைவாக “சிந்தையெல்லாம் நிறையும் அருட்கடலே” என்ற கீர்த்தனையை நான் எழுதியிருந்தேன். நான் அவுஸ்திரேலியாவால் திரும்பி வந்த போது கும்பாபிஷேகம் இடம்பெற்று மஹோற்சவமாக, சோமாஸ் கந்தராஜாக் குருக்களின் வழிநடத்தலில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. தேர்த்திருவிழாவிலன்று பஞ்சமுக கணபதியை கனவில் கண்டவேளை இயற்றிய பாடலைப் பாடுமாறு கிருஷ்ணபிள்ளை மாமா என்னைக் கேட்டுக் கொண்டார். அன்றிலிருந்து, ஒவ்வொரு வருடமும் திருவிழாக் காலத்தில் ஒருநாளேனும் அப்பாடலை உட்பிரகார வலம் வந்து ஈசான மூலையில் நிற்கும் வேளையில் யாகபூஜை முடிந்தவுடன் ரேவதி ராகத்தில் பாடி வருகிறேன். இப்பாடல் சோமாஸ்கந்தராஜாக் குருக்களுக்கு மிகவும் பிடித்த மான ஒரு பாடல். அதேவேளை, பஞ்சபுராணம் ஓதும் போது, முடிவில் சைவப் புலவர் சி.வல்லிபுரம் அவர்கள் பாடிய “நோக்கமொரு தீக்ஷையென” என்ற வெண்பாவை வாழ்த்தாகப் பாடுவதை வழக்கமாகக் கொண்டி ருந்தமையை அவதானித்த சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் அவர்கள். அந்த வாழ்த்துப் பாவை எப்போதும் பஞ்சபுராண முடிவில் பாடி அதனை ஒரு நியமமாக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இன்று என்னைப்போல பலர் எமது ஆலயத்தில் பஞ்சபுராண முடிவில் அதே வாழ்த்துப் பாவைப் பாடுவதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். ஈசானத்தில் தேவாரமும் புராணமும் ஓதியபின் ரேவதி ராகத்தில் “சிந்தையெல்லாம் நிறையும் அருட்கடலே” என்ற கீர்த்தனத்தை பாடுவதும் பொருத்தமானதும் உசித மானதும் கூட என்று கூறி என்னை ஊக்குவித்தவரும் சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் அவர்களே. திரு தா.வீரசிங்கம் அவர்களின் குடும்பத்தினரால் எமது ஆலயத்தில் “கொடித்தம்பம்” நிறுவப்பட்டபின்னர் அலங்காரத் திருவிழாவை மஹோற்சவமாக மாற்றியவேளை, மஹோற்சவ காலப் பிரதம குருவாகவும் செயற்பட்டு பத்துத் திருவிழாக்களுக்கும் முறையே கொடி யேற்றத்திருவிழா, மாம்பழத்திருவிழா, மதுரத்திருவிழா, பூந்தண்டிகைத் திருவிழா, திருவிளக்குத் திருவிழா, மஞ்சத் திருவிழா, சப்பரத்திருவிழா, வேட்டைத்திருவிழா, தேர்த்திருவிழா, தீர்த்தத்திருவிழா எனவும் பதினோராம் நாளில் பூங்காவனத் திருவிழா எனவும் பெயர்சூட்டி மஹோற் சவ காலத்தை நாம் கோலாகலமாகக் கொண்டாடி மகிழ வைத்தவரும் சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் அவர்களே.

இதனிடையில் சோமாஸ் கந்தராஜாக் குருக்கள் அவர்களின் பரம்பரைக் கோயிலான நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோயிலில் “அக்கோயிலின் பரம்பரைப் பூசகர் சோமாஸ்கந்தராஜாக் குருக்களே என்ற நிலை” தொடர்பாக வழக்கு ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. இந்த வழக்கு 2002 இல் முடிவுக்கு வந்தபோது, சோமாஸ்கந்தராஜாக்

குருக்களுக்குச் சாதகமாக தீர்ப்பு அமைந்தது. இவ்வேளையில் எமது ஆலயமும் பெரும் ஆலயமாக வளர்ச்சி பெற்றிருந்தமையால், இரண்டு ஆலயங்களிலும் ஒரே நேரத்தில் நித்திய பூஜைக் கருமங்களை நிறைவேற்று வதிலுள்ள சிரமங்களை உணர்ந்து எமது ஆலயத்தில் நித்திய பூஜைக்கென தமது சகோதரரான சிவஸ்ரீ தியாக.அமிர்த்தகடீசர் அவர்களை சோமாஸ் கந்தராஜாக் குருக்கள் நியமித்துக் கொண்டார். ஆனாலும், மஹோற்சவத்தின் போதும் வேறு விசேட விழாக்களின் போதும் தாமே பிரதம குருவாகக் கடமையாற்றினார். சில வருடங்களின் பின்னர் அமிர்தகடீசர் குருக்கள் இயற்கை எய்திய போது அமிர்தகடீசர் அவர்களின் மைத்துனரான இரத்தினேஸ்வரக் குருக்கள்(குகன் ஐயா) எமது கோயிலைப் பொறுப் பேற்றுக் கொள்ளவும் வழிசமைத்தார். அதன் பின்பு எமது ஆலயத்தின் மஹோற்சவத்திலும் பிறகருமங்களிலும் பிரதம ஆலோசனை வழங்கும் குருக்களாக செயற்பட்டதோடு அவ்வப்போது எமது ஆலய பூஜை நடைமுறை சார்பாக எழும் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பவராகவும் சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் விளங்கி வந்தார்.

இவ்வாறாக அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயில் வளர்ச்சியில் முழுமையான பங்களிப்புச் செய்திருந்த சோமாஸ் கந்தராஜாக் குருக்கள் அவர்கள் எமது ஊரின் வட பால் எல்லையில் அமைந்திருக்கும், காத்தவராயர் கோயில், "அருள் மிகு வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் தேவஸ்தானமாக" வளர்ச்சி காண்பதற்கும் அங்கு இன்று அலங்கார உற்சவம் இடம் பெறுவ தற்கும் பிரதம ஆலோசகராகவும் பிர திட்டா குருவாகவும் விளங்கினார். ஒரு சிறிய கட்டடத்தில் அமைந் திருந்த எங்கள் குலதெய்வமான காத்தானுக்கு மண்டபம் அமைத்து மூலவிக்கிரகம் ஒன்றைக் கொண்ட ஓர் ஆலயமாக மிளிரச் செய்ய வேண்டும் என்பது எனது மகனின் கனவாக இருந்ததை அறிந்து கொண்ட சோமாஸ்கந்த ராஜாக் குருக்கள் அவர்கள், 2010 இல், மகாபலிபுரத்திலிருந்து தம்மால் கொண்ட வரப்பட்ட ஐந்து கணபதி விக்கிரகங்களுள் ஒன்றை எனது மகன் பரணீதரனிடம் கையளித்தார். 2011 ஆம் ஆண்டு தை மாதத்தில் பொருத்தமான ஒரு நாளில், ஆதிவிநாயகர் தண்டு, காத்தான், பணிக்கர் ஆகியோரின் சூலங்களும் முருகனின் வேல்களும் "பால ஆலயத்திற்குக்" கொண்டு செல்லப் பட்டு, அன்றைய தினமே புதிய கட்டடத்திற்கான நாட்கல்லும் இடப்பட்டது. இக்கிரியைகளை எல்லாம் சோமாஸ்கந்தராஜாக் குருக் களே நிறைவேற்றி வைத்தார். வேதாரணியக் குருக்கள் அவர்களின் ஆலோசனையையும் கலந்து, அவர்கள் இருவரின் ஆசிகளோடும் எம் பெருமான் திருவருளோடும் கட்டட வேலைகள் நான்கு மாதங்களிலேயே பூர்த்தியாகின.

இதேவேளை, மூலஸ்தானத்தில் எத்தெய்வத்தை நிறுவுவது என்று ஐயம் எழுந்தபோது பூக்கட்டிப் பார்த்தவேளை, கணபதியையே எழுந்தருளச் செய்ய வேண்டும் என்பது தெளிவாகியது. 2011 ஆம் ஆண்டு வைகாசிப் பூசத்தினத்தன்று, மகாபலிபுரத்திலிருந்து கொண்டு வரப்பட்ட வரசித்திவிநாயகர் மூலஸ்தானத்தில் பிரதிட்டை செய்யப்பட்டுக் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. பிரதிட்டா குருவாக சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் அவர்களே விளங்கினார். எமது குலதெய்வத்தின் பெயரைச் சிறப்பிக்கும் வகையில் "அருள்மிகு வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் தேவஸ் தானம்" என்ற பெயரையும் அவரே சூட்டினார். மூலஸ் தானத்தில் வரசித்தி விநாயகர் விக்கிரகத்தை நிறுவியதோடு ஆதிவிநாயகர் தண்டையும் நிறுவினார். ஆறு சந்ததிகளாக ஆதிவிநாயகராகப் பேணப்பட்டு வந்த தண்டு மூலஸ்தானத்திலேயே நிறுவப்பட்டமை எம்பெருமான் திருவருளே. அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் ஆலயத்திலும் "அருள்மிகு வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் தேவஸ் தானத்திலும் மூலவர் பிரதிஷ்டை செய்யப்பட்ட தின மாக வைகாசிப் பூசம் அமைந்ததும் இறைவன் திருவருளே.

அருள்மிகு வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் தேவஸ்தானத்தில் அலங்காரத் திரு விழாவையும் நிகழ்த்த வேண்டும் என்ற பரணீதரனின் விருப்பமும் 2019 இல் நிறைவேறியது. வசந்த மண்டபமும். வைரவர் மண்டபமும் அமைக்கப்பட்டு வரசித்தி விநாயகர் எழுந்தருளியும் வைரவர் விக்கிரக மும் உரிய கிரியைகளுடன் சாந்நித்தியம் பெறச் செய்யப் பட்டன. அலங்கார உற்சவகாலம் எமது அயலூர்களில் உள்ள ஆலயங்களின் உற்சவ காலங்களிலோ பிரபல்ய மான

ஆலயங்களின் உற்சவகாலங்களிலோ அமைந்து தடையாக இருக்கக் கூடாது என்ற காரணத்தால், ஆவணிப்பூசத்தை தீர்த்தோற்சவ தினமாகக் கொண்டு உற்சவத்தைச் செய்வோம் என சோமாஸ்கந்தாராஜாக் குருக்கள் தீர்மானம் செய்தார். வேட்டைக்காக அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயிலுக்குச் சென்று வரலாம் என்றும் அவரே ஆலோசனை கூறினார். தீர்த்தோற்சவ தினமான ஆவணிப்பூசத்தை நியமமாக்குவதற்காக ஒவ்வொரு மாதமும் வருகின்ற பூச நட்சத்திரத்தினத்தில் விசேட அபிஷேகம் செய்து திருவுலாவும் வரவேண்டும் எனவும் நியமம் கூறினார். முதலாவது அலங்கார உற்சவத்தின் போது, வரசித்திவிநாயகரின் பிரமாணத்திற்கேற்ப எழுந்தருளியை அமைக்கச் சொல்லி வேதாரணியக் குருக்கள் வகுத்திருந்தார். ஆனால், திருவுலா வருகின்ற போது, சாத்துப்படிக்கு மத்தியிலே எழுந்தருளி மறைந்து போவதைப் பலரும் அவதானித்தனர். இதனை சோமாஸ்கந்தராஜாக் குருக்களுக்கு நான் எடுத்துச் சொன்ன போது, அவர் ஆலயத்திற்கு வருகை தந்து மூலஸ்தானத்தினுள் சென்று ஆதிவிநாயகர் தண்டின் பிரமாணங்களுக்கு அமைய புதிய எழுந்தருளியை அமைக்குமாறு ஆலோசனை சொன்னார் அவரின் ஆலோசனைப்படி இரண்டாவது வருட உற்சவம் புதிய எழுந்தருளியையும் முன்னைய எழுந்தருளியையும் ஒன்றாக வைத்தே மேற்கொள்ளப்பட்டது. மூலஸ் தானத்தில் வரசித்தி விநாயகரோடு ஆதிவிநாயகர் தண்டையும் நிறுவியமை இதனால் தானோ என்று வியந்தோம். உற்சவம் ஆரம்பித்த காலத்திலிருந்து, இரண்டு வருட கால உற்சவத்திலும் முதலாம் நாளில் (கொடியேற்ற நாள்) ஆன்மிக உரையை ஆரம்பித்து, சமய தத்துவங்களை விளக்கியும் வந்தார். இதேவேளை, நெல்லண்டைப் பத்திரகாளி கோயிலில் தமது நேர்த்திக் காக நான்கு தடவைகள் எனது அண்ணாவியத்திலான இசை நாடகங்களை அங்கு மேடையேற்றினார்.

இவ்வாறாக, எமது ஊரின் இரு ஆலயங்களி லும் பிரதம குருவாக விளங்கி, வளர்ச்சிக்கு வித்திட்டு தொடர்ந்து வரும் இயக்கத்திற்கும் வழிசமைத்தவர் சிவஸ்ரீ சோமாஸ்கந்த ராஜாக்குருக்களே என்ற வகையில் அவரின் அமரத்துவம் எமக்கு பேரிழப்பே. சைவசித்தாந்த பண்டிதராக விளங்கிய அவர் சோதிடராகவும் வைத்தியம் தெரிந்தவராகவும் கூட விளங்கினார். ஞானம் அவரிடத்தில் நிறைந்து ததும்பியது. அவரின் உடலின் தேஜஸ் எல்லோரையும் கவரும் தன்மையது. ஆசிரியத் தொழிலையும் அவர் சிறப்பாகவே செய்து வந்தார். கல்வியில் உயர்பட்டங்களைப் பெற்றுக் கொண்டார். தமக்கு கல்வி அளித்த ஆசிரியர்களை அவர் எப்போதும் போற்றி வந்தார். கல்வி டிப்ளோமா கல்வி நெறியில் என்னிடம் பயின்ற காரணத்தினால் தமது வித்யா குருக்களுள் ஒருவராக எனக்கும் மதிப்பளித்து வந்தார். அவரின் பொன்விழாவின்போது என்னையும் கௌரவித் தார். பரணீதரனுக்கு பூஜை முறைகளைச் சொல்லிக் கொடுத்த அவர், பரணீதரனின் மகன் கலாதரன் எட்டு வயதைப் பூர்த்தி செய்யும்போது அவனுக்கு மந்திரங் களைப் போதிப்பேன் என்றும் கூறியிருந்தார். சோமாஸ் கந்தராஜாக் குருக்கள் அவர்களுக்கு புவனேஸ்வரி அம்மா அவர்கள் நல்ல மனைவியாக அமைந்திருந்தார். அவரின் பிள்ளைகளும் சுட என்னை தமது தந்தையின் "வித்யா குரு" என்ற ஸ்தானத்தில் வைத்தே மதிப்பளித்து வந்தனர். அவருடைய குடும்பமும் எனது குடும்பமும் நல்ல உறவையும் பேணி வந்தன. சோமாஸ்கந்தராஜாக் குருக்களும் நானும் அச்சுவினி நட்சத்திரம். இதனால் துன்பங்களும் இருவருக்கும் ஏக காலத்தில் வரும். நாங்கள் இருவரும் எங்கள் பிறந்த தினங்களின்போது வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொள்வோம். கல்வி டிப்ளோமா நெறியில் வழிகாட்டலும் சீர்மியமும் (Guidance and Counselling) என்ற பாடத்தை அவர் என்னிடம் கற்றிருந்தார். அதன் பின்பு அவர் ஒரு சீர்மியராகச் (counsellor) செயற்பட்டு, மாணவர்களுக்கும் சீர்மியம் போதித்து வந்தார்.

எங்கள் ஆலயங்களைப் பொறுத்தவரையிலும் எமது ஊரவரைப்பொறுத்தவரையிலும் எமது குடும்பத்தைப் பொறுத்தவரையிலும் அவரின் நல்லாசி களும் சித்தமும் என்றும் எம்முடன் துணையிருக்கும் அவர் இறைவன் பாதங்களில் அமைதி பெறுவார்.

கலாநிதி த. கலாமணி

# திருமதி. விஜியறாணி உருத்திரேஸ்வரனின் அஞ்சலி

திருமதி. விஜியறாணி உருத்திரேஸ்வரன்
சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்
தொ.இல 021-226 3480

10,அரசடி ஒழுங்கை,
புலோலி கிழக்கு
பருத்தித்துறை

சோமாஸ்கந்தராஜ குருக்கள் என்னும் நாமங் கொண்ட கண்ணன் ஐயா அவருடைய சிறுபராயம் முதல் அனைவராலும் நன்கு அறிப்பட்ட உத்தம மனிதர், தெய்வீக கடாட்சம் மிளிர கம்பீரமாக காட்சி தரும் அவருடைய உருவம் என் நினைவின் நிழலாக என்றும் உள்ளது. வடமராட்சியின் புகழ்பூத்த இயற்கை எழில் கொஞ்சும் தும்பளை நெல்லண்டையில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் பத்திரகாளிக்கு பரம்பரை பரம்பரையாக பூசை தொண்டாற்றும் குடும்பத்தில் தியாகராஜக்குருக்களின் மகனாக அவதரித்து தனது கடமையை செவ்வனே செய்து வந்த பெருமை ஐயா அவர்களுக்கே உண்டு. எனது தாயாரின் சிறுபராய காலத்தில் ஆலயத்தின் சீமெந்து கட்டுமான பணி நடைபெற்ற போது அவரும் அவருடைய சகோதரர்கள் மற்றும் உறவினர்கள் தமது தலையில் மண் சுமத்து கட்டுமாணபணிக்கு உதவியதாக தனது இறுதி மூச்சு வரை கூறிக் கொண்டிருத்தார். எனது பாட்டனார் காலஞ்சென்ற நிலஅளவையாளர் ஐயாத்துரை அவர்களுடைய காலத்திலிருந்து கண்ணன் ஐயாவின் பரம்பரையினர் பத்திரகாளிக்கு பூசையாற்றி வருகின்றார்கள். விடா முயற்சி கடின உழைப்பும் ஐயாவின் இருகண்கள் எத்தனை இடர்களை எதிர் கொண்ட போதும் தனது முயற்சியிலிருந்து சிறிதும் பின் வாங்கியதில்லை. கல்வித்துறையில் கால்பதித்த போது ஐயருக்கு காற்சட்டை எதற்கு என்று போர்க் கொடி உயர்த்திய பிற்போக்குவாதிகளையும் எதிர்த்து நின்று பட்டப்படிப்பினை முதுமாணி வரை முடிந்து பாடசாலை அதிபராக பதவியுயர்ந்து பல மாணவர்களையும் உருவாக்கிய பெருமை கண்ணன் ஐயாவிற்கே உண்டு. ஐயா கடந்து வந்த பாதையில் முற்களும் கற்களும் அதிகம் தனது உரிமையை நிலைநாட்ட உயர் நீதிமன்றம் வரை சென்று போராடிய வரலாறும் உண்டு. தமது பரம்பரை உரிமையை நிலைநாட்ட நிர்வாகத்தினரைம் எதிர் கொண்டு ஐயாவுடன் இணைந்து அம்மாவும் சிறைச்சாலை வரை சென்று வந்த நிகழ்வுகளில் இருவருக்கும் ஆதரவளித்த பெருமை எனது சிறியதந்தை உருத்திரா அவர்களுக்கே உண்டு. ஐயாவின் இழப்பு ஈடு செய்யமுடியாத ஒன்று. துன்பத்தில் துவண்டு பத்திரகாளியின் பாதம் நாடியவர்களுக்கு ஐயரின் வேத பாராயணத்தில் உள்ள சங்கீதம் அதனுடன் இணைந்த பக்தியும் எத்துணை ஆறுதல் என்பதை அனுபவத்தில் கண்டுள்ளேன். எனது குடும்பத்தின் அனைத்து நிகழ்வுகளுக்கும் ஐயாவின் ஆன்மீக பலம் என்றும் வழிகாட்டியாக இருந்துள்ளது. ஐயாவின் வழியில் ஆலய பூசைகளை கொண்டு செல்வதற்கு அவருடைய மகன் மற்றும் மருமகன் சுந்தரலிங்கம் ஐயா உள்ளமை பெரும் ஆறுதலளிக்கும் விடயம். காலச் சக்கர நகர்வில் ஒவ்வொருவராக சென்று கொண்டிருக்கிறார்கள் உள்ளவர்கள் வாழும் காலம் வரை உத்தமராக கண்ணன் ஐயா போன்று தனக்கென்று மட்டும் வாழாது பிறரின் நன்மைகளையும் கருத்திற் கொண்டு வாழ்வதற்கு அவருடைய ஆத்மா என்றும் துணை நிற்கும். எம்மை விட்டுச் சென்ற அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பத்திரகாளியை வேண்டுகின்றேன்.

1. திருமதி விஜியாணி உருத்திரேஸ்வரன்
2. திருமதி தர்சினி கணேசராஜன்

# நந்தா விளக்கனைய அந்தணர் தீபம்
# சைவ சித்தாந்த பண்டிதர்
# சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜாக்குருக்கள்

(B.A, Dip-in Edu, MA பிரதியதிபர் யா/அம்பன் அ.மி.த.க பாடசாலை)

இலட்சுமணந்தோட்டம் வீரமாகாளியம்மன் வடபத்திரகாளி அம்மன் தேவஸ்தானம் நெல்லண்டைப் பத்திரகாளியம்மன் தேவஸ்தான பிரதம குருவும் ஆதீனகர்த்தாவும் ஆகிய சோமையா அவர்களை 80களில் இருந்து அவர் க.பொ.த. உயர்வகுப்பிலிருந்து முதுமாணிப்பட்டப்படிப்பு வரையில் அவர்களது பாடத்திட்டங்களுக்கமைவாக தமிழ் இலக்கிய வரலாறு, தமிழ்மொழி நூல்களையும் தெரிவு செய்யப்பட்ட பாடப்புத்தகங்கள் திறனாய்வு இலக்கியம் சார்ந்த பாடப்பரப்புகளை வரன் முறையாக என்னிடம் கற்றவர் தெளிந்தவர். கற்பிக்கும் கலையை நன்கு அறிந்தவர். அவரது குழந்தை ஜீவிதாவை கலைமாணிப்பட்டப்படிப்புகளை என்னிடம் கற்க நெறிப்படுத்தியவர். இராணுவ நடவடிக்கை காரணமாக போக்குவரத்து தடைப்பட்ட நேரங்களில் தனது குழந்தைகளுடன் எனது இல்லத்தில் தங்கியிருந்த காலம் பசுமையானவையாகும்.

என்மீது கொண்ட அன்பின் அறிகுறியாக தனது வித்தியா குருமார்களுள் என்னையும் ஒருவராக மதித்து விருது வழங்கிக் கௌரவப்படுத்தியவர். எனது மணி விழாக்களில் பணிநயப்பு விழாக்களிலும் பங்கு கொண்டு என்னை கௌரவித்தமை நீங்கா நினைவாக உள்ளது.

90களில் எனது மகனை நான் இழந்து நின்றபோது நெஞ்சங்கலங்காதிருக்க ஆற்றுப்படுத்தி ஆறுதல் தந்து அந்தணர் தம் பெருமை எம்குலத்திற்கு நிறுத்திய காப்பாளராவார்.

ஆசிரியராக அமைந்து ஆற்றிய கல்விப் பணி அதிபராக இருந்து நெறிப்படுத்திய நிர்வாகத்திறன் நூல்கள், கட்டுரையாகியவற்றை வெளியீட்டாளராக, சொற்பொழிவு, செவ்வி, பட்டிமன்றம், தொலைக்காட்சி மூலமாகச் சமய நற்சிந்தனை என அவர் சமயத்திற்கும் கல்விக்கும் தமிழிற்கு ஆற்றிய பணி பன்முகப்பாடானவை பாராட்டத்தக்கது.

அறிவியலையும், ஆன்மீகத்தையும் ஆழமாகக்கற்று புலமை பெற்றதோடு வேதம், ஆகமம், வேதாந்தம், சைவசித்தாந்தம் சைவசமயதத்துவ விடயங்களில் வித்துவம் பெற்றவர். ஆலய நிர்வாகத்திலும் அடியார்களது விருப்பங்களிலும் முன்னின்று செயற்பட்ட செயல்வீர் வைத்தியம், சோதிடம், மந்திரம், மாந்திரீகம், தந்திரம், தவநெறி அறிந்த சுந்தரர். “நந்தா விளக்கனைய நம் அந்தணர் பெருமாள்“ சடுதியாக நம்மை விட்டுப் பிரிந்தமை விதியின் சோதனையா?

“கருங்கல்லில் விடம் தேய்த்த நெஞ்சம் கொண்ட சிலரது உறவும், தொடர்பும் அவரை இந்நிலைக்கு ஆளாக்கியதா” என்ற வினா என் நெஞ்சில் எழுந்த வண்ணமாக உள்ளது. அவரது ஆன்மா சகல போகங்களையும் பெற்று இன்புற்று அமைதியடைய அவரது நெல்லண்டைப் பத்திரகாளியம்மன் அருள் புரிய வேண்டுகின்றேன்

தமிழ் பேராசான்
நா.குழந்தைவேலு

# என் மாணவன் சோமையா பற்றி சில நினைவுத் துளிகள்

(நான் சந்தித்த முதல் நாளிலிருந்து இன்றுவரை) அன்று தனியார் கல்வி நிலையங்கள் மாணவர்க்கு அத்தியாவசியமும் அவசியமுமான காலம் கல்வி நிறுவனத்தவர் யாழ்ப்பாணத்தின் பிரபல ஆசிரியர்களை தம் கல்வி நிலையத்திற்கு அழைத்து தம் கல்வி நிறுவனங்களை உயர்த்திய காலம் ஏறத்தாள 1983 - 84ம் ஆண்டுகளில் நானும் என் நண்பி மீராவும் இந்துநாகரிகம், தமிழ் கற்பிக்க பருத்தித்துறைக்கு சென்றோம். அங்கு A/L வகுப்பில் நான் கற்பிக்க சென்றேன். கடைசி வாங்கில் கண்தூங்கியபடி ஒரு மாணவனை அவதானித்தேன். அவரை எழுப்பினேன் இரவு துங்கவில்லையா என்று கேட்டேன் அவரது கண்ணில் இருந்து பொல பொல என கண்ணீர் வடிந்தது. எனக்கு மிகவும் சங்கடமாகவும் துக்கமாகவும் இருந்தது இருக்கும்படி அவரை கூறிவிட்டு படிப்பிக்க தொடங்கினேன் அவர் நித்திரையாகி வாங்கிலில் படுத்துவிட்டார். அப்போது எண்ணினேன் இவர் மனதில் ஏதோ அழுத்தம் இருக்கின்றது என்று தனியாக வகுப்பு முடிய கூப்பிட்டு கேட்டேன் பயந்த சுபாவத்துடன் கண்கசிய தன் குடும்ப பின்னணியில் உள்ள அனைத்து உண்மைகளையும் ஒரு தாய்க்கு பிள்ளை ஒப்பிவிப்பது போல ஒப்பு வித்தார். இந்த சின்னவயதில் இவ்வளவு வலிகளையும் தாங்கி படிப்பதென்பது முடியாது என எண்ணி அவருக்கு ஆறுதல் கூறினேன். உங்களை படிப்பித்து நல் நிலைப் படுத்துவதை என் கடமையாக கொள்கிறேன். எதற்கும் பயப்பட வேண்டாம் என்று அவர் முதுகை தட்டி திடப்படுத்தினேன்.

“ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது” எனவே படிக்கும் நேரத்திலே அதை எந்த காரணத்திற்காகவும் தவறவிடக்கூடாது என்று அன்றிலிருந்து அவரது கல்வி செயற்பாடுகளை கருத்தில் எடுத்தேன் A/L முடித்து வெளிவாரியாக பட்டப்படிப்பை தொடர்ந்து B.A பட்டத்தை பெற்றுக் கொண்ட அவர் M.A படிப்பதற்கு ஊக்கு வித்தேன் அதனையும் முடித்து அவரது பட்டங்களை செவ்வனே செய்தேன். அவர் ஒரு ஆசிரியர், நல்லதொரு அதிபர் என்பதற்கும் அப்பால் சிறந்த பிரசங்கி ஓதும் பயிற்சி பெற்ற நல்ல ஓதுவார். சிறந்த நூல்களை வெளிப்படுத்திய நல்ல நூலாசிரி யர், அதற்கும் அப்பால் கடவுள் பணியை நன்றாகவே நடாத்தும் சமயக்குரு தன் ஆன்மீகப் பலத்தால் மற்றவர்களை கவர்ந்தவர் பலர்நோயை, துன்பத்தை குணப்படுத்திய மருத்துவர், நல்ல தொரு சோதிடர் என அவரை எத்துறையில் நோக்கினாலும் கூறலாம். ஆசிரியராய், அதிபராய், சமூகசமய பணியாளராய், நூலாசிரியராய், சோதிடராய் ஆன்மீக சக்திவாய்ந்த மருத்துவராய், பண்டிதராய் விளங்கினர். இவ்வளவிற்கும் பின்னால் இவரது இந்த பரிணாம வளர்ச்சிக்குப் பின்னால் இருந்த குரு அருள் இன்றேல் திருவருள் இல்லை என சித்தாந்த தத்துவர் இவரது சிறந்த பண்பு “குரூர்பிரமம்“ என்ற வேதவாக்கை மதித்தார். குருமார்கள் எவரையும் அவர் கடைசிக்காலம் வரை மறக்கவில்லை குருவருளும் திருவருளும் கூடிய ஒரு மகத்தான பிறப்பாக அவர் வர நானும் ஏதோ ஒருவகையில் காரணமாக இருந்திருக்கின்றேன் என்ற உவகை இருந்தாலும் அவர் எம்மை விட்டு இவளவு சீக்கரத்தில் புகழுடம்பு பெறுவார் என்று எண்ணிப் பார்க்கவில்லை. இது அவருடன் நான் கொண்ட குருத்துவ ரீதியான தொடர்பு. ஆனால் அதற்கு அப்பாலும் எங்கள் உறவு நீடித்தது அவரது திருமணம் அவரது குரு ஆச்சாரிய அபிஷேகம் அவரது பிள்ளைகளின் விஷேட வைபவங்கள் அனைத்திலும் என்னை ஒரு குரு என்ற ஸ்தானத்திற்கும் அப்பால் உறவாக எண்ணினார். இன்பத்தில் ஒன்று கூடுவதை விட துன்பத்தில் ஒன்று கூடுதலே சிறந்தது என்பதை

தன் செய்கைகளில் காட்டியவர் இதற்கு ஒரு எடுத்துக்காட்டான சம்பவம் இடம் பெயர்வின் பொழுது நாம் உடமைகளை இழந்து அநாதரவாக தென்மராட்சியில் தங்கியிருந்தோம் ஆமியின் கெடுபிடிக்குள் எம்மை வந்து பார்த்து எங்கள் கஷ்டமான வாழ்க்கையை பார்த்து கண்ணீர் வடித்தார். அந்த கஷ்டமான சூழலிலே வண்டிலில் ஏற்றி ஒரு கட்டில், ஒரு மேசை ஒரு கதிரை எங்கள் உணவுக்கு தேவையானவை சமையல் உபகாரங்கள் எல்லாவற்றையும் கொண்டு வந்து ஒப்படைத்தார். காலத்தால் செய்த உதவி ஞாலத்திலும் மாணப் பெரிது என்று கற்றதை கற்றலாக மட்டும் கொள்ளாமல் வாழ்க்கையில் கடைப்பிடித்தவர். என் கஷ்டத்தை தன் கஷ்டமாகவும் என் குடும்பத்தை தன் குடும்பமாகவும் வைத்து வாழ்ந்த பண்பான அவரை எதை சொல்லி மறக்கமுடியும் வருடம், ஆசிரியதினம் தன் பிறந்தநாள் என் பிறந்தநாள் இவற்றிற்கு என்னை அவர் சந்திக்காமல் இருந்ததில்லை குடும்பத்தோடு எவ்வளவு நேரம் சென்றாலும் வீட்டிற்கு வந்து ஆசி கூறி ஆசி வேண்டிச் செல்வார். இப்போது அப்படியான மாணவ சமூகத்தை பார்க்க முடியுமா? மாணவ சமூகத்திற்கே எடுத்துக் காட்டாக வாழந்தவர்.

தனக்கு வருத்தம் என்றாலும் ரீச்சருக்கு சொல்லாதேங்கோ அவர் வேதனைபடுவா என்று தன்னை சிந்திக்காமல் என்னை சிந்தித்தவர் என் பிள்ளையின் இழப்பை தன் பிள்ளையின் இழப்பாக எண்ணியவர். பத்திரிகையில் என் பிள்ளைக்கு ஒவ்வொரு வருடமும் தன் இரங்கலை தெரிவிப்பவர். பரமானந்தா ஆச்சிரமத்திற்கு நான் அனுப்ப முதலே பிள்ளையின் நாளை குறித்து காசுகட்டிவிடுவார். சாப்பாட்டிற்கு நான் அவர்களை T.P தொடர்பு கொண்டால் ஐயா பணம் கட்டி விட்டார் என்ற பதில் வரும். எங்களை ஆச்சிரமத்தில் வந்து பார்த்து என்னை ஆற்றுப்படுத்தி செல்வது என் பிள்ளையை இழந்த நாளிலிருந்து அவர் தன்னை இழந்த நாள்வரை தொடர்ச்சியாக நடை பெறுகின்றது. அவரை பற்றி நான் எழுத முடியாத அளவிற்கு என்னை நேசித்த ஒரு ஆத்மா என் சோமையா. சென்ற வருடம் என் இல்லத்தரசனை திடீரென இழக்க நேரிட்ட துயரமான சம்பவம் என்னைச் செயலிழக்க வைத்தது அன்றிலிருந்து அவருடன் நான் கதைக்கவில்லை. ஆனால் இறுதியாக எங்களுக்கு உணவு கொண்டு வந்து தரும்போது வந்தார். வந்து வீட்டை போய் தன் மனைவி பிள்ளைகளுக்கு கூறியதாக அவர்கள் கூற கேட்டேன் ரீச்சரிடம் இனி நான் போக மாட்டேன் அவரின் வேதனையை என்னால் பார்க்க முடியாது பூவோடும் பொட்டோடும் குதூகலமான சிரிப்போடும் கண்ட அந்த முகம் இப்போ இல்லை இனி ஒருதடவை அவரை இந்த கோலத்தில் பாரக்க போகவில்லை என்று கூறினர் அதற்கு பிறகு என்னோடு கதைப்பதுமில்லை பார்க்க வருவதுமில்லை. அவர் சொன்னதை நிறைவேற்றிவிட்டார்.

அவரது பிரிவு அவர் குடும்பத்தினருக்கு மட்டுமல்ல எனக்கும் அதே போன்ற வேதனையை தருகின்றது. அவர் மீள வரமாட்டார் என்பது உண்மை. அவர் என்னோடு இறுதிவரை வைத்திருந்த அன்பும் ஆதரவும், பணிவும் நேசமும் மறக்க கூடிய தல்ல. இதை எழுதும் பொழுது மனது கனக்கின்றது. அவரது பிள்ளைகளையும் ரீச்சரால் தான் நான் இப்படி இருக்கின்றேன் என்று சொல்லி சொல்லி வளர்த்து அவர்களும் என்னுடன் தாய்மை உணர்வோடு என்னை நோக்குமளவிற்கு இப்பவும் பழகுகின்றார்கள். அம்மா இப்போ என்னுடன் ஆறுதலுக்காக கதைப்பார். அவர்களை நான் எப்படி தேற்றுவது. அவர்கள் இழப்புகளை சந்தித்த எனக்கு இப்பவும் தேறுதலாக இருக்கின்றார்கள். அவர் எனக்கு நன்றி கடன் என்ற பெயரில் எவ்வளவோ செய்துள்ளார். நான் எதையும் செய்யவில்லை ஆனால் அவர் விரும்புவது புத்தகம். இதனால் அவரது 60வது வயதில் மணிவிழாவிற்கு நூலும் வெளியிடுவது என்னுடைய பொறுப்பு என்று கூறினேன். அதைச் செய்ய முடியவில்லை. அவர் ஞாபகார்த்தமாக மனநிலை சரியில்லாவிட்டாலும் சிறிய ஒரு நூலை வெளியிட்டு என் நன்றி கடனை தீர்கலாம். என்றாலும் அது போதாது

இறுதி காலத்தில் ரீச்சர் நான் அநாதரவற்ற சிறுவர்காப்பகம் ஒன்றை நடாத்தினால் என்ன? என்று ஆலோசனை கேட்டார். அத்தகைய சிந்தனையாளரை இந்த குடும்பம், குருமார் சமூகம் இவ்வளவு கெதியில் இழந்தது பேரிழப்பாகும். இது ஈடுசெய்ய முடியாதது. உங்கள் ஆத்மா சாந்தி பெறட்டும்.

அன்புடன் உங்கள் குருமார்களில் ஒருவர்
ச.அருள்நங்கை
புதிய உயர்கல்லூரி (விரிவுரையாளர்) யாழ்ப்பாணம்

# அன்பின் இலக்கணம்

எங்கள் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய உயர்திரு சோமஸ்கந்தராஜ குருக்கள் ஐயா அவர்களை நன்றியுடன் நினைவுகூருகின்றேன். ஆன்மீகப் பணியிலும், கல்விப் பணியிலும் ஈடுபாட்டுடன் செயற்பட்ட அவரது திடீர் மறைவு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஹாட்லிக் கல்லூரியில் நீண்டகாலம் ஆசிரியராக பணியாற்றி மாணவர்களின் மதிப்பிற் குரிய ஆசானாக விளங்கினார். கல்லூரியில் இடம்பெறும் நவராத்திரிவிழா உட்பட ஆன்மீக நிகழ்வுட்கு கால நேரம் பாராது தனது பங்களிப்பை நல்கியவர். பாடசாலைச் சமூகம் என்றும் அவரது பணியை நன்றியுடன் நினைவு கூறுகிறது. மாணவர்களை சமயப் பணிகளில் ஈடுபுடுத்தியதுடன் அவர்கட்கு சிறந்த வழிகாட்டியாகவும், நல் ஆசானாகவும் திகழ்ந்தார். பாடசாலைச் சமூகத்துடனுமன் நிர்வாகத்துடனும் நெருக்கமாக இணைந்து செயற்பட்டவர். கல்விப்பணி ஆன்மீகப் பணி அப்பால் சமூகப்பணியிலும் ஆர்வத்துடன் செயற்பட்டவர். ஆசிரியப் பணியில் பெற்ற அனுபவம் அவரை குடத்தனை அ.மி.த.க பாடசாலையின் அதிபர் பதவிக்கு உயர்த்தியது. அவர் ஓர் சிறந்த அதிபராக தனது பணியைத் தொடர்ந்தார். அவரது பிரசன்னம் அவரது சகாக்களுக்கு மகிழ்ச்சியான சூழலைத் தந்தது. அவர் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருப்பதற்கு அவரது துணைவியாரும் பிள்ளைகளுமே காரணமாய் இருந்திருப்பர் என்பது உனது ஊகம். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைப்பட்டதாரியான அவர் யாழ் பல்கலைக் கழகதக்தில் தனது பட்டப்பின் கல்வி டிப்ளோாவை பூர்த்தி செய்தார். தமிழ் மொழியில் முதுகலை மாணிப் பட்டத்தை மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் நிறைவு செய்த அவரது கல்வியியல் தகமைகள் ஆன்மீகப் பணிக்கும் உறுதுணையாக இருந்தன. அத்துடன் சைவசித்தாந்த பண்டிதர் பட்டத்தையும் பெற்றிருந் தார். தனது பணிகளுக்கு மத்தியில் கல்வித்தகைமையும் உயர்த்துவதில் ஆர்வம் கொண்டிருந்தார். கிடைத்தற்கரிய பல நூல்கள் அவர் கைவசம் இருந்தன. அவற்றை நன்கு கற்றுத்தேர்ந்து பயன் படுத்தியவர். தனது இல்லற வாழ்வில் சிறந்த துணையைப் பெற்றிருந்தார். அவரது துணைவியார் அவரையே உலகம் என்றிருந்தவர். தனது துணைவியாரை மிகுந்த அன்புடன் கண்ணும் கருத்துமாக பாதுகாத்தவர். அவரது இழப்பு நிச்சயமாக துணைவியாருக்கே அதிகளவான பாதிப்பை ஏற்படுத்தி யுள்ளது. தனது ஒவ்வொரு பிள்ளைகள் மீதும் அளவு கடந்த அன்பு கொண்டவர். அவர்களது தேவையை குறிப்பறிந்து நிறைவு செய்தவர். எனது குடும்பத்துடன் நெருங்கிய உறவும் வாஞ்சையும் கொண்டவர். எங்கள் தொடர்பு உத்தியோகத்தை கடந்து அன்பிற்கு இலக்கணாயிருந்தது. அவரது பிரிவு தனிப்பட்ட ரீதியில் எமது குடும்பத்துக்கும் பெரிய இழப்பாக வேதனைப்படுத்துகிறது. இப்பொழுதும் அவரது புன்முறவல் பூத்த முகம் கண்முன் நிழலாடுகிறது. எம்மீது உண்மையான அக்கறையும் விசுவாசமும் கொண்ட ஐயா எம்மைவிட்டு நிரந்தரமாக நீங்கிவிட்டார் என்பதை உள்ளம் ஏற்க மறுக்கிறது. அவருக்கு மணிவிழா எடுத்து கொண்டாட வேண்டிய நாம் இரங்கல் தெரிவிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். அவரது விருந்தோம்பும் பண்பு அவரது துனைவி பிள்ளைகளிடையே அப்படியே செல்வாக்கு செலுத்துகிறது. அவரை பல்வேறு நோய்கள் வாட்டிய போதும் தனக்குரிய கடமைகளை உரிய நேரத்தில் நிறைவேற்றி நேரகாலத்துடனேயே இறைவனடி சேர்ந்துவிட்டார்.

நடராசா தெய்வேந்திரராஜா
முன்னாள் அதிபர் ஹாட்லிக் கல்லூரி

# அமரர் சிவஸ்ரீ. தியாக சோமாஸ்கந்தராஜா குருக்கள்
# (முன்னாள் ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர்)
# "கண்ணன் ஐயர்"

2006ம் ஆண்டு குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு யாழ்ப்பாணம் பருத்தித்துறையில் அமைந்திருந்த எனது முதலாவது பணித்தளமாகிய "அஞ்சலி அகம்" உள சமூக மேம்பாட்டு மையத்திற்கு அனுப்பப்படுகின்றேன். அங்கிருந்து போரினால் பாதிக்கப்பட்டோர், சுனாமியால் பாதிக்கப்பட்டோர், வாழ்வாதார உதவியில் உள்ளோர், கல்விப்பணி, சிறுவர் பணி, இளையோர்பணி என பன்முகப்பணிகளை அருட்பணி. டேமியன் அமதி அடிகளும் நானுமாக செய்துகொண்டிருந்தோம்.

எங்கள் பணித்தளம் இந்துமக்கள் செறிவாக வாழும் தும்பளை நெல்லண்டை என்னுமிடத்திலே அமைந்திருந்தது. எம்மை சூழவிருந்த இந்துமக்கள் எங்களோடு மிகுந்த அன்பாகவும் பண்பாகவும் பழகிக்கொண்டார்கள். எங்கள் பணிகளை பாராட்டி ஊக்கமூட்டினார்கள். அக்காலகட்டத்தில் பல இந்து சமய நண்பர்கள் எனக்கு பழக்கமானார்கள். அவர்களில் மிகுந்த மரியாதைக்குரியவர்தான் அமரர் கண்ணன் ஐயர்.

1. மிகுந்த அடக்கமானவர்
2.அமைதியான புன்னகை
3.ஏனைய மதத்தவரை மதிக்கும் பண்பு
4. அருமையான தமிழ் ஆசான்
5. தன் பணியில் மிகுந்த கவனமுள்ளவர்
6. பொறுப்பான ஓர் தந்தை
7.பாராட்டும் இனிய சுபாவம்
8. எளிமையான வாழ்வு
9.வன்முறையற்ற சினேகபூர்வ தொடர்பாளன்
10. தனது சமயத்தை நன்கு நேசித்த ஓர் ஆன்மீகவாதி

இப்படி பல பெறுமதியான பண்புகளை தன்னகத்தே கொண்டவர். எங்கள் "அஞ்சலி அகம்" முன்னெடுத்த பல விழாக்களுக்கு வருகை தந்திருந்தார். நான் இதுவரை நான்கு சஞ்சிகைகளை தொடக்கியிருக்கிறேன். ("அஞ்சலி தமிழில், 'Prophet'-(இறைவாக்கினன் ஆங்கிலத்தில்), 'Isola' (தீவு, இத்தாலிய மொழியில்), "பாறை (தமிழில்). இதில் பருத்தித்துறை இளையோர் குழுவின் ஆதரவில் முதன்முறையாக "அஞ்சலி" என்ற மாதாந்த சஞ்சிகையை தொடங்கிய போது அவரே அணிந்துரை வழங்கி வெளியீட்டு விழாவிற்கும் வந்து வாழ்த்தி ஊக்குவித்தார். அதனை மறக்கமுடியாது. அடிக்கடி இவரை நெல்லண்டை அம்மன் கோயிலில் கண்டு பேசியிருக்கின்றேன். இவரது வீட்டுக்கு பல தடவைகள் போயிருக்கிறேன். இவர் மாத்திர மில்லாது தும்பளை நெல்லண்டை ஊரைச்சேர்ந்த மக்கள் ஒவ்வொருவரும் மிகுந்த அன்போடும் மரியாதையோடும் பழகிக்கொண்டதை இன்றும் நினைவூட்டிப்பார்க்கின்றேன். கண்ணன் ஐயர் அவர்களுடைய மனைவி பிள்ளைகள் அனைவருக்கும் என் ஆழ்ந்த அனுதாபங்கள்.

சினேகமுடன் விமல்

# அஞ்சலி அகத்தில்...
# அமரர் சிவஸ்ரீ சோமாஸ்கந்தராஜா குருக்கள்
# (கண்ணன் ஐயர்)

கண்ணன் ஐயரின் மறைவுச்செய்திக்குப்பிறகு அவர் பற்றிய போட்டோக்கள் ஏதாவது இருக்கிறா என்று போட்டோ வைப்பகத்துள் Hard Disk தேடுகிறேன். ஏனென்றால் 2006ம் ஆண்டேலேயே ஓர் டிஜிற்றல் Digital Camera கமராவுடனும், தரமான வீடியோ கமராவுடனும் Semi Professional Video Camera சுத்தத்தொடங்கியிருந்தேன்.

2007ம் ஆண்டு சிறுவர் தினத்தை முன்னிட்டு நாம் தொடங்கியிருந்த அஞ்சலிப்பூக்கள்; என்ற சிறுவர் அமைப்பினூடாக முதன் முறையாக சிறுவர் கலைவிழாவை நடாத்தியிருந்தோம். அதில் அவர் உட்பட பலர் கலந்துகொண்டிருந்தனர். சிறுவர்களுக்கு நாடகம் உட்பட பல நிகழ்வுகளை பழக்கியிருந்தேன்.

இந்த போட்டோகளில் பதிவானவர்களில் சிலர் ஏற்கனவே இறந்து விட்டார்கள், சிலர் வெளிநாடுகளில் வாழுகிறார்கள், எங்களிடம் படித்த சில பிள்ளைகள் படித்துபல்கலைக் கழங்களிலும் சிலர் நல் நிலைகளிலும் உள்ளார்கள். சிலர் இன்னும் படித்துக்கொண்டி ருக்கிறார்கள்.

இப்பணிகளில் அஞ்சலி அகத்தின் ஆரம்ப நிறுவனராகிய அருட்பணி. டேமியன் அமதி அடிகளின் தூரநோக்கு பார்வையுடைய வகிபாகம் மிகவும் பாராட்டப்படவேண்டியது.

(சினேகமுடன் விமல்)

(இடம் - அஞ்சலி அகம், நெல்லண்டை, தும்பளை, பருத்தித்துறை)





# கண்ணன் என்னும் சோமாஸ்கந்தராஜா குருக்கள்

எத்தனை பேருக்குத் தெரியும் கண்ணன் என்னும் சோமாஸ்கந்தராஜனை சிறுபராயத்து வாழ்க்கை பற்றி என்னுடைய ஞாபகத்திற்கு ஏற்றவாறு அவருடன் பழகிய, வாழ்ந்த, பல்வேறு நிகழ்ச்சிகள் மீள வரவழைத்துக் கொள்ள முயற்சிக்கிறேன்.

எனக்கு மிகவும் பரீச்சயமான பெயர் கண்ணன் தான். இப்போது அவரை கண்ணன் ஐயா அல்லது கண்ணன் குருக்கள் என்று பல்வேறு பெயர்களால் குறிப்பிடப்பட்டாலும் எனக்கு "கண்ணன்" என்பதே பரீச்சியமாகும்.

எனது குழந்தைப் பராய காலத்தில் தினமும் அம்மன் கோவிலுக்கு போவது வழமை என்றாலும் அது எமது குடும்பாத்தினராலும் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட வழக்கமாகும் தினமும் காலை, மாலை பூசைகளில் அதிகமாக பிரசன்னமாக இருப்பேன் அக்காலத்தில் கண்ணனுக்கு 3-4 வயது தான் இருக்கும். அவர் அவருடைய அம்மாவுடன் (ஆச்சி என்று தான் நாங்கள் அழைப்போம்) கோவிலுக்கு வருவார்ர். அவர்கள் அக்காலத்தில் மடைப்பள்ளியில் தான் அம்மாளுக்கு தேவையான அமுது சமைப்பார்கள். வெளியிலிருந்து ஒருக்காலும் கொண்டுவர மாட்டார்கள். அதுவே மடைப்பள்ளியாகவும் படையல் செய்யும் போது ஆவிபறக்கப் பறக்கத்தான் பூசை நேரத்தில் படைக்கப்படும்.

அப்போது அண்ணன் சிறுவனுக்காக அவருடைய அப்பா தியாாகராசாக்குருக்களுடன் அவருக்கு ஒத்தாசையாக கோவில் மூலஸ்தானத்திலிருந்து முன் மண்டபம் வரையிலான பகுதிகளை சுத்தம் செய்து விளக்குகளை எண்ணெய் ஊற்றி ஆயத்தம் செது கொண்டிருப்பார்கள். நாங்களோ கோவில் பூசையில் சிறிது நேரம் கலந்தாலும் மற்றப்படி விளையாட்டுத்தான் அது பெரிய கதை.

கண்ணனுக்கு அம்மாள் சந்நிதியில் தான் அவருடைய தகப்பன் தியாகராஜா குருக்கள் மூலமான குருகுல வாழ்க்கை தான்.

பிற்காலத்தில் அவரே அதை எனக்கு சொல்லியிருக்கிறார். அதாவது தனக்கு தேவை யான பூஜை அனுட்டானங்களை மந்ததிரங்களை வாழ்மொழி மூலமாகவும் தனது சொந்த முயற்சியாலும் தான் கற்று கொண்டதாக

அவருடைய தகப்பன் கோவிலுக்குள் இருந்து முறைப்படி தியானத்தில் இருந்து வீபூதி அணிகின்ற முறைகளையும் நெற்றியில் சந்தனம் அணிகின்ற முறையும் ஒரு சைவ ஆக முறையில் தான் நடைபெற்றது. அதைப் பிற்காலத்தில் உணர்ந்து கொண்டேன்.

கோவில் மூலஸ்தானத்தில் இருந்து தீபம் காட்டும் மண்டபம் வரை உள்ள அகல்விளக்குளை பூசை நேரத்தில் அணையாமல் பார்த்து கொள்வது கண்ணனின் மிகபெரரிய அஅவதானமாக இருக்கும். நாங்களோ வெளியில் உள்ள சட்ட பெரிய விளக்குகளில் எண்ணெய் சூடாக உள்ள போது அதில் நீர் ஊற்றுவதும் பூக்களை வைப்பதுமாக இருக்கும் போது மணியகாரனால் (முகாமையாளர்கள்) பலமுறை தண்டிக்கப்பட்டதுண்டு.

பாடசாலை செல்லும் காலங்களில் கூட காலைப் பூசைக்கு வந்த பின்னர் தான் கண்ணன்

போவதுண்டு.

அக்காலத்தில் மின்சாரம் கிடையாது எல்லாம் அகல்விளக்குதான்.

மூலஸ்தானத்தில் உள்ள தூண்டாமணி விளக்கிற்கு எண்ணை வழங்கப்படும் போது அதை மிகவும் பவ்வியமாக அந்த சிறுவன் வெளியில் கொண்டுவரும் அழகு ஒரு தனி அழகே.

இன்னும் ஞாபகம் இருக்கிறது. அக்காலத்ததில் கோயில் பூசைகளில் தவறாது சமூகமளிப்பவர்களில் என் தகப்பன் கதிரவேலுப்பிள்ளை ஒருவர் ஆக சிவக்கொழுந்து மற்றும் Cuard இராமலிங்கம் மிகவும் முக்கியமானவர்கள்.

அவர்கள் எப்போதும் வெளியிலில் உள்ள நிருத்த மண்டபத்தில் விளக்கு அருகில் தான் நிற்பார்கள்.

அதனால் கண்ணனை அவருடைய தகப்பன் கடிந்து கொள்வது மிகவும் குறைவு. அவரின் அப்பாவினால் கடிந்து கொள்வது என்பது இராணுவ முறையான தண்டனைதான். ஆனால் கண்ணனின் வாயிலிருந்து ஒரு சத்தம் வெளியில் வராது. தண்டிக்கும் ஓசை மட்டும் தான் கேட்கும்.

அப்படியாக வளர்க்கப்பட்ட கண்ணனின் பூசை அலங்காரங்களை பார்க்க கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

நான் அவருடைய பூசையை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் தான் பார்த்து வியந்திருக்கின்றேன். இதற்காக அம்மாள் கோவில் காலைப்பூசைக்கு பின்னர் கண்ணனுடன் நாங்களும் சேர்ந்து போவதுண்டு. அவருடைய கணீர் என்ற பாலகனின் குரலோசை அம்மாள், முத்துமாரிக்கு மிகவும் பிடிக்கும் ஏன் எங்களுக்கும் தான்.

இவையெல்லாம் என்னுடைய பாலகன் பருவத்தில் பின்னர் நான் பல்கலைக்கழக படிப்புக்கு சென்றதால் முன்போல் அடிக்கடி சந்திக்க முடிவதில்லை. அப்படி சந்திக்கும் காலங்களில் அவருடைய அப்பா இவ்வுலகத்தில் இல்லை. அப்படியொரு குறையும் கண்ணன் ஐயாவுக்கு இல்லாமல் எமது நெல்லண்டை பத்திரகாளி அம்மன் தரும பரிபாலனசபையின் மூத்த உறுப்பினர்கள் அவருடை சமய முன்னேற்றங்களுக்கு மிகவும் ஒத்தாசையாக இருந்திருக் கிறார்கள். அந்த நன்றிக் கடனை கண்ணன் எக்காலத்திலும் மறந்தது இல்லை. வாழ்க்கைத் துணை அமைந்ததிலிருந்து மற்றவை தான் யாவரும் அறிந்ததே.

கண்ணனின் கடைசிக்கால வெளிமடை விளக்கு வைப்பின் போது மிகவும் குறகிய நேர அட்டவணையில் மிகவும் குறைந்த அடியார்களுடன் நடைபெற்ற நிகழ்வின் போது எனக்கும் அம்மாள் அழைப்பு விடுத்திருந்தார்கள்.

விளக்கு வைப்பு பூசையின் பின்னர் கண்ணன் என்னைத் தனியாக அழைத்து இத்தி இலைக்கொப்பு கொடுத்து ஆசீர்வாதம் செய்ததை இன்னும் என்னால் மறக்க முடியவில்லை.

நிச்சயமாக கண்ணனின் ஆன்மா என்னறென்றும் அம்மாளின் பாதத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கும் என்பது எது ஊர் மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கை.

என்றென்றும் கண்ணன் நெல்லண்டை பத்திரகாளி அம்பாளின் அனுக்கிரகம் பெற்ற தெய்வ மகன் அவர் எப்போதும் கோவிலில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார். நான் அதை உணர்வுபூர்வமாக அறிந்து கொண்டிருக்கிறேன்.

அதேபோல் நெல்லண்டை பதியில் அம்மாளும் இருக்கிறார் என்பதை காட்டிக் கொண்டு தான் இருக்கிறார்.

அடித்தாலும் தடக்கி வீழ்ந்தாலும் அம்மாளே என்றுதான் என் நா உச்சரிக்கிறது.

என்னை இந்த நிலைக்கு கொண்டு வந்த அம்மாளை என்றும் நன்றி மறவா நிலைக்கு தந்தருளிய கண்ணன் குருக்களுக்கும் என் வாழ்க்கைப் பயணத்திற்கும் மீண்டும் நன்றிகள்

Dr.க.ஸ்ரீபத்மநாதன்
பல்அறுவை மருத்துவர்
தும்பளை

# கண்ணன் ஐயா: ஒரு நினைவுக் கோலம்

சிவஸ்ரீ தியாக. சோமாஸ்கந்தராஜா குருக்கள் "கண்ணன் ஐயா" என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பெற்றவர். அவர் அமரத்துவம் பெற்று ஓராண்டு கழிந்துவிட்டது. அவர் காலமாகி விட்டதை அடிக்கடி மனம் மறந்து உடன் இருக்கிறார் என்ற எண்ணமே மேலோங்கியுள்ளது. எனினும் அவருக்கு ஒரு நினைவு மலர் அமைக்கும் முயற்சி மேற்கொள்ளும்போது உலக நிலைமை உணர்த்தப்பட்டது. சிவஸ்ரீதியாக. சோமாஸ்கந்தராஜா குருக்கள் குருப்பட்டம் பெற்று பருத்தித் துறை, தும்பளை நெல்லண்டை அருள்மிகு வீரபத்திர சுவாமி உடனுறை பத்திரகாளியம்பாள் திருக்கோயிலின் முதன்மைக் குருக்களாக இருந்தவர். இத்தகைய சிறப்பான நிலையை அவர் வம்சாவழியாகப் பெற்றவர். இவருடைய தந்தையார் இந்தத் திருக்கோயிலின் முதன்மைக் குருக் களாக இருந்தவர். அவருடைய தந்தையாரும் இத் திருக்கோயிலின் முதன்மைக் குருக்களாக இருந்தவர். இவ்வாறு வழிவழியாக அம்பாளுடைய திருக்கோயில் முதன்மைக் குருக்களாகி சிறந்த முறையிலே, பல இன்னல்கள் ஏற்பட்டபோதிலும், முப்போதும் அம்பாளின் திருமேனி தீண்டும் அருட்பணியினை செவ்வனே ஆற்றி அவள் திருவடிகளிலே தற்போது அமைதிபெற்றுள்ளார். இந்த வேளையில் அன்னாருடைய சிறப்பான பண்புகளை எண்ணிப்பார்ப்பது நலம்.

**குருவடிவு**

ஒரு திருக்கோயிலின் குரு எத்தகைய பண்புகளைக் கொண்டவராக இருக்கவேண்டும் என்பதை சிவஸ்ரீ தியாக. சோமாஸ்கந்தராஜா குருக்கள் அவர்களிடம் நாம் கண்டுள்ளோம். முப்போதும் அம்பாளின் திருமேனி தீண்டிப் பூசனை செய்து அப் பெருந்தேவியின் பேரருளை அடியார்களுக்கு வழங்கும் குருக்கள் சிவத்தோற்றப் பொலிவினைக் கொண்டவராக இருக்கவேண்டும். சிவஸ்ரீ தியாக. சோமாஸ்கந்தராஜா குருக்கள் இத்தகைய தோற்றப் பொலிவுடையராகவே இருந்தார். அவர் திருக்கோயிற் பூசைக்காக ஆலயத்தினுள் நுழையும்போது அவருடைய சிவத் தோற்றப் பொலிவு கண்டாரைக் கைகூப்பித் தொழவைக்கும். அருள்கொழுந்தோடிய அவர் முகமும் மென்மையான புன்னகையும் அடியார்களுக்கு நம்பிக்கையூட்டும் குருவாகக் காட்டின. குருவடிவு பற்றி அவரே பின்வருமாறு கூறுவதைக் காணலாம்:

> "இறைவன் குருவடிவாகவே என்றும் வந்து அருள் தருவான்
> என்கிறது எமது இந்துமதம். கருணையே வடிவான கடவுளின்
> கணக்கற்ற கருணைகள் யாவினும் முதற்றரமான கருணை
> ஒன்றுள்ளது. அது குருவருள் என்பதே எனது முழுமையான ஆழ்ந்த
> நம்பிக்கை. இதனை எனது கல்வியியல் வாழ்வின் மூலம் அறிந்து
> உணர்ந்துள்ளேன். உணர்ந்த வகையில் அதனை செயல் வடிவிலும்
> கண்டு செயல் ஆற்றுபவன் யான். இதற்கு எனது உணர்வின் உயிராக

விளங்கும் எமது குலதெய்வம் இலட்சுமணன் தோட்டம் பிள்ளையாரும்,
வீரமாகாளியம்மனும் தான். பின்னும் அறிவு திறந்து அருள் தந்த
இக்ஷ்ட தெய்வம் நெல்லண்டைப் பத்திரகாளியம்மன் தான்"

(பவளமணி- கட்டுரைத் தொகுப்பு, சிவஸ்ரீ தியாக. சோமாஸ்கந்தராராஜாக் குருக்கள், 2015)

இத்தகைய கருத்தினை அவர் நன்றாகவே அறிந்து செயற்பட்டதை நாம் அறிவோம். அம்பாளை வழிபடும் அடியார்களுக்கு நம்பிக்கையையும் அருட்பலத் தையும் நல்கும் அவர் திருக்கோலம் காணும் அடியார்களின் கரங்கள் தாமாகவே கூப்புவதையும் கண்டுள்ளோம். இத்தகைய குருவடிவுடைய சிவஸ்ரீ தியாக. சோமாஸ்கந்தராஜா குருக்கள் அவர்களுடைய குருபக்தி இன்னும் மேலான சிறந்த பண்பாக அமைகிறது.

## குருபக்தி

அவரை தொடக்கத்திலே கல்வி வழிக்கு மிகச் சிறந்த வழிகாட்டியவர் யாழ்ப்பாணம் ஆரியகுளம் உயர்கல்வி நிறுவனத்தின் பணிப்பாளராகவும் இந்து நாகரிகத்துறை விரிவுரை யாளராகவும் விளங்கிய திருமதி அருள்நங்கை சண்முகநாதன் ஆவர். அவரை கண்ணன் ஐயா எந்தக் கூட்டத்திலே பங்குபற்றினாலும் தன்னுடைய வித்யாகுரு எனக் குறிப்பிட்டு தன் வாழ்நாள் முழுவதிலும் தன் குருபக்தியை வெளிப்படுத்தியதை நாம் கண்டு கேட்டுள்ளோம். குருக்கள் ஐயா வெளியிட்ட அது அருள்நங்கை என்ற நூல் அவர் குருபக்தியின் பதிவ் அது காலங்கடந்து நிற்கவுள்ளது. எங்களிடம் அவர் கற்றது பற்றி பின்வருமாறு கூறுகிறார்:

"க.பொ.த. உயர்தரம் கற்ற காலத்தில் கிருக்ஷ்ணகுமார் இந்திரா
ஆசிரியை மூலமாக நான் பேராசிரியர் அவரகளிடம் இலக்கணம்
கற்றேன். பின்னர் காமராஜர் பல்கலைக்கழக M.A. தமிழ் படித்த
காலத்தில் புதிய கல்லூரியில் அவர் இடத்திலே எழுத்து, சொல், யாப்பு இலக்கணம் கற்றேன். மேலும் M.Phil. கற்கும்போது தமிழில் தூதுப் பிரபந்தம் பற்றிய ஆய்வுநெறிக்கு அவரிடத்து வழிகாட்டல் பெற்றேன். மேலும் முதன்முதலில் 2004ஆம் ஆண்டு புதிய முறையில் தமிழில் "உடல் மொழி" என்ற தலைப்பில் "அப்பர் தேவாரத்தில் உடல் மொழி" என்ற ஆய்வுநெறி பற்றியும் வழிகாட்டப் பெற்றேன். பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் அவர்களிடத்து க.பொ.த. உயர்தரத்தில் அன்று "காரைக்காலம்மையார் புராணத்தில்" உள்ள பெரியபுராண சிந்தனைகளைத் தொடர்ந்து M.A. முதுநிலைக் கலைமாணி படித்த காலத்தில் பாரதியார் பாடல்கள், பாரதிதாசன் பாடல்கள் முழுமையும் அவர்களிடத்தில் படித்தேன். அதனால் இன்று உலகறியப் பட்டேன், ஆன்மீக சிந்தனை மயப்பட்டேன்."

(பவளமணி- கட்டுரைத் தொகுப்பு, சிவஸ்ரீ தியாக. சோமாஸ்கந்தராராஜாக் குருக்கள், 2015)

தனக்குக் கல்வி கற்பித்தவர்களிடம் மட்டுமன்றி பெரியோர்களிடமும் அவர் எப்போதுமே பணிவுடன் செயற்படுபவர். இத்தகைய பணிவு மட்டுமன்றி பொறுமை என்னும் குண்மும் உடையவர். பல இன்னல்கள் நேர்ந்தபொழுதும் அம்பாள் தீரத்துவைப்பாள் என்ற நம்பிக்கையுடன் பொறுமை பேணியவர். அவருடைய பொறுமைக்கு அம்பாள் நேர்த்தியான வழி காட்டியவள்.

பல பணிகள்

அருள் பணியிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கும்போது கல்விப் பணியிலும் அவர் ஈடுபட்டமைக்குக் காரணம் ஒரு குரு கற்றவராக அடியார்களுக்கு அருளிலும் கல்வியிலும் முன்னுதாரணமாக இருக்கவேண்டும் என்பதனாலேயாகும். 1993ஆம் ஆண்டில் "நெல்லண்டையான் வெளியீட்டுக் கழகம்" என்பதனை நிறுவி கோப்பாய் அரசினர் தமிழ் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் திரு. வேல் நந்தகுமார் போன்ற இளைஞர்களுடன் பல நூல் வெளியீடுகளைச் செய்தார். இன்று வரை 32 நூல்களை இக்கழகம் வெளியிட்டுப் பணி செய்துள்ளது. இதைவிட சேர். பொன். இராமநாதனால் தொடங்கப்பெற்று இந்துபோர்ட் இராசரத்தினம் என்னும் பெரியாரினால் வளர்க்கப்பட்ட சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின்

பணிப்பாளர் சபையிலே சிவஸ்ரீ தியாக. சோமாஸ்கந்தராஜா குருக்கள் ஓர் உறுப்பினராகத் தேர்ந்தெடுக் கப்பெற்றார். அவர் சமயப் பணிப்பாளராக அச்சங்கத்தின் பணிகளிலே இணைந்து கொண்டார்.

**நிறைவாக**

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் "திட்டமிடல்" கற்கைநெறியில் எம்.ஏ. பட்டக் கற்கைநெறி தொடங்கப்பட்டபோது சிவஸ்ரீ தியாக. சோமாஸ்கந்தராஜா குருக்களும் அதிலே சேர்வதற்கு விண்ணப்பித்திருந்தார். அப்பொழுது அக்கற்கைநெறி தொடர்பாக ஒரு முன்மொழிவு செய்யும்படி அவர் கேட்கப்பெற்றார். அதற்கு ஒரு திருக்கோயில் பொறுப்பாள்கை, பணிகள், வழிபடுவோர் நலன்களும் அவர்கள் தேவைகளும், பூசைகள், திருவிழாக்கள் ஆகியன எவ்வாறு திட்டமிடப்பட வேண்டும் என்பது பற்றிய எடுத்துரைப்பு நன்றாக இருந்தது என்பதை உரியவர்கள் கூற நான் கேட்டுமகிழ்ந்தேன். இவ்வாறு பன்முக ஆளுமைகள் கொண்ட குருக்களாகக் "கண்ணன் ஐயா" விளங்கினார். தும்பளை, இலட்சுமணன் தோட்டத்திலே அருள்மிகு வீரமாகாளி அம்பாளுக்கு ஒரு திருக்கோயிலமைத்து அதனைச் சிறப்பாக நடத்தி வந்தார். ஐயாவுக்கு அவர்தம் துணைவியார் அவர் செயற்பாடுகள் யாவற்றுக்குமே பக்கபலமாக இருந்துவந்தார். அவருடைய பிள்ளைகள் அவரவர்களுக்கு ஏற்ற வகையிலே துணைசெய்து வந்தார்கள். அவருடைய மூத்த மருமகன் சுந்தரலிங்கம் ஐயர் கோயிற் பூசைகள் ஏனைய பணிகள் யாவற்றையும் செவ்வனே செய்கிறார். ஐயாவின் மகன் சிவஸ்ரீ சோம. தியாக. தனஞ்செயன் குருக்கள் தந்தையின் பூசனை முறைகளையெல்லாம் நன்கு கண்காணித்து இப்பொழுது தானாகச் செய்து அருளுகின்றார். சிவஸ்ரீ தியாக. சோமாஸ்கந்தராஜா குருக்கள் தன்னுடைய பணிகளை நிறைவாகச் செய்துவிட்டுச் சென்றுவிட்டார். அவற்றை அவர் எச்சங்கள் தொடர்கின்றன.

"தக்கார் தகவிலார் என்பது அவரவர்
எச்சத்தால் கொள்ளப் படும்"

என்பது ஐயன் திருவள்ளுவனின் கூற்று.

தகைசால் பேராசிரியர் இலக்கிய கலாநிதி அ.சண்முகதாஸ்
வாழ்நாள் பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.



# குரு வழிபாடு

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சித்தித்தல் தானே.

திருமந்திரம்

தமது ஆழ்ந்த ஞான அறிவினால் அக இருள் களைந்து ஆத்ம ஞான ஒளி பரப்பிய குருமார்களை சிவன் எனவே கருதி பல வழிபடத்தக்கவர்கள் எமது சைவநெறி ஆன்ம விடுதலைக்கான மார்க்கங்களைக் குறிப்பிடு கின்றது. அவற்றுள் குரு வழிபாடும் அடங்கும் குருவை போஷித்தல் மதிப்பளித்தல் ஆகிய வற்றை அடிப்படையாகக் கொண்டு இறைவன் அடியாரது வழிபாட்டை ஏற்று அருள் தந்தருள்வார் எனவே நாம் குருவிற்கு செய்யும் சேவையும் அளிக்கும் மதிப்பும் இறைவழிபாடு சார்ந்தவையே என்பதனை மறுக்க இயலாது.

முதலில் குரு என்பதன் பொருள் பற்றிச் சிந்திப்போமாயின் குரு என்றால் குற்றத்தை நீக்குபவர். அஞ்ஞானத்தை, பாசத்தை நீக்குபவர் என்பது பொருள். எமது அறியாமையினைப் போக்கி அறிவு தந்து காப்பவர் என்பது பொருளாகின்றது. ஆசிரியர் ஆசான், சமய தீட்சை வழங்குபவர் போன் றோரையும் குரு என அழைக்கும் மரபு காணப் படுகின்றது.

மேலும் சைவசமய சாஸ்திரங்களைப் போதிப்பவர் சமயாசாரக் கிரியைகளைச் செய்பவர். ஆன்மீகத்துறையில் சந்தேகங் களைப் போக்கி நல்வழிப்படுத்தும் வழிகாட்டி யாக விளங்குபவர் குரு ஆவார். வித்தை அல்லது கல்வி கற்பித்து அறிவு ஒளி பரப்புபவரை வித்யாகுரு என அழைத்தலும், ஆன்மீக வேட்கையை அல்லது ஞானத்தினை வழங்கும் தேசிகரை ஞானகுரு என அழைத்த லும் மரபு. ஞான குருவை தத்துவநூல்கள் அருளுரு எனச் சிறப்பிக்கும். அதாவது குருவை மனிதர் எனக் கருதாது சிவன் எனவே கருதுதல் வேண்டும். ஒரு சற்குருவானவரே இது நன்நெறி இது தீயநெறி என்று உணர்த்துவார் எனவே அவரை சிவன் எனக்கருதி மனம், வாக்கு, காயம் எனும் மூன்றினாலும் வழிபட வேண்டும்.

அடுத்து இறைவனே குருவாக எழுந்தருளி வந்து ஆன்மாவின் பிறவித்துன்பத் தினை நீக்குவார். இதனையே உமாபதிச் சிவாச்சாரியார்

பார்வையென மாக்களை பற்றிப்பிடித்தற்காம்
போர்வை எனக் காணார் புவி

எனக் குறிப்பிடுகின்றார். அதாவது பழக்கப்பட்ட மிருகத்தின் உதவியுடன் அதே இனத்து மிருகத்தினைப் பிடிப்பர் அதே போல இறைவனும் எம்மை ஆட்கொள்ள மானுடத் திருமேனி தாங்கி வருகிறார் என்பதாகும்.

மேலும் அத்துவாக்களைக் கடந்த வீட்டுநெறியினை அருளிச் செய்யும் தத்துவங் கடந்த இறைவன் குருவடிவாக வராவிட்டால் அதை அறிய வல்லவர் யாரும் இல்லை. அதா வது ஒரு ஆத்மா வீடுபேறு அடைய வேணுடு மாயின் அந்த ஆத்மாவை பக்குவப் படுத்தி முத்திக்கு அழைத்து செல்ல இறைவன் குரு வாய் வர வேண்டும் இதனை திருவருட் பயன்

ஆரறிவார் எல்லாம் அகன்ற நெறியருளும்
பேரறிவான் வராத பின்.

எனக் கூறும்.

ஆன்மாவின் பந்த நிலையிலே தோன்றாத் துணையாய் உள்நின்று நடத்தும்

அருளே ஆன்மாவின் பக்குவ நிலையிலும் முத்தி நிலையிலும் உதவுவது, அருளே குருவாய் வருவது ஏன் எனில் அருளுக்கே எமது மூல நோய் நன்கு விளங்கும் அருளே குருவாய் வருவதனைப் பக்குவமில்லாத ஆன்மாக்கள் அறிவதில்லை. அதற்குக் காரணம் அறியாமையாகும். இவ் அறியாமையை நீக்கி அருள் தரவே இறைவன் குருவாக எழுந்தருளுகின்றார். இதனை திருமூலர் தமது திருமந்திரத்தில்

தாடந் தளிக்குந் தலைவனே சற்குரு
தாடந்து தன்னையறியத் தர வல்லோன்
தாடந்து தத்துவார்திதத்துச் சார் சீவன்
தாடந்து பாசந் தணிக்குமவன் சத்தே

எனக் கூறுவார்.

மணிவாசகரும் "அபரத்தொருவான் அவனியில் வந்து குருபரனாகியருளிய பெருமை" (போற்றி திருவகவல் 75 - 76) என்றும் "ஈறில்லாத நீ எளிமையாகிவந் தொளி செய் மானுடமாகி நோக்கியும்" (திருச்சதகம் 91) என்றும் சிவனே எழந்தருளி தன்னை ஆட்கொண்ட விதத்தினை வியந்து பாடியுள்ளார்.

குருவின் அருளால் அன்றி ஞானநூல் களை ஐயம் திரிபற அறிந்து முடியாது. அஞ் ஞானத்தை நீக்கும் குரு மெய்ஞானத் தினைக் கொடுத்தருளுவார். மூவகை ஆன்மாக்களுக் கும் பேரருள் செய்யும் இறைவன் விஞ்ஞான கலருக்கு அவர் அறிவில் உள்நின்று உணர்த்தியும் பிரளயாகலருக்கு முன்னிலை யில் எழுந்தருளியும் சகலருக்கு வந்தருளியும் ஆட்கொள்வார்.

அடுத்து குரு எனக் கொள்ளத்தக் கோர் யாவர் என ஆராயும் போது அன்பு வழியில் நின்று பக்திப்பனுவல்களைப் பாடிப் சைவசமயத்தை வளம் படுத்திய பெரியோர் களாகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார். மாணிக்கவாசக சுவாமிகள் ஆகியோர் நால்வரையும் சமயக் குரவர் என அழைப்பதும் இவ்வாறே அறிவு வழியாலும் இறைவனை அடையலாம் என்ப தனைக்காட்டி சைவசித்தாந்தக் கருத்துக்களை விளக்கம் செய்த பெரியோர்களைச் சந்தானக்குரவர் என அழைப்பதும் சைவமரபு.

இவர்களைத் தொடர்ந்து ஐந்தாம் குரவர் எனப் போற்றப்படும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், சுவாமி விவேகானந்தர், சுவாமி இராமகிருஷ்ணர் போன்றோரும் ஈழத்துச் சித்தர் வரிசையில் கடையிற் சுவாமிகளை குருவாக் கொண்டு ஒழுகிய செல்லப்பா சுவாமிகள், செல்லப்பா சுவாமிகளைக் குரு வாகக் கொண்டு ஒழுகிய யோகர் சுவாமிகள் ஆகியோரும் குறிப்பிடத்தக்கவர்களாவார்.

மேலும் பெரிய புராணம் குறிப்பிடும் நாயன்மார்களுள் மங்கையற்கரசியார், குலச் சிறையார், அப்பூதியடிகள் போன்றோரும் திரு மூலர், இறைவனையே குருவாகக் கொண்டு ஞானநெறி நின்ற மாணிக்கவாசகர் ஆகி யோரும் குரு வழிபாட்டால் உயர்ந்து வீடுபேறு அடைந்தவர்களாவார்.

அடுத்து குருவிற்கான வழிபாடு பற்றி நோக்கும் போது குருபூசைகளைக் கொண்டாடு வதும் குருவின் எண்ணம் சொல் செயல் என்பவற்றை சிரம் மேற்கொண்டு பின்பற்றி நடத்தலும் அவர்களது பணிகளை தொடர்ந்து முன்னெடுத்துவருவதும் சீடர்களது கடமையா கின்றது.

குருபூசைகளைக் கொண்டாடும் முறை பற்றி நோக்கும் போது அவர்களது திருவுருவப் படங்களுக்கு சமாதிகளுக்கு மாலை சூட்டி திருவிளக்கேற்றி தேவார பாராயணங்கள் செய்து குருவினை நினைத்து தியானம் பஜனை மேற் கொள்ளல் குருவினது செயற்கரிய செயல் கள் பற்றி சொற் பொழிவுகள், பிரசங்கங்கள், நாடகம், நடனம், வில்லுப்பாட்டு போன்ற கலை நிகழ்ச்சிகளையும் மேற்கொள்ளலாம்.

இவ்வாறான குருபூசைகளைக் கொண்டாடுவதன் பயன் பற்றி நோக்கும் போது குருவின் முத்தி நிலைக்குப் பின்னர் குருவின் பெருமையை வாழ்கின்றவர்கள் புரிந்து கொள்ளச் செய்தல் குருவைப் பற்றி அறிந்தவர் கள் அதனை ஏனையோருக்கு விளக்கும் சந்தர்ப்பத்தினை ஏற்படுத்துதல். குருபக்தி தெய்வ பக்தி சமய நம்பிக்கை என்பவற்றை மக்களிடையே பரப்புதல், சைவசமய பண் பாட்டைப் பேணி எதிர்கால சமுதாயத்திற்கு அதனைக் கையளித்தல், குருவைப் பேணும் மனப்பான்மையைக் கட்டி எழுப்புதல் போன்றவற்றை எண்ணிக் கொள்ள முடியும்.

இன்றும் இலங்கையில் குருவழிபாடு

சிறப்புற்று விளங்குவதனைக் காணமுடியும். உதாரணமாக சைவ பரிபாலன சபையினரால் வருடம் தோறும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் குருபூசைத் தினங்கள் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டு வருவதுடன் பாடசாலை மாணவர்களையும் அதில் பங்கு கொள்ளச் செய்து எதிர்கால சந்ததியினருக் கும் குரு வழிபாட்டின் சிறப்பினை உணரச் செய்கின்றனர். மேலும் யாழ்ப்பாணம் சிவத் தொண்டன் நிலையத்தினூடாக யோகர் சுவாமிகளின் குருபூசைத் தினங்கள் கொண்டாடப்படுகின்றமையும் தியான மண்ட பம், யோகாசன வகுப்புக்கள் என்பவற்றைக் கொண்டமைந்து தினமுமே அங்கு குரு வழிபாடு இடம் பெறுவதனையும் கண்கூடாகக் காணலாம். அத்துடன் இராமகிருஷ்ண பரம கம்சர் அவரைக் குருவாகக் கொண்டு ஒழுகிய சுவாமி விவேகானந்தர் ஆகியோருக்கும் இலங்கையிலும் இந்தியாவிலும் குருபூசைத் தினங்கள் முன்னெடுக்கப்பட்டு குருவழிபாடு இடம் பெறுவதனையும் காணமுடியும்.

அடுத்து குரு ஒருவரின் அவசியம் பற்றியும் மேன்மை பற்றியும் நோக்கும் போது மாதா பிதா குரு தெய்வம் என அழைழப்பது மரபு அதாவது எமதுகள் கண்ட தெய்வங் களான மாதா பிதாவிற்கு அடுத்த நிலையில் குருவை வைத்து போற்றப்படுகிறது. "எழுத்தறி வித்தவன் இறைவன் ஆவான் என்று தெய்வத் திலும் ஒரு படி மேலாக வைத்து போற்றப் படுவது குருவின் மேன்மை நிலையை எடுத்துக் காட்டுகிறது.

ஒரு நல்ல குருவாளர் தான் ஏணியாக இருந்து தன் மாாணவரை உயர்ந்த நிலையில் வைத்து வாழ்வில் உயரச் செய்ய உன்னத மானவர் ஒரு மனிதன் வாழ்வில் உயர வேண்டும் ஆயின் நல்ல தொரு குருவானவர் அயை வேண்டும். "குரு இல்லா வித்தை பாழ்" எனக் கூறப்படும் குரு ஒருவரின் துணை யினாலேயே வித்தை சிறப்பாக அமையும் உதாரணமாக துரோணரை மானசீகமான குருவாக கொண்டு ஏகலைவன் வில்வித்தை கற்றதுடன் குருவிற்காக தனது விரலையும் தட்சணையாக வழங்கியமையும் இதிகாசங்கள் கற்றுத் தரும் பாடமாக அமைகிறது.

அந்த வகையில் இன்றும் எல்லா மாணவர்களுக்குமே நல்ல வித்யாகுரு கிடைக் கப்பெறுகிறார்கள். அவ்வாறான குருவிடம் இருந்து எவ்வளவு அறிவு ஞானத்தினைப் பெற்றுக் கொள்கிறார்கள் தம்மை எவ்வாறு வளப் படுத்திக் கொள்கிறார்கள் குருவிற்கு எவ்வாறு மரியாதை செலுத்துகிறார்கள் என்பது இக்கால கட்டத்தில் கேள்விக்குறியாகவே உள்ளது.

இனி என் குருநாதர் பற்றி நோக்கலாம் எண்ணுகின்றேன், என மதிப்பிற்குரிய திரு சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் (கண்ணன் ஐயா) அவர்கள் என் வித்யா குருவாக இருந்து அறியாமை நீக்கி அறிவு தந்தவர். நான் அவரைச் சந்திக்கும் ஒவ்வொரு தருணமும் அகிலத்தை ஆளும் அன்னை பராசக்தியாகவே கண்டிருக்கின்றேன் (அதாவது நெல்லண்டை பத்திரகாளி அம்மனாக) குருவின் என் தரிசனம் ஒவ்வொன்றுமே நிறைந்த அனுபவத்தையும் நல்ல சிந்தனைகளையும் வாரி வழங்கும் "தாரமும் குருவும் தலைவிதிப்படி" என்ற கூற்றினை அடிக்கடி கூறிக் கொள்வதுண்டு ஆம் ஐயாவினை குருவாக அடைந்த மாணவர்கள் அனைவருமே பேறு பெற்றவர்கள் என்பது மறுப்பதற்கில்லை.

கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

என வள்ளுவர் காட்டிய வழி வாழும் வகை சொல்லித் தந்த பெருந்தகை எம்முடைய குருவிற்கு நாம் செய்யும் வழிபாடு அவர் எமக்கெல்லாம் சொல்லித் தந்த அறிவுரை களைப் பின்பற்றி நடத்தலே என எண்ணு கின்றேன். ஐயாவின் அருளாசி என்றும் வழி நடத்தும் அவனியில் உயர வைக்கும் எனும் உணர்வோடு நிறைவு செய்கின்றேன்.

ஜென்மம் நிறைந்தது சென்றவர் வாழ்க....

**திருமதி யசோதா சிவாகரன்**
**ஆசிரியை**
**யா/இந்துமகளிர் கல்லூரி**

# புலம் பெயர் தமிழர் இலக்கியம் ஒரு நோக்கு

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே தோன்றிய மூத்தகுடி தமிழ்க்குடி என்பதும் சிந்துவெளிநாகரிகத்தை தோற்றுவித்தோர் திராவிடராகிய தமிழர் என்பதும் வரலாற்றுக்கு முற்பட்ட காலந்தொட்டு வாழ்ந்து வந்தோர் எனம் மூதாதையராகிய தமிழ் இனத்தவர் என்பதும் நம் வரலாற்று ஆய்வாளர் கண்டமுடிவு. ஈழம் என்று அழைக்கப்பட்ட நம் இலங்கைத்தீவிலே பண்டு தொட்டு தமிழன்வாழ்ந்து வந்தான். தனியே ஒரு பண்பாட்டுப் பழக்கத்தை தம்மிடையே கொண்டிருந்தான். அவ்வாறான பண்பாட்டுப்பழக்கவழக்கங்களில் உணவு, உடை, உறையுள், மொழி, சடங்குவிழா, என நீண்டு செல்லும் அம்சங்களை நாம் காணலாம். இதை "தரணியில் தமிழன் என்றொரு இனம் உண்டு. தனியே சிறப்பான வீரமும் கல்வித்திறனும் உண்டு" என்ற கோட்பாடு மூலம் மேலும் அறிந்து கொள்ளலாம்.

மொழி நாடு, பிறப்பு என்ற அடிப்படையில் குறிப்பிட்ட இனமக்கள் என்று வரையறை செய்கிறோம். "யாதும் ஊரே யாவரும் கேளிர்," என்ற பொதுமை உடையதமிழர் பல இனத்தார்க்கும் பல நாட்டார்க்கும் பல மொழியார்க்கும் இடம் கொடுத்தவர்கள் இடங்கொடுப்பவர்கள் வரலாற்று அடிப்படையில் பார்த்து நீ தமிழனை அந்தச் சோழன் ஆந்திரன் இந்தப்புலவன் கன்னடத்தான் என்றெல்லாம் சொல்லி இனவெறியை சாதி வெறியாக தூண்டிவிட்டு இவனை வெளியேற்று அவன் இலக்கியம் தேவையில்லை என்றெல்லாம் சொல்வது தவறு.

ஆரிய வரவிற்கு பிறகுதான் திராவிட நாகரிகம் தொடங்குகிறது என்பதாக கே.ஏ.நீல கண்டசாஸ்திரி சொல்கிறார். தமிழின் இலக்கணமே அகத்தியர் எனும் ஆரியரால் தொடக்கப் பெற்றதாக இடைக்காலத்தமிழரே எற்றுக்கொண்டனர். இப்படிப் பண்னெடுங் காலமாக ஊடுருவிய ஆரியக் கொள்கைகளிடையே தமிழ் இனத்தையும் நாகரிகத்தையும் தனியே நிறுவுவது கடினம் என்றாலும் உயர் தனிச்செம்மொழியாகிய தமிழின் தொன்மைச் சிறப்பும் வன்மைச்செறிவும், இலக்கியத் திறனும், நாகரிக செம்மையும் ஆகியவைதான் காப்பாற்றி தனித்து தாமே நிறுவி நிலைத்துள்ளன.

சிங்கள இனவாத ஒடுக்குமுறையின் விளைவாக இன்று ஈழத்தமிழர்கள் உலகெங்கிலும் நாடற்றவர்களாய், அநாதைகளாய் அலைந்து தமிழ்நாடு உட்பட உலகெங்கும் கால்கொண்டனர். ஆனால் அவர்களுக்கு ஆதரவுக்கரம் நீட்டுவதற்கு யாருமில்லை. இருப்பினும் ஆங்காங்கே சில நாடுகள் புகலிட அந்தஸ்து கொடுத்து வருவதையும் நாம் மறுப்பதற்கில்லை. அகதியாய் தஞ்சம் புகுந்த ஈழத்தமிழனுக்கு அங்குள்ள வேலை, கல்வி வாய்ப்புக்கள் மறுக்கப்பட்டன. தொழிற்சங்க உரிமை கிடையாது. முகாமில் பல தமிழர்கள் தங்கவைக்கப்பட்டு உடல், உளநலபாதிப்புக்கு உள்ளாகி இருப்பதும் கண்கூடு. இனவெறி, நிறவெறி, பாசிகம், முதலியவற்றின் முதல் இலக்காக வெளிநாட்டு அகதிகளே உள்ளனர். தமிழர்கள் உட்பட வெளிநாட்டு அகதிகள் தம் உயிருக்கும். உடைமைக்கும் பாதுகாப்பின்றி

அல்லலுறுகின்றனர். ஒவ்வொரு கணமும் இரண்டாம் தரக்குடிமக்களாக உணர்ந்து தாய் நாட்டை பார்க்கவும், தமிழைக் கற்கவும் வாய்ப்பின்றி அந்நியச்சூழலில் வாழ்வை தொடங்கியுள்ளனர்.

இவ்வாறாக மேலை நாட்டுக்கு புலம் பெயர்ந்து சென்ற தமிழரின் புலம்பெயர் இலக்கியம் இன்றுள்ள நிலையில் எவ்வாறு துலங்குகிறது என்பதை இக்கட்டுரை மிகச் சுருக்கமாக தரமுற்படுகின்றது. உலகெங்கிலும் உள்ள ஈழத்தமிழ் மக்கள் படுந்துன்பங்கள் மீது கவனத்தை ஈர்ப்பது தமிழர் நலனிலும் மனித உரிமையிலும் அக்கறையுள்ள நம்மனைவரினதும் கடமையாகின்றது. தமிழ்ப் பண்பாடு, தமிழிலக்கியம், கலை என்பவற்றில் அக்கறை காட்டுவொர் அனைவரும் புலம் பெயர்ந்து ஏதிலியாய் வாழும் ஈழத்தமிழர் தம் இன்னல்களுக்கிடையிலும் தன்னடையாளத்தை பாதுகாக்க செய்யும் முயற்சிகளையும் படைப்பிலக்கியங்களையும் புனைவதையும் கலை இலக்கியபண்பாட்டுத் துறைத் திறனாய்வுகளை மேற்கொள்வதையும் கருத்தில் கொண்டாக வேண்டும். ஏனெனில் இவை உலகத்தமிழர் பண்பாட்டின் பிரிக்க முடியாத கூறுகள் ஆகின்றன.

எனவே புலம் பெயர்ந்து மேலை நாடுகளில் வாழ்ந்துவரும் நம்மவர்களின் பண்பாட்டு இலக்கிய அம்சங்களை மிகத் துல்லியமாகவும் சுருக்கமாகவும் சில விடயங்களையே நான் ஆய்வுக்கு கொண்டு வருகிறேன்.

**தமிழ்மொழி**

“இனிமையும் நீர்மையும் தமிழெனலாகும்” என பிங்கல் நிகண்டு கூறும். தமிழ் எனும் சொல் மிகுந்த இனிமை என பொருள் தரும். அமிழ்து எனும் சொல் ஆகியது காண்க. திராவிடம் என்ற சொல்லே தமிழ் என்று ஆகியதாக கண்டர் கால்டுவெல். மொழி என்பது நாகரிகம், பண்பாடு என்பவற்றின் படிமம் ஆகும். அன்புத்தாயின் தொடையில் வளர்ந்து மொழி என்பார் இங்கர்சால், எழுத்துருவும் இலக்கியவளமும் பெற்றதால் தன் உயர்வை தனித்தன்மையை செம்மையை காத்து உயர் தனிச்செம்மொழியாக தமிழ் மொழி திகழ்கிறது. தமிழே உலகத்தாய் மொழி என்றார் பாவாணர்.

“சதுர்மறை ஆரியம் வருமுன் சகமுழுதும் நினதாயின்
முதுமொழி நீ அநாதியென மொழிகுவதும் வியப்பாமே”

என சுந்தரம்பிள்ளை மனோன்மணியத்தில் கூறுவது இங்கு பொருத்தமானதாகும்.

பரம்பரை பரம்பரையாக பெற்றோரால் பேசப்பட்டு வரும் மொழிதான் தாய்மொழியா? அல்லது பிள்ளைகளால் இயற்கையாகப் பேசப்படும் மொழிதான் தாய்மொழியா? மேலை நாடுகளில் முதல்மொழி எனக் கூறப்படுவதும் நம் நாட்டில் தாய்மொழி எனப்படுவதும் ஒருவரது இயற்கையான சிந்தனை, உணர்வு உள்ளக்கிடக்கைகளை வெளிப்படுத்த உதவுவது மொழியே. எம்மைப் பொறுத்தவரை தமிழ் அல்லாத எந்த மொழியும் நம் தாய்மொழியாக இருக்கமுடியாது. இருக்கவும் கூடாது என்பது எம் அவா. அந்நாட்டு மொழியில் பிள்ளை கல்வி கற்றாலும் கூட தமிழ்ப்பள்ளிகளை, தமிழ்க்கல்லூரிகளை ஆங்காங்கே உருவாக்க வேண்டும். தமிழில் புலமையுள்ளவர்களை பயிற்றுவிப்பாளர்களாக உருவாக்கி தமிழ் மொழியை வளர்த்தல் வேண்டும்.

இதற்கு முதற் காரணமாக பெற்றோரும் அந்நாட்டு அரசும் தீவிரசிரத்தை எடுக்க வேண்டும். கனடா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன் போன்ற நாடுகளில் வாழ்ந்து வரும் தமிழர்கள் அதிகம் என்பதால் அங்கே இத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவது சுலபமாக இருக்கும் என நினைக்கிறேன். இலண்டனில் ஆக்ஸ்போட் பல்கலைக் கழக தமிழ்த்துறையை நிறுவியுள்ளது எமக்குப்பெருமை சேர்ப்பதாக அமைகின்றது. ஜி.யூ.போப், பர்நோ முதலிய ஆங்கிலேயர்கள் இங்கு தமிழ்ப்பணி புரிந்தனர் இலண்டனில் தமிழ்ச்சங்கமும், தமிழ்ப்பள்ளிகளும் தமிழ் இதழ்களும் வெளிவருவது தாய்மொழிப்பற்றை நமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

ஆங்காங்கே உலகத்தமிழ் மாநாடு,

திருக்குறள் மாநாடு, கிறிஸ்தவ தமிழ் மாநாடு, இந்துமகாநாடு என பல மகாநாடுகளை நடாத்தியமை தமிழ் மக்களுக்கு கிடைத்த ஒரு வெற்றியாகவே கருதப்படுகின்றது. இதனை விட மலேசியா, சிங்கப்பூர், இத்தோனேசியா முதலிய தென்னாசிய நாடுகளிலும் தமிழ்மொழி வளம் பெற்று வருவதை நாம் அறியலாம். ஆங்கிலேய ஆட்சியின் போது குறிப்பாக 1970 இல் ஏறத்தாழ 8 இலட்சம் பேர் தமிழர்கள் இங்கு இடம் பெயர்ந்தனர். அவர்கள் முகமதியராக மாறியிருப்பினும் ஆங்கிலக்கல்வியின் முக்கியத்துவம் அதிகரித்து வருவதாலும் தமிழ்க்கல்வி சற்று குறைந்து செல்லும் போக்கினை நாம் காண முடிகிறது. தமிழ்நேசன் தமிழ் ஒசை முதலிய தமிழ் சிற்றிதழ்களும் நிறைய படைப்பிலக்கியங்களும் வெளிவருகின்றன்.

இதனைவிட ஈழத்திலிருந்தும் புலம் பெயர்ந்து சென்ற தமிழ் அறிஞர்கள் தமிழ்மீது பற்றுக்கொண்டு தமிழ்வளர்ந்து வருகின்றனர். யாழ்ப்பல்கலைக்கழக்தை சேர்ந்த முன்னாள் தமிழ்த்துறை சார்ந்த பேராசிரியர்களான நா.சுப்பிரமணியன், கௌசல்யா சுப்பிரமணியன் என்போர் இன்று கனடா நாட்டின் தமிழ்க்கல்லூரியின் முனைவர்களாக பணியாற்றுவது குறிப்பிடத்தக்கதாகும். இவர்களோடு அயல்நாட்டு பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த பலர் தமிழ்த்துறைக்கு பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது ஆகும். சென்னை, மதுரை, இலங்கை, திருச்சிராப்பள்ளி முதலிய இடங்களில் தமிழ்க்கல்வி வளம்படுத்தபடுவதையும் காணலாம்.

பல்கலைக்கழகத்துக்கு அப்பால் பல ஈழத்தை சேர்ந்த படைப்பாளிகள் பலர் தமிழில் மிகுந்த வேட்கை உடையவர்களாக பல சிற்றிதழ்களை நடாத்தி வருகின்றனர். தி.ஞானசேகரன், மாவை. நித்தியானந்தன், கவிஞர் இன்குலாப், சி.பி.அரவிந்தன், தமயந்தி, வ.ஐ.ச.ஜெயபாலன், சி.சிவசேகரம் போன்றோர் நவீன இலக்கியங்களாகிய சிறுகதை, கவிதை, முதலிய படைப்பிலக்கியங்களில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இப்படைப்பாளிகளில் சிலர் மூத்த இலக்கிய கர்த்தாக்களாகவும் சிலர் இளைய வளர்ந்து வரும் படைப்பாளிகளாகவும் காணப்படுகின்றனர்.

புலம் பெயர் தேசத்திலிருந்து வெளிவந்த சிறந்த கவிதைத் தொகுப்புக்கள் என்ற வகையில் துருவச்சுவடுகள் முதற்தொகுப்பு, வைகறை - கி.பி அரவிந்தன், இரண்டானது பிறப்பு அருந்ததி, நுகத்தடிநாட்கள் சுகன், காலத்தின் பதிவுகள் அகந்தசாமி போன்றவற்றை குறிப்பிடலாம். மேற்கூறப்பட்ட பெயர்களும் தொகுப்புக்களும் முடிவான பட்டியல்கள் அல்ல. சமகாலத்தில் இவற்றை தாண்டி பலரும் பல கவிதை முயற்சிகளை புலம் பெயர் தேசங்களில் இருந்து வெளிப்படுத்தி வருகின்றனர். புலம்பெயர் சஞ்சிகைகள், பத்திரிகைகள். வானொலிகள் இதற்கு முக்கிய பங்காற்றுகின்றன. இவ்வகையில் தூண்டில், காலம், உயிர்மெய் போன்ற சஞ்சிகைகளும் காற்றுவெளி, திண்ணை, போன்ற இணைய இதழ்களின் பங்களிப்பும் முக்கியமானதாக விளங்குகின்றன.

இயல், இசை நாடகம், என்பன முத்தமிழ் என அழைக்கப்படும். அவ்வாறே இயல்துறை இசைத்துறை, நாடகத்துறை என்பனவும் பெருவளர்ச்சி கண்டு வருவதை ஆய்வாளர் அறிவர். ஆங்காங்கே நடனப்பள்ளிகளும், நாடகமன்றங்களும் அங்குள்ள சிறார்களை ஈடுபடுத்தி தமிழ் மணம் கமழ் செய்வதில் பெரும்பங்கு வகிக்கின்றது ஈழத்திலிருந்து இசைத்துறை சார்ந்த பல விற்பன்னர்கள் அங்கு அழைக்கப்பட்டு பல கச்சேரிகள் வழங்கி வருகின்றனர்.

உதாரணமாக தவில், நாதஸ்வரம், போன்ற கலை அம்சங்களையும், கர்நாடக இசை, உரைஅரங்கம் முதலியனவும் ஆண்டு தோறும் நடந்து வருவதை நாம் அவதானிக்கலாம்.

இவ்வளிக்கைகள் யாவும் அங்குள்ள இந்து ஆலயங்களை மையப்படுத்தி இடம் பெறுவதை காணலாம்.

மேலும் கனடாவிலுள்ள றொறன்ரோ முத்துமாரியம்மன் கோயில், துர்க்காதேவியம்மன் கோயில், நியூலாந்து குறிஞ்சிக்குமரன்

ஆலயம். சிங்கப்பூர் செண்பகவிநாயகர் ஆலயம், இறைவனின் பெயரை அங்குள்ள நாட்டுக்கோயில்களுக்கு சூட்டி பல கும்பா பிஷேகங்கள், மகோற்சவங்கள் முதலிய வற்றை இங்கு நடைபெறும் பட்சகாலங் களுக்கு ஏற்ப அங்கும் பல பிராமண சிவாச்சாரியார்கள் அழைக்கப்பட்டு பூசைகள் இடம்பெறுவதையும் அதற்கு தமிழ்மொழியில் விளக்கங்கள் கொடுக்கப்படுவதையும் நாம் காணலாம்.

இவ்வாறாக சமயம் சார்ந்து சமுதாயம் தமிழ்மணம் பரப்பி வருவதை நாம் காணலாம். மேலும் அங்குள்ள தமிழ்ப் பிள்ளைகள் சிறுவயதிலிருந்து தமிழ் மொழியை கற்பிப்பதுடன் அவர்களுக்கு தமிழ்ப்பெயரை சூட்டி மகிழ்வதும் உறவு முறைகளில் பாசஉணர்வையும் அதிகரிக்க வழிசெய்யும்.

**உணவுப் பழக்கவழக்கங்கள்**

ஒரு பிரதேசமக்களின் பண்பாட்டு கோலங்களில் அல்லது வாழ்வியல் செல் நெறிகளில் உணவும். மிக முக்கியத்துவம் வாய்ந்தது. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்பது எமது இலக்கியமர்பு மருந்தே ஆயினும் விருந்தோடு உண் முதலிய தமிழ் பழமொழிகள் உணவின் இன்றியமை யாமையை எடுத்துக்காட்டுகின்றன. பெரும் பாலும் நமது ஈழத்து உணவுகள் பல பதப் படுத்தப்பட்டு மேலைநாடுகளுக்கு எற்றுமதி செய்யப்படுகின்றன. பைக்கற்றுக்களில் அடைத்தல், போத்தல்களில் அடைத்தல் முதலியவற்றின் மூலம் உணவுப்பொருட்கள் யாவும் பரிமாற்றப்படுகின்றன. இருப்பினும் எமது உணவில் இருக்கும் சுவையும் போசனையும் அவ்வுணவுகளுக்கு பெரும் பாலும் இருப்பதில்லை. ஆனாலும் ஈழத்தைப் போன்றே பல பயன்தரு மரங்கள் அங்கே வளர்க்கப்பட்டு பல பயன்களைப் பெறு கின்றனர். ஆங்கிலேய உணவுப் பழக்க வழக்கத்துக்கு உள்ளான நம்மவர்கள் அதற்கு முழுமையாக தம்மை அர்ப்பணித்துக் கொண்டனர். மேல்நாட்டுச் சிற்றுண்டிகள் உதாரணமாக கேக், கன்டோஸ் என அழைக்கப்படும் இனிப்புப்பதார்த்தங்கள் முதன்மை பெறுகின்றன. நமது பிரதான உணவாகிய சோறு அங்கே முக்கியத்துவப் படுத்தப்படுவதில்லை. அந்நாட்டு இழுலுக்கு ஏற்ப உணபுப்பழக்க வழக்கமும் மாறிக் கொண்டு செல்லும் போக்கினை அவதானிக்க முடிகிறது.

ஈழத்தைப் போன்றே தாவர உணவு வகைகள், விலங்குணவுவகைகள், தானியங் கள், பழவகைகள் என்பவற்றை உண்பதில் அங்குள்ளோர் ஆர்வம்காட்டி வருகின்றனர். இருப்பினும் எமது நாட்டு உணவுப் பொருட் களுக்கு அங்கு பெரும் கிராக்கி ஏற்படுவதை யும் நாம் அவதானிக்கலாம். உணவைக் குறைத்து போதிய உடற்பயிற்சி செய்தல், வேறு இதர விளையாட்டுக்கள் போன்ற வற்றிலும். ஈடுபட்டு தமது ஆயுட்காலத்தை தக்கவைத்துக் கொள்கின்றனர். ஈழநாட்டைப் போன்று விரத அனுட்டானங்கள். ஆசாரங்கள் என்பன கடுமையாக கடைப்பிடிக்கப்படுவது இல்லை என்றே கூறவேண்டும். உணவை தம்பிள்ளைகளோடு நன்றாக உண்டு மகிழ்வ தற்கு அங்குள்ள வசதிவாய்ப்புக்கள் மிகக் குறைவு என்றே கூற வேண்டும்.

ஆண்கள் மட்டுமல்ல பெண்களும் மேலை நாட்டு குடிபான வகைகளை அருந்துவ தில் ஆர்வம் காட்டுகின்றனர். உதாரணமாக வைன் எனப்படும் பானவகை சிறந்த ஒன்றாகக் காணப்படுகின்றது. கிறிஸ்தவ மதநிகழ்வு களில் அல்லது சடங்குகளில் இது முக்கியமான ஒரு நுகர்பண்டமாக இப்பதை காணலாம். இருப்பினும் பருத்தித்துறை வடை, சாவகச்சேரி மாம்பழம், மாலைதீவுக்கருவாடு, வலிகாம கிழங்கு, என இங்கிருந்து உணவுப்பண்டங்கள் ஏற்றுமதி செய்யப்படுவதும் இவற்றுக்கு தனிமவுசு இருப்பதையும் அவதானிக்கலாம்.

மாறாக ஈழத்தவர்களின் உணவுப் பழக்கவழக்கங்களை அங்குள்ள ஆங்கிலேயர், பிற இனத்தவர் போன்றோர் நுகர்வதில் ஆர்வம் செலுத்துகின்றனர். விலங்குணவை விட்டு சைவ உணவையே உண்கின்றவர்களாக குறிப் பிட்ட சாரார் மாறிவருவதையும் காணலாம்.

**இலக்கியச் சந்திப்புக்கள்**

புலம் பெயர் தமிழர்களின் இன்னோர் கலாசார நடவடிக்கையாக கவனத்தை ஈர்ப்பது அவர்களது இலக்கியச்சந்திப்புக்களாகும். ஐரோப்பிய நகர்களில் நடைபெறும் இச் சந்திப்புக்கள் சுமார் நூற்றுக்கு மேற்பட்டோரின் பங்குபற்றலுடன் பெரிய மகாநாடுகள் நடைபெறுகின்றன. நாட்டின் பல பாகங்களிலிருந்தும் எழுத்தாளர்கள், கலை இலக்கிய ஆர்வலர்கள், அரசியல் அறிஞர்கள், பெண் நிலை வாதிகள் பங்கு கொள்ளும் இம் மாநாடுகள் கலை இலக்கிய விடயங்கள் மாத்திரமன்றி சமூக அரசியல் விடயங்கள் அலசப்படும் களமாய் அமைகின்றன.

புலம் பெயர்ந்து வாழ்கின்ற தமிழரின் இத்தகைய முயற்சிகள் புலம்பெயர் இலக்கியம் என நோக்கத்தக்க ஒரு அடையாளத்தையும் தனித்துவத்தையும் அளித்துள்ளன. இதனை அவர்களது கலை இலக்கிய ஆக்கங்கள் பற்றியும் அவ்வவ்போது வெளியாகியுள்ள பல கட்டுரைகளில் காணலாம். இதற்கு உறுதி பூணுவதாய் தமிழ்நாட்டில் இடம்பெற்ற உலகத்தமிழ் செம்மொழி மகாநாடு அமைகின்றது. இதனையொட்டி ஒரு சிறப்பு மலரும் வெளியிட்டப்பட்டது.

பெரும் எண்ணிக்கையில் மேற்கு நாடுகளில் பரந்திருக்கும் தமிழரது இலக்கியங்கள் புகலிட இலக்கியம் எனவும், புலம் பெயர் இலக்கியம் எனவும் இரு தொடர்களால் அழைக்கப்படுகின்றது. இத்தொடர்கள் வெவ்வேறான கருத்து அழுத்தங்கள் கொண்டவை. புலம் பெயர்ந்து சென்றோரின் இலக்கியம் என்ற கருத்தை தரும் புலம் பெயர் இலக்கியம் என்பதை விடவும் புகலிட இலக்கியம் என்ற தொடர் அரசியல் அழுத்தம் கொண்டதாகும். இவற்றில் எத்தொடர் பொருத்தமானது என்பது வேறு விவாதமாகும். இது இவ்வீலக்கியத்தை எவ்வாறு கருத்தாக்கம் (Conceptualization) செய்கிறோம் என்பதில் தங்கியுள்ளது இக்கட்டுரையில் புலம்பெயர் இலக்கியத்தின் பண்புகளை புரிந்து கொள்வதற்கு இலங்கைத் தமிழரின் அரசியல் சமூகப் பின்னணியை தெரிந்து கொள்வது அவசியமாகும்.

**சமூக அரசியல்பின்னணி**

இன்று உலகின் பல்வேறு நாடுகளிலும் பரந்துள்ள இலங்கைத்தமிழர் சமூகம் (Sri Lankan Tamil Diasphora) ஒரு வரலாற்று யதார்த்தமாக உள்ளது. வடக்கே கனடாவிலிருந்து தெற்கே அவுஸ்ரேலியா, நியூசிலாந்து வரை இச்சமூகம் விரிந்துள்ளது. ஒரு குடும்பமே வெவ்வேறு பிரதேசங்களில், வெவ்வேறு நாடுகளில் சிதறுண்டு கிடக்கிறது. இன்று இணையத்தளங்கள், பத்திரிகைகளில் வெளியாகும் மரண அறிவித்தல்கள். திருமண அழைப்பிதழ்கள், கோயில் விழாக்களின் பத்திரிகைகள் என இவை புலனாகின்றன. இத்தகைய வாழ்வியல் தன்மை கவிதைகளில் வெளிப்பட்டுள்ளது.

யாழ் நகரில் என் பையன்
கொழும்பில் என் பெண்பாட்டி
வன்னியில் என் தந்தை
தமிழ் நாட்டில் என் அம்மா
சுற்றம் பிறாங்பேட்டில்
ஒரு சகோதரியோ பிரான்ஸ் நாட்டில்
நானோ வழி தவறி அலாஸ்கா
வந்துவிட்ட ஒட்டகம் போல்
ஒஸ்லோவில்
என் நம் குடும்பங்கள்
காற்றில் விதிக்குரங்கு கிழித்தெறியும்
பஞ்சுத் தலையணையா?

(ஜெயபாலன்.வ.ஐ.ச. 1989)

புலம்பெயர் தமிழரைப் பெரும்படியாக 1983 ஆம் ஆண்டுக்கு முன் குடியேறியோர், அதன்பின் குடியேறியோர் என இரு பகுதியினராகப் பிரிக்கலாம். 83 இற்கு முன் இலங்கையிலிருந்து குடிபெயர்ந்தோர், காலனித்துவ காலத்திற்குப் பின்னர் நிகழந்த தமிழருக்கு எதிரான முதலாவது இன வன்செயலின் பின்னர் வெளியேறியோராவர். இலங்கையில் 1950, 60ம் ஆண்டுகளில் தமிழ் மொழிமூல உத்தியோகத்தர்களுக்கு எதிரான பாரபட்சங்கள் நிலவின.

சிங்களம் உத்தியோக பூர்வமொழியாக ஆக்கப்பட்டமை, ஆங்கிலங்கற்ற உயர் தகுதிகள் பெற்ற தமிழரின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக அமைந்தது. இத்தகைய

பின்னனியிலேயே இவர்கள் குடிபெயர்ந்தனர்.

சமீபகாலமாக பெண்கள் அதிகமாக குடிபெயரும் நிலையும் அதிகரித்துள்ளது. குடும்ப இணைவு என்ற கோதாவில் மனைவியர், அன்னையர் என பல பெண்கள் சென்றுள்ளனர். அத்துடன் அந்நாடுகளில், வதியும் இளைஞர்களுக்கு மணமகள்களாக வும் இப்பெண்கள் செல்கின்றர். ஐரோப்பா, அவுஸ்திரேலியா, வடஅமெரிக்கா நாடு களிலும் இன்று வாழுகின்ற தமிழர்களின் எண்ணிக்கை 400,000 என லண்டனில் உள்ள தமிழர் தகவல் நிலையம் என்ற அமைப்பு கணக்கிட்டுள்ளது. கனடாவில் றொரன்ரோ நகரில் மாத்திரம் தற்போது சுமார் மூன்று இலட்சம் இலங்கைத்தமிழர் வாழ்வதாக கூறப்படுகிறது.

85 இன் பின்னர் குடிபெயர்ந்தவர்கள் மிகவும் வேறுபட்ட சமூகப்பிரிவினராவர், குறிப் பாக யாழ்குடாநாட்டை சேர்ந்த இனத்தவர்கள் புலம்பெயரத்தொடங்கினர். மின்சாரவிளக்கும் இல்லாத வசதியற்ற வீட்டில் பிறந்து வளர்ந்த ஒரு இளைஞன் மின்சார ரயில் விரையும் ஒரு மேற்கத்தேய நாட் தொழிநுட்பங்கள் தரும் பிரமிப்பின் மத்தியில் தான் தீடீரென தூக்கி எறியப்பட்டதாக உணர்ந்தான்.

பெரிய தொகையினராக இந்த வேற்று நாடுகளில் வாழ்பவர்களில் பெரும்பாலா னோர் தோட்டங்கள். உணவுச்சாலைகள், பெற்றோல் நிரப்பும் நிலையங்கள், தொழிற் சாலைகள், தொழிநுட்பநிறுவனங்கள் என்பவற்றில் வேலை செய்கின்றனர். சுத்திகரிப் பாளர்களாகவும், பத்திரிகைகளை வீடு வீடாக விநியோகிப்பவர்களாகவும், பலர் தொழில் புரிகின்றனர். இவ்வகையில் இவர்கள் உடலுழைப்பாளர்கள் ஆகின்றனர். அவ்வவ் நாடுகளின் தொழிலாளர் வாக்கத்தில் ஒரு பகுதியினர் எண்பதுகளுக்கு முன் குடியேறி யோரில் பெரும்பாலானோர் பல்வேறு சேவைத்தொழில்களில் ஈடுபட்டிருந்தனர். இவ்வகையில் இவ்விரு பிரிவினரிடையேயும், ஒரு சமுக பொருளாதார வேறுபாட்டை நாம் அவதானிக்கலாம்.

**கலாச்சார ஆன்மீக தளங்களின் பிரிவும் நினைவும்**

எமது தாய்நாட்டு நினைவு, அது புலப் படுத்தும் ஏக்கம், இவ்விலக்கியங்களில் விருசி நிற்கின்றன புதிதாக குடியேறிய இடத்தில் முற்றாக காலூன்றாத இம் முதலாவது தலைமுறை (Frist Generation) தாம் இழந்துவிட்ட தாய் நாட்டை பல்வேறு சந்தர்ப்பங்களிலும் நினைக்க வேண்டி ஏற்படுகிறது. யன்னலுக் குள்ளால் பசுமை இலையை காணாது, உயர் கட்டிடங்களை காணும் போதும். சூரியஒளி காணாத பேஸ்மன்ற (Basement) வீடுகளிலும், அலுவலகங்களிலும் பொழுது கழியும் போதும், பனிக்காலகுளிர் எலும்பை ஊடுருவும் போதும் தாய் நாட்டின் நினைவு பலகோணங்களில் விரிகிறது. சொந்தநாட்டின் காலநிலை, இயற்கை அழகுகள், மரங்கள், பறவைகள், குட்டைகள், கடற்கரைகள், கோயில்கள், வீடு கள், கிணறுகள், கிணற்றடிவாழைமரங்கள், கிடுகுவேலி என இயற்கை பௌதீகசூழலை நினைவு கூருகின்றனர்.

இவற்றை தம் எழுத்துக்களில் விபரிக்கும் போது அச்சூழலை தம்மளவில் மறு உருவாக்கம் செய்து எழுதுகின்ற அந்தப் பொழுதில் அதற்குள் வாழ்வதாய், அதனை உணர்வதாய் ஒரு மனோநிலை உருவா கின்றது. அதனைப் பிரிந்த ஏக்கமும் வெளிப்படுகின்றது.

சிறுகுருதி வீடு கட்டும்
தென்னோலை பாட்டிசைக்கும்
சூரியப்பெடியன் செவ்வரத்தம் பூவை
புணரும் என் ஊரின் இருப்பிழந்தேன்
அலை எழுப்பும் கடலோரம் ஓர் வீடும்
செம்மண் பாதையோரம்
ஓர் தோட்டமும்
கனவுப்பணம் தேட
கடல் கடந்தோம்
நானும் நாங்களும்
அகதித்தரையில்
முகமிழந்தோம்.

(செல்வம் :1992 : 29)

இன்னோர்கவிஞர் எத்தனைநாள் தனது தாய் நாட்டை பிரிந்திருக்க வேண்டும் என்று ஏக்கத்துடன் கேட்கிறார்.

இன்னும் எத்தனை நாள்
இந்துக் கடல் மடியில்
மரகத வீணையென
வடகிழக்காய் நீண்ட என் தாய் நாட்டை
நெஞ்சில் சுமந்து சுமந்து நான் ஏங்குவது?
நாட்டேக்கம்
என்னுயிரை
நஞ்சாய் சபிக்கிறதே

(ஜெயபாலன் : 1989)

தமயந்தி தனது கவிதையொன்றில் தனது நாடு, சுற்றம் மீண்டும் தனக்கு வேண்டும் என்று கூறுகிறார். நாட்டின் இழப்பு, நினைவு, ஏக்கம் என்பவை அடி மனதில் படிந்துள்ள நாடுபற்றிய படிமங்களை இக்கவிதையில் காணலாம்.

இரையுங் கடலின் அலையுங் கரையும்
கரையிலீரக்கரும் பாறைகளும்
பாறை காக்கும் ஒற்றைக் கொக்கும்
கொக்கின் பிடியிற் தப்பும் மீனும்
மீன்கள் நிரப்பி அசையும் படகும்
படகிற்கேட்கும் அம்பாக்குரலும்
குரலும் வானை உரசும் கூத்தும்
கூத்து முடிந்த கொட்டகைத்தரையும்
கொட்டகைததரையில்
உதிர்ந்தமணியும்.....

(தமயந்தி 1982)

ஆகவே சொந்தநாட்டின் பௌதீக, கலாசார, ஆன்மீகதளங்கள் பிரிவு புலம் பெயர்ந்தோரை மிகவும் தாக்குகின்றது. இத்தாக்கத்தின் தீவிரம் தமிழர் புலம் பெயர் இலக்கியத்தின் முக்கிய உணர்வோட்டங்களில் ஒன்றாக அமைகின்றது.

புலம்பெயர் இலக்கியத்தின் இன்னோர் பொதுவான உணர்வோட்டம் புலம் பெயர்தோரின் அகதிநிலையுடன் தொடர்புடையது. இவர்கள் தாம் போய் குடியேறிய நாடுகளில் சட்டரீதியாகவும் கலாசாரரீதியாகவும், நிறரீதியாகவும் அந்நாட்டு மக்களிலிருந்து வேறுபட்ட வகைப்பாட்டுக்குள் அடங்குகின்றனர். கறுப்பினமக்களுக்கு எதிராக வளர்ந்து வரும் எதிர்ப்புணர்வும் இலங்கைத்தமிழரை ஒவ்வொரு கணமும் அகதிகளாக உணரவைக்கின்றன.

நிழலும்
குறுகிக்கரையும் பார்வை தாழ
நெஞ்சுக்குள் கூசும்
கறுப்பிலும்
மாற்றுக்குறைந்த
என்னை
பூனைக்கண்கள் உதிக்கும
எலும்பு மச்சைகுள்ளும்

குழாவும்
இரத்தம் கறுப்பாய் இல்லையோ
இகழ்ச்சி கொப்பளிக்கும்

(அரவிந்தன் கி.பி. மேலது :55)

நாடிழந்தவர் தன்னையே இழந்துவிடுகின்ற ஆவலம், அடிக்கடி கவிதைகளில் தலைகாட்டுகின்றது. வீடற்றவாழ்வும் அன்றாட நிச்சயமின்மையும் ஒரு துன்பியல் தன்மையை இம்மனிதர்களுக்கு அளிக்கின்றன. இதுவும் கவிதைகளின் முக்கிய அம்சமாகிறது. கவிதைகளில் மாத்திரமல்லாது சிறுகதைகளும் இத்தகைய விடயங்களை கையாளுகின்றன. அலையும் தொலைவு (கார்த்தி நல்லையா 1994) போன்ற சமீப காலக்கதைகள் நிறவாதத்தாலும் முதலாளித்துவத்தாலும் தாக்கப்படுவது பற்றி கூறுவனவாகும்.

இவ்வாறு சொந்தநாட்டு நினைவு நிகழ்கால அகதிநிலையின் யதார்த்த நெடுக்கடிகள், எதிர்காலம் பற்றிய வினாக்கள் ஆகிய யாவும் ஒரு கூட்டாகப் புலம் பெயர்ந்தோர் மத்தியிலிருந்து வெளிவரும் இலக்கியங்களில் இடம்பெறத் தொடங்கியுள்ளன. இவ்வகையில் இந்த இலக்கியங்கள் இலங்கைத்தமிழ்ப் புலம் பெயர் மக்களது கூட்டுநினைவையும் கூட்டு அனுபவத்தையும் பேசுகின்றன.

**சுய அடையாளத்துக்கான நிர்ப்பந்தம்**

வெள்ளை இன மேம்பாடு பற்றிய உணர்வு மிக்க ஐரோப்பிய சமுதாயங்கள் பல நூறுவருட காலமாக யூத இனத்தவர் பற்றிய குரோத உணர்வை இன்னமும் ஒழிக்கவில்லை. நாடோடிகள் பற்றிய தவறான கருத்துக்களும், பகைமை உணர்வும், இன்னமும் பரவலாக உள்ளன. இவ்யதார்த்த சூழல்

நம் மீது சுய அடையாளத்தை திணிக்கிறது. கறுப்பன், அந்நியன், அகதி என்றே நாம் காணப்படுகிறோம். அயல் நாட்டில் குடியேறி அதில் ஒரு பகுதியாகிவிடுவதாக தீர்மானித்த வர்களும் தமது சுய அடையாளம் பற்றிய பிரச்சினையை தீர்க்க இயலாதவளர்களா கின்றனர். அகதிகளாக வந்தவர்களது பிரச்சினை சங்கடமானது. எதிர்காலம்பற்றிய நிச்சயமின்னையால் ஒரு புறம் நமது பழைய சுய அடையாளத்தை பேணும் நிர்ப்பந்தத் தாலும் மறுபுறம் புதிய சூழலில் யதார்த்தத் துக்கு ஈடுகொடுக்க வேண்டிய தேவையாலும் ஒரு கலாச்சார இழுபறிக்கு உள்ளாகின்றனர்.

பழக்கப்பட்ட குடும்ப உறவுகளும், தொழில் உறவுகளும், சமுதாய உறவுகளும் புதிய சூழலை உள்ளவற்றினின்று வேறு பட்டவை என்பதை அறிந்தாலும் நமது அணுகுமுறைகளை மாற்றுவது எளிதல்ல. ஒரு பெண்ணும் குழந்தைகளும் எவ்வாறு குடும்பத்தலைவனது ஆணைக்கு கட்டுப்பட்டு இயங்க வேண்டும் என்பது பற்றியும் தமது ஆணாதிக்க கோட்பாடுகளை புதிய சூழலில் குருட்டுத்தனமாகப் பிரயோகிக்கின்றோம். சாதி வேறுபாடுகளும் சமுதாய அந்தஸ்து பற்றிய வரட்டுக்கௌரவங்களும் நம்முடனே கூட இருக்கின்றன. நமது உணவுப்பழக்க வழக்கங்களை மாற்றிக் கொள்வதும் இலகு வானதாக இல்லை.

## குடும்பநிர்வாகத்தை நடாத்தும் பாங்கு

குடும்பத்தை வழி நடத்திச்செல்வது ஆன்மகனுக்கே அல்லது குடும்பத்தலை வனுக்கு உரியதாகும். பெண்கள் சமையலில் ஈடுபடல், குழந்தைகளை பராமரித்தல், வேறு இதர வேலைகளில் ஈடுபடல் போன்றவற்றை செய்வதற்கு கடப்பாடு உரியவர்கள். சமையல், முதல் குழந்தை வளர்ப்பு வரை வீட்டுப் பொறுப்பு முழுவதையும் பெண்களே ஏற்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பு. வேலைக்கு போகும் பெண்களிடையே சுமத்தப்படுவது ஈழத்து தமிழ் மக்களிடையே ஊறிப்போன வழக்கங்களில் ஒன்றாக காணப்படுகின்றது. இவ்வாறான பெண்களின் வேலைகளில் ஆண்கள் பங்குபற்றுவது ஆண்மைக்கு இழுக்கு என்ற மனோபாவம் இதற்கு ஒரு முக்கியகாரணமாகும். குழந்தைகளை குறிப் பிட்ட வயது வரை அடிப்பது இல்லை பெற் றோருக்கு தண்டனையை வழங்கல் முதலான கடப்பாடுகள் இப்போது நிலவிவருகின்றன.

குழந்தையின் நச்சரிப்பு தாங்காமற் கேட்டதையெல்லாம் வாங்கிக் கொடுக்கும் பழக்கமும் பரவலாக உள்ளது. பெற்றோருக் கும் பிள்ளைக்குமிடையிலான உறவின் இறுக் கத்தை ஒரு மரபு விழுமியமாக இருப்பதை நாம் விரும்புகிறோம். திருமண வயது வரை பெற்றோர் சொற்படிவை பிள்ளையிடம் எதிர் பார்க்கும் நாம் அவ்விதமான உறவை சாத்திய மாக்கிய சூழல் இங்கே இல்லை என்பதை மறந்து விடுகிறோம். இந்நிலமை நமது தாய் நாட்டிலும் கூட மாறிவரும் போக்கை அவதானிக்கலாம்.

குறிப்பிட்ட வயதுவரை கல்வி கற்று பின்வேலை தேடுவதற்காக பிள்ளைகள் பெற்றோரிடமிருந்து பிரிக்கப்படுகிறார்கள். ஆகவே பெற்றோருக்கு பிள்ளை குறிந்தவயது கடந்தும் பாரமாக இருக்கும் நிலை காணப்பட வில்லை. ஆனால் மறுபுறம் பெற்றோருக்கும் பிள்ளைக்கும் இடையே உள்ள பாசப் பிணைப்பு மாறாக குறைந்து செல்லும் போக்கை கொண்ட சூழல் உருவாகிறது. இதனால் குடும்பங்களுக்கு இடையிலான இடைவெளி அதிகரிக்கின்றது. பிள்ளையின் பெற்றோர் முதிய வயதை அடைந்ததும் பிள்ளையிடமிருந்து பிரிந்து முதியோர் இல்லங்களில் தங்க வைக்கப்படுகின்றனரர். இவ்வாறான நிலை எமது ஈழநாட்டிலும் பரவி வருவதை நாம் காண்கிறோம்.

எமது நாட்டை போல் அல்லாமல் மேலை நாடுகளில் பாலியல் கல்வி உரிய வயதில் பிளளைக்கு கற்பிக்கப்படுகிறது. இதனால் ஆண், பெண் வர்க்க வேறுபாடு இன்றி இருபாலாரும் சேர்ந்து இயங்கும் நிலமை காணப்படுகிறது. சிலவேளைகளில் பாலுணர்வு சார்ந்த பிரச்சினைகளுக்கு முகங் கொடுப்பதை தவிர்ப்பதற்கு பாதுகாப்பான உடலுறவு தேவையும் நிறவேற்றப்படுகிறது.

இதனால் எயிட்ஸ் முதலிய ஆட்கொல்லி நோய்களுக்கு உட்படும் ஆபத்து குறைவாக இருப்பதும் காணப்படுகிறது. ஆனால் மேலை நாட்டிலிருந்து தாயகம் திரும்புவோரில் குறிப்பிட்ட வீதத்தினரை இந்நோயின் பாதிப்பை நாம் கண்டு கொள்ளலாம்.

இருப்பினும் முறையற்ற உடலுறவு, தவறான உணவுப்பழக்க வழக்கங்கள், கலாசார நடத்தைகளில் ஏற்படும் மாற்றங்கள் முதலியன நமது நாட்டுச் சூழலுக்கு ஒவ்வாத வையாக கருதப்படுகின்றன. ஒருவனுக்கு ஒருத்தி என்ற தமிழர் பண்பாட்டை நமது சமூகம் பேணிவருவது முக்கியமான ஒன்று. ஆனால் கால மாற்றங்களுக்கு ஏற்ப இவற்றின் தாக்கத்திலிருந்து நாம் விடுபடமுடியாதவர் களாக உள்ளோம். எனவே தமிழினம் தமது பண்பாட்டை பேணுவதற்கு அல்லது தக்க வைத்துக்கொள்வதற்கு தாம் தாம் விழிப் புணர்வு உடையவர்களாக மாற வேண்டும்.

இதனால் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் கூறிச்சென்றார் திரு வள்ளுவர். அறநூல்களில் ஒன்றாக போற்றப் படும் திருக்குறளில் ஒழுக்கக்கருத்தை கூறவந்த வள்ளுவர் ஒழுக்கமுடைமை எனும் அதிகாரத்தில் (இல.14)

ஒழுக்கம் விழுப்பம் தரலான் - ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்

என அறக்கருத்தை வலியுறுத்து கின்றார். எனவே உயிரை விட மேலானதாக நமது ஒழுக்கம் போற்றப்படுகிறது. ஆகவே தமிழர் வாழ்வியலில் ஒழுக்கம், அறம், அன்பு, பொறை முதலிய விழுமியங்களை போற்றி வாழுதலே தமிழ் மக்களின் தலையாய கடமை ஆகின்றது.

ஆகவே தாய்நாட்டு தமிழ் மக்களின் பழக்கவழக்கங்கள், இங்கே நிலவும் சம்பிர தாயங்கள், சடங்குகள் என்பன புலம்பெயர் தேசங்களில் சிற்சில மாறுதல்களுக்கு உட்படவும் வாய்ப்பு ஏற்படுகின்றது. அது

"காலம் என்பது கறங்கு போல சுழலும் - மேலது கீழதாய்
கீழது மேலதாய் மாறிடும் தோற்றம்"

என பேராசியர் சுந்தரம்பிள்ளை மனோன்மணியம் என்ற நூலில் குறிப்பிடுவது நாம் நினைவில் கொள்ள வேண்டும். அது பிறப்பிலிருந்து இடுகாடு செல்லும் வரை நமது வாழ்வியல் கோலங்களை மாற்றியமைக்கிறது என்றே கொள்ளவேண்டும்.

இதைவிட மரபு பேணல் எனும் நிலையில் நம்மவர்கள் இன்னும் சாதியம், சோதிடம், சீதனம், பிறப்பு என பல நிலைகளில் உட்படுத்துகின்றனர், நம்மரபு என்ன என்ற தெளிவோ, அதன் சாராம்சமோ அது புதிய சூழலுக்கு ஏற்ப மாறவேண்டிய தேவையோ பற்றிய அக்கறை நம்மிடம் இல்லை அது மட்டுமன்றி நமது பழைய சமுதாய வழக்கின் இழிவான சில அம்சங்களை இன்னமும் பேணுகின்றோம். நிச வாழ்வின் தேவைகள் அவற்றுக்கு எதிராக செல்லும் போது நாம் அவற்றைவிட்டுக் கொடுத்தாலும் அவற்றின் மீதுள்ள பிடிப்பு நம்மைவிட்டு விலகுவதில்லை.

"இன்று புதிதாய் பிறந்தோம்" என்ற மகாகவி பாரதியின் கோட்பாட்டை நாம் நினைவிருத்தி பல சீர்திருத்த திருமணங்களை நடாத்துதல், சமபந்திபோசனம், ஆலய பிரவேசம், கல்வி கற்கும் உரிமை போன்ற புதுமையான புரட்சிகளை ஏற்படுத்துவதன் மூலம் இம மூடநம்பிக்கைகள் ஒழிய வாய்ப்பு ஏற்படுகின்றது. அப்போது ஒரு புதுயுகம் ஒன்று பிறக்கும் என்பதை மறுப்பதற்இல்லை.

ஆகவே எமது எதிர்காலம் புலம்பெயர் இலக்கியங்களின் செல்நெறியில் எவ்வாறு செல்கின்றது. என்பதை மேற்போந்த கட்டுரை விளக்குகின்றது. புலம்பெயர வேண்டிய தேவை ஏன் எழுந்தது? அவ்வாறு புலம்பெயர்ந்து சென்றோர் எக்காலப் பகுதிக்குள் சென்றனர்? அங்கே தமது வாழ்வியலை எவ்வாறு நகர்த்துகின்றனர்? என்பதை மேலே கூறி யுள்ளேன். அவர்களின் மொழி, அவர்களின் அகதிநிலை, இலக்கியமுயற்சிகள், அரசியல் பின்னணி மற்றும் வாழ்வியல் அம்சங்களாகிய உணவு பழக்கவழக்கம், விழாக்கள் முதலியன வற்றுக்கூடாக முழுமையாக அன்றி ஒரு குறிப்பிட்ட விடயங்களை மட்டும் ஆய்வுக்கு அடுத்து விளக்கியுள்ளேன். இது முழுவதும் விரிவாக ஆராயப்படவேண்டியதொன்று. புதிய

ஒரு நூலுருவில் இதை வெளிக்கொணரலாம். ஆனால் வரையறை கருதி இவ்விடய தானங்களை மட்டும் எடுத்து ஆராய்ந்தேன்.

புலம்பெயர் இலக்கியங்களில் கவிதை, சிறுகதை, நாடகம், விமர்சனம் போன்ற இன்னோரன்ன அம்சங்களை தனியாக நோக்க வேண்டிய தொன்றாகும். நமக்குகிடைத்த சில கவிதைப்படைப்புக்களை வைத்து புலம்பெயர் கவிதை பெறும் செல்வாக்கு பற்றி இங்கு குறிப்பிட்டுள்ளேன். அவற்றை ஆக்கிய படைப்பாளிகளையும் எனது அறிவுக்கு எட்டியவரை எனக்கு கிடைத்த சான்றுகளைக் கொண்டு இக்கருப் பொருளை எழுத துணிந்தேன்.

தமிழ்மொழியின் முக்கியத்துவம் பற்றி சிறிது அலசியுள்ளேன் அவ்வவ் நாடுகளில் தேசியமொழியில் கல்வியை கற்று வருகின்ற சிறார்கள் அம்மொழியைப் படிப்பது காலத்தின் கட்டாயமாகின்றது. ஆனாலும் நமது தாய்மொழியாகிய தமிழையும் கற்பதற்கு அவர்கள் முன்வரவேண்டும். தமிழ் மாநாடுகளை நடாத்துதல் தமிழ் நூல்களை அரங்கேற்றுதல் தமிழ் படைப்பாளிகளை இனங்கண்டு அவர்களை ஊக்குவித்தல் போன்ற செயற்பாடுகள் ஊடாக தமிழ் மொழிக்கல்வியை வளம்படுத்தலாம் என நினைக்கிறேன்.

“யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் எங்கும் இனிதாவது காணோம்” என்ற பாரதியின் கவிவரிகளை நினைவு கூர்ந்து மெல்லத்தமிழ் இனிச்சாகும் என்ற பாரதியின் வாக்கை முன்வைத்து இக் கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

**திரு.ம.பங்கயன் M.A**

**உசாத்துணை நூல்கள்**


1. தமிழர் நாகரிக வரலாறு முதற்பதிப்பு 1993 (முனைவர் பா. இறையரசன்)

2. திருக்குறள் தெளிவுரை (டாக்கடர் மு.வரதராசன்)

3. இலங்கைக் தமிழரின் புலம்பெயர் இலக்கியம் சித்திரலேகா மௌனகுரு (முதற்பதிவு (1995)

4. ஜீவநதி கவிதைச்சிறப்பிதழ் - மார்கழி 2014 க. பரணிதரன்

5. புலம்பெயர்ந்த தமிழன் சாமிஅப்பாத்துரை (முதற்பதிப்பு 1995)

6. புலம்பெயர்ந்த தமிழர் நல மாநாடு சிறப்புமலர் டிசெம்மர் 1994

7. இரண்டாவது அனைத்துலக திருக்குறள் மாநாடு (Abseraets of the conference Papers)

8. ஊதா (1992) ஜேர்மனி

9. சக்தி (1990) நோர்வே

10. தமயந்தி தலைப்பிடப்படாத கவிதை ஓசை பிரான்ஸ்

11. ஜெயபாலன் (1989) இலையுதிர் கால நினைவுகள்

12. அரவிந்தன் கி.பி (1993) முகங்கொள்

13. Selvadurai sbyam (1994) Funny Boy

# அப்பர் அடிகளில் உவமைகளும் உருவகங்களும்

செய்யுள் அணியுடையதாயின் சிறப்பைப் பெறுகிறது. நன்னூலார் "எழு வகைத் தாதுவின் உயிர்க் குடல் போல் பல சொல்லால் பொருட்கிடனாகச் செய்வன் செய்யுள்" என்றார், "உணர்வினின் வல்லோர் அணிபெறச் செய்வன் செய்யுள்" என்றார் பணவந்தி முனிவர்.

அணியில் சொல்லணி பொருளணி இரண்டையும் உணர்ந்து சொல்லணி எழுத்து, சொல், மடக்கு என்பவற்றைக் கூறும். பொரு ளணி தன்மை, உவமை, உருவகம் முதலிய அணிகளைக் கூறும் அணி இன்றிய செய்யுள் இலக்கிய அழகுக்கு ஏற்புடைத்தன்று.

திருநாவுக்கரசரின் தேவார திருப்பதி கங்களில் எத்தனையோ அணிகள் இயல்பாக அமைந்துள்ளன. அவற்றுள் உருவக, உவமை அணி பற்றி சிந்திப்போம். உருவக அணி என்பது உவமைக்கும், உவமேயத்திற்கு வேறுபாடு ஒழிந்து ஒற்றுமை உள்ளது எனக் கூறுவது ஒரழகு. உருவக அணி தொகை, விரி, தொகை விரி, இயைபு, உருவகம் என பதினைந்து குறக்குல் அமையும் என்று தண்டியலங்காரம் கூறுகின்றது.

"பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறு" என்றது உவமை "மேனிப் பவளம்" என்றது உருவகம் உவமேயம் ஆகிய மேனியில் உவமையாகிய பவளத்தை ஏற்றி யொன்றாகக் கூறியது.

"வெந்த நீ நருங்கலம் விரதி கட்கெலாம்
அந்தணர்க் கருங்கலம் அருமுறை யாறங்கம்
திங்களுக் கருங்கலம் திககுழும் நீண்முடி
நங்களுத் கருங்கலம் நமச்சி வாயவே
பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரன் அஞ்சாடுதல்
கோவிலுனுக் கருங்கலம் தோட்டம் இல்லது
நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே"

"நல்லக விளக்கது நமச்சி வாயவே" எனத் திருநீற்றையும் வேதரங்கங்களையும் சிவவேணியையும் தாமரையையும் பஞ்ச கவ்வி யத்தை ஆடதலையும், தோட்ட மின்மையையும் நமச்சி வாயத்தையும் "அருங்டகலம்" ஆக உருவகித்துள்ளார்.

"முத்தினை மணியைப் பொன்னை முழுமுதற்
பவளம் ஏய்க்குங்
கெர்தினை வயிர மாலைக் கொழுந்தினை
அமரர் சுடும்
வித்தினை வேதவேள்விக் கேள்வியை

என்ற உருவகத்தை அழகிதாக கூறியிருப்பது மனங்கொள்ளத் தக்கது.

"உடம்பெனும் னையகதுள்
உள்ளமே தகளியாக
மடம்படும் உணர் நெய்யாட்டி
உயிர் எனும் திரிமயக்கி
இடம்படும் ஞானத் தீயால்
எரிகொள இருந்து நோக்கி
கடம்பமர் காளை தாதை
கழலடி காணலாமே"

இருள் உடம்பாகிய வீட்டில் மன மாகிய மண்ணகலில் பாசஞானம் பசுஞானம் ஆகிய நெய்யைஇட்டு உயிராகிய கிரியைக் கலந்து பகிஞானமாகிய தீயாற் சுடர் கொள்ள இருந்த பதியை நோக்கு அவனே தானே அந்நெறியேனாகிய இறை பணி நின்று அயரா அன்பு செய்யின் நடம்பின் தாதையின் கழலடி

நிழலில் இறுமாற்திருக்கலாம் என உபதேசத் தருளினார்.

வேறு ஒரு நேரிசையில் இவ்வுடலை நம் உடல் அன்று அவன் கோயில் என்று உருவகப்படுத்தும் அழகு விதந்துரைக் கத்தக்கது.

"காயமே கோயில் ஆகக்
கடிமனம் அடிமை ஆக
வாய்மையே தூய்மை ஆக
மனம் மணியிலங்கும் ஆக
நேயமே நெய்யும் பாலும்
நிறைய நீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்றவிந்
காட்டினோமே"

அகத்துறை வானை அகத்திலே தான் தேடி அறிந்து கொள்ளல் வேண்டு பறத்திலே தேடி பொழுது போத்தலாதாது என்று உணர்வர் மேலே சூட்டிய உன் ஒளியை உணர்வதற்கு இவ்வுருவத்தை தற்கும் போது இத்தேனை அள்ளி துரவுலர்

"பாடுவார் பணிவார் பல்லாண்டிகை
கூறுபக்தர்கள் சித்தத் துட்புக்குத்
தேடிக் கண்டு தொண்டேன்
திருவாரூர் அம்மானே
தேடிக் கண்டு கொண்டேன்
திரு மாலொடு நான் முகனும்
தேடிக் தேடொணாத் தேவனை என் உள்ளே
தேடிக் கண்டு கொண்டேன்"

நாலாந் திருமுறையில் பதினைந் தாவது திருப்பதிகத்தில் முழுவதும் உருவமே பற்றற்றார் சேரும் பழம் பதிப் பொருளாய சிவத்தை பணிந்தெழுவார் பாவம் நாசமாகும் உண்மையை அத் திருப்பதிகத்தைப் பாரா யணம் பண்ணுவார் அனுபவத்தில் அறிவர். இப்பதிகத்தில் அப்பரின் உருவக ஆட்சி அருட்பேறுடையது என்றால் மிகையல்ல மாணிக்கம், அருமணி, பவளம், முத்து மருந்து, வலம்புரி எனக் கடல்படு பொருளா யும், பொன்னாயும், சுடர், மகி, ஞாயிறு, வளர்மதி, கண் முதலியனவும் கரும் பாயும், கரும்பின் இனிய சாறாயும், மலர், கனி, தேனாயும், எழிலேறு, பேரேறு, அடலேறு முதலியனவாகவும் உருவகித்துள்ளார்.

தமிழகம் தழைக்க தமிழினம் வாழ்க, தமிழ்ச் சமய் சிறந்த தோன்றிய அருட் சான் றோர்களில் ஒருவராய், தூய நற்நொண்டின் மாட்சியை, செழுமையை, சிறப்பை தொல்லு நத்தார்க்கு உணர்த்தியவராய்த் திகழும் திருநாவுக்கரசராம் அப்பரடிகள் அவனருளே கண்ணாக் கொண்டு அவன் தாள் வணங்கி, ஆரா இன்பந் துய்த்த அனுபூதித் செல்வராவார்.

ஆண்டவனின் திருவடிகள் தன் தலை மீது துட்டப்பெற வேண்டும் என்ற ஆராந் நாதல் கொண்டார். அப்பரடிகள் கருத்தறிந்து குடிப்பா னாகிய இறைவனும், நல்லூர்க்கு வா, "உன் நினைப்பதனை முடிக்கின்றோம்" என்றருள் அங்கு சென்று சென்னி மிசைப் பாதமலர் சட்டப் பெற்றார். தன் தலையின் மீது வைக்கப் பட்ட இறைவன் திருவடி எவ்வாறிருந்தது என்பதனை நல்லூர்த் திருத் தாண்டகப் பதிகம் முழவதிலும் விளக்கியுள்ளார். நினைந்துருகும் எனத் தொடங்கும் பதிக முதல் தாண்டகத்தில்

"சிறந்து வானோர் இனம் துறவி
மணி மகுடம் தேறதத் துற்ற – இன மலர்கள்
போத விழ்ந்து துவாய்ப் பில்கு நனைந் தனைய
திருவடி என் தலைமேல் வைத்தார்."

என்கிறார்

"சிறைவான் புனல் தில்லை
சிற்றம்பலத்தும் என் சிந்தையுள்ளும்"

என்னும் மணி மொழியில் இறைவன் தன் சிற்றம்பலப் பெருமையும் வாதவூரர் தன் சிந்தனையின் சிறுமையை புலப்படுத்தியது போல "நனைந்தனை திருவடி" என்பதில் ஆண்டவன் திருவடிப் பெருயையும் "என் தலைமேல்" என்பதில் தன் தலையின் சிறுமையையும் புலப்படுமாறு காட்டி இறை வனின் பேரட்டிறத்தை விளக்குகிறார். அப்பரடி கள் நாவலூர் இறைவனை வணங்கி மகிழ்ந்து எழும் பொதில் சென்னிமிசைப் பாதமலர் சூட்டினார் என சேக்கிழார் பெருமான் கூறியுள்ளாார்.

நரி ஒன்று தன் வாயிற் கவ்விய உன் தசையோடு நீரைக் கடக்கின்றது நீரில் கண்ட இரால் மீனைப் பற்ற நினைத்து தன் வாயிலிருந்த தசையினை இழந்து விடுகின்றது மக்களும் தன்னுள் உயிர்க்குயிராய்த் திகழும்

சிவத்தினை பாசப்பற்றுகளால் கவரப்பெற்று இழந்து விடுகின்றனர். இவ்வுண்மையைத் தேர்ந்து உணர்கின்றவர்களின் மன மயக்கத்தை தீர்க்கும் சிந்தையைச் சிவ பெருமான் மேற் கொள்கின்றாராம். இதனை

"நரிவரால் கவ்வர் சென்று நற்றசை
இழந்த தொத்த
தெரிவரான் மால் கொள் சிந்தை தீர்ப்பதோர்
சிந்தை செய்வார்"

என்றும் அழகிய கதை உவமையால் உணர்த்துகின்றார்.

புண்ணிய கீர்த்தியாகிய அப்பரடிகள் வெகுளி மயக்கத்தால் உலக மக்கள் நிலையினை நினைந்து அவர்களை உய்விக்கும் பொருட்டு அவர்கள் படும் துன்பங்களையும் காரணங்களையும் தாமே ஏற்றிக் கொண்டு பேசு பாசுரங்கள் நயமிக்கன.

வஞ்சப் புலன்கள் ஐந்தும் ஐந்து கள்வர்களாய் வளைத்து நின்று ஆன்மாவை நடுங்க செய்கின்றன. அதனை அறியாது ஐம் பொறிகள் வசப்பட்டு பல இன்பங்களில் நினைத்து ஆடிச் செய்வதறியாமல் மகிழ்ந்து பின் திகைக்கின்றன. ஆன்மாக்கள் பேதமையால் ஆன்மாக்கள் படும் வேதனையை அரியதோர் உவமையால் தெளிவுபடுத்து கின்றார்.

ஆமை ஒன்றை நீர் நிலையின்றி பிடித்து வந்து உணவாக்குவதற்காக எரியூட்டி அடுப்பேற்றி உலை நீரில் இடுகிறார்கள். தப்பிச் செல்ல முடியாத பாத்திரச் சிறையினை அவ்வாமை உணர்வதில்லை! அவ்வுலை நீர் தன்னை துன்புறுத்தி கொல்லுவதற்குள்ளது என்பதையும் உணர்வதில்லை! தொடக்கத் தில் வெது வெதுப்பாக இதஞ் செய்யும் அந் நீரை பெரிதும் உவந்து தெளிவின்றி அதன் கண்ணே திளைத்தாடா நிற்கின்றது வரப்போகும் அழிவினை அறியாது, மகிழ்ந் தாடா நிற்கும் ஆமையின் அறியாமையை பேதமையின் பாற்பட்டு அழிவினை உணராது உலக சிற்றின்பத்தில் திளைக்கும் எண்ணற்ற மாந்தர் நிலைக்கு உவமைப் படுத்தியது நினைக்குன்புறத் தக்கது.

"வளைத்து நின்று ஐவர் கள்வர்
வந்தெனை நடுக்கஞ் செய்யத்
தளைத்து வைத்து உலையை ஏற்றி
தழல் எரி மடுத்த நீரில்
திளைத்து நின்று ஆடுகின்ற
ஆமைபோல் தெளிவிலா தேன்
இளைத்து நின்றாடு கின்றேன்
என் செய்வான் தோன்றினேனே"

இன்னோர் செய்யுளில் அப்பரடிகள் உவமை போற்றுதற்குரியது ஈசன் இணையடி நல்கும் நிழல் கண்டு, கேட்டு, உண்டு உயிர்த்து உற்று, அறியும் ஐம்புலனுக்கும் ஆராத பேரின்பம் தரவல்ல தன்மையை வீணை, மகுடம், தென்றல், இளவேனில் பொய்கை, என்னும் உவமைப்பயனில் வைத்துக் காட்டுவது இன்புறத் தக்கது இறைவன் இணையடி நிழல் ஐம்புலனும் ஒருங்கே நுகரும் பேரின்பத்தை அளிக்க வல்லது என்ற சிறப்பினை அடுக்கி உரைத்த உவமை ஆற்றலால் உணரலாம்.

மேலும் அப்பரடிகளின் திருவாக்கில் உறுகயிறு ஊசல், கரும்பினில் கட்டி, கழி யினைத் தோணி, கண்ணிடை மணி, மித்துறு தயிர், மன்றத்துப் புன்னை என்றவாறாக உவமச் செம்மிகள் ஒளிரக் காணலாம்.

எனவே அப்பர் பாடல்கள் கருத்தாழம் மிக்கனவாயும், உணர்ச்சி தோய்ந்தனவாயும், கற்பனை வளம் மிக்கனவாயும், நலங்கள் செறிந்த செந்தமிழ்ப் பேழைகளாக இப்பதிகத் தின் கண் அமைந்துள்ளன. அவர் தம் தேவார பதிகங்களிடை ஒளிரும் உருவக, உவம நன்னமணித்குரளை நாம் புறக் கணித்து விட முடியாது அவை கற்பாரை களிப்புறுத்தித் கவின் செய்யும் நவமணிகளாம் இப் பயன் கொண்டு ஒளிபெறுவது கற்போர் கடனாகும்.

இம் மலருக்கு கட்டுரையை எழுதித் தருமாறு கேட்ட குடும்பத்தினருக்கு உளங் கனிந்த நன்றிகள் உரித்தாகும். குறிப்பாக எமது குருநாதனின் அமரர் சிவகுரு சோமாஸ் கந்தராஜா குருக்களின் திருவடிகளைத் தொழுது ஆக வேண்டி நிற்கின்றேன்.

மாணவன்
ம.பகீரதன்

# சைவ விழுமியங்கள்

எல்லாம் வல்ல இறைவனை முதலில் மனதில் நிறுத்தி முத்தமிழ் வாழ முத்தான இந்நேரத்தில் சைவ விழுமியங்கள் எனும் இக்கட்டுரையை வரைகிறேன்.

மனிதன் மனிதனாக வாழ வேண்டும். மனிதன் விலங்கு போலன்றி மேம்பாடுமிக்க வாழ்க்கையை நடாத்துவதற்கு அவன் சில நற்பண்புகளைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாகிறது. மனித வாழ்க்கையை மேம்படுத்த உதவும் பெறுமதிமிக்க வாழ்க் கைப் பண்புகள் விழுமியங்கள் னப்படு கின்றன. அன்பு, அஹிம்சை, மனக்கட்டுப் பாடு, உண்மை, நேர்மை, சாந்தி, நன்ன டத்தை, ஈதல், நன்றிமறவாமை, முதியோரை மதித்தல் என்பன விழுமியப் பண்புகளாகும்.

விழுமியம் என்பது அகம் சார்ந்தது, மனிதனிடம் உள்ளார்ந்து காணப்படும் உணர்வுகள், எண்ணங்கள் பண்படுத்தப் பட்டு, தூய்மைப்படுத்தப்பட்டு வெளிப் பாடாகும் போது விழுமியங்கள் தோன்று கின்றன. மனித உள்ளங்களில் ஊற்றெடுத்து. விழுமியங்களின் வெளிப்பாட்டினை ஒழுக்கத் தின் மூலமே காண முடியும். பேச்சிலும் செயலிலும் ஒழுக்கம் துலங்கும் போது தான் அதனை மதிப்பீடு செய்ய முடியும். இதே விழுமியங்கள் சமய வாழ்க்கைக்குப் பயன்படுத்தப்பட்டு நம்மை ஆன்மீக வழியில் இட்டுச் செல்லுமேயானால் அவை சமய விழுமியங்கள் எனப்படுகின்றன.

தற்போது அவற்றில் சிலபற்றி விரிவாக நோக்கலாம். முதலில் அனை வருக்கும் அவசியமான ஆனால் எல்லோரிடத் திலும் இல்லாத மனவடக்கம் என்னும் விழுமியத்தை நோக்கலாம். நம் எண்ணங்கள் உதிக்குமிடம் மனம் ஆகும். மனதில் உதிப் பவையே வாக்காகவும் செயலாகவும் வெளிப் படுகின்றன. முதலில் மனம் அடங்க வேண்டும். மனம் அடங்கினால் தான் வார்த்தைகளும் செயலும் கட்டுப்பாட்டிற்குள் வரும். ஒரு வேளை மனம் அடங்கினால் குற்றங்களும் தவறுகளும் கூடக் குறைந்து விடலாம். அது மட்டுமல்ல இறைவனை வழிபடவும் மனக் கட்டுப்பாடு அவசியமாகின்றது, "அளப்பரும் கரணங்கள் நான்கும் சிந்தையேயாக..." என்று சேக்கிழார் அருளியுள்ளார். ஆறுமுக நாவலரும் "மனம் பொறிவழிப் போகாது நிற்றற் பொருட்டு..." என்று வழிபாட்டில் மனக் கட்டுப்பாட்டின் அவசியம் பற்றி வலியுறுத்து கிறார். கல்வியில் மேன்மை பெறவும் மனக்கட்டுப்பாடு தேவை. மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புலன்களின் வழியே மனமானது அலைந்து கொண்டிருப்பின் வழிபாட்டிலும் கல்வியிலும் முழுமையாக ஈடுபட முடியாது. யோகப் பயிற்சி, மூச்சுப் பயிற்சி, தியானப்பயிற்சி என்பன மனக்கட்டுப் பாட்டிற்கான சாதனங்களாகும். மனக்கட்டுப் பாட்டுடன் நாம் வாழ்ந்தால் வாழ்வில் வெற்றி பெறலாம்.

அடுத்து நன்றிமறவாமை என்னும் நற்பண்பைப் பற்றி நோக்கலாம். இராமா யணம், மகாபாரதம், திருக்குறள் என நன்றி மறவாமையை எடுத்துரைக்கும் நூல்களின் வரிசை நீண்டு கொண்டே செல்கிறது.

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று"

என வள்ளுவர் நன்றி மறவாமையின்

பண்பை எடுத்துரைப்பார். என்ன பாவம் செய்தாலும் பரிகாரமுண்டு ஆனால் செந்நன்றி மறந்தால் அப்பாவம் நம் ஏழெழு ஜென்மம் பின்தொடர்ந்து வரும்.

கர்ணன், கும்பகர்ணன் போன்றோர் செந்நன்றி மறவாது வாழ்ந்தவர்கள் ஆவார். பாண்டவர்கள் தனது உடன்பிறந்த சகோதரர் கள் என்றறிந்தும் தனக்கு உப்பிட்ட நண்பனுக் காகவே போர் புரிந்தான் கர்ணன். தன் அண்ணன் செய்வது தவறு என்று அறிந்தும் தனக்கு அன்னமிட்ட நன்றிக்காகப் போர்க் களம் சென்று உயிர்துறந்தான் கும்பகர்ணன். செந்நன்றிக்காக இவர்கள் அதர்மத்திற்குத் துணைபோனாலும் இவர்கள் புகழ் இன்றும் நின்றுநிலவுகிறது. "உப்பிட்டவரை உள்ளவும் நினை...; அன்னமிட்ட வீட்டில் கன்னமிட லாமா?" போன்ற பழமொழிகளும் நமக்கு செந்நன்றியின் அவசியத்தை வலியுறுத்து கின்றன. நாமும் நம் மூதாதையர் காட்டிய வழிநடந்து செந்நன்றி மறவாத நற்பண்பைப் பேணி வாழ்வில் உயர்வடைவோமாக

அடுத்து, முதியோரைக் கனம் பண்ணுதல் என்னும் முக்கிய கடமையைப் பார்க்கலாம். நம்மைவிட வயதிலும் அறிவிலும் அனுபவதத்திலும் மூத்தவர்களாக முதி யோர்கள் உள்ளனர். நாம் குழந்தைகளாக இருந்தபோது அவர்கள் எமக்கும் பலவழி களிலும் உதவி செய்துள்ளனர். எனவே இப்போது அவர்களுக்கு உதவி செய்வது எமது கடமையாகும் எமது பெற்றோரின் பெற்றோரையும் ஏனைய முதியவர்களையும் இகழக்கூடாது. அவர்களது தளர்வு, மறதி என்பவற்றைப் புரிந்து நடக்க வேண்டும். வீட்டிலுள்ள முதியோர்களைக் கொண்டு போய் முதியோர் இல்லத்தில் விடுதல் இன்றைய நாகரிகமாகிவிட்டது. அவ்வாறு நாம் செய்வது மிகப் பெரிய பாவாகும். அவர்களை நாம் சுமையாகக் கருதக் கூடாது. அவர்களது அன்பு, அறிவு, அனுபவம் என்பன எமக்கு என்றென்றும் துணைசெய்யும் என்பதை நாம் மறத்தலாகாது. எனவே நாமும் முதியோரை மதித்து அவர்களை வணங்கி, ஆசிபெற்று வாழ்வில் உயர்வடைய வேண்டும்.

இவை மட்டுமல்ல இன்னும் பல விழுமியங்கள் எமது வாழ்க்கைக்குத் துணை செய்யும். இன்று உலகில் பல்வேறு நாடுகளும் கல்வியில் ஒழுக்க விழுமியங்களின் அவசியத்தை ஏற்றுக் கொண்டுள்ளன. நாகரிகம் என்பது கல்லாலும் உருக்கு இயந்திரத்தாலும் உருவாக்கப்படுவதல்ல. மனிதனின் பண்பாடு, நற்குணங்கள் என்ப வையே நாகரிகத்தை உருவாக்குகின்றன என்பது இந்திய அறிஞர் இராதாக் கிருஷ்ண ரின் கருத்தாகும். அத்தியாவசியமான விழுமி யங்களைக் கற்பிக்க கல்விமுறை நாட்டில் பாரதூரமான பிரச்சினைகளை உருவாக்கும். எனவே பாடசாலைகளில் விழுமியம் சார்ந்த கல்வியைக் கற்பிக்க வேண்டும். விழுமியங்கள் சமூகத்தில் பின்பற்றப்பட வேண்டும்.

வாழ்க தமிழ்!
வளர்க சைவ விழுமியங்கள்!

**செல்வி .சுவேந்தன் மாதுமை**

# பெரியபுராணம் உணர்த்தும் சில சமய பண்பாடுகள்

சோழர் காலத்தில் எழுந்த சைவசமய இலக்கியங்களில் ஒன்றாகவும் தமிழ் புராண வரலாற்றில் அடியார் வரலாறு கூற எழுந்த புராண வகைகளில் ஒன்றாகவும் திருமுறை வகுப்பிலே 12ம் திருமுறையாகவும் எண்ணப்படும் தகுதி சான்ற இலக்கியமே "பெரிய புராணம்". பெருமைக்குரிய தமிழ் புராணமாக விளங்கும் பெரிய புராணம் திருத்தொண்டர் பெருமையை வெளி கொண்டு வந்த பெருமை மிக்கது இதனால் இந்த புராணம் "திருத் தொண்டர் புராணம்" என்றும் அழைக்கப் படுகின்றது.

தொண்டர் பெருமையை வெளிப் படுத்தும் இவ் இலக்கியம் சைவ சமயத்தின் பொற்காலம் என்று சிறப்பிக்கப்படும் சோழர் காலத்தில் அநபாய சோழன் என்றழைக்கப் படும் 2ம் குலோத்துங்க சோழனின் முதன்மை மந்திரியா விளங்கிய அருண்மொழி தேவர் என்ற சேக்கிழார் ஆக்கமே பெரியபுராணம். இப்புராணம் சைவத்தில் சிறப்பிக்கப்படு வதற்கு பல காரணங்கள் இருந்தாலும் சைவ சமயத்தவர் வாழ்க்கைக்குரிய பண்பாடுகளை அடியவர்கள் வரலாற்றினூடாக வெளிக் கொண்டு வந்துள்ள பெருமையை கொண்ட தாகும். இறைவன் சேக்கிழாருக்கு இப் புராணம் பாட அடி முதல் அடியை எடுத்துக் கொடுத்தார் என்றும் மன்னன் பணிப் புரைக்கு அமைய அடியார் வரலாறு மக்களுக்கு சென்று சேர வேண்டும் என்ற நோக்கிலும் இப் புராணம் பாடப்பட்டது என்றெல்லாம் இப் புராண எழுச்சிக்கான காரணம் கூறப்பட்டா லும் அக்காலத்தில் மக்கள் பெரிதும் விரும்பிய காப்பியம் என்ற வடிவமைப்பை தாங்கி எழுந்த சைவப் பெரும் காப்பியமே பெரிய புராணம்.

காப்பிய வடிவத்தில் எழுந்து அன்றி லிருந்து இன்றுவரை சைவ சமயிகள் மத்தியில் பேணப்படும் சிறப்பை பெறுவதற்கு அவ்விலக் கியம் உணர்த்தும் பண்பாடும் ஒரு காரண மாகும். "பாண்பாடு" என்ற பதம் பண்படுத்தப் பட்ட வாழ்வியலை குறிப்பதாக கருத்துக் கொள்ளப்படுகின்றது. சைவப் பண்பாடுகளை அடியார் வரலாற்றினூடாக தர எழுந்த இந்த புராணம் இரு காண்டங்களை கொண்டதாக வும் 13 பகுதிகளாகவும் 4286 பாடல்களை கொண்டும் விளங்குகின்றது.

சைவம் சிவன் மேல் மட்டுமல்ல சிவன டியார் மேலும் அன்பு செலுத்துதலை பண்பாக கொண்டது அடியார் மேல் அன்புடைய சாதல் எனும் அன்பு நெறியை அடித்தளமாக்க கொண்டு விளங்கும் சைவ பண்பாட்டை முழுமை படுத்தி தர முற்படுகின்றது இப்புராணம். சைவ பண்பாட்டில் உன்னதமான நெறி "தொண்டு" கோயிற் தொண்டை சிறப்புறப் பேணிய நாயன் மார்கள் வரலாற்றை பெரிய புராணத்திலே காண் கின்றோம்.

பெரிய புராணம் குறிப்பிடும் அறுபத்து மூவருமே தொண்டு நெறி நின்றவர்களாயினம் பல்வேறு நிலைகளில் அவர்கள் தொண்டுகள் அமைந்தன. கோயிற் தொண்டில் அப்பர் சுவாமிகள், நமிநந்தி அடிகள் மூர்த்தி நாய னார், கணம்புல்லர், முருகநயினார் திரு நாளைக்குவோர் முதலானவர்கள் சிறப்புப் படுத்தப்படுகின்றன பாடித்தொண்டாற்றியவர் களில் திருநீலகண்ட யாழ்ப்பாண ஆனாய நாயனார் முதலானோரும் அடியவர்க்கு தொண்டு புரிந்தவர்கள் அப்பூதி அடிகள், கணநாத நாயனார், நரசிங்க முனையர் போன்றோரும் கோயில்களை யாத்திரை

செய்து பாடி பரவி தொண்டு புரிந்த காரைக்கால் அம்மையார் அப்பர், சம்பந்தர், சுந்தரர் சேரமான் பெருமாள், கழற்சிர்கர் முதலானோரும் தொண்டு என்ற நிலையில் பல நிலைகளிலே தொண்டு புரிந்து வாழ்ந்து காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

சைவ சமயத்தின் வைராக்கியமான பக்தியை நாயன்மார்கள் வரலாற்றினூடாக வெளிகொணர்ந்து பெரிய புராணம் வாளால் மகவை அரிந்து தொண்டர்கு வளங்கிய சிறுதத் தொண்டர், கண்களை கொடுத்து உதிரம் தணிய பைத்த கண்ணப்பநாயனர் குங்கிலியம் தந்த குங்கிலிய நாயணர் போன்றோர் வரலாறு களால் அறிய வைத்தது பெரிய புராணம்.

பெண்களுக் தெய்வீக அந்தஸ்து கொடுத்து நோக்கும் பண்பினை சேக்கிழார் பெரிய புராணத்தில் பெண்ணடியார் வரலாறு கூறும் இடங்களில் வெளிப்படுத்த முற் பட்டுள்ளமையை காணமுடிந்தது. இதற்கு பெண்ணடியார்களில் 66 பாடல்களால் சிறப்பிக்கப்பட்ட காரைக்கால் அம்மையார் வரலாறு சிறந்த உதாரணமாகும். பாலக பருவம் பருவவயது, முதுமைப் பருவம் என்ற எல்லாநிலைகளில் இறைபாட்டு அம்மையார் கொண்ட அன்பை கூறி "அம்மையே" என்று இறைவனை அழைத்து இறை அந்தஸ்தை அவரது அன்பு நெறிக்கு கொடுத்த பரிசாக சேக்கிழார் இவர் வரலாற்றில் எடுத்துக் கூறியிருக்க காண்கின்றோம். சமணப்பிடியி லிருந்து பாண்டிய மன்னனையும் மக்களை யும் மீட்டெடுத்த மங்கையற்கரசியார் இது போன்று சைவநிறை வாழ்க்கையை வாழ்ந்து காட்டிய திலகவதியார் என்பவர்களுடன் இல்லத்தரிகளாக இருந்து தம் கணவன் மார்களுடன் இணைந்து அவர்கள் சைவ நிறை வாழ்வு வாழ உதவிய பெண்கள் பலரை வரலாற்றில் இணைத்திருக்க காண்கின்றோம்.

சைவ சாதனங்களின் தத்துவத்தை சமூகத்தவர்கு உணர்த்திய பெருமை பெரிய புராணத்திற்குரியது. இந்த சைவ சாதனங் களைப் பேணும் சிறப்பும் சைவர்களுக்கு உரியது என்பதனை தெளிவுறுத்தித் தந்தது பெரிய புராணம் திருநீறு சம்பந்தர் வரலாற்றி னூடாகவும் திரு ஐந்து எழுத்து அப்பர் வரலாற்றினுடாகவும் பெருமை பெற்றமைய அந்த நாயன்மார்கள் வரலாற்றில் விரித் துரைத்திருந்தமையை கண்டோம்.

பணிவு, பொறுமை, கற்பு மனிதநேயம் முதலான மாண்பு மிக்க குணவியல்புகளை அடியார் வரலாறுகளினூடாக வெளிப்படுத்த முனைந்தது பெரிய புராணம். இறைவனுக்கு மட்டுமல்லயாவர்க்கும் பணிந்து வாழும் பண்பு இருக்க வேண்டும் என்பதனை இந்தப்பண்பை வெளிப்படுத்தும் ஒரு சம்பவமாக நாவுக்கர சனார் சம்பந்தர் சுமந்த சம்பவம் விதை நெல்லை உட பசிக்கு உணவாக ஈந்த இளையான் குடிமாறனர் மனித நேய பண்பும் இங்ஙன மாக பண்பான வாழ்வியலை நாயன்மார்கள் வாழ்க்கையினூ டாக வெளிப்டுத்ததியிருக்க காண்கிறோம்.

இவை யாவற்றிற்கு மேலாக சமயத் தின் முன் சமத்துவம் பேணும் சமய சமத்துவப் பண்பையும் அடியார் வரலாறுகளில் தந்திருக்க காண முடிந்தது. இவர் வரலாறு கூறிய ஒவ் வொரு நாயன்மார்களும் ஒவ்வொரு குலம் சார்ந்தவர்கள் பிராமணியர் தொடக்கம் புலை யறீராக உள்ளனர். ஆனாலும் நாயன்மார் என்ற அந்தஸ்தை கொடுத்து சிறப்புபடுத்திய பண்பு பெரிய புராணத்திற்குரியது. ஆவரித்து தின்றுபுலும் புலமையரேனும் கள்கைவார் சடை கரந்தர்க்கு அன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே என்று அப்பர் கூறிய சமத்துவ சிந்தனை நோக்கத்தக்கது. ஒவ் வொரு நாயன்மார்களின் குலம் பெருமையை யும் எடுத்து கூறிய பெரிய புராணம் சமூக சமத்துவ பண்பாட்டை விளங்க வைக்க முற்பட்டமையை காணமுடிகின்றது.

இங்ஙனமாக இறையண்பு அடியார் அன்பு எனும் அன்பியல் நெறிகளையும் தொண்டு என்ற பெருநெறியையும், சமய வழி பாட்டு பண்புகளாலும் சைவசாதனங்களை உயர் நிலைப்படுகின்ற பண்பினும் பெண் களின் பக்த்திப் பண்பினையும் பண்பட்ட வாழ்வியலா கிய அன்பு, பணிவு, பெருமை கற்பு, மனித நேயம் முதலான வாழ்வியல் சிறப்புக்களையும் சைவ மெய்யன்பர்கள் வாழ்வியலினுடாக விளங்க வைத்திருக்கும் சிறப்பு பெரிய புராணத்திற்குள்ளது இப் புராணம் பக்தியை வளர்த்து எடுக்கும் நோக்கம் மன்றி அதற்கு அப்பால் சைவ பண் பாட்டை வளர்த்து எடுக்க முற்பட்டுள்ளமை நோக்கத் தக்கதாகும்.

திருமதி அருள்நங்கை சண்முகநாதன்

# திருஞானசம்பந்தரின் வினாவுரைப்பதிகங்களில் சைவசித்தாந்தம்

**அறிமுகம்**

தமிழ் பக்தியின் மொழி. தமிழ் மொழியில்தான் அதிகளவிலான பக்தி இலக்கியங்கள் தோன்றியுள்ளன. தமிழ் இலக்கியப்பரப்பு அகத்திணை,புறத்திணை என இலக்கிய மரபினை இரண்டாக வகுத் ததைத் தொடர்ந்து இலக்கியத்தின் இன் னொரு பரிணாமமாக பக்தி இலக்கிய மரபு எனும் மூன்றாவதான ஒரு இலக்கியமரபு தோன்றுகின்றது.

பக்தி இலக்கியம் என்பது இறை வனைப்பற்றிய இறையனுபங்கள், இறையின் பங்கள் பற்றிய பாடல் தொகுப்பாகும். இந்த பக்தியிலக்கியமரபினை சமயமரபில் நாயன் மார்களும், ஆழ்வார்களும் தொடக்கிவைத் திருக்கின்றார்கள். இவர்களில் சைவசமய மரபில் நால்வர்களும் இலக்கியங்களை பக்தி இலக்கியங்கள் என்றும் பக்தி இலக்கியங் களின் உயர்நிலை என்றும் சிறப்பிக்கப்படு கின்றது. இந்த நால்வருள் முதலில் வைத்து போற்றப்படுகின்ற திருஞானசம்பந்தர் பக்தி இலக்கியத்தின் அடையாளங்களையும் அதன் கோட்பாடுகளையும் தனது பதிகங்களில் பதிவிட்டுச் சென்றிருக்கின்றார். அவரது பதிகங்களில் வினாவுரைப் பதிகங்களில் சைவசித்தாந்தக் கருத்துக்கள் எவ்வாறு உள்ளன என்பது பற்றியே இக்கட்டுரை ஆராயவிருக்கின்றது.

**வினாவுரைப்பதிகம் ஓர் அறிமுகம்**

பக்தி இலக்கியம் கையாண்ட உத்தி வகைகளில் வினாவுரை உத்தியும் ஒன்றாகும். வினாவுரை என்பது கேள்விகேட்டு பதில் சொல்லுதல் எனும் அளவில் பொருள் காணப்பட்டாலும் பத்தி இலக்கியமரபு இந்த வினாவுரைக்கு இன்னொரு பொருளையும் கண்டிருக்கின்றது. சைவஞான உலகு இந்த வினாவுரை பற்றி எவ்வாறு பொருள் கொள் கின்றது என்பது பற்றி இலக்கியகலாநிதி பண்டிதமணி மு.கந்தையா அவர்கள் பின்வரு மாறு விளங்கம் தருகின்றார்.

"பாடல்தோறும் அதற்கரிய சிவ பரத்துவ விலாசமொன்றின் உண்மையைத் தொட்டெழும் வினா ஒன்றை முன்வைத்து அதனைத் தெளிவிக்க வேண்டுதல் என இத்தலைப்பின் பொருள் அறியப்படும்"[1]

என்று வினாவுரைப்பதிகம் பற்றிய மு.க வின் கருத்து அமைந்துள்ளது. எனவே சைவஞான உலகில் இந்த வினாவுரையானது சந்தேகம் தீர்த்தலாகவோ, விடுப்பாகவோ அன்றி இறைவனின் உண்மைத்தன்மையினை அறியமுயலும் வினாவாகவே இந்த வினா வுரைப்பதிகம் அமைந்திருக்கின்றது. வினா கேட்கப்படும் நிலையில் அதற்குரிய விடை யினை தத்துவஞான நிலையில் வைத்து ஊகித்து அறிந்து தெளிதலையே இது குறிப்பாக சுட்டிநின்கின்றது.

பிறசமய தாக்கங்களில் இருந்து சைவசமயத்தினை மீட்கும் நோக்கில் உருவாக் கப்பட்ட பக்தி இயக்கமும் இந்த பக்தி இயக்கத்தினால் பாடப்படும் இறைபாடல்களும் சைவசமயம் பற்றி மக்களுக்கு தெளிவிக்கும் நோக்கில் எழுந்தவையாகவே உள்ளன. கருத்தியல் நோக்கிலும், கருத்தியல்

பிரச்சாரங்களினாலுமே சமயம், பௌத்தம் ஆகிய புறச்சமயங்கள் மக்கள் மத்தியில் செல்வாக்குச் செலுத்தின அந்த கருத்தியல் தளத்தில் நின்றே சைவசமயமும் மக்கள் மத்தியில் தனது கருத்துக்களை கொண்டு செல்ல வேண்டிய தேவையும் அதேநேரத்தில் மக்கள் மத்தியில் புரையோடிப் போயுள்ள போலிச்சமயங்களின் உண்மைத்தன்மை யினை மக்களுக்கு எடுத்துக் காட்ட வேண்டிய தேவையும் பக்தி இலக்கியத்திற்கு இருந்தது. எனவேதான் பக்தி இலக்கிய மரபானது இறைவனின் பெருமைகளைக் கூறுதல், இறைபற்றிய புராணச் செய்திகளைக் கூறுதல், தொன்மங்களை நிலைநிறுத்துதல், பிறசமயங் களின் போலிகளை அடையாளப்படுத்துதல், ஏனைய சமயங்களை விட சைவசமயம் எவ்வாறு உயர்ந்தது என்பதை அடையாளப் படுத்துதல் என்ற கட்டமைப்புக்களிலேயே பக்தி இலக்கிய மரபு இயங்கி இருக்கின்றது.

சைவசமயம் மீது பிறசமயங்களின் தாக்கத்தினை எதிர்கொள்ளல் என்ற கருத்தி யல் விவாதங்களுக்கு பதிலளிக்கும் பாங்கு பக்தி இலக்கியத்திலும் இருந்திருக்கின்றது. சமயம் என்பது நம்பிக்கைகளாலும், கருத்தி யல்களாலும் கட்டமைக்கப்பட்டு சடங்காசாரங் களில் மூழ்கித்திளைப்பதல்ல சமயம் என்பது அறிவியல்சார்ந்த கருத்தியல்களால் கட்டமைக்கப்படுகின்றது. என்பதை தெளி வுறுத்துவதற்கு கையாளப்பட்ட உத்திமுறையி யலாகவே இந்த வினாவுரை உத்தி அமைந்திருக்கின்றது. பிறசமயங்கள் எமது சமயத்தின் எவ்வாறு கருத்தியல்கள், கட்டமைப்புக்கள் மீது கருத்தியல் ரீதியிலான கேள்விகளை எழுப்புமோ அவற்றினை முன்னமே இனங்கண்டு அத்தகைய கேள்வி களை அந்த சமயத்தினை சார்ந்தவனே கேட்டு அதற்கான பதிலை தத்துவஞானநிலையில் நின்று அறிந்து கொள்ளுதலையே இந்த வினாவுரை உத்திமுறையியல் கொண்டிருக் கின்றது.

திருஞானசம்பந்தப் பெருமானும் இந்த உத்திமுறையியலை அற்புதமாக கையாண்டிருக்கின்றார். அவரது பதிகங்களில் பன்னிரண்டு பதிகங்கள் வினாவுரைப் பதிகங்களாக அமைந்திருக்கின்றது. சம்பந்தப் பெருமான் மூன்றுவயதில் பாடல் பாடத் தொடங்கியவர் ஞானநிலையினை அடைந்து அவர் பாடல்கள் பாடியிருந்தாலும் அவரது பாடல்களில் குழந்தைத்தனத்துக்குரிய பண்பு கள் நிறையவே காணப்படுகின்றது. குழந்தை கள் இயற்கையினை கண்டு இன்புறுதலை அவரது பாடல்கள் அனைத்திலும் கண்டு கொள்ளலாம். அதற்கேற்றாற் போல குழந்தை களிடத்தில் இருக்கும் இன்னொரு பண்பு கேள்விகேட்டல் தன்மையாகும். உலகில் நடக்கும் ஒவ்வொரு விடயங்களையும் கேள்வி களுக்கு ஊடாக அறிந்து கொள்வதே உண்மை யான அறிவியலாகும் அந்தவகையில் சம்பந்தப் பெருமானும் குழந்தையாக இருந்து பாடலைப்பாடினாலும் அவரிடம் இருந்த குழந்தைப் பண்பான கேள்விகேட்கும் பண்பு இந்த வினாவுரைப்பதிகங்களில் இயல்பாகவே எழுகின்றது. சைவஞானவிளக்கத்தில் சைவ சமயத்தின் உண்மைப் பொருளை உணர்ந்து கொள்ளக் கூடியவகையில் அமைந்த வினாக் களாகவே சம்பந்தப் பெருமானின் வினாக்கள் அமைந்திருப்பது அவரது திருஞானச்சிறப் பாகும்.

எனவே சம்பந்தப் பெருமானின் இந்த வினாவுரைப்பதிகத்தில் வருகின்ற ஒவ்வொரு பதிகத்தின் ஒவ்வொரு பாடல்களிலும் இந்த வினாக்களை தொடுத்தே சென்றிருக்கின்றார். சம்பந்தருடைய இந்த வினாவுரைப்பதிகக் கட்டமைப்பானது முதல் இரண்டு அடிகளும் இயற்கை பற்றிய விபரிப்பாகவும், இன்புறுத் தலாகவும் இருக்கின்றது. மூன்றாவது அடி வினா அடியாகவும் நான்காவது அடி அந்த வினாவினை தெளிவிப்பதாகவும் இருக் கின்றது. எனவே முதல் இரண்டு அடிகளும் இலக்கியமாகவும் இறுதி இரண்டு அடிகளும் தத்துவமாகவும் விளங்கும் மரபினை திருஞானசம்பந்தரின் வினாவுரைப் பதிகங் களில் கண்டுகொள்ளலாம்.

இக்கட்டுரை குறிப்பிடும் வினாவுரைப் பதிகங்களாக பின்வரும் ஆறு பதிகங்கள் அமைகின்றன.

1. செந்நெல லங்கழனிப்பழ னத்தய லேசெழும்.....

2. விண்டெ லாமலர ரவ்விரை நாறுதண் டேன்விம்மி

3. பூவலர்ந்தன கொண்டுமுப் போதுமும் பொற்கழல்

4. கரையு லாங்கடலிற்பொலி சங்கம்வெள் ளிப்பிவன்

5. நீருடன் மேவுநிமிர் புன்சடை மேலொர் நிலாமுளை

6. கோடல்கோங் கங்குளிர் கூவிள மாலை குலாயசீர்

**வினாவுரைப்பதிகங்களில் சைவசித்தாந்தம்**

சைவசித்தாந்தம் சைவத்தின் ஞானவிளக்கம். சைவசமயத்தின் உண்மை யியல்பை தத்துவ அறிவியல் மூலம் விளக்கு வதே சைவசித்தாந்தம் ஆகும். முப்பொருள் கோட்பாட்டியலை மூலமாக வைத்து விரியும் சைவசித்தாந்தம் சமயத்தின் ஒவ்வொரு அசைநிலைகளுக்கும் சித்தாந்த ஞான விளங்கத்தினை வழங்குகின்றது. தத்துவ கருத்தியல்களை வெறுமனே மக்கள் மத்தியில் உரைப்பதை விட இலக்கியம் எனும் இன்புறுதலுக்கூடாக கருத்தியலை விதைக் கின்றது. இனிப்புத்தடவிய மருந்து எனும் அளவில் திருமுறை எனும் பக்தி இன்புறுதல் காட்களுக்கு ஊடாக சமயத்தின் உண்மை ஞான நிலையினை மக்களுக்கு தெளிவு படுத்திச் செல்வதனை வினாவுரைப் பதிகங்கள் மூலம் கண்டு கொள்ளலாம்.

**செந்நெல்லங்கழனி**

இவற்றில் "செந்நெல லங்கழனிப்பழ னத்தய லேசெழும்..."[2] ஏனும் பதிகத்தின் ஒவ்வொரு பாடல்களிலும் சம்பந்தர் இறை வனிடம் தத்துவஞான நோக்கில் சைவசமயம் தொடர்பான கேள்விகளை தொடுத்து அதனை தெளிவிக்கும்படி இறைவனை வேண்டு கின்றார். அந்த வேண்டுகையாவும் சைவ சித்தாந்தம் தொடர்பானவையாக இருந்திருக் கின்றது. பதிக அமைப்பு முறையில் காணப் படும் பத்துப்பாடல்களிலும் பத்து வினாக் களை தொடுத்துச் சென்றாலும் அவற்றின் பொதுத்தனமையிலும், சிறப்புத் தன்மையிலும் அந்த பதிகம் எவ்வாறாக சைவசித்தாந்த கருத்தியலை நிறுவுகிறது என்று நோக்குதலே இக்கட்டுரையின் பிரதான நோக்கமாகும்.

காணப்பட்ட உலகத்தாற் காணப் படாத கடவுளுண்மையை உணர்த்துவதே சைவசித்தாந்த மரபு. அவ்வகையில் ஆலயங் கள் தோறும் சென்று பாடும் சம்பந்தர் தனது பாடல்களில் அந்த ஆலயங்களைச் சூழ உள்ள இயற்கை எழில்களை கண்டு இன்புற்று பாடுகின்றார். அந்த இன்புறுதல் என்பது சிவஞான இன்றுபுறுதலாகவே இருக்கின்றது. "இயற்கையின் ரசனையை தோற்றுதல் மூலம் அதன் பின்புலமாகிய திருவலுணழகை உணர வைத்தல் சம்பந்த சுவாமிகளின் உணர்த்து முறை விசேடமெனலாம். இயற்கையழகோடு உடனாகவே அதில் இடங்கொளுந் திருவரு ளிருப்பை இலாவகமாக உணர்த்திவிடுகிறார் சுவாமிகள். திருமுறைகளின் நோக்குகை என்பது புலக்காட்சி, ஞானக்காட்சி என்ற இருவகை நோக்குநிலைகளில் நோக்கப்படு கின்றது. புலக்காட்சியாகிய மாசறு காட்சிக்கும், ஞானக்காட்சியாகிய மாசறு காட்சிக்கும் பெரும் வேறுபாடு உண்டு என பண்டிதர் மு.கந்தையா அவர்கள் குறிப்பிடுகின்றார்.

எனவே ஞானக்காட்சியால் நோக்கு கின்ற மாசறுகாட்சியில் மேற்குறித்த பாடலில் சிவக்கன்று வினாவும் வினாக்கள் சைவ சித்தாந்த விளக்கத்தினையே எடுத்திருக் கின்றது. இறைவனின் தோற்றப்பொலிவினை புலக்காட்சியினால் காணுமிடத்து இறைவன் தனது தலையில் சந்திரன், நாகம், கங்கை என்பவற்றினை வைத்திருக்கின்றார் என்ற காட்சி விபரிப்பு மாசறு காட்சியாக அழகியலாக வெளிப்பட்டு இறைவனின் தோற்றப் பொலிவு விளங்குகின்றது. இதனை சம்பந்தர் தனது வினாவுரையா இறைவனிடம் வினாவும் தன்மை, சந்திரனும் பாம்பும் ஒன்றுக் கொன்று முரணானவைகள். எதிரானவைகள் அப்படி எதிரானவைகளாக இருக்கும் இரண்டும் இறைவனின் தலையில் எவ்வாறு ஒன்றாக இருக்க முடியும் என்ற வினாவே இப்பதிகத்தின்

பிரதான வினாவாக இருக்கின்றது. இதனை இறைவனிடமே நேரடியாக சம்பந்தர் கேட் கின்றார். இந்த வினாவுரைக்கு பதிலாக வரு பவை, உண்மை ஞானத்தை உணர்த்து பவையே சித்தாந்த விளக்கமாகும். சைவ சித்தாந்தம் குறிப்பிடும் பதிதத்துவம் இங்கு உணர்த்தப்படுகின்றது. பல்வேறு எதிரெதிர் மூலங்களால் உருவான இந்த பிரஞ்சம் இறைவனின் ஒரு ஆணையின் வழியே நடக்கின்றது என்பதுதான் பதி இலக்கணம்[4].

இயற்கையில் பாம்பு மதிக்கு பகை ஆனால் சிவன்சடையில் அவை பகையின்றி இணக்கமுற்று இருக்கின்றன. இதன் உள்ளார்ந்த ஞான விளக்கமானது பின்வரு மாறு அமைகின்றது. சிவனைவிட்டகன்று வாழும் உலக வாழ்வில் மட்டுமே இன்பம், துன்மை, பகை, பகைமறுப்பு என்பன ஏற்படு கின்றன. ஆனால் சிவனோடு ஒன்றறக் கலக்கும் பேரின்பவாழ்வில் இந்த பகை என்பது இல்லை என்பதையே இந்த வினாவுக்கான விடையாம். இதனை அப்பர் சுவாமிகளும் "பாம்பொடு திங்கள் பகைதீர்த் தாண்டாய்"[5] என்று குறிப்பிடுகின்றார். எனவே பந்த வாழ்வில் மட்டுமே முரண்கள் காணப்படும் முத்திவாழ்வில் அவைகள் இல்லை என்பதே இப்பாடல் உணர்த்தும் சைவசித்தாந்த துணிபாகும்.

**விண்டெலாமலர்**

அடுத்து திருவலஞ்சுழி வினாவுரைப் பதிகமான " விண்டெலாமலர் அவ்விரை நாறுதண் டேன்விம்மி.."[6] என்ற பதிகத்தில் இறைவனின் பெருமைகளை எல்லாம் குறிப்பிட்டு சர்வவல்லமை பொருந்தி, சர்வ வியாபியாக இருக்கும் இறைவன் பிச்சை யேற்று திரிவது எதனால் என்ற வினாக்களை முதல் பத்துப் பாடல்களிலும் கேட்டுச் செல்கின்றார். பதினொராவது பாடலில் இவர் குறிப்பிடும் கருத்துத்தான் சைவஞான விளக்கத்தின் உயர்வாக அமைகின்றது. முன்னைய பத்துப்பாடல்களிலும் சொல்ல வேண்டிய ஞான விளக்கத்தினை எல்லாம் பிழிந்து பதினொராவது பாடலில் வைத்திருக் கின்றார். திருஞானசம்பந்தரின் பதிகங்களில் வருகின்ற பதினொராவது பாடல் திருக்கடைக் காப்பாகும் முதல் பத்து பதிகங்களையும் முறையாக ஓதுபவர்களுக்கு கிடைக்கும் நன்மைகள் இவை இவை என குறிப்பிட்டு செல்வது சம்ந்தர் பாடல்களின் திருக்கடைக் காப்பின் சிறப்பாகும்.

"ஒலிகொள்சம்பந்தன் ஒண்தமிழ் பத்தும் வலார்கள் போய்
மலிகொள் விண்ணிடை மன்னியசீர் பெறுவார்களே"

"திருநெறியதமிழ் வல்லவர் தொல்வினை தீர்தலெளிதாமே"[7]

போன்ற திருக்கடைக்காப்புக்களை விட இப்பதிகத்தின் திருக்கடைக்காப்பானது உயர்ந்த ஞானவிளக்கத்தினைத்தருகின்றது. வீடுபேறும் அதனை அடைவதற்குரிய ஞானத் தினையும் வேண்டுபவர்கள் உணவைத் தவிர்த்து விரதங்கள் மேற்கொள்வதாலோ, உடல் வாட்டத்தினை மேற்கொள்வதாலோ, அல்ல இறைவனை நினைந்து ஞான சம்பந்தரது செந்தமிழ்மிகுந்த திருப்பதிகத் தினை இசையோடு பாடும் ஞானம் கைவரப் பெற்றவர்கள் திருவடி சேர்தலே ஞானம் என உணர்வார்கள் என குறிப்பிடுகின்றார். சைவ சித்தாந்தம் குறிப்பிடும் உயர் ஞானப்பேறான முத்தியின்பத்தினை அடையும் மார்கங்களாக நாற்பாதங்களை காட்டியது சைவசித்தாந்தம். சித்தாந்தம் குறிப்பிட்ட அந்த நாற்பாத வழியில் சரியை நெறியின் வழியே இறைவனை நினைந்து சம்பந்தர் பாடல்களை இசையோடு பாடினால் கிடைக்கும் ஞானமே முத்தியாகும் என சம்பந்தர் முத்தியின் பத்தினை அடையும் வழியினை உலகமாந்தர்களுக்கு தெளிவா கவே அடையாளம் காட்டியிருக்கின்றார். சடங்குகள், சம்பிதாயங்களுக்கு அப்பால் ஞானம் கைவரப் பெறும் நிலை உண்டு என்பதை சைவசித்தாந்த நோக்கில் சம்பந்தரால் உள்ளுறுத்தி உரைக்கப் பட்டிருக்கின்றது.

**பூவலர்ந்தன கொண்டுமுப் போதுமும் பொற்கழல்**

திருத்தெளிச்சேரி இறைவன் மீது பாடப்பட்ட "பூவலர்ந்தன கொண்டுமுப்

போதுமும் பொற்கழல்"[8] என்ற பதிகத்தில் பல வகையான சைவஞானவிளக்கம் குழந்தைத் தனத்தின் விடுப்பு மூலம் சம்பந்தரால் வெளிக் கொணரப்படுகின்றது. இறைவன் அம்மை யோடு சேர்ந்து பன்றி வேட்டையாடுதல் எனும் நிகழ்வின் பின் உள்ள அர்த்தப்பொலிவினை இறைவனிடம் வினாவாக முன்வைக்கின்றார். சம்பந்தர் முன்வைத்த அந்த வினாவுக்கு சைவஞானவிளக்கம் இவ்வாறு அமையும் என்று பண்டிதர். மு.கந்தையா அவர்கள் தரும் விளக்கம் பின்வருமாறு அமைகின்றது.

> "சிவன் தேவியுமுடனாகப் பன்றிவேட்டையில் ஈடுபட்டமை வினாப் பொருளாகின்றது. பன்றி கீழ்மைக் குணங்களுக்கு உருவக மாம். தம்மை நாடிய ஆன்மாவின் கீழ்மைப் பண்புகளை அழித்து அகற்றி அவற்றைச் சிவத்துப் பேற்றிற்காந் தூய்மையுடையன வாக்குதல் சத்தியுடனான சிவத்தின் தலையாய கடனாம் என்ற ஞான விளக்கத்தை சுட்டியுணர நின்றது இதுவாம்."[9]

மலபந்தங்களால் பீடிக்கப் பட்டிருக் கும் ஆன்மாக்களின் மலங்களை கெடுவித்து அவற்றினை ஆட்கொள்ளும் திறத்தினை "சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை யாண்ட"[10] என்ற மணிவாசகப் பெருமானின் கூற்றினை சம்பந்தப் பெருமான் பன்றி வேட்டை எனும் காட்சி உருவகத்திற்கு ஊடாக சைவஞான விளக்கத்தினை வினாவுரை அமைப்பில் உணர்த்திச் சென்றிருக்கின்றார். வேட்டையில் பன்றியை ஓடவைத்து இறுதியில் அவற்றின் மீது அம்பு எய்து கொல்லுதல் எனும் செய்கையில் ஓடுதல் என்பது மலங் களால் பீடிக்கப்பட்ட ஆன்மா அந்த மலங் களில் அமுந்தி புரளுதலையும் இறுதியில் இறைவன் அவற்றின் மலபீடிப்பு வலிதற்ற தன்மையினை அடையும் போது அவற்றுக்கு முத்தியின்பம் கொடுத்தல் அம்பெய்து பன்றியினை கொல்லும் காட்சி உருவகமாக விளக்கியதோடு இந்த செய்கையினை இறைவன் செய்யும் போது பார்வதிசமேதராக நின்கின்றான் என்பதை இத்தேவாரம் உணர்த்தி[*] செல்கின்றது. திருக்கோயில்களில் நிகழும் வேட்டைத் திருவிழாவின் தத்துவப் பின்னணியும் இவ்வாறே அமைந்திருக்கின்றது[11].

இப்பதிகத்தின் ஏனைய பாடல்களில் ஒவ்வொரு வகையான தத்துவ ஞானவிளக்கத் தினை வினாவுரையாக தொடுத்துச் செல் கின்றார். ஆன்மாக்களின் முத்தியின்பத்திற்கு பெரிதும் தடையாக இருப்பது காமம் ஆகும். இந்த காமத்தினை நீக்கினாலன்றி சிவனை அடையமுடியாது என்று சைவசித்தாந்தம் உணர்த்துகின்றது. இந்த காமதகனம் பற்றிய செய்தியும் இப்பதிகத்தின் இரண்டாம் பாடல் ஊடாக உள்ளுறுத்திச் சொல்லப்பட்டிருக் கின்றது. அடுத்து நாலாவது பாடலில் இறைவனின் அர்த்தநாரீஸ்வரர் வடிவத்தின் தத்துவப் பொருளினை மானிடக்காட்சி மற்றும் வாழ்வியலுக்கு ஊடாக விளக்கிச் செல்கின் றான். இக்கருத்தியலை காரைக்கால் அம்மை யாரின் பதிகங்களிலும் கண்டுகொள்ளலாம். இறைவன் பிச்சை எடுக்க போகும் போது சத்தியை தங்க வைக்க இடமின்றி தன்னுடன் அழைத்துச் செல்வதனையே அர்த்தநாரீஸ்வரர் வடிவம் உணர்த்தி நிற்பதாக ஒரு தத்துவஞான விளக்கம் இந்த பதிகங்கள் ஊடாக உணர்த்தப் படுகின்றது. சம்பந்தர் பெருமானின் பாடலில் இரசனைக்குரிய வடிவில் இந்த அர்த்தநாரீஸ் வரர் நிலை குறிப்பிடப்பட்டிருக்கின்றது. சிவமும் சக்தியும் ஒன்றையொன்று விலகமுடியாத நிலையில் பிரபஞ்சம் முழுவதிலும் வியாபித் திருக்கின்றது. இது ஒன்றையொன்று விலக முடியாத நிலையாகிய தாதான்மியம் என்ற பரஞான உண்மையாகும்[12].

சம்பந்தரின் விடுப்பு சித்தாந்தத்தில் முடிகிறது. வினாக்கள் மூலமாக அவரது கேள்வி கள் உலகியல் வாழ்க்கையில் இறையியல் ஞானங்களை மெய்ப்பிப்பனவாக உள்ளது. இன்று உலகம் கொண்டாடுகின்ற பேரண்ட வியல் கோட்பாடு பற்றி சைவசித்தாந்தம் ஏலவே விரிவாக குறிப்பிட்டுள்ளது. விஞ்ஞானத்தின் பேரண்டவியல் கோட்பாடும் மெய்ஞானத்தின் அண்வியல், காலம் பற்றிய கோட்பாடும் ஒரு புள்ளியில் சந்திப்பதை அறிவியல்

கண்கொண்டு கண்டு கொள்ளமுடிகிறது. அண்டவியல் பற்றியும் அதன் தோற்ற ஒடுக்கங்கள் பற்றியும் சைவசித்தாந்தத்தின் சிவஞானபோதத்தின் முதலாம் நூற்பா

"அவன்அவள் அது எனும் அவை மூவினையின்

தோற்றிய திதியே அந்தம் ஆதி என்மனார் புலவர்"[13]

என்ற நூற்பா சைவசித்தாந்த்தின் அண்வியல் பற்றிய கோட்பாட்டினை சமய நோக்கில் உரைத்திருக்கின்றது. உலக தோற்ற ஒடுக்க காலங்களில் உலகம் இறைவனிடமே ஒடுங்கி அவனிடமிருந்தே மீண்டும் தோன்றுகின்றது. இந்த தோற்ற ஒடுக்க காலங்களில் இறைவன் தனிஒருவனாக தனியொரு சக்தியாகவே நிற்கின்றான் இதன் பின் நடக்கின்ற அசைவுகள் அனைத்தினையும் சக்தியுடன் இணைந்து நின்றே உலகை உயிர்ப்பிக்கின்றான் என்ற சைவசித்தாந்த கருத்தியலை உணர்த்தும் பாடலாக சம்பந்தப் பெருமானின் "கரையுலாங் கடலிற் பொலி"[14] எனும் பதிகம் அமைந்திருக்கின்றது. இப்பதிகத்தின் முதலாவது பாடலில் எழுப்பு கின்ற வினாவுக்கான சித்தாந்த துணிபு "........ வரையுலா மடமாதுடன் ஆகிய மாண்பதே"[15] என்பதில் இறைவன் சிவன், சக்தி சமேதனாக நின்றே பிரபஞ்சத்தினைப் படைத்து காத்து அழிப்பான் என்பது சைவசித்தாந்தத்தின் துணிபாகும். ஊழிக்காலத்தில் சக்தி சிவத்தில் ஒடுங்கும். சிருஷ்டி காலத்தில் சிவன்சக்தி இணைந்தே சிருஷ்டி தத்துவம் நிகழும் என்பது சைவசித்தாந்த்தில் பிரபஞ்ச உற்பத்திக் கோட்பாடாகும். உயிர்களின் சிவப்பேற்றுக்கு தடையாக இருப்பது ஆணவமாகும். இந்த ஆவணவம் உயிரில் தனது ஆதிக்கத்தினைச் செலுத்தும் போது உயிர் சிவகதியினை அடையமுடியாது ஆணவம் வலிகுன்றும் போதுதான் சிவப்பேற்றுக்கான வழியேற்படு கின்றது. இந்த வலிகுன்றுதல் செயற்பாடானது குருவாய் வந்து அருளும்போதன்றி ஏற்படாது என்று சித்தாந்தம் குறிப்பிடுகின்றது. மேலும் சங்கார காரணனாகிய சிவனே உலகுக்கு கருத்தா இதனையே சிவஞானபோத்தின் முதலாம் நூற்பா குறிப்பிடுகின்றது. சங்காரம் என்பது அல்லது அதற்கான அறிகுறி அனல் ஆகும். எனவே இந்த அல்வுரினலையே கையில் ஏந்திநிற்கின்றான் என்ற இந்த கருத்தினை முன்றாம் பாடலின் "ஆனை யங்கவ்வுரி போர்த்தனல்"[16] என்ற பாடல்வரி குறிப்பிடு கின்றது. இறைவன் தீயினைக் கையில் ஏந்தி நிற்கும் தத்துவம் சங்காரத்தின் அறிகுறியே என்பது சித்தாந்தம் தருகின்ற விளக்கமாகும்.

தொடர்ந்து இப்பதிகத்தின் பத்தாம் பாடல் மதபேதங்கள் பற்றி குறிப்பிட்டு அதனை வினாவுகின்றது. உலகில் உள்ள மதபேதங் களுக்கு காரணம் இறைவனே ஆன்மாக்களின் மலபரிபாக தகுதியின் வேறுபாடுகளுக்கு ஏற்ற வாறே மதபேதங்களும் அவற்றின் கருத்தியல் களும் உள்ளன. இந்த கருத்தியல்களில் உழன்று திரியும் ஆன்மாக்கள் அவற்றின் மலபீடிப்பினாலேயே உள்ளன. மலவாசனை கெடக்கெ அவை உண்மை ஞானத்தைத்தேடி வரும். திருநாவுக்கரசரின் வாழ்வியல் அனுபவமும் இதனையே எடுத்துக்காட்டு கின்றது. ஒவ்வொரு மதபேதங்களும் தத்தமது கருத்தியல்களை உரைப்பினும் அவை யெல்லாம் உண்மையென்றாகா அவற்றின் உண்மைப்பொருளினை ஆன்மாக்களின் மல பரிபாகமே உணர்த்தவல்லன இதுவே சிவ மகத்துவமாகும். இவ்விளக்கத்தினை குறிப் பிடும் பாடலாகவே பத்தாம் பாடலின் "கைதவச் சமண் சாக்கியர் கட்டுரைக்கின்றது சொலீர்"[17] என்ற வரி உணர்த்துகின்றது. தீயநெறி கொண்ட பிறமதத்தினை சிவநிந்தை புரியுமிடத்து அவர்களுக்கு உண்மைத் தன்மையினை உணர்த்து அவர்களது மலவாசனை கெட வைத்து உண்மைஞானத்தினை உணர்துவதே மேற்குறித்த பாடலின் வினா உள்ளுறுத்தும் விடையாகும்.

**நீருடன் மேவுநிமிர் புன்சடை**

அடுத்து வருகின்ற வினாவுரைப்பதிக மான "நீருடன் மேவுநிமிர் புன்சடை மேலொர் நிலாமுளை...."[18] என்ற பதிகத்தில் மும்மலங் களால் பீடிக்கப்பட்டிருக்கின்ற ஆன்மாக்களின் மலநாசத்தினை செய்வித்து அவற்றினை

உய்விக்கும் நிலையினை சிவன் ஒருவனாலேயே செய்யமுடியும் என்பதை இந்தப்பதிகம் சித்தாந்த நோக்கில் எடுத்து உரைக்கின்றது. சைவசித்தாந்தம் ஒரு தத்துவ மாக இருக்குமிடத்து அவற்றினை சாதாரண மக்களும் எளிதில் விளங்கிக் கொள்ள முடியாது போகும். இந்திய துணைக் கண்டத்தில் உருவான பல தத்துவங்கள் தத்துவங்களாகவே இன்று மட்டும் உள்ளன. இதனால் இவைகள் மக்கள் மத்தியில் விளக்கமின்மையினையே ஏற்படுத்தி அவற்றினை மக்கள் புறக்கணிக்கும் நிலைக்கு வருகின்றது. ஆனால் சைவசித்தாந்தம் அப்படியல்ல சைவசித்தாந்தத்தில் சொல்லப் படுகின்ற ஒவ்வொரு தத்துவக் கோட்பாடு களுக்குமான காட்சிப்படிமங்கள் திருமுறை கள் ஊடாக காட்சி வடிவமாக வெளிக்காட்டப் பட்டுள்ளது. இதுவே சைவசித்தாந்தத்தின் சிறப்பாகும். வேறு சித்தாந்தம் வெறும் தத்துவ கோட்பாடுகளாக மட்டுமன்றி அது ஒரு காட்சியியலாகவும் காட்டப்பட்டிருக்கின்றது. சம்பந்தப் பெருமானின் வினாவுரைப்பதிகம் இந்த சைவசித்தாந்த கருத்தியலை காட்சியியலாக வெளிக்காட்டி இருக்கின்றது.

உலக பந்தத்தில் ஆன்மாவின் உய்தி சிவனாலேயே கைகூட வேண்டும் என்ற உண்மையினை இராவணன் கைலைமலை யினை பெயர்த்து இறைவனின் பெருவிரல் பட்டு நசிபட்டு சாமகானம் பாடி இறைவனை மகிழ்வித்து அருள்பெற்ற நிலையானது ஞானமும்சரி, வீரமுஞ்சரி இறைவனாலேயே வழங்கப்படும் என்ற தத்துவம் உணர்த்தப்பட்டி ருக்கின்றது. பணிதலே பக்தியின் முதல்படி என்ற சமய ஒழுங்கு சித்தாந்தத்தின் வழியே உணர்த்தப்படடிருக்கின்றது.

**கோடல்கோங் கங்குளிர்**

திருவையாறு திருத்தலம் பல நிலைகளில் உயர்ந்த தலமாகும். ஈழத்துச் சித்தர் யோகர்சுவாமிகள் கூட இத்தலத்தினை விதந்து போற்றியிருக்கின்றார். நாயன்மார்கள் மூவருடனும் இறைவன் அருளார்ந்த நிலையில் உறவாடிய பெருமையும் இத்தலத்திற்கு உரியதாகும். அந்தவகையில் திருஞான சம்பந்தப் பெருமானது “கோடல் கோங் கங்குளிர் கூவிள மாலை குலாயசீர்...”[18] என்ற திருப்பதிகம் சைவசித்தாந்த ஞானத்தில் உயர்ஞானப்பேற்றினை அடையாளப்படுத்து வனவாக உள்ளன. இறைவனின் நாதாந்த நடனமும் நடனதரிசனக்களிப்பும் என்பது சைவசித்தாந்த ஞானத்தின் உயிர்த்துடிப்புள்ள அம்சங்களாகின்றன. இந்த நடனம் வெளிவளர் தெய்வக்கூத்து, உள்வளர் தெய்வக்கூத்து என இருவிதமாக அமைகின்றன. முன்னையது உலகியல் சாரந்த பஞ்சகிருத்திய அமைதியை யும் பின்னையது அகத்து நிகழும் சிவானந்த அநுபவ அமைதியையும் உணர்த்துகின்றன. இவற்றின் முன்னையதை “வெளிவளர் தெய்வக கூத்துகந்தாயைத் தொண்டனே விளம்புமா விளம்பே”[19] என திருவிசைப்பாவும் பின்னை யதை “அனைத்தெலும் புள்நெக ஆனந்தத் தேன்சொரியுங் குனிப்பு”[20] என திருவாசகமும் போற்றுகின்றது. இவற்றின் உள்ளார்ந்த தெய்வக் கூத்தின் நிலையினை “நாடியினுள்ளே நட்டங் கண்டவாறே”[21] என திருமந்திரமும் குறிப் பிடுகின்றது. சைவசித்தாந்தத்தில் உயர்ஞானப் பேற்றுக்கான அழைப்பாக ஒலிக்கும் இறை வனது இந்த நாதாந்த நடன ஒலிபற்றிய செய்தி யினையே திருஞானசம்பந்தரது மேற்குறித்த பாடல் உணர்த்தி நிற்கின்றது. இந்த திருநடனம் பற்றி பண்டிதர் மு.கந்தையா அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

“திருமூலர் முதலிய சிவயோகிகளின் கருத்துக்கு இணங்கவும் சைவசித்தாந்த சாஸ்திரி விளக்கத்திற்கு இணங்கவும் சிவனைச் சாருந் தறுவாயிற் பக்குவான்மாக்களுக்குப் பரநாதங்கேட்டு அதன் மடிவில் நடனந்தரி சிக்கும் வாய்ப்பொன்றுண்மையறியப்படும். “சீரார் திருவடித் திருக்கலப்பு சிலம்பொலிக்கே ஆராத ஆசையராய் அடியென் இறுமாக்க“ என்பது திருவாசகம். திருமந்திரத்தில் ஒன்பதாந்த தந்திரத்தில் திருக்கூத்துத் தரிசனம் என்ற பகுதியில் எண்பத்திரண்டு செய்யுட்கள் ஐவகைக் கூத்துக்களைப் பற்றிக் கூறும் சித்தாந்த சாஸ்திரங்களில் உண்மை விளக்கம் முப்பத்தொராஞ் செய்யுள் முதல் 38ஆஞ்

செய்யுள் வரை அம்பலத்தான் ஆடற் பொறுதியை ஐந்தெழுத்துண்மையிற் பொருத்தி விளக்கும். அப்பர் சுவாமிகள் திரு நடனப்பண்பை அழகொழுகும் உயிரோவிய மாகத் தீட்டிக் காட்டுகின்றார். திருவாசகத்திற் மண்டபத்துத் திருநடன தரிசனந்தரும் ஆனந்த நிலையை விளக்கும். திருவிசைப்பாவிற் பெரும்பகுதியும் அங்ஙனமே விரித்துரைக்கும். இவையனைந்தும் நாதாந்த நடனம் என்ற பொதுப்பெயரிலடங்கும்”[22]

சம்பந்தப் பெருமான் இறைவனிடம் ஞானப்பால் உண்டவர். இறைவனின் அரு கிருக்கும் அருளாந்த நிலையினை முன்னமே பெற்றவராதலால் இறையின்பத்தின் அனுபவத் தினை உணர்த்துகின்றார். இறைவன் ஒலிவடிவானவன். “ஓசையொலியெலாம் ஆனாய் நீயே“[23] என்று இறைவனை ஒலி வடிவில் கண்டு தரிசிக்கும் பேறுபெற்ற அருளாளர்கள். இந்த திருச்சிலம்போசை பற்றி திருவுந்தியார்

“திருச்சிலம்போசை ஒலிவழியே சென்று
நிருத்தனைக் கும்பிடென் றுந்தீபற
நேர்பட அங்கேநின் றுந்தீபற”[24]

என்று திருச்சிலம்போசையின் மகிமையினை உரைத்தவிடத்து இதுபற்றி சிவஞானபோதம் பத்தாஞ்சூத்திரம் “பாசம் ஒருவத் தண்ணிழலாம் பதி”[25] என்று திருச் சிலம்போசை காட்டி இறைவன் ஆட் கொள்ளும் திறம்பற்றி குறிப்பிடுகின்றது. அந்த ஒலியுடன் அசையப்படும் இறைவனின் திரு நடனம் மலவாசனை நீங்கிய ஆன்மாக் களுக்கே கிட்டும் என்பது திருஞானசம்பந் தரின் மேற்குறித்த பாடல் உணர்ந்தும் சைவசித்தாந்தப் பொருளாகும்.

**நிறைவுரை**

சைவமாம் பெருநெறியைக் காக்க கிளர்நத தணல் சம்பந்தர். வாழ்வியலையும் தத்துவத்தினையும் ஒருங்கே காட்டிய திறத்தினை சம்பந்தர் பதிகங்களில் இருந்து கண்டுகொள்ள முடிகிறது. சம்பந்தப் பெருமானின் வினாவுரைப் பதிகங்களானது சைவசமயம் உள்ளுணர்த்துகின்ற சிவஞானக்கருத்தினை வெளிக்காட்டுவதாக அமைகின்றது. பிறசமயத்தவரின் வினாநோக்கு களை அவர்கள் எழுப்புமுன் தானே அவற்றினை எழுப்பி அதற்காம் விடைகளை தத்துவ ஞானநோக்கில் உள்ளுணர்ந்து கொள்ளவைத் திருக்கின்றார். இது ஒரு தந்திரவுத்தியாகும். இது தத்துவ விவாத அமைப்பாகவும் காணப்படு கின்றது. பின்னாட்களில் ஈழத்தில் ஆறுமுக நாவலரால் எழுதப்பட்ட சூசன உரைக்கட்டமைப் பினை நாவலர் இந்த அமைப்பியலில் இருந்து பெற்றிருக்கலாம் என்றும் எண்ணத்தோன்று கின்றது. சமயத்தினை ஒரு தத்துவ அறிவியலாக நோக்கி ஆராயும் திறத்தினையே வினாவுரைப் பதிகம் கொண்டிருக்கின்றது.

சைவப்புலவர் கு.றஜீபன் M.A.,

**அடிக்குறிப்புக்கள்**

1. கந்தையா.மு, திருமுறைத் தேம்பி
நூற்றாண்டு அகவை நினைவு வெளியீடு 2017.

2. நடராசான்.பி. சம்பந்தர் தேவாரம்
உமாதபதிப்பகம் மண்ணடி, சென்னை 600 001

3. கந்தையா.மு, திருமுறைத்தேம்பிழி
நூற்றாண்டு அகவை நினைவு வெளியீடு 2017.

4. சித்தாந்த மாணவன் சிவஞானபோதம்
சைவசித்தாந்த ஆய்வு நிறுவனம். 2018.

5. நடராசன்.பி, திருநாவுக்கரசர் தேவாரம் உமா
பதிப்பகம் மண்ணடி, சென்னை 600 001.

6. நடராசான்.பி, சம்பந்தர் தேவாரம் உமா
பதிப்பகம் மண்ணடி, சென்னை 600 001.

7. நடராசன்.பி, சம்பந்தர் தேவாரம் உமா
பதிப்பகம் மண்ணடி, சென்னை 600 001.

8. நடராசன்.பி, சம்பந்தர் தேவாரம் உமா
பதிப்பகம் மண்ணடி, சென்னை 600 001.

9. கந்தையா,மு, திருமுறைத் தேம்பிழி

நூற்றாண்டு அகவை நிறைவு வெளியீடு 2017.

10. நடராசன்.பி. திருவாசகம் உமா பதிப்பகம் மண்ணடி, சென்னை 600 001.

11. கந்தையா.மு, திருமுறைத்தேம்பிழ் நூற்றாண்டு அகவை நினைவு வெளியீடு2017.

12. கந்தையா.மு, திருமுறைத் தேம்பிழ் நூற்றாண்டு அகவை நினைவு வெளியீடு2017.

13. சித்தாந்த மாணவன் சிவஞானபோதம் சைவசித்தாந்த ஆய்வு நிறுவனம் 2018.

14. நடராசன்.பி, திருஞானசம்பந்தர் தேவாரம் உமா பதிப்பகம்மண்ணடி, சென்னை 600 001.

15. நடராசன்.பி, திருஞானசம்பந்தர் தேவாரம் உமா பதிப்பகம் மண்ணடி, சென்னை 600001.

16. நடராசன்.பி, திருஞானசம்பந்தர் தேவாரம் உமா பதிப்பகம் மண்ணடி, சென்னை 600001.

17. நடராசன்.பி, திருஞானசம்பந்தர் தேவாரம் உமா பதிப்பகம் மண்ணடி, சென்னை 600001.

18. நடராசன்.பி, திருஞானசம்பந்தர் தேவாரம் உமா பதிப்பகம் மண்ணடி, சென்னை 600001.

19. நடராசன்.பி, திருவிசைப்பா திருப்பல்லாண்டு உமா பதிப்பகம் மண்ணடி, சென்னை 600 001.

20. நடராசன்.பி, திருவாசகம் உமா பதிப்பகம் மண்ணடி, சென்னை 600 001.

21. இறையன்பன் திருமந்திரம் காளீஸ்வரி பதிப்பகம், தியாகராயர் நகர், சென்னை 600 017.

22. கந்தையா.மு, திருமுறைத் தேம்பிழ் நூற்றாண்டு அகவை நினைவு வெளியீடு 2017.

23.திருஞானசம்பந்தர் தேவாரம் பிரேமா பிரசுரம் 59, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், சென்னை 600 024.

24. கனகசபை.அ, திருவுந்தியார் கூட்டுறவு தமிழ் நூற் பதிப்பு விற்பனைக் கழகம். யாழ்ப்பாணம். 1970.

# குலதெய்வ வழிபாடு

**குல தெய்வ வழிபாட்டின் தோற்றம்**

வழிபாடு என்பது முன்னோர் காட்டிய வழியில் செல்வது என பொருள் தரும் ஒரு மரபான செயற்பாடாகும். நமது முன்னோர் களுடைய வாழ்வில் இயற்கையுடன் இறுகப் பிணைந்திருந்தது. மனித வாழ்வியலில் மூன்று தளங்கள் மிகவும் இன்றியமையாதவை. உணவு உடை உறையுள் என்னும் மூன்றும் மனிதனுக்கு மிகவும் வேண்டியவை என்பதைப் பழந்தமிழர் சிறப்பாக உணர்ந்திருந்தனர். அதனால் இம்மூன்றையும் பெறுவதற்கு இயற்கையே அரிய துணையாகக் கொண்டனர்.

வாழ்வியல் நடைமுறைகளில் இம் மூன்று பொருண்மைகளும் அடிப்படையாக அமைய வழிபாடு அவற்றை பெறுவதற்கும் பேணுவதற்குமாகவே பொருத்தமாக கட்டமைக்கப்பட்டன. ஒரு ஊரிலே ஒன்றாய்க் கூடி வாழ்ந்த மக்களின் வாழ்வியல் நடைமுறைகள் ஆக அவை தொடர்ச்சியாகக் கடைப்பிடிக்கப்பட்டன. அவை பண்பாட்டு நிலையிலே இன்று மானிடவியல் ஆய்வாளர் களால் பேசப்படுகின்றன. இந்த வழிபாடு குல தெய்வ வழிபாடு எனச் சிறப்பாக அழைக்கப் பட்டது.

எனவே தமிழர் பண்பாட்டு வரலாற் றில் குலதெய்வம் என்றும் தெய்வம் தொடக்கத்தில் இயற்கையின் தோற்றம் ஆகவே இருந்துள்ளது இத்தகைய வழிபாடு ஏறக்குறைய 2500 க்கு முற்பட்ட காலத்திலேயே தமிழரிடையே நிலை பெற்றிருந்த மைக்கு தமிழ் மொழியில் தோன்றிய செவ்வியல் இலக்கிய செய்யுள்கள் சான்றாக உள்ளன. எடுத்துக்காட்டாக ஒரு செய்யுளை இங்கு தருவது பயனுடைத்து.

"குன்றக்குறவன் காதன் மடமகள்
மன்ற வேங்கை மலர்சில கொண்டு
மலையுறை கடவுள் குலமுதல் வழுத்தி
தேம்பலிச் செய்த வீர்நறுங் கையள்
கவிழ்ந்த கண்ணளெம் அணங்கியோளே."

(ஐங்குறுநூறு: 259)

இப்பாடலில் பிரிந்து சென்ற காதலன் மீண்டு வந்து தன்னோடு இணைந்து வாழ வேண்டும் என எண்ணி வழிபாடு செய்வது குறிப்பிடப்பட்டுள்ளது வழிபாடு செய்வதற்காக வேங்கை மர மலர்களை எடுத்து சென்று மலர்மடை செய்கின்றாள். தனது முன்னோர் வழக்கப்படி குல தெய்வமாக வழிபட்ட மலை யுறை கடவுளைப் பணிந்து வழிபாடு செய்கிறாள். மலர்களோடு தேனையும் சொரி கிறாள். அதனால் அவளுடைய கைகள் ஈரமாக இருக்கின்றன. நீண்ட நேரமாக வழிபாடு செய்தமையால் கைகளில் மலர்களின் நாற்றம் வீசுகிறது. இப்பாடல் காதலன் தன் காதலி தன் வரவுக்காகச் செய்யும் குலதெய்வ வழிபாட்டை அகக் கண்ணால் காண்பது போல ஆக்கப் பட்டுள்ளது.

இந்த வழிபாட்டு நடைமுறை மலை நிலத்தில் வாழ்ந்த ஒரு மக்கட் கூட்டத்தின் பண்பாடாக குலதெய்வ வழிபாடு இருந் தமையைத் தெளிவாக விளக்குகிறது. கொல்லுந் தொழிலை மேற்கொண்ட குறவர்களுடைய வாழ்வியலிலும் இயற்கை ஆற்றலைத் தெய்வமென மதித்து வழிபாடு செய்யும் மரபு

பேணப்பட்டுள்ளது. பெரிய மரங்களின் கீழ் மடை பரவி வழிபாடு செய்யும் மரபு இன்று வரையும் சிறிய ஊர்களிலே நடைமுறையாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஊர் மக்கள் எல்லோரும் இந்த வழி பாட்டை தொடர்ந்து செய்து வந்தனர். ஊரைக் காவல் செய்யும் தெய்வம் என பணிந்து வழி பட்டனர். பரம்பரையாக அந்த வழிபாடு தொடர ஆவண செய்யும் வழக்கத்தையும் கடைப் பிடித்தனர். அவர்கள் வாழ்ந்த வழிபாட்டு வாழிட சூழலுக்கும் நிலத்தின் வளர்ச்சிக்கும் ஏற்ற வழிபாட்டு நடைமுறைகளை கடைப் பிடித்தனர். எனவே மரங்களை மட்டுமன்றி மலை, நீர் நிலை, நடுகல், ஆறு, கடல் என்பனவற்றினருகிலும் குலதெய்வ வழிபாடு நடைபெற்றுள்ளது. இன்றும் ஆல், அரசு வேம்பு, இலந்தை, மாமரம், கொன்றை இலுப்பை, நெல்லி, மகிழ மரம், புன்னை, மருதமரம், நாவல், புளியமரம் போன்ற மரங் களின் அருகே நடைபெற்ற குலதெய்வ வழி பாடு பின்னர் கோவில் வழிபாடாக வளர்ச்சி பெற்ற முக்கிய சான்றாக இம் மரங்களின் பெயரோடு கோவில்களின் பெயர்கள் இணைந்து இருப்பதை காணலாம். ஊர் மக்களுடைய வாழ்வில் மரங்கள் பயன் தரு வனவாக விளங்கின. அவற்றின் விளை பொருட்கள் உணவு, மருந்து, எரிபொருள் என இரு நிலைகளிலும் பயன்பட்டன. கோயில் அமைப்பு தோன்றுவதற்கு முன்னர் இந்த மரங்கள் செழித்து அடர்த்தியாக வளர்ந்திருந்த பகுதிகளிலே வழிபாடு நடைபெற்றுள்ளது.

**குலதெய்வ வழிபாட்டு நடைமுறைகள்**

குலதெய்வ வழிபாட்டு நடைமுறைகள் இன்று பல்வேறுபட்ட மாற்றங்களுக்கு உள்ளாகி கோயில் வழிபாட்டு நடைமுறை களோடு இணைக்கப்பட்டும் சில குலதெய்வ வழிபாட்டு நடைமுறைகள் புறந்தள்ளப்பட்டும் உள்ளன. எனவே அவற்றை இனங்கண்டு கொள்வதும் கடினமாயுள்ளது. எனினும் பண்டைய மரபான முறைகள் சிறப்பாக சில கோவில்களிலே பேணப்பட்டு வருகின்றன. அந்த வகையில் தும்பளை கிராமத்தில் உள்ள நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் திருக் கோவிலில் குலதெய்வ வழிபாட்டு நடைமுறை களையும் இன்றும் பேணுகின்ற ஒரு தனித்துவ மான சிறப்பை கொண்டு விளங்குகிறது. அங்கு நடைமுறையாக இன்றும் உள்ள "வெளிமடை" என்னும் வழிபாட்டு மரபு இதற்குச் சான்றாக விளங்குகிறது.

தும்பளையில் வாழ்ந்த முன்னோர் தம்முடைய குலதெய்வமாக நெல்லண்டை அம்மனை வழிபட்டனர். நெல்லி மரங்கள் அடர்த்தியாக இருந்த இடத்தில் ஒரு பெரிய மாமரத்தின் நிழலிலே அம்மன் குலதெய்வமாக உறைந்திருந்தாள். அருகே இத்தி மரம் படர்ந்து செழித்து இருந்தது. கர்ண பரம்பரையான கதைகள் கோயிலின் தோற்றத்தைக் கூறப் பயன்பட்டாலும் வழிபாட்டு மரபில் நெல் லண்டையாள், இத்திமரத்தாள் என முன்னோ ரால் குறிப்பிடப்பட்ட பெயர்கள் குலதெய்வ வழி பாட்டில் மரபுத் தொடர்ச்சியைச் சுட்டி நிற்கின்றன. அந்த வழிபாட்டிடம் கோயில் அமைப்பைப் பெற்றபோதும் மாமரமும், இத்திமரமும், நெல்லி மரங்களும் இணைந் திருந்தன. தும்பளையை ஊடறுத்துச் செல்லும் "நெல்லண்டை" வீதியும் இதற்கு இன்றும் சான்றாக உள்ளது.

"வெளிமடை" என்னும் சிறப்பான வழிபாட்டு நடைமுறை ஆண்டுக்கொரு முறை தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது. முக்கனி களும் காய்களும் விளையும் காலத்திலே இந்த வெளிமடை பரவப்பப்பட்டு வழிபாடு செய்யும் மரபு இன்னமும் புறப்படுகிறது பொங்கல் மடை, பூமடை, காய்மடை, கனிமடை என ஊர் மக்கள் தாம் பெற்ற விளை பொருட்களை வெளியே பரவி வழிபாடு செய்தனர். காவடி, கரகம், பாற்செம்பு என வழிபாட்டு நடை முறைகளும் இருந்தன. காவடி என்பது வழிபாடு நடக்கும் இடத்திற்கு விளை பொருட்களைக் கொண்டு செல்வதற்காக ஒரு நீண்ட தடியில் இருபுறமும் அவற்றை சமநிலையே கட்டித் தோளிலே சுமந்து செல்வர். இது "காவுதடி" என அழைக்கப்பட்டு பின்னர் காவடி என மருவியுள்ளது. "கரகம்" என்பது வழிபாடு செய்யும் இடத்தில் பொங்கல் செய்வதற்கும் ஏனைய பொருட்களைத் தூய்மை

செய்வதற்கும் உரிய நீரைக் குடங்களிலே சுமந்து வருவது. பாற்செம்பு என்பது பால் மடைக்காகச் சிறிய குடங்களில் பாலை நிரப்பி வேப்பிலையால் மூடிக் கொணர்வது. வழியிலே தலையில் சுமந்து வரும் போது தும்பு, தூசி, பறவை எச்சம் என்பன விழுந்து விடாதிருக் கவே இவ்வாறு இலைகளால் மூடிக்கொண்டு வரும் வழக்கம் இருந்துள்ளது. தமிழ்ச் செல்வியல் இலக்கியமான பரிபாடல் இவ் வழக்கத்தை விளக்கமாகப் பதிவு செய் துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இன்று இவ்வழக்கத்தோடு சில புனைவுகளும் ஆடலும் பாடலும் இணைந்து விட்டன. உடுக்கு, பறை, தாளம் போன்ற இசைக் கருவிகள் இசைக்கப்படுகின்றன.

குலதெய்வ வழிபாட்டில் பொங்கல் மடை மிகவும் இன்றியமையாதது. குழந்தைப் பேறு, குழந்தைக்குச் சோறூட்டல், திருமணம், ஆநிரைக் காவல், நோய்க்காப்பு, இயற்கை அழிவுக் காப்பு என்னும் நிலைகளில் குடும்ப நிலையிலே பொங்கல் மடை செய்யப்பட்டது. ஆனால் ஆண்டுக்கொரு முறை செய்யப்படும் வெளிமடையில் ஊரவர் எல்லோருமே ஒன்றாய் கூடிப் பொங்கல் செய்து மடைபரவி வழிபடுவர். தூபம், தீபம், மலர் என்பன வழிபாட்டில் முதன்மையாகக் கருதப்பட்டன. வெளிமடை வழிபாட்டிலும் அயல் ஊரவரும் கலந்து கொள்ளும் நடைமுறையும் இருந்துள்ளது. எனவே ஊரவரிடையே இணைப்பு வழிபாட்டில் ஒரு கூட்டுறவையும் ஏற்படுத்தும் செயற்பாடாக வும் முமற்காலங்களிலே குலதெய்வ வழிபாடு நடைபெற்றதை அறியமுடிகிறது. மக்கள் தாங்களே விளைபொருட்களையும் பொங் கலையும் மடைபரவி பூவும், புகையும் சொரிந்து விளக்கு ஏற்றி வழிபட்டனர். குடும்பமாக வந்து குறையிரந்து வழிபட்டனர்.

இன்னும் குலதெய்வ வழிபாடு நேர்த்திக்கடன் என்ற நிலையிலும் செய்யப் பட்டது. பொங்கல், காவடி, பாற்செம்பு எடுத்தல், குளிர்த்தி செய்தல், கூத்து ஆடுதல், சோற்றுக் கொடை செய்தல் எனப் பல நடைமுறைகள் செய்யப்பட்டன. மழை வேண்டியும் வெள்ளப்பெருக்கின் இடர்தீரவும், பட்டி பெருகவும், விளைபொருள் பெருகவும், தொற்று நோய் தீரவும் நேர்த்திக்கடன்கள் செய்யப்பட்டன. மகப்பேற்றில் வருகின்ற சிக்கல்கள் தீரவும் குலதெய்வ வழிபாடு செய்யப்பட்டது.

### குல தெய்வ வழிபாட்டின் மாற்றமும் சிக்கல்களும்

பண்டைய குலதெய்வ வழிபாடு காலப்போக்கில் ஆரிய வழிபாட்டு நடைமுறை களுடன் இணைந்த போது பல மாற்றங்களைப் பெற்றது. வழிபாட்டு நடைமுறைகளை செய்வதற்கு திருக்கோவில்கள் கட்டும் மரபு உருவாகியது. அவை தொடக்கத்திலேயே மரத்தினாலும் மண்ணாலும் கற்களாலும் கட்டப்பட்டது. பெரிய மலைகளை குடைந்து குடவரைக் கோவில்களாகவும் அமைக்கப் பட்டன. மண்டபங்கள் கோபுரங்கள் சிற்ப வேலைப்பாடுகள் எனக் கவின் பெற்ற திருக் கோயில்கள் அமைக்கப்பட்டன. வழிபாட்டு முறைகளில் வேதம் ஓதுதலும் எரியோம்பலும் இணைந்து கொண்டன. வேம் பயின்ற அந்தணரே வழிபாட்டு நடைமுறைகளை செய்ய வேண்டும் என்ற புதிய மரபு தோன்றியது. குறிப்பாக பொது மக்கள் வழிபாட்டு நடை முறைகளை செய்வதற்கு ஒப்புதல் நீக்கப்பட்டது தொழில் நிலையிலே வேறுபாடு வகுக்கப்பட்டு திருக்கோயிலுள் உள்ள சிலர் சென்று வழிபட முடியாத கட்டுப்பாடும் ஏற்படுத்தப்பட்டது.

இந்நிலையில் முன்னர் செய்யப்பட்ட குலதெய்வ வழிபாடு எனும் நடைமுறையும் வழக்கொழியும் நிலை உருவாகியது. எனினும் யாழ்ப்பாணத்தில் சில கோவில்கள் பண்டைய குல தெய்வ வழிபாட்டையும் திருக்கோயில் வழிபாட்டையம் இணைத்து செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் தும்பளை எனும் ஊரிலுள்ள நெல்லண்டை பத்திரகாளி அம்மன் திருக்கோயில் ஒரு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது இத்திருக் கோயில் இன்று வரை நடைபெறும் பொங்கல் எனும் நடைமுறை குலதெய்வ வழிபாடும் ஆரியவழிபாடும் எவ்வாறு இணைந்துள்ளன என்பதனை எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

ஓராண்டின் குறிப்பிட்ட நாளிலே

விளக்கு வைத்தல் என்னும் நடைமுறை தொடங்கி ஒரு கிழமை பொங்கல் மடை பொருட்கள் சேகரிக்கப்படும். தொடக்க நாள் ஒரு வெள்ளிக்கிழமையாகவே தெரிவு செய்யப்பட்டுள்ளது. அதை தொடர்ந்து வரும் வெள்ளிக்கிழமை மாலை மடைப்பொருட்கள் கோவிலுக்கு எடுத்து வரப்பட்டு கோவிலின் மேற்கு புற வீதியில் அமைக்கப்படும் பந்தலில் வைக்கப்படும். அன்றிரவு பொங்கல் நடை பெறும் அடுத்த நாள் காலை பொங்கலும் ஏனைய முக்கனி விளையாட்டுப் பொருட் களும் மடை பரவப்பட்டு பூசை வழிபாடு நடை பெறும். காவடி, கரகம், பாற்செம்பு என்பன நேர்த்திக்கடன்களாக எடுத்து வரப்படும். அவ்வாறு நேர்த்திக்கடன் செய்வோர் விரத மிருந்தே அவற்றை நிறைவேற்றுவர். நேர்த்திக்கடனாகக் காவடி, கரகம், பாற்செம்பு எடுத்து வருவோர் அயல்ஊர்களில் உள்ள தமது குலவழிபாட்டுக் கோயில்களிலிருந்து எடுத்து வருவர்.

இந்த வழிபாட்டு நடைமுறையில் வேதம் ஓதிப் பூசை செய்யும் மரபு இணைந் துள்ளது. அதனை பண்டைய வழக்கப்படியே ஒழுங்காக செய்வதற்கு பரம்பரையாக வந்த பூசகர்கள் பணி செய்தனர். அதனால் குல தெய்வ வழிபாட்டின் நம்பிக்கையும் புதிய வழி பாட்டின் இணைப்பும் இக்கோவிலில் எவ்வித மான சிக்கலும் முரண்பாடும் இன்றி தொடர்ச்சி யாக நடைபெறுகின்றன. அந்த வகையில் அண்மையில் இறையடி சேர்ந்த சிவஸ்ரீ சோமாஸ்கந்த ராஜாக்குருக்களின் பரம்பரை யினர் தொடர்ச்சியாக பணியாற்றியுள்ளனர். சிறப்பாக இவர் ஆரிய வழிபாட்டின் பயிற்சியும் நவீன கல்வித் தகைமையும் பெற்றிருந்தமை யால் குலதெய்வ வழிபாட்டின் நீட்சி அறுந்து விடாமல் வழிபாட்டு நடைமுறைகளைச் செய்தார். நூல் கட்டுதல், விபூதி போடுதல் இத்திமரத்துக்கு நீருற்றல், மலர்களை எண்ணிக்கையில் வைத்து வழிபடல், திருவிளக்கு ஏற்றல், பொங்கல் மடை செய்தல், குழந்தைக்குச் சோறூட்டல், ஏடு தொடக்கல் போன்ற குல தெய்வ வழிபாட்டின் நம்பிக் கையை மக்கள் உள்ளத்திலே ஆழப்பதியச் செய்துள்ளார். குலதெய்வத்தின் விரிச்சி கேட்பதிலும் வழிபடுவோரைச் சிறப்பாக ஆற்றுப்படுத்தியுள்ளார். இதோபோன்று ஆண்டுதோறும் ஆரிய வழிபாட்டு நடைமுறைகளான தைப்பூசம், சிவராத்திரி, மாசி மகம், பங்குனித்திங்கள், சித்திரைக்கஞ்சி, வைகாசி விசாகம், ஆனி உத்தரம், ஆடி அமாவாசை, ஆவணிச்சதுர்த்தி, நவராத்திரி, கந்தஷஷ்டி, கார்த்திகை விளக்கீடு, திருவெம்பாவை என்பனவற்றையும் ஒழுங்குபட வழிபாட்டு நடைமுறைகளோடு சிக்கலின்றிச் செய்ய வழிகாட்டியுள்ளார். அவருடைய தலைமுறையினரும் தொடர்ந்து இவ்வழிபாட்டு நடைமுறைகளைச் சிறப்பாகத் தொடர்ந்து செய்து வருகின்றனர்.

குல தெய்வ வழிபாட்டின் நடை முறைகள் தற்போது பல திருக்கோயில்களில் புறந்தள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக பல கோயில்களில் பொங்கல் மடை, குளிர்தி மடை என அம்மக்கள் தமது முன்னோரது நம்பிக்கை யாக இருந்த வழிபாட்டு நடைமுறைகளைச் செய்வதற்கு இடையூறு ஏற்பட்டது. எடுத்துக் காட்டாக நடைமுறையைச் சுட்டலாம்.

குலதெய்வ வழிபாட்டில் வளமான மரத்திற்கு திருநீரூற்றி வழிபடுவது ஒரு தனித்துவமான மக்கள் தாமே செய்கின்ற வழிபாட்டு நடைமுறையாக நீண்ட காலமாக நிலவியுள்ளது அதன் தொடர்ச்சியாக திருக்கோயில் அமைப்பு தோன்றிய பின்னரும் தலவிருட்சத்திற்கு நீரூற்றி மக்கள் வழிபடும் மரபு பேணப்பட்டது. ஆனால் தற்போது இந்த வழிபாடு கோவில் அறங்காவலர்களால் புறந் தள்ளப்பட்டு வருகிறது. மரத்திற்கு நீரூற்றக் கூடாது என கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. இது மக்களுடைய நீண்ட காலமாக வழிபாட்டு மரபையும உளச்சீர்மியத்தையும் தெளிவாக உணர்ந்து கொள்ள முடியாமையினால் ஏற்பட்ட சிக்கலாகும். இது “கரகம் எடுத்தல்” என்னும் நேர்த்திக்கடனின் தொடக்கமான நடைமுறை யாகும். வழிபாட்டிடத்திலேயுள்ள பெருமரத் தினடியிலே கரகத்தில் சுமந்து வந்த நீரை ஊற்றி மனக்குறைதீர வழிபாடு செய்வதே நடைமுறை யாக இருந்தது. வெப்பு நோயால் துன்பப்

பட்டவரும். அங்கக்குறைபாடுடையவரும் குழந்தைப்பேறு அற்றவரும் வழிபடும் மரத்திற்கு 21 குடம் நூரூற்றி வழிபட்டுத் தமது குறைபாடு நீங்கப் பெற்றனர். இது வழி பாட்டால் நாம் பெறும் உளச்சீர்மியமாகும். மனக்குறை தீர வழிபட்டால் உள்ள நீர் நிலையிலிருந்து குடத்திலே நீரை நிறப்பி வந்து 21 முறை ஊற்றும் போற்றும் உள்ளம் முழுமை யாக அப்பணியிலே ஈர்க்கப்பட உள்ளத்தின் உறைநிலை தளர்வடையும். அப்பணியை நிறைவேற்றிய பின் உள்ளத்திலே ஒரு நிறைவும் கிழ்ச்சியும் வந்து சேர்ந்திருக்கும். வழிபாட்டால் எனக்கு எதையு் செய்யக் கூடிய தொரு ஆற்றல் கிடைக்கும் என்ற உறுதியான நம்பிக்கை உண்டாகும். இந்த வழிபாட்டு நடைமுறையத் திருநாவுக்கரசர் திருவையாறு என்னும் திருருக்கோயிலே பாடிய பதிகத்திலே பதிவு செய்துள்ளார்.

"போதொடு நீர் சுமந்தேத்திப் புவாரவர் பின் புகுவேன்"

என நீர் சுமந்து வழிபடச் சென்றதைக் குறிப்பிட்டுள்ளார்.

எனவே இன்றைய விஞ்ஞானத்தின் வளர்ச்சி நிலைகளும் தொழில் நுட்பப் பொறிகளின் பெருக்கமும் குறிப்பாக இளைய தலைமுறையினரிட் குலதெய்வ வழிபாடு பற்றிய முன்னோரது நம்பிக்கை மறுகின்ற நிலையைத் தோற்று வித்துள்ளன. அவர் களுடைய அறவீனத்தை இப்போதே நீக்கு வதற்கு நாம் ஆவன செய்ய வேண்டும். அவர்களுடைய வேகமான செயற்பாடுகளைச் சமநிலைப்படுத்த வழிபாட்டுப் பயிற்சியே் இன்றியமையாதது. பெருமரத்திலும் உயர்ந்த லையிலும் பரந்த நீர் நிலையிலும் உள்ள பேராற்றலை விஞ்ஞானத்தால் அடக்கி விடலர் இளைய தலைமுறை பகற்கனவு கண்டு கொண்டு வாழ்கிறது. இந்த மனிதப்பிறவியிலே தான் இயற்கையின் பேராற்றல் கண்டு இயற்கையோடு இயைபுபட்டு மகிழ்ச்சியாக வாழமுடியும் என்பதை எமது முன்னோர்கள் வாழ்ந்து காட்டியுள்ளார்கள்.

எனவே இன்று குலதெய்வ வழிபாடு பற்றிய தெளிவு ஊட்டப்பட வேண்டியுள்ளது. மாற்றம் பெற்ற காலத்தைப்பகுத்து அறிய வேண்டும். "நாட்டார் சமயம்" என்ற பண் பாட்டுக்கூறு பற்றி மானிடவியலாய்வாளர்கள் பலர் பல ஆய்வுகளைச் செய்துள்ளனர். அவர் கள் மேலைத்தெய மானிடவியல் ஆய்வாளர் களின் கோகட்பாடுகளின் அடிப்படையிலே தமிழருடைய வழிபாட்டு நடைமறைகளைப் பகுத்து விளக்க முற்பட்டுள்ளனர். இது பொருத்தமற்றது. லைத்தேய வாழ்வியல் தளம் வேறுபட்டது. நிலத்துல வகைப்பாடும் பருவ காலநிலைகளும் கூட வேறுபட்டவை. அதனால் எம்முடைய வாழ்வியல் தளத்தை ஆழமாக ஊடுவிச்சென்று நோக்க வேுண்டியுள்ளதுத. நமது முன்னோர் வகுத்துத் தந்த வழிபாடு வாழ்வியலைச் செம்மைப்படுத்துதம் ஒரு நல்ல வழிகாட்டல் என்பதை எல்லோரும் அறியச் செய்ய வேண்டிய காலக்கடமை எமக்குண்டு.

"குலதெய்வ வழிபாடு" என்பது ஒரு பழைய நிலை. அதை இன்று பின்பற்ற வேண்டி யதில்லை என்ற குரல்களும் இப்போது ஒலிக்கத் தொடங்கிவிட்டன. அது தெளிவற்ற கூக்குரல் என்பதை எல்லோரும் அறியவேண்டும். இவ்வெழுத்துரு அத்தகைய ஒரு பணியைச் செய்யத் தூண்டுவதுவதற்காகவே ஆக்கப் பட்டது. முதுமை மனிதவாழ்வியலின் இறந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் எண்ணி எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் வல்லமை யுடையது. அந்த வழிகாட்டல் இப்போது தேவையாக உள்ளது. மனித வாழ்க்கையில் இன்று எதிர்கொள்ளும் பேரிடர்கள் மக்களை மனவலுவற்றவர்களாக மாற்றிவிடுகிறது. இந்த நிலை நீடித்தால் மனித இனமே மறைந்து விட வாய்ப்புண்டு. தன்னுயிரைத் தானே போக்கிக் கொள்ளும் அவல நிலைக்கு மனித இனம் சென்றுகொண்டிருக்கும் வேளையில் வழிபாடு தான் அவர்களை வழிநடத்த வல்லது. திருக் கோயில்கள் நிறுவனங்களாகச் செயற்படாமல் மக்களை நெறிப்படுத்தும் தொண்டுப்பணியை மேற்கொள்ள வேண்டும். "இறைவன்" என்ற பேராற்றல் மனிதனோடு இயற்கை வடிவிலே என்றும் அருகில் இருக்கிறது என்ற தெளிவை மக்களுக்கு ஊட்டப்பணி செய்ய வேண்டும். இது அன்று "குல தெய்வ வழிபாடு" செய்த அரியபணி என்பதை எல்லோரும் மீண்டும் நினைவில் கொள்வோம்.

- முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்

# நெல்லண்டை இத்திமரத்தாள் ஊஞ்சல் பாட்டு

ஆடுக ஊஞ்சல் ஆடுகவே
அம்மா தாயே ஆடுகவே
இத்திமரத்தாள் ஆடுகவே
அம்மா தாயே ஆடுகவே

ஆடுக...

நெல்லண்டை வாழும் இத்திமரத்தாய்
மனக்குறை எல்லாம் தீர்த்திடுவாய் - உன்
திருவடி தேடி வருபவரை
திருவருள் புரிந்தே காத்திடுவாய்.

ஆடுக...

உந்தன் அடிமை நாங்களெல்லாம
உள்ளத்தில் நீயும் இருக்கின்றாய் - எம்
உள்ளத்தில் நினைத்தது அத்தனையும்
உன்னிடம் வந்தால் சொல்கின்றாய்.

ஆடுக...

வெஞ்சின் கொண்ட மனிதரெல்லாம்
அஞ்சனம் கேட்டால் மாறிடுவார் - அவர்
வேதனை சோதனை யாவையுமே
இத்திக் காற்றில் பறந்திடுமே.

ஆடுக...

எங்கள் ஆதி பராசக்தி
எங்கும் இருப்பபுது உன் சக்தி உன்
மஞ்சள் குங்குகம மகிமையினால்
மங்கல வாழ்வு மலர்ந்திடுமே.

ஆடுக...

கலியுக காக்கும் கண்மணியே
கண்களில் இருக்கு் கருமணியே உன்
ஆலயமாம் மேல் நெல்லண்டை
வந்தவர்க் கெல்லாம் வளம் பெருகும்.

ஆடுக...

அம்மா உன்னை அடி பணிந்தோம்
அனைத்தும் நீதான் என்றுற வந்தோம் - கடைக்
கண்ணால் எம்மைப் பார்த்திடுவாய்
காலம் முழுவதும் துணையிருப்பாய்.

ஆடுக...

மதுரையிலிருந்து வந்தவளே
தர்மத்தைக் காக்கும் கலைமகளே நாம்
தஞ்ச் என்றே உனையடைந்தோம்
தாயே எம்மைக் காத்தருள்வாய்.

ஆடுக...

அன்னை தேவி இத்தித்தாய்
எம்மைப் படைத்தது உன் சக்தி
வாழ்வை தந்து வளம் தந்து
வாழ்க்கைக் கடலில் கரையேற்று.

ஆடுக...

ஓங்காரப் பொருளும் நீதானே
உலகம் என்பதும் நீதானே
காணும் இயற்கைக் காட்சிகளும்
காற்றும் மழையும் நீதானே.

ஆடுக...

அம்மா தாயே உனை வேண்டி
அழுதிடும் எம்மைத் தாலாட்டி
அன்புடன் ஞானப் பாலூட்டி
அகத்தின் இருளைப் போக்கிடுவாய்.

ஆடுக...

உள்ளக் கோயில் உன் கோயில்
உயிரும் மூச்சும் உன் வடிவம்
பேச்சும் செயலும் உன் செயலே
பெருகட்டும் உந்தன் பேரருளே.

ஆடுக...

ஆறுமுகம் கெங்காதேவி

# இத்திமரத்தாள் கவி

ஜெயரூப கணவதி நமக
சத்ரூப கணவதி நமக
மகாஉலக கணவதி நமக
இத்தி மரத்தில் இருக்கும் தேவியரே அம்மா
வாரும் அம்மா வாரும்
இத்திமரத்தில் இருக்கும் தாயாரே
கேளும் அம்மா கேளும் கேளும்
ஈராறு காதினிலே யான் சொன்ன மொழி
எல்லாம் கேட்கவில்லையோ தாயே
இத்திமரத்தாளே இந்தப்பாவிகளோ படும்
பாட்டை பாரும் அம்மா தாயே பாரும் அம்மா

இந்தப்பாவிகளோ படும்பாட்டை
இருவிழிகளிலும் தோன்றவில்லையோ தாயே
இத்திரமரத்தில் இருக்கும் தேவியரே அம்மா
மனநெஞ்சிலே நீயுமாய் கரங்களிலே லட்சுமியாய்
நாவிலே சரஸ்வதியாய் எனக்கு
அருள்தாரும் அம்மா
இத்திமரத்திலே இருக்கும்தாயாரே
சக்தி வேல் ஞான வேல் புத்திவேல் நீட்டும் அமம்மா
இத்திமரத்தில் இருக்கும் தாயாரே
நெல்லண்டை வீதியிலே வீற்றிருக்கும் தாயே
எனக்கு அருள் தாரும் அம்மா
இத்திமரத்தாளே பொருளாசை மண்ணாசை
பெண்ணாசை எல்லாம் உனக்கே அடைக்கலம்
இத்திமரத்தில் இருக்கு் தாயாரே கேளும்
அம்மா கேளும்

தாயும் நீ தந்தையும் நீ உடன் பிறந்த
சகோதரருமம் நீ
உயிரும் நீ உடலும் நீ உள்ளமும் நீ உணர்வும் நீ
உலகும் நீ ஊரம் நீ ஒரு பொழும் நீ
அழகும் நீ பூவும் பொட்டும் நீ
இந்தப் பொன்னுலகிலே
இத்திரத்தில் இருக்கும் தாயாரே
கேளும் அம்மா தாயே கேளும் அம்மா

நீ அசைந்தால் அசையும் உலகினிலே
நாட்டில் வெற்றி காண்க நாடெங்கும் வெற்றி காண்க
இந்தப் பூவுலகிலே தோன்றி புனிதம் என்ற
காட்சி ஒன்றைக் காண்பித்தாய்
இத்திமரத்திலே வீற்றிருக்கும் தாயே
இந்தப் பூவுலகில் மாந்தரிலே இசைக்
கருவியாய் நீ இருந்து இன்பம் எல்லாம்
தருவித்தாய் தாயே தேவியரே வாரும்
எங்கட் கருள் தாரும். அம்மா தாரும்.

ஆறுமுகம் கெங்காதேவி

திருத்தணியில் பவித்ர ஆராதனை

கவிச்செல்வர் [illegible]

---

[illegible]

அனைத்திலும் மனிதநேயம் மிளிரும்;
அன்றியும் விட்டு வேறான பக்கம்,
காமன் உருவி என்பவளோ [illegible]
அப்போதும் அக்கோலமாயிரும் மனிதநேய உண்மை;

அவர் அக்குரல் அவர் விரித்தால்
அவர் அமைத்தார் அவர் செய்கையை
அவர் மனிதநேயம் பேசினோம்;
உண்மை
ஏன்? எதற்கு? கவிதை வரையும்?
அப்போதும் அவர்களுக்கு மனித நேயம்
பேசினோம் செய்தோம்;

இதும் காண உழைப்பினில் உலகமெல்லாம்
அழிக்க மனிதநேயம் பேசினோம்;
அவர்கள் வாழ்க்கையும், அப்பாவின்
வாழ்விலும்; அடிமை எண்ணம்
உண்மையிலும் மனிதநேயம்
பார்க்கிறோம்.

ஆனால் . . ——

அவனின் வாழ்க்கையை அழித்து
பார்க்கிறோம். எதிர்பார்க்கிறோம்;
எதுவும் இல்லாமல் தான்
அவனையும் மனிதநேயத்தோடு
அவன் ~~[illegible]~~ மறந்துவிடுகிறோம்.

3:02

Search

**சிவ சேகரன்** is with **Somaskantharajah Kurukkal Kanan Iya**.
15 May 2021 ·

எனது தமிழ் ஆசான்களில் ஒருவரான தியாக. சோமாஸ்கந்தராஜா குருக்கள் அமரத்துவமடைந்த செய்தி துயரில் அழுத்துகிறது. எனது உயர்தர வகுப்பு (2009-2011) காலத்தில் சிலகாலம் என்னை வழிப்படுத்திய தத்துவ குருவாகவே அவரை நான் சேமித்துவைத்துக்கொண்டேன்.

வகுப்புக்குள் வரும்போதே " உன்னை நோக்கு " என்றபடி எனக்கொரு நுள்ளு அல்லது தட்டு கிடைக்கும். ஒருவகையில் அவரின் செல்ல மாணவனாகவே நான் இருந்திருக்கிறேன். உன்னை நோக்கு என்பதன் அர்த்தம் எல்லோரும் எழுந்து நின்றபடி நுனி மூக்கை பார்க்க வேண்டும். அப்படியே ஒரு நிமிடம் நோக்க வேண்டும். அந்த ஒரு நிமிடத்தில் வகுப்புக்குள் அவர் இரண்டு/மூன்று சுற்று வந்து, எல்லார் நிலையையும் அலசி விடுவார். நகம் வெட்டாதவர், சேர்டை சரியாக இன் பண்ணாதவர், கையில் மருதாணி வைத்தவர். நகங்களில் கியுரெக்ஷ் அடித்தவர். தலை ஒழுங்காக வெட்டாதவர் இப்படி பல விடயங்களை ஒரு நிமிடத்தில் பார்த்து விடுவார்.

பின்னாளில்
கையடக்க திருக்குறள் புத்தகமொன்றை எல்லோருக்கும் பரிசளித்தார். நான் அவரிடம் சென்று எனது புத்தகத்தை நீட்டி கையெழுத்து

பின்னாளில்
கையடக்க திருக்குறள் புத்தகமொன்றை எல்லோருக்கும் பரிசளித்தார். நான் அவரிடம் சென்று எனது புத்தகத்தை நீட்டி கையெழுத்து
போட சொன்னேன். உடனே அவர் ஏதேதோ எழுதினார். வாங்கிக்கொண்டு கதிரையில் அமர்ந்து நண்பர்கள் எல்லோரும் படித்தோம் அதை.

"கல்வியே கண்" புரிந்தது
"வாழக் கல்" புரிந்தது

"நிலையறி"
"நில்"
இவை இரண்டும் யாருக்கும் ஒன்றும் புரியவில்லை.
என்ன சேர்; என்ன விளக்கம் என்று கேட்டோம்.
"நீயே கண்டு பிடி" என்றார்.
சில நாட்கள் தேடினேன். பின்னர் விட்டுவிட்டென்.

அந்த இரண்டு சொற்களின் அர்த்தமும் எனக்கு தெரிந்தது/புரிந்தது எனது பால்ய காலத்து காதல் முடிந்து போன பின்புதான். அன்று என் நிலையை அறிந்து நிற்க கற்றுக்கொண்டேன்.. நிறைய தேடி வாசிக்க தொடங்கினேன். பத்து ஆண்டுகளாக தேடிக்கொண்டும் வாசித்துக்கொண்டும் இருக்கிறேன்.

திடீரென தோசம் பற்றிய பேச்சொன்று வீட்டில் எழுந்த பொது, ஸாதகத்தை தேடுகையில் அது


திடீரென தோசம் பற்றிய பேச்சொன்று வீட்டில் எழுந்த பொது, ஸாதகத்தை தேடுகையில் அது
கிடைக்கவில்லை; காணாமல் போயிருந்தது. உடனே
எனது சாதகத்தை அவரிடமே எழுதிக்கொள்ளுமாறு சொன்னேன்.

எனது நூலுக்கு வாழ்த்துரை தந்த போதும், என்னை நேரில் வந்து வாழ்த்திய போதும் அவரின் தத்துவ குரு முத்திரையை என்னில் பதித்தவர்..

அவர் இன்று எம்முடன் இல்லை என்னும் செய்தி மனசை அழுத்திக்கொண்டே இருக்கிறது. அவரின் அந்திமத்தில் கூட கலந்துகொள்ள முடியாத பாவியாக என்னை ஆக்கிவைத்திருக்கிறது இந்த சாக்காலம்.

அவரின் அபிமான அன்னை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் பாதங்களில் அவர் நித்திய உறக்கம் கொள்ளட்டும்..

ஓம் சாந்தி சாந்தி சாந்தி
00




துயர் பகிர்கின்றோம்
சைவசித்தாந்த பண்டிதர்
அமரர்
சிவஸ்ரீ தியாக.சோமாஸ்கந்தராஜக் குருக்கள்
மலர்வு : 24.04.1963
உதிர்வு : 14.05.2021
அன்னாரின் பிரிவுத் துயரில் நாமும் பங்குகொள்வதோடு அன்னாரது ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
துயரில் பங்குகொள்ளும்
தும்பளை இலட்சுமணன் தோட்ட பிள்ளையார் கோவில்
விஸ்வ குல தர்ம பரிகாலன சபை


கண்ணீர் அஞ்சலி
எமது ஆலய பிரதமகுரு தனஞ்சயக்குருக்கள்
அவர்களின் அன்புத் தந்தையார்
சைவசித்தாந்த பண்டிதர்
அமரர் சிவஸ்ரீ தியாக.சோமாஸ்கந்தராஜக் குருக்கள்
B.A, Dip.in.Ed., M.A பிரதி அதிபர்
நெல்லண்டைப் பத்திரகாளியம்மன், வீரமாகாளியம்மன் ஆதினகர்த்தா
அன்னாரின் பிரிவுத் துயரில் நாமும் பங்குகொள்வதோடு
அன்னாரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
மலர்வு : 24.04.1963
உதிர்வு : 14.05.2021
துயர் பகிர்வில்....
ஆலயப்பரிபாலன சபையினரும் மக்களும்
குடத்தனை மாழிகைத்திடல்
கண்ணகை அம்மன் ஆலயம்


கண்ணீர் அஞ்சலி
எமது ஆலயத்தின் பூசகர் தனஞ்செயன் குருக்களின் தந்தையும்
எமது ஆலயத்தின் பிரதம குருவுமாகிய
சைவசித்தாந்த பண்டிதர்
அமரர்
சிவஸ்ரீ தியாக. சோமாஸ்கந்தராஜக் குருக்கள்
B.A, Dip.in.Ed., M.A பிரதி அதிபர்
நெல்லண்டைப் பத்திரகாளியம்மன், வீரமாகாளியம்மன் ஆதினகர்த்தா
அன்னாரின் பிரிவுத் துயரில் நாமும் பங்குகொள்வதோடு அன்னாரது ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
மலர்வு : 24.04.1963
உதிர்வு : 14.05.2021
துயரில் பங்குகொள்ளும்
தும்பளை கிழக்கு கடற்கரை பிள்ளையார் ஆலய
நிர்வாகமும் ஊர் மக்களும்



கண்ணீர் அஞ்சலி
சைவசித்தாந்த பண்டிதர்
அமரர் சிவஸ்ரீ தியாக.சோமாஸ்கந்தராஜக் குருக்கள்
B.A, Dip.in.Ed., M.A பிரதி அதிபர்
நெல்லண்டைப் பத்திரகாளியம்மன், வீரமாகாளியம்மன் ஆதினகர்த்தா
தோற்றம்
24.04.1963
மறைவு
14.05.2021
அன்னாரது பிரிவுத்துயரில் நாமும் பங்குகொள்வதோடு அன்னாரது
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
பிரிவுத்துயருடன்...
அருணோதயா மக்கள் ஒன்றியம்
ஓடக்கரை




கண்ணீர் அஞ்சலி
சைவசித்தாந்த பண்டிதர்
அமரர் சிவஸ்ரீ தியாக.சோமாஸ்கந்தராஜக் குருக்கள்
B.A, Dip.in.Ed., M.A பிரதி அதிபர்
நெல்லண்டைப் பத்திரகாளியம்மன், வீரமாகாளியம்மன் ஆதினகர்த்தா
தரணி போற்றும் தலைவனாய் நிலந்தனிலே வாழ்ந்தவரே!
வானத்தில் நிலவாய் வையகத்தில் தென்றலாய்
நிலையாக எம் நினைவுகளில் என்றும் வாழ்ந்த கண்ணன் ஐயாவே!
ஏக்கத்தின் எல்லை தனில் எமையெல்லாம் தவிக்கவிட்டு
பாரினை விட்டுநீர் திடீரென மறைந்த மாயமென்ன....?
அன்னாரின் பிரிவுத் துயரில் நாமும் பங்குகொள்வதோடு அன்னாரது ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
மலர்வு : 24.04.1963
உதிர்வு : 14.05.2021
துயரில் பங்கேற்கும்
வீனஸ் விளையாட்டுக் கழகத்தினர்




விழிநீர் அஞ்சலி
சைவசித்தாந்த பண்டிதர்
அமரர் சிவஸ்ரீ தியாக.சோமாஸ்கந்தராஜக் குருக்கள்
B.A, Dip.in.Ed., M.A பிரதி அதிபர்
நெல்லண்டைப் பத்திரகாளியம்மன், வீரமாகாளியம்மன் ஆதினகர்த்தா
மலர்வு : 24.04.1963
உதிர்வு : 14.05.2021
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு
அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
துயரில் பங்குகொள்ளும்
வீரமாகாளி அம்மன் ஆலய 3ம் திருவிழா உபயகாரர்
அவ்வொல்லை மக்கள்


கண்ணீர் அஞ்சலி
சைவசித்தாந்த பண்டிதர்
அமரர் சிவஸ்ரீ தியாக.சோமாஸ்கந்தராஜக் குருக்கள்
B.A, Dip.in.Ed., M.A பிரதி அதிபர்
நெல்லண்டைப் பத்திரகாளியம்மன், வீரமாகாளியம்மன் ஆதினகர்த்தா
தோற்றம்
24.04.1963
மறைவு
14.05.2021
அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம்சாந்தி! சாந்தி!!! சாந்தி!!!
என்றும் நீங்காத்துயருடன்
குடும்பத்தினர்


கண்ணீர் அஞ்சலி
எமது பாடசாலையின் ஓய்வுபெற்ற சிரேஷ்ட ஆசிரியரும்,
ஆத்மீகத் துணையாளருமான
சைவசித்தாந்த பண்டிதர்
அமரர்
சிவஸ்ரீ தியாக. சோமாஸ்கந்தராஜக் குருக்கள்
B.A, Dip.in.Ed., M.A பிரதி அதிபர்
நெல்லண்டைப் பத்திரகாளியம்மன், வீரமாகாளியம்மன் ஆதினகர்த்தா
அன்னாரின் பிரிவுத் துயரில் நாமும் பங்குகொள்வதோடு அன்னாரது
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
மலர்வு : 24.04.1963
உதிர்வு : 14.05.2021
யா/கற்கோவளம் மெ.மி.த.க.பாடசாலை
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
மற்றும் பாடசாலைச் சமூகத்தினர்


கண்ணீர் அஞ்சலி
சைவசித்தாந்த பண்டிதர்
அமரர் சிவஸ்ரீ தியாக. சோமாஸ்கந்தராஜக் குருக்கள்
B.A, Dip.in.Ed., M.A பிரதி அதிபர்
நெல்லண்டைப் பத்திரகாளியம்மன், வீரமாகாளியம்மன் ஆதினகர்த்தா
தோற்றம்
24.04.1963
மறைவு
14.05.2021
அன்னாரது பிரிவுத்துயரில் நாமும் பங்குகொள்வதோடு அன்னாரது
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
பிரிவுத்துயருடன்...
ரவிதாசன் குடும்பத்தினர்
சந்தாதோட்டம்






திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
சைவசித்தாந்தப் பயிற்சிமையம் - கொழும்பு.
(பதிவு இல. HA/04/CBO/152 - 29.05.2012)

சைவநீதி தொடக்குநர்
சைவப்புலவர்மணி வ. செல்லையா அவர்களின்
நூற்றாண்டு அகவை நினைவு விழா.

சைவ உயர்தகைமைத்
தேர்வுச் சான்றிதழ்

சைவத்திரு./திருமதி./செல்வி. ..............................
அவர்கள் சைவ உயர்தகைமைத் தேர்வில் தேர்ச்சி
பெற்றமையைப் பாராட்டி 20.02.2022 அன்று
நூற்றாண்டு விழாவின் போது இச் சான்றிதழ்
வழங்கப்படுகின்றது.

தலைவர். செயலாளர்

நீ அசைந்தால் அசையும் உலகினிலே

நாட்டில் வெற்றி காண்க

நாடெங்கும் வெற்றி காண்க

இந்தப் பூவுலகிலே தோன்றி புனிதம் என்ற

காட்சி ஒன்றைக் காண்பித்தாய்

இத்திமரத்திலே வீற்றிருக்கும் தாயே

இந்தப் பூவுலகில் மாந்தரிலே இசைக்

கருவியாய் நீ இருந்து இன்பம் எல்லாம்

தருவித்தாய் தாயே தேவியரே வாரும்

எங்கட் கருள் தாரும். அம்மா தாரும்.